In Search of Wisdom... (TAMIL)

ஞானத்தைத் தேடி...

Dr.லில்லியன் ஸ்டான்லி

நீங்கள் ஞானவானாவதற்கு
வயதாகி முதிர்ச்சியடைய வேண்டுமென்று
காத்திருக்கத் தேவையில்லை.

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

ஞானத்தைத் தேடி...

Dr. Mrs. **விவ்வியன் ஸ்டான்லி**, MBBS, DCH

[illegible]

ஆசீர்வாத இளைஞர் இயக்கம்

[illegible] காலனி, வேலூர் 632 006

தொலைபேசி : 00 91 416 2242943, 2248943

[illegible]@bymonline.org

www.bymonline.org

IN SEARCH OF WISDOM (Tamil)

Copyright 2014
Dr. Lilian Stanley
13 Church Colony,
Vellore 632 006, India
<lilianstanley@gmail.com>

First Edition : November 2014

Available in English also.

Typeset by Mrs. Thalitha Ebenezen
HQ Staff, BYM

Coverpage Design : Evangeline Jones,
daughter of the Author

Printed by
Bapuji Printers
Chennai

ஞானமுண்டா இல்லையா ?

வீடியோ திரையில் ஒளிக்கதிர்கள் பளிச்சிட்டு மறைவதுபோல எனது மூளையில் ஞானத்தைக் குறித்து ஒரு புத்தகம் எழுதலாமே என்ற முதல் எண்ணம் மின்னியபோது, எனது முட்டாள்தனத்தை நினைத்துச் சிரித்தேன். நான் ஞானத்தைக் குறித்துப் புத்தகம் எழுதுவதைவிட கழுதை சங்கீதம் பாடுவது மேல் என்று புன்னகித்தேன். "ஞானியாவது எப்படி" என்று ஒரு காகிதத் துண்டில் கிறுக்கி அதைக் கசக்கி, எறிவதற்காகச் சென்றேன். நான் கண்ட காட்சி என்னை அதிர வைத்தது. கண்களைக் குப்பைத் தொட்டியிலிருந்து சில விநாடிகள் எடுக்கமுடியவில்ல. ஒரு துண்டு காகிதம் குப்பைத் தொட்டியிலிருந்து வெளியே எட்டிப்பார்த்துக் கொண்டிருந்தது. அதில் கொட்டை எழுத்துக்களில், **"நீங்கள் ஞானவானாவதற்கு வயதாகி முதிர்ச்சியடையவேண்டுமென்று காத்திருக்கத் தேவையில்லை"** என்று எழுதப்பட்டிருந்தது. அகல விரிந்த கண்களுடன், என் கண்களையே நம்பமுடியாமல், அந்த வாக்கியத்தைக் கண்சிமிட்டாமல் பார்த்து நின்றேன். துணிந்து வேலையைத் துவங்க ஆண்டவர் சொல்கிறாரா ? ஒன்றை நினைத்து, அடுத்த சில விநாடிகளில் அதற்கு உறுதி பெறுவது எப்போதும் நடக்கிற காரியம் அல்லவே. ஆகவே அந்தக் கருப்பொருளில் எனக்கு வந்த எண்ணங்களை எழுதலானேன்.

இது நடந்து பத்தாண்டுகள் இருக்கும். ஞானத்தைக்குறித்துத் திருமறையில் படித்தாலும் திருப்தியடையும் அளவுக்குப் படிக்கமுடியவில்லை. ஆண்டுகள் உருண்டோடின; நான் படித்த எல்லாவற்றையும் எழுத நேரம் கண்டுபிடிக்கவே முடியவில்லை. ஞானத்தைக் குறித்த என் படிப்பை முடிப்பதற்குள் ஆண்டவரே வந்துவிடுவார் என்று எண்ணினேன். ஆகவே, இறுதியாக, ஞானத்தைக்குறித்து நான் எழுதிய சில கட்டுரைகளையும் சில பொதுவான கட்டுரைகளையும் சேர்த்து ஒரு புத்தகமாக வெளியிடலாம் என்ற தீர்மானம் உதயமானது.

நான் ஞானி என்பதனால் இந்த ஆழமான கருப்பொருளைக் குறித்து எழுதமுன்வரவில்லை; ஆனால் நான் ஞானமற்றவளாயிருந்தபடியாலும் என் மூடத்தனத்தை எண்ணி தனிமையில் கண்ணீர் வடித்தமையாலும் நான் துணிந்தேன். ஒவ்வொரு குகைப்பாதையாக கடந்துவந்த நீண்ட பயணமது. ஒவ்வொரு குகைப்பாதையின் கடையிலும் நான் கண்டுபிடித்த ஞானக்கதிர்கள் ஒன்றோடொன்று இணைந்து புதிய ஒளிக்கதிராயின. நாம் அறியப்பட்டிருக்கிறபடியே அறிந்துகொள்ளும் நித்தியத்தில்தானே இக்குகைப்பாதைகள் முடிவடையும் என்று நம்புகிறேன். அதுவரை ஞானத்தைத் தேடும் பயணத்தை நாம் தொடரவேண்டியதுதான். அதிகமான குகைகளின் வழியாய்ச் செல்வோமானால் அதிகமானப் பாடங்களைக் கற்றுக்கொண்டு அதிகமான ஞானத்தைப் பெறுவோம்.

ஆகவே இப்போது கழுதை கீதம் பாடுவதைக் கேட்கத் தயார்தானே ?

லில்லியன் ஸ்டான்லி
www.lilianstanley.com
<lilianstanley@gmail.com>

முன்னுரை

ஞானம்! யார்தான் வேண்டாமென்பார் ஞானத்தை! யாருமே ஞானவானாயிருக்கத்தான் விரும்புவர். முட்டாளாயிருப்பதை யாரும் விரும்புவதில்லை. ஆனால், அடடா, எத்தனை ஞானிகள் முட்டாள்களாயிருக்கின்றனர்! ஞானிகளிலும் ஞானியாகிய சாலொமோனிடம்கூட செத்த ஈக்கள் இருக்கத்தான் செய்தன. காரசாரமான விவாதத்தில், ஒரு கண குருட்டுத்தனத்தில் ஒரு தவறான வார்த்தையைப் பேசிவிட்டு பின்பு துக்கிக்கிறோம். சுமுகமான ஒரு கலந்துரையாடலில் ஒரு மதியீனமான வார்த்தையைப் பேசினதால் உரையாடலில் கோணலான திருப்பத்தை ஏற்படுத்தி, அதன் கசப்பான கனிகளைப் பின்பு புசிக்கிறோம். ஒரு மூட நடத்தை, ஒரு மனப்பதட்டத் தீர்மானம், ஒரு குழம்பிய செயல் நம்மைச் சாக்கடையில் தள்ளி, "ஐயோ, புத்திசாலித்தனமாக நடந்து கொண்டேனில்லையே!" என்று புலம்பச் செய்கிறது. ஞானத்தை எங்கே, எப்படிக் கண்டெடுக்கலாம் என்று யாராவது காட்டிக்கொடுத்தால் நாம் எல்லாரும் வேண்டிய அளவு எடுத்துக்கொள்ளலாமே.

வெள்ளிக்கு விளைவிடம் உண்டு, பொன்னுக்குப் புடமிடும் ஸ்தலமுமுண்டு. ஒரு வழியுண்டு, அது பட்சிக்கும் தெரியாது; வல்லூரின் கண்ணும் அதைத் கண்டதில்லை. மனிதன் மறைவிடத்திலிருக்கிறதை வெளிச்சத்திலே கொண்டு வருகிறான். ஆனால் ஞானம் கண்டெடுக்கப்படுவது எங்கே? புத்தி விளைகிற இடம் எது? ஆழமானது: அது என்னிடத்தில் இல்லையென்கிறது; சமுத்திரமானதும், அது என்னிடத்தில் இல்லையென்கிறது. தேவனோ அதின் வழியை அறிவார், அதின் இடம் அவருக்கே தெரியும் (யோபு 28). கடவுளுக்குத் தெரியுமானால் ஏன் அவர் நமக்குத் தெரியப்படுத்தக் கூடாது? ஆம், தேவன் நமக்கு அதைத் தெரியப்படுத்தியிருக்கிறார், நாமோ அவரை அசட்டை செய்துவிட்டோம்.

"மறைவானவைகள் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியவைகள்; வெளிப்படுத்தப்பட்டவைகளோ, இந்த நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளின் படியெல்லாம் செய்யும்படிக்கு, நமக்கும் நம்முடைய பிள்ளைகளுக்கும் என்றென்றைக்கும் உரியவைகள்" (உபா 29:29). இந்த வெளிப்படுத்தப்பட்ட நமது பொக்கிஷம் அடுத்த அத்தியாயத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது: "நான் இன்று உனக்கு விதிக்கிற கட்டளை உனக்கு மறைபொருளும் அல்ல, அது உனக்குத் தூரமானதும் அல்ல. நாங்கள் அதைக் கேட்டு, அதின்படி செய்யும்பொருட்டு, எங்கள் நிமித்தம் வானத்துக்கு ஏறி, அதை எங்களுக்குக் கொண்டுவருகிறவன் யாரென்று நீ சொல்லத்தக்கதாக, அது வானத்திலுள்ளதும் அல்ல; நாங்கள் அதைக் கேட்டு, அதின்படி செய்யும்பொருட்டு, எங்கள் நிமித்தம் சமுத்திரத்தைக் கடந்து, அதைக் கொண்டுவருகிறவன் யார் என்று நீ சொல்லத்தக்கதாக அது சமுத்திரத்திற்கு அப்புறத்திலுள்ளதும் அல்ல; நீ அந்த **வார்த்தையின்படியே** செய்யும்பொருட்டு **அது** உனக்கு மிகவும் சமீபமாய் உன் வாயிலும் உன் இருதயத்திலும் இருக்கிறது" (உபா 30:11–14). இப்பொழுது அது அச்சடிக்கப்பட்டு நமது கையில் இருக்கிறது! "நீங்கள் கைக்கொள்ளும்பொருட்டு, என் தேவனாகிய கர்த்தர் எனக்குக் கற்பித்தபடியே, நான் உங்களுக்குக் கட்டளைகளையும் காரியங்களையும் போதித்தேன். ஆகையால் அவைகளைக் கைக்கொண்டு நடவுங்கள்; மக்களின் கண்களுக்கு முன்பாகவும் இதுவே உங்களுக்கு **ஞானமும் விவேகமுமாய்** இருக்கும்; அவர்கள் இந்தக் கட்டளைகளையெல்லாம் கேட்டு, இந்தப் பெரிய இனமே **ஞானமும் விவேகமுமுள்ள** மக்கள் என்பார்கள்" (உபா 4:5,6). தேவனுடைய வார்த்தையே ஞானம் என்று இப்பொழுது புரிகிறதா? தேவன் "மனிதனை நோக்கி: இதோ, ஆண்டவருக்குப் பயப்படுவதே **ஞானம்;** பொல்லாப்பை விட்டு விலகுவதே **புத்தி,**" என்றார் (யோபு 28 :28).

நாம் ஏன் இன்னும் காத்திருக்கிறோம்? ஞானத்தைப் பெறுவதற்கு நாம் வயது முதிர்ந்து கிழவராகும்வரை காத்திருக்கத் தேவையில்லை. நமது கடப்பாறைகளை எடுத்துக்கொண்டு தேவனுடைய வார்த்தைக்குள் நுழைந்து புதையல் வேட்டைக்குச் செல்வோம் வாருங்கள்.

ஒரு நிமிடம் கண்களை மூடி, இந்த ஜெபத்தை ஏறெடுங்கள்: ஆண்டவரே, பெரியோரெல்லாம் ஞானிகளல்ல; முதியோரெல்லாம் மட்டுமே புத்திசாலிகளல்ல. ஆகவே, சர்வவல்லவரே உம்முடைய சுவாசத்தை என்மேல் ஊதி என்னை உணர்வுள்ளவனாக்கி எனக்குப் புத்தியைத் தாரும் (யோபு 32:8,9).

பொருளடக்கம்

1.	ஞானத்தின் தொட்டில்	...	9
2.	திருமறை சுட்டிக்காட்டும் முட்டாள்கள்	...	15
3.	செத்த ஈக்கள்	...	28
4.	ஞானத்தைத் தேடி	...	46
5.	குடும்ப வாழ்வில் ஞானம்	...	56
6.	பொதுவாகக் காணமுடியாத பொது அறிவு	...	73
7.	ஆண்டவரே, நான் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர் ?	...	86
8.	உயிர்காக்கும் உடை	...	98
9.	ஈர நெஞ்சம்	...	113
10.	பெண்கள் நம்பும் பொய்கள்	...	132
11.	பெண் புத்தி பின்புத்தியா ?	...	144
12.	துணுக்குகள்	...	154

1

ஞானத்தின் தொட்டில்

வேதத்தில் ஞானத்தை முதல் முதலாகக் காண வெகுதூரம் செல்ல வேண்டியதில்லை. ஆதியாகமப் புத்தகத்திலேயே அதுவும் இரண்டாம் அத்தியாயத்திலேயே காணலாம். ஆனால் வேதத்தை முழுமையாக வாசித்தபின் ஞானமானது காலம் துவங்குமுன்னே, உலகம் தோன்றுமுன்னே இருந்தது என அறிவோம். ஆறானது கடலில் கலப்பது போல தீரு அரசனைக் குறித்த தீர்க்கதரிசனம், படைப்புகளெல்லாவற்றிலும் ஞானமுள்ளதான அபிஷேகிக்கப் பட்ட கேருபின் விவரிப்பில் கலந்தோடுகிறது. எசேக்கியேல் 28ஆம் அத்தியாயத் திலும், ஏசாயா 14இலும் அவனது வர்ணிப்பைக் காணலாம்.

தன்னுடைய சிங்காசனத்தைக் காவல் புரியும்படியாக கடவுள் படைத்த அபிஷேகிக்கப்பட்ட கேருபினே இவன். பரிசுத்த பர்வதத்திலிருந்த தேவனது படைப்பு இவன். இவன் ஞானத்தினால் நிறைந்து தானியேலைக் காட்டிலும் ஞானவானாய் விளங்கி அழகில் பூரண ரூபமாயிருந்தான். சகலத்தையும் அறிந்தவனாய் இருந்தான்; அவனுக்கு மிஞ்சின இரகசியமே கிடையாது. தனது சொல்லொண்ணா எழிலினால் இதய மேட்டிமையாகி தனது ஞானத்தைக் கறைப்படுத்தி, "நான் தேவன், நான் தேவாசனத்தில் வீற்றிருக்கிறேன்," என்றான். தேவனோ, "நீ மனிதனேயல்லாமல் தேவனல்ல," என்று சொல்லி தேவ பர்வதத்திலிருந்து அவனை வெளியே தள்ளினார். தேவனது சிங்காச னத்தில் வீற்றிருக்க மனிதனது பேராவலும் பிரயாசமும் இவ்விதம்தான் ஆரம்பமானது.

தள்ளிவிடப்பட்ட இந்த கேரூப் என்ன ஆனான்? ஒருவேளை அன்றிருந்த பூலோகத்தில் விழுந்து அதை வெறுமையும் ஒழுங்கின்மையும் இருளுமாகக் குழப்பிக் கொண்டிருந்திருக்கலாம். ஆகவே ஆண்டவர் உலகை வண்ண வண்ணமாய்ப் படைத்தபோது, தன்னை ஈவிரக்கமின்றி பணி நீக்கம் செய்த அவரைப் பழிவாங்க ஒரு தருணத்திற்காய் காத்திருந்திருக்கலாம். அவன் ஞானவானாவதற்குப் பதிலாக தந்திரக்காரனானான் (ஆதி 3 : 1). தந்திரம் என்பது சீர்கெட்ட ஞானம். இப்படித்தான் அவன் தேவனது எதிரியானான்.

இப்போது தேவன் தம் படைப்பில் மிக கவனமாயிருந்தார். ஒரு படைப்பை உருவாக்கி அவனுக்கு உச்ச ஞானத்தையும் உசித அழகையும் உடுத்துவித்தார். அவனோ தன்னை தேவனுடைய இடத்திற்கே உயர்த்தி வீழ்ந்தான். அவனில் அநியாயம் கண்டுபிடிக்கப்பட்டது. தான் படைக்கப்போகும் மனிதனும் அதே விதியைத் தழுவிக்கொள்வது தேவனது சித்தமாயில்லை. ஆகவே அவர் மனிதனை தன்னைப்போலவே உருவாக்கினாலும் ஒன்றை அவனுக்கு விலக்கிவைத்தார்—நன்மை தீமை அறியத்தக்க திராணி. தனது ஞானத்தை மனிதனுக்குப் படிப்படியாகக் கொடுப்பது நல்லதென தேவன் நினைத்திருக்கலாம். வாழ்வின் மரத்தை அவனுக்கு விலக்கிவைக்க அவர் எண்ணவில்லை, ஆனால் நன்மை தீமை அறியத்தக்க மரத்தின் கனியை உண்ணக்கூடாதென திட்டவட்டமான கட்டளை கொடுத்திருந்தார். ஏன்? காவல் கேரூபீனின் தண்டனையாகிய இரண்டாம் மரணத்தில் அவன் பங்குகொள்ளக்கூடாது என்பதற்காகத்தான்!

ஆனால் அதிகாலையின் மகனாகிய விடிவெள்ளி என அழைக்கப்பட்ட அந்த அபிஷேகிக்கப்பட்ட கேரூப், நரகமான தனது எதிர்கால வாழ்தலத்தில் தன்னோடு கூட மனிதனையும் கூட்டுச்சேர்த்துக்கொள்ள தீவிரமாயிருந்தான். தேவனைப் போல ஞானமுள்ளவர்களாய் இருக்கவேண்டும் என்ற சுளீர் வாஞ்சையும் அவருக்குச் சமமாயிருக்க வேண்டுமென்ற தேட்டமுமே அதற்குத் தூண்டில் என நன்கறிந்திருந்தான். ஆணல்ல பெண்ணே இக்கவர்ச்சியான தூண்டிலில் விழுவாள் என்பதை நிச்சயித்திருந்தான். பேய்த்தனமான ஞானத்தையுடைய பாம்பு தந்திரமுள்ளதாயிருந்தது (யாக் 3:15). *"நீங்கள் சாகவே சாவதில்லை; நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும் நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப்போல் இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார்,"* என்றது பாம்பு. அதாவது, நீங்கள்

சாவீர்கள் என்று தேவன் சும்மா சொன்னார் என்ற கருத்துடன் சொன்னது. நீங்கள் அந்தப் பழத்தைத் தின்று தன்னைப்போல் ஞானியாகிவிடுவதை விரும்பாத தேவன் உங்களுக்கு அந்த மரத்தை விலக்கி வைத்தார் என்றது. எத்தனை பெரிய பொய்! நாம் அவரைப் பார்க்கும்போது அவரைப் போலவே இருப்போம் என்றல்லவா வேதம் சொல்கிறது. ஆகவேதான் அவர் மனிதனை தன்னுடைய சாயலாக உண்டாக்கினார். அவன் பாவியானபோது தேவன், "*நான் பரிசுத்தராயிருக்கிறது போல நீங்களும் பரிசுத்தராயிருங்கள்,*" என்றார். அவர் ஞானியாயிருப்பதுபோல நாமும் ஞானிகளாவதற்கு அதுவல்லவோ முதற்படி. சொல்லப்போனால் ஞானத்தை அடைவதற்கு மனிதன் தெரிந்தெடுத்த குறுக்கு வழி பெரும் சேதத்தை விளைவித்தது.

சாத்தானின் குறி சரியாயிருந்தது. தூண்டிலில் தொங்கிய ஞானத்தை பெண் கருமினாள்! தேவனைப் போலாகும் தனது விருப்பமாகிய நச்சை சாத்தான் அவளுக்குள் ஏற்றினான். அவர்களைக் கீழே இறக்க அவனுக்குத் தெரிந்த ஒரே வழி அவர்கள் தேவனைப் போலாகவேண்டுமென்று ஆசைகாட்டுவதுதான். பாவத்திற்கு அவளே வழிகாட்டியானதால்தானோ என்னவோ இன்னும் பெண் ணினம் ஞானமற்ற பாதியாகக் கணிக்கப்படுகிறது. பெண்ணின் முதல் நோக்கம் கனியல்ல, கனியின் கனியாகிய கனி—அதாவது, நன்மை தீமை அறிகிற அறிவும் தேவனது அந்தஸ்தும். புத்தியை தெளிவிக்கிறதற்கு ஒருவர் விரும்பக்கூடிய மரமது. கணவனிடம் பேசி அவனை சரிக்கட்டினாள் (ஆதி 3:17). என்ன பேசியிருப்பாள் ? ஒருவேளை, "பார், பார், நீயும் தேவனைப் போல ஞானியாகலாம். நன்மை தீமை அறியக்கூடிய புத்தியை நமக்கு மறைத்து வைத்திருக்கிறார் கடவுள். இந்தா, சாப்பிடு. பார், நான் சாப்பிட்டும் சாகவில்லையே. நாமும் தேவர் களாவோம்..." என்றிருக்கலாம். அந்த அகால நேரத்தில் மனிதன் தனது களங்கமின்மையை விலக்கப்பட்ட அறிவுக்கு மாற்றிக்கொண்டான். காத்திருந் திருப்பானேயானால் ஏற்ற காலத்தில் தேவனது ஆசியோடு பெற்றுக் கொண்டிருப்பான். ஆனால் பரிதாபமாகத் தோல்வியுற்றான். பழத்தைத் தின்றபின் பெண் செய்த ஒரே புத்தியான செயல் தன் கணவனையும் பாவத்தில் பங்குகொள்ளச் செய்ததுதான். இல்லாவிடில் விளைவை கற்பனை செய்துகூடப் பார்க்கமுடியவில்லை.

தேவன் யோசேப்பிற்கு எகிப்தின் எல்லா ஞானிகளைக் காட்டிலும் அதிகமான விசேஷித்த ஞானத்தை அளித்திருந்தார்; ஆனாலும் அவர் தேவனது இடத்தை எடுக்க மறுத்து தன்னிலையில் தானே தாழ்மையாயிருந்தார் (ஆதி 50:19).

தேவனைப் போலாகப் பேசிய பேரத்தில் இருவரும் தங்கள் களங்கமின்மையை இழந்து பாம்பின் கறைபடிந்த ஞானத்தைப் பெற்றுக்கொண்டனர். சாத்தானும் பெருமையினால் தன் ஞானத்தைக் கறைபடுத்திக் கொண்டவன்தானே. இதுவே யாக்கோபு விவரிக்கும் உலக ஞானம் (ஆதி 3:1; ஏசா 14:12-15; எசே 28:6,12-17; யாக் 3:14-16). இப்படிப்பட்ட ஞானம் கசப்பான வைராக்கியமும் விரோதமும் பெருமையும் சத்தியத்திற்கு விரோதமாக பொய்யும், லௌகீக சம்பந்தமானதும், ஜென்ம சுபாவத்துக்குரியதும், பேய்த்தனத்துக்கடுத்ததுமானது. இதுவே கலகத்துக்கும் துர்ச்செய்கைகளுக்கும் வழிவகுக்கிறது. இவ்வுலகத்தின் பாம்புகளின் ஆலோசனைகளுக்குச் செவிமடுப்போமானால் சீர்கெட்ட ஞானத்தையே சுதந்தரிப்போம்.

இன்றைய நிலையும் இதுவேதான். உலக ஞானத்தையே பிசாசு தன் தூண்டிலில் கோர்த்து நம்முன் தொங்கவிடுகிறான். கடைசி நாளில் பலர் ஞானத்தைத் தேடி அங்குமிங்குமாக ஓடுவார்கள் (தானி 12:4). உலக ஞானத்தைக் குறித்து பிரசங்கி சொல்லுகிறார்: "*இதோ நான் பெரியவனாயிருந்து, எனக்கு முன் எருசலேமிலிருந்த எல்லாரைப் பார்க்கிலும் ஞானமடைந்து தேறினேன்; என் மனம் மிகுந்த ஞானத்தையும் அறிவையும் கண்டறிந்தது என்று நான் என் உள்ளத்திலே சொல்லிக்கொண்டேன். ஞானத்தை அறிகிறதற்கும், பைத்தியத்தையும் மதியீனத்தையும் அறிகிறதற்கும், நான் என் மனதைப் பிரயோகம் பண்ணினேன்; இதுவும் மனதுக்குச் சஞ்சலமாயிருக்கிறதென்று கண்டேன். அதிக ஞானத்திலே அதிக சலிப்புண்டு; அறிவு பெருத்தவன் நோவு பெருத்தவன்*" (பிர 1:16-18).

"நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை தீமை **அறிந்து** தேவர்களைப்போல் இருப்பீர்கள் என்றும் தேவன் **அறிவார்** என்றது" (ஆதி 3:5). தேவன் அறிவார்— நீங்கள் அறிவீர்கள். எத்தனைக் கொடுமையான சோதனை! ஒரு நாளில் தானே அனுபவித்த நிர்வாணம், அவமானம், பிரிவு, மரணம், வீழ்ச்சி இவற்றையெல்லாம் அவளிடத்திலிருந்து சாத்தான் தந்திரமாக மறைத்துவிட்டான். தனக்குக் கூட்டுச்சேர்க்க ஆள் தேடினான். முட்டாள் பெண்! சாத்தானின் சூழ்ச்சிக்குப் பலியாகிவிட்டாள். சற்றுப் பொறுத்து கடவுளே அவர்களுக்குக் கொடுத்திருப்பார். தாமதம்தானேயன்றி வேறில்லை. அவள் அவசரப்பட்டுவிட்டாள். தேவனது உண்மையை நம்புவதற்குப் பதிலாக பிசாசின் பொய்யை நம்பிவிட்டாள். அவளது பரதீசு உருக்குலைந்தது.

"அப்பொழுது அவர்கள் இருவருடைய கண்களும் திறக்கப்பட்டது; அவர்கள் தாங்கள் நிர்வாணிகள் என்று ***அறிந்து*** *..."* (ஆதி 3:7). அவர்களது முதல் அறிவு தாங்கள் நிர்வாணிகள் என்பதே. தங்களது களங்கமின்மையை இழந்தவர்களாக வெட்கத்தோடு தங்களை மூடிக்கொள்ள எத்தனித்தனர். தேவனைப்போல ஆக முடியுமா ? ஒருபோதும் முடியாது! முற்றிலும் பரிசுத்தமான தேவனுக்கு முன்பாக ஒளிய வேண்டியதாயிற்று. சரிசெய்ய முடியாத குற்றத்தைப் புரிந்துவிட்டோம் என்று உணருவது எத்தனை பயங்கரம்!

ஆதாமுக்கும் ஏவாளுக்கும் ஞானம் தேவைப்படவில்லை. தகப்பனது பராமரிப்பில் இருக்கும் பிள்ளைக்கு நன்மை தீமை குறித்த அறிவு தேவையே இல்லை. ஆனால் அவன் வளர வளர தகப்பனானவன் அவனுக்குக் கொஞ்சம் கொஞ்சமாக ஞானத்தை ஊட்டி அவன் பெரியவனாகும்போது தன் காலிலேயே நிற்கும்படிச் செய்வார். ஆகவே தேவனது திட்டம், அவர்கள் சோதனைகளையும் வேதனைகளையும் கடந்துவந்து முதிர்ச்சியுள்ளவர்களாகும்போது அதை அவர்களுக்குக் கொடுத்து எல்லா விதத்திலும் அவர்களைத் தன்னைப்போல் நிறுத்துவதாம். ஆனால் அவர்களோ காத்திருக்கக்கூடாமல் ஞானத்தை அடைய குறுக்கு வழியில் சென்று தேவனது திட்டத்தைக் குழப்பிவிட்டனர். எத்தனை முரண்பாடு! ஞானத்தைத் தேடி வஞ்சிக்கப்பட்டுப்போனாள் (ஆதி 3:13). அன்றைய பழைய மீறுதலுக்காக மனிதன் இன்னும் கிரயம் செலுத்திக் கொண்டிருக்கிறான்.

தேவனைப்போல் கொஞ்சம் ஆகிவிட்டனர்— நன்மை தீமை அறிவதில். இன்னும் ஒன்றுதான்—வாழ்வு தரும் மரத்தின் கனியைச் சாப்பிட்டுவிட்டால் போதும், தேவனைப்போல நித்திய ஜீவிகளாகிவிடுவர்!

அவர்களது துணிச்சல் தேவனை உலுக்கிவிட்டது. *"மனிதன் நன்மை தீமை அறியத்தக்கவனாய் நம்மில் ஒருவனைப்போல் ஆனான்; இப்பொழுதும் அவன் தன் கையை நீட்டி ஜீவவிருட்சத்தின் கனியையும் பறித்து, புசித்து, என்றைக்கும் உயிரோடிராதபடிக்குச் செய்யவேண்டும்"* என்றார் (ஆதி 3:22). பாவியான மனிதன் என்றென்றுமாய் உயிர்வாழும் விபரீதத்தை தேவன் தவிர்த்தது எத்தனை பெரிய ஆசீர்வாதம்! ஞானத்திற்காய் அவர்கள் அவசரப்பட்டதில் முட்டாள்களானதோடல்லாமல் தங்கள்மேல் கொடூரமான கொடுக்கையுடைய மரணத்தையும் வருவித்துக்கொண்டார்கள்.

தேவனுடையத் தோட்டத்தில் நிகழ்ந்த அந்தச் சம்பவத்திலிருந்து, மனிதன் மெய்ஞானத்தையும் மரணத்திற்குப் பரிகாரத்தையும் தேடி தனது நீண்ட கடினப்பயணத்தைத் தொடர்ந்து கொண்டேதான் இருக்கிறான். இந்தப் பயணம் எங்கு முடியும்? இயேசு கிறிஸ்துவே நமது ஞானமாகிவிட்டதால் அவரை எட்டும்போதுதான் அது முடிவடையும் (1 கொரி 1:31). இயேசு, "*என்னை விசுவாசிக்கிறவன், மரித்தாலும் பிழைப்பான்,*" என்றார் (யோ 11: 25). ஆனால் கீழே விழுந்த தூதனாகிய சாத்தான், மனிதனை அவ்வழியில் தடுத்துவிட முழுபெலத்தோடுப் போராடுவான். சாத்தான் இன்னும் புத்திசாலிதான். ஆனால் மனிதன் தேவனிடமாய்த் திரும்பி அவரது கட்டளைக்குக் கீழ்ப்படிவானானால் அவனை முறியடிக்க அவனைக் காட்டிலும் ஞானவானாவான்.

ஞானத்தைத் தேடி ஓடும் நமது ஓட்டத்தில், தேவனைப் போல ஞானிகளாக வேண்டுமென்று பழத்தைப் புசித்து தங்களையே முட்டாள்களாக்கிக்கொண்ட ஆதாம் ஏவாளைப்போல நாம் பல தவறுகளைச் செய்யலாம். ஞானத்தை வாஞ்சித்திருப்பார்களானால் கொஞ்சமும் சந்தேகப்படாமல் தங்கள் பரம பிதாவை நோக்கி வேண்டியிருப்பார்களானால் அவர் தாராளமாய் அவர்களுக்குக் கொடுத்திருப்பாரே (யாக் 1:5-7). ஆனால் அவர்களோ அவரது அன்பின்மேல் ஐயங்கொண்டு தவறான பக்கமாய்த் திரும்பினர்.

பரலோகப் பரிசுத்த ஞானத்தினால் நம்மை ஆசீர்வதிக்கவே தேவன் காத்திருக்கிறார். கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்.

2

திருமறை சுட்டிக்காட்டும் முட்டாள்கள்

ஞானப் புதையலைத் தேடித் திரியும் பயணத்தில் இரண்டு படிகள் உண்டு. ஒன்று அறிவீனத்தை ஒழிப்பது, மற்றொன்று ஞானத்தைத் தேடுவது. மடமை என்பது என்ன, அதை எங்ஙனம் நம் வாழ்வினின்று களைந்து எறியலாம் என ஆராய்வோம்.

வேதத்தின் திரையைத் திறந்தால் அங்கே விதவிதமான அறிவிலிகள் நம்மை வியப்பிலாழ்த்துவதைக் காணலாம். கண்முன்னே அணிவகுக்கும் அவர்களை ஒவ்வொருவராகப் பரிசீலனை செய்யலாம்.

1. கடவுள் இல்லை என்று சொல்பவனே நம்பர் ஒன் மூடன். இவனே நாத்திக முட்டாள். *"தேவன் இல்லை என்று* ***மதிகெட்டவன்*** *தன் இருதயத்தில் சொல்லிக்கொள்ளுகிறான்,"* என்று தாவீது கானம் ப்ாடுகிறார் (சங்14:1). எல்லாம் வல்ல ஒருவரது பிரசன்னத்தை நம்பாதவர் கோடிக் கோடியாய் உள்ளனர். வெளித்தோற்றத்தில் அவர்கள் கடவுளை நம்புகிறவர் களினின்று வேறுபட்டவரல்ல. அவர் ராதாகிருஷ்ணனாகவோ முகமது அலியாகவோ தாமஸ் ராஜாகவோ இருக்கலாம், ஆனால் கடவுள் இருப்பதை தன் 'இருதயத்தில்' மறுக்கிறார். கடவுள் தன்னைப் பலவிதங்களில் வெளிப்படுத்தி இருப்பதால் அவரை அறியாதிருக்க யாருக்கும் சாக்குப்போக்குக்கு இடமேயில்லையென வேதம் கூறுகிறது. காணக்கூடாத அவரது பண்புகளை அவரது படைப்பிலேயே தெளிவாய்க்காணலாம். அவர்கள் கடவுளை அறியாமலில்லை; அறிந்தும் அவரை கடவுளென்று ஏற்றுக்கொள்ளாமல் போனார்கள். இந்த சுய ஏமாற்றின் விளைவென்ன?

அறிவற்ற அவர்களது இருதயம் இருளடைந்து, அவர்கள் உணர்வற்றவர்களும் அறிவீனரும் ஆனார்கள் (ரோ 1:19-21).

மற்றொருவிதமான நபர் கடவுளையும் மதத்தையும் நம்பும் மார்க்கத்தில் வளர்க்கப்பட்டவர். ஆனால் பாடுகள் வரும்போது, பாதையில் இருள் சூழும்போது, வேதனை உறுத்தும்போது அவரது இருதயம், "கடவுள் எங்கே?" என்ற கேள்வியைக் கேட்கிறது. வானம் வெண்கலமாகும்போது அவர், "கடவுளும் இல்லை, மோட்சமும் இல்லை, நரகமும் இல்லை," என முடிவுகட்டி தன் நம்பிக்கையை ஆற்றோடு விட்டுவிடுகிறார். கடவுள் இல்லவேயில்லை என்று மறுப்பவனுக்கு பாவம் செய்யத் தடையேதுமில்லயே. ஆகவேதான் "*அவர்கள் தங்களைக் கெடுத்து, அவருவருப்பான கிரியைகளைச் செய்து வருகிறார்கள்*" (சங் 14:1). அவர்களுக்குக் கடவுளோ மோட்சமோ நரகமோ கிடையாது. தீமையைத் தள்ளிவிட்டு நன்மையை நாட அவர்களுக்குக் காரணமே கிடையாது.

புல்லின் ஓர் அரும்பைப் பாருங்கள். அது தேவனைக் குறித்துப் பிரசங்கிக்கும். சந்திரனைத் தொட்டுவிட்ட மனிதன் இன்னும் ஒரு உயிரை— ஒரு எறும்பையோ, ஒரே அணுவான ஒரு அமீபாவையோகூட படைக்கவில்லை. கடவுள் இருக்கிறார் என்று அது அவனுக்குப் புகட்டவில்லையோ? சீனன் ஒருவன், 'கடவுள் செய்யக்கூடியதையெல்லாம் சீனர் செய்துவிடுவர்,' என்று அகம்பாவமாகக் கூறியதாக ஒரு துணுக்கு உண்டு. ஆகவே கடவுள் அவனை ஒரு மனிதனைப் படைக்கச் சொன்னாராம். சீனன் குனிந்து கையில் மண்ணெடுத்தானாம். ஆண்டவர், "சற்றே பொறுப்பா, மண் நான் உண்டாக்கினதல்லவா? என்னுடையதை எடுத்து உன்னுடையதைப் படைக்கக்கூடாது," என்று தடை விதிக்க சீனன் தலைகுனிந்தானாம்.

இரண்டு விஞ்ஞானிகள் இருந்தனர். ஒருவர் விசுவாசி, மற்றொருவர் நாத்திகர். விசுவாசி தன் அறையில் கோளங்கள் போன்றவற்றைச் செய்து, மின் இணைப்புக் கொடுத்து, விசையை அழுத்தின மாத்திரத்தில் சூரியன் மிளிருவது போலவும் அதைச் சந்திரன், பூமி, விண்மீன்கள் போன்ற கோளங்கள் சுற்றி வருவது போலவும் வடிவமைத்திருந்தாராம். தன் நாத்திக நண்பரை அழைத்துவந்து அதைக் காட்டியபோது ஆச்சரியத்தால் வாயடைத்துப்போன அவர் அதைச் செய்தது யாரென அறிய விரும்பினார். விசுவாசியோ, "யாருமில்லை, அது அப்படியே இருக்கிறது," என்றார். நம்பாத நாத்திகர் சிரித்தபோது விசுவாசி, "இதை ஒருவர் செய்திருக்கத்தான் வேண்டும் என்று

நம்புகிற நீ அண்டசராசரங்களை ஒருவர் படைத்தார் என்று நம்ப மறுக்கிறாயே,'' என உணர்த்தினார்.

ஆகாயத்தில் கடவுளின் மகிமையைக் காணலாம் என்று வேதம் கூறுகிறது (சங் 19:1). கடவுளைத் தேடி கண்டுபிடிக்க கவலையற்றவன் அவரைக் காணமாட்டான். ஆனால் அவரை நோக்கிக் கூப்பிடுகிறவர்களுக்கோ அவர் நெருக்கமாயிருக்கிறார். நம்மையே முட்டாள்களாக்கிக் கொள்ளவேண்டாம். அவரது பெயரைச் சொல்லிக் கூப்பிடுவோம். அவரைத் தேடுகிறவர்கள் அவரைக் கண்டடைவார்கள் (நீதி 8:17). இயேசுவை வணங்க கிழக்கிலிருந்து வந்த ஞானிகள் சத்தியத்தைத் தேடும் கிறிஸ்தவரல்லாதோருக்கு நல்ல எடுத்துக்காட்டு. அவர்கள் மெய்த்தேவனிடத்திற்கு செம்மையாய் நடத்தப்படுவர். மெய்த் தேவனாகிய கடவுளது பிரசன்னத்தில் தெண்டனிட்டுப் பணிவதன்றி ஞானப் புதையலைத் தேட வேறு வழியில்லை; ஏனெனில் அவரே எல்லா ஞானத்தின் உறைவிடமானவர். படிப்பு அறிவைத் தரலாம்; அது நம்மை ஞானியாக்கிவிடாது. ஞானம் என்பது அறிவை நடைமுறையில் பயன்படுத்தும் கெட்டிக்காரத்தனம். அதைக் கடவுள் மட்டுமே அருளமுடியும்.

கடவுள் இல்லை என்று சொல்லும் முட்டாளுக்கு சங்கீதக்காரன் புத்தி புகட்டுகிறார், "கடவுளைத் தொழுதுகொள்" (சங் 14:4). அண்ட சராசரங்களின் மகா பெரிய கடவுளுக்கு முன்பா'க நெடுஞ்சாங்கிடையாக விழுந்து அவரைத் தொழுதுகொள்ளுவோம்.

2. அடுத்த மூடன் இப்போது நமது கண்முன் நீந்தி வருகிறான். தன்னுடைய வாழ்க்கையில் தேவன் நடப்பிக்கும் செயல்களைப் புரிந்துகொள்ளாதவன் இவன் (சங் 92:5,6). முதல் நான்கு வசனங்களில் தேவனது உண்மையையும் கிருபையையும் குறித்து இசைத்துவிட்டு, "கர்த்தாவே, உமது கிரியைகள் எவ்வளவு மகத்துவமானவைகள்! உமது யோசனைகள் மகா ஆழமானவைகள். **மிருககுணமுள்ள** மனிதன் அதை அறியான்; **மூடன்** அதை உணரான்," என்று சங்கீதக்காரன் பண்பாடுகிறார்.

'செழித்து' என்ற பதம் இப்பாடலில் அக்கிரமக்காரனுக்கும் நீதிமானுக்கும் சொல்லப்பட்டுள்ளது. அக்கிரமக்காரன் என்றென்றும் அழிந்துபோகவே செழிக்கிறான் (வச 7). நீதிமான் கனிகொடுக்கவும், கர்த்தர் உத்தமர், அவரிடத்தில் அநீதியில்லையென்று விளங்கப்பண்ணவுமே செழிக்கிறான் (வச 12-15). அறிவீனன் கர்த்தருடைய கிருபையையும் உத்தமத்தையும்

உணரமாட்டான். துன்மார்க்கன் செழிப்பதைக் கண்டு, தன்னுடைய நீதிக்குப் பலன்கிட்டவில்லை என்று வயிறெரிவான். எப்போதுமே அவன் தேவனை சந்தேகித்து குற்றஞ்சாட்டி அவரது தீர்ப்புகளை கேள்விகேட்கிறான். துன்மார்க்கனின் முடிவைக்காண அவன் காத்திருப்பதில்லை. நோய் நொடியோ, விபத்தோ, தோல்வியோ அல்லது சிக்கலோ வந்தால் தேவனை நம்பி அவரது மார்பில் சாய்ந்துகொள்வதைவிட்டு, நொந்துபோய் தேவன் தன்னைக் கைவிட்டு விட்டார் என முடிவுகட்டிவிடுகிறான். நல்லவனுக்கு நலம், கெட்டவனுக்கு கேடு என்பதுதான் அவனது சட்டம். ஆகவே உறுதியாயிருப் பதைவிட்டுக் குழப்பமடைகிறான். நீதிமானது செழிப்பு என்பது அதிகமாக ஆன்மீக ரீதியானது, உடல் ரீதியானதல்ல; அதாவது கர்த்தர் உத்தமரென்பதை விளங்கப்பண்ணவே என்பதை அவன் காணத் தவறுகிறான் (வச 15).

செழித்து ஓங்கும் பொல்லாதவர்களைக் கண்டு குழம்பிப்போன ஆசாப், *"நான் காரியம் அறியாத* ***மூடனானேன்****; உமக்கு முன்பாக* ***மிருகம்போலிருந்தேன்****"* என்று சங்கீதம் 73இல் கூறுகிறார் (வச 22).

தேவன் நம்மோடு இடைபடுவதைப் புரிந்துகொள்ளுவதே ஞானம். தேவன் உத்தமர், அவரில் அநீதியில்லை என்று எப்போதும் அறிக்கையிடுவதே விவேகம் (சங் 92:15). நமது வாழ்க்கைச் சம்பவங்கள் தேவனை நாம் குற்றப்படுத்தவும், அவர் அநியாயம் செய்தார் என்று குறைகூறவும் நடத்துமானால் நாம் நிர்மூடர். உயர்வும் தாழ்வும் மாறி மாறி வருவதே வாழ்க்கை. குறைவுபடும் நாட்களில் எனக்கு ஏன் இந்தப் பாடு என்று அங்கலாய்க்கிறோம். அதுவும் நாம் நோய்வாய்ப்பட்டு படுக்கையிலிருந்து, பொல்லாதவர் சுகதேகிகளாய்த் திரிவதைக் காணும்போது தேவன் தவறிழைத்துவிட்டாரோ எனச் சிந்திக்கத் தோன்றுகிறது. தேவன் தவறு செய்வதே இல்லை என்று இன்று நமக்கு நாமே உறுதி கூறிக்கொள்வோம். வாழ்க்கையின் குறைவுகளை எண்ணிக் கலங்குவதைவிட்டு அதன் நிறைவுகளில் களிகூருவோம்.

3. அடுத்து, ஆன்மீகக் காரியங்களைவிட உடல் மற்றும் பொருள் திரட்சிக்குக் கூடுதல் முக்கியத்துவம் கொடுப்பவனுக்கு வேதம் முட்டாள் பட்டம் சூட்டுகிறது. சங்கீதம் 49ஐ ஞானப் பூமாலை எனலாம். தங்கள் செல்வத் திரட்சியை நம்பி, தம் டாம்பீக வாழ்வில் பெருமிதம் கொள்வோரைக் குறித்து இப்பாடல் சித்தரிக்கிறது. தான் சேர்த்து வைத்த சொத்தினால் தன் ஆத்துமாவை மீட்டுக்கொள்ள முடியாது என்பதை அவன்

உணருவதில்லை. புத்தியீனர் தம் சொத்தை மற்றவருக்கு விட்டு மரித்துப் போவதைக் கண்டும் அது அவனுக்கு உரைப்பதில்லை. தன் உடமைகள் என்றென்றுமாய் நிலைத்திருக்குமென நம்பி ஏமாறுகிறான். அவன் வாழும் விதத்தைக் காணும் அவனது பிள்ளைகளும் அவனையே பின்பற்றுகின்றனர். ஞானவான்களும் புத்தியீனரும் ஒரே மரணத்தைத்தான் தழுவிக்கொள் கின்றனர். ஆனால் ஞானவானின் ஆன்மாவை கல்லறையின் வல்லமை யினின்று தேவன் மீட்டுக்கொள்ளுகிறார் என்று அப்பாடல் கூறுகிறது. ஒருவன் பொருளீட்டுவதிலேயே தன் நாட்களைச் செலவிடுகிறான். மற்றொருவன் தன் ஆத்தும மீட்பிற்கு தேவனையே நம்பியிருக்கிறான். துன்மார்க்கனின் முடிவைச் சுட்டிக் காட்டி இப்பாடல், "*இதுதான் அவர்கள் வழி, இதுதான் அவர்கள்* ***பைத்தியம்,***" என்கிறது (வச 13).

இப்படிப்பட்ட ஒரு **முட்டாளைத்**தான் இயேசு தம் பிரசங்கத்தில் மேற்கோள் காட்டிப் பேசினார். அவ்வாண்டு அமோக விளைச்சலை அறுவடை செய்த அவன் சற்று இளைப்பாற ஆவல் கொண்டான். தன் 'ஆன்மாவைப்' பார்த்து: கவலைப்படாதே, இளைப்பாறி வாழ்க்கையை அனுபவித்து ஜாலியாக இரு என்றான். அன்றிரவு தனக்கு வரக் காத்திருந்த மாரடைப்பைக் குறித்து அவன் அறிந்தானில்லை. ஆண்டவர் அவனை முட்டாள் என்று கூப்பிட்டு: இன்று இரவு நீ செத்துப் போனால் நீ கட்டி வைத்தக் களஞ்சியங்கள் யாருடையதாகும் என்றார். உவமையின் முடிவு என்ன? "*தேவனிடத்தில் ஐசுவரியவானாயிராமல், தனக்காகவே செல்வங்களைச் சேர்த்துவைக் கிறவன் இப்படியே* (முட்டாளாக) *இருக்கிறான்*" (லூக் 12:16-21).

மூடன் சம்பாதிப்பதிலும் பணக்காரனாவதிலும் சொத்து சேர்ப்பதிலுமே தீவிரமாயிருந்து உப்புத் தண்ணீரைப் பருகினதுபோல தாகம் தணியாமல் மேலும் மேலும் பாடுபடுகிறான். கடவுளுக்கென்று ஒதுக்க அவனுக்கு நேரமில்லை அல்லது சொற்ப நேரம் மட்டுமே உண்டு. புயலைப் போல் வேகத்துடன் செயல்பட்டு முன்னேறுவதிலேயே கண்ணும் கருத்துமாயி ருக்கிறான். ஞானவானோ அதற்கு மாறாக இறையரசிற்காக செலவழித்து குறைவுபட்டுப்போகிறான். தேவனோடும் அவரது வார்த்தையோடும் நேரம் செலவழிக்கிறான். அவனது முதல் கவனம் அவனது ஆன்மாவே. புத்தி சாலிகளாயிருப்போம். பிற வேலைகளை நிறுத்தி தினமும் ஒரு மணி நேரம் ஜெபித்து, ஒருமணி நேரம் வேதம் வாசிப்பதினால் உலகம் நின்றுவிடாது. அளவுக்கு மீறி வேலைகளை இழுத்துப்போட்டு மூச்சு வாங்க வாங்க ஓடும்

வாழ்க்கையில் இவற்றிற்கு இடமில்லாமல் போவதினால் அது தேவ சித்தமாயிருக்க முடியாது. அவரது சத்தத்தைக் கேட்கும்படியாக நாம் ஓட்டத்தைக் குறைக்க வேண்டும். புயல் வாழ்க்கைக்குப் பலியாகிவிடாதிருப்போமாக.

4. மூடர்களின் வரிசையில் அடுத்து வருவது மாய்மாலக்காரன். அவன் நடிகன், முகமூடி அணிந்திருப்பான். உள்ளாக அவன் ஓட்டையாயிருந்தாலும், வெளியாக தன்னைப் பரிசுத்தவானாகக் காண்பிப்பான். உலகிற்குத் தன்னை வீரனாகக் காட்டுகிறான். ஆகவே நடை உடை பாவனையில் அன்பே சொரூபியாக, தயாளனாக, இரக்கம், கனிவுடையவனாக இருக்கிறான். ஆனால் இவையெல்லாம் உலகிற்குத் தன்னை உத்தமனாகக் காட்டும் உள் நோக்குடனே செய்யப்படுகிறது. இயேசு ஒரு பரிசேயன் வீட்டிற்கு விருந்துண்ணச் சென்று கையலம்பாமல் உட்கார்ந்தபோது அவன் ஆச்சரியப்பட்டான். ஆண்டவர் சொன்னார், *"பரிசேயராகிய நீங்கள் உணவருந்தும் பாத்திரங்களின் வெளிப்புறத்தைச் சுத்தமாக்குகிறீர்கள், உங்கள் உள்ளமோ கொள்ளையினாலும் பொல்லாப்பினாலும் நிறைந்திருக்கிறது.* ***மதிகேடரே****, வெளிப்புறத்தை உண்டாக்கினவர் உட்புறத்தையும் உண்டாக்கவில்லையோ? உங்களுக்கு உண்டானவைகளில் பிச்சை கொடுங்கள், அப்பொழுது சகலமும் உங்களுக்குச் சுத்தமாயிருக்கும்"* (லூக் 11:37-41).

மற்றவர்கள் நம்மைக் குறித்து என்ன நினைப்பார்கள் என்று எவ்வளவு கவலைப்படுகிறோம்! வெளிப்புறத்தை நினைத்தே கவனத்தைத் திருப்புவதால் உட்புறம் அழுகி நாறுகிறது. சபையில் பரிசுத்தவான்களாக நம்மைக் காண்பித்து வீட்டில் காட்டுமிராண்டிகளாக நடந்துகொள்ளுகிறோம். மற்றவர்களுக்கு நல்லவர்களாக யாவையும் செய்து வீட்டில் சில்லறைத்தனமாக நடந்துகொள்ளுகிறோம். மேடையில் தேவதூதராக நம்மைக் காட்டி, அடுப்படியில் பிசாசுகளாக விஸ்வரூபமெடுக்கிறோம். தாவீது, *"தேவனே, என்னை ஆராய்ந்து, என்* ***இருதயத்தை*** *அறிந்துகொள்ளும்: என்னைச் சோதித்து, என்* ***சிந்தனைகளை*** *அறிந்துகொள்ளும்"* என்று பிரார்த்தித்தார் (சங் 139:23). வெளிப்புறத்தில் காணப்படுவதைக் காட்டிலும் உட்புறக் காரியங்களுக்காகவே தேவன் நம்மை சிநேகிக்கிறார் என்பதை தாவீது நன்கறிந்திருந்தார் (1 சாமு 16:7).

உங்கள் வெளித்தோற்றத்திற்காய் ஜெபிப்பதை நிறுத்தி உங்கள் உட்புறத்தை தேவன் தேய்த்துக், கழுவி, சுரண்டி சுத்திகரிக்கும்படியாக மன்றாடுங்கள். மூட மாய்மாலக்காரரைப் போலன்றி அது உங்களை ஞானவான்களாக்கும். உங்கள் நினைவுகள், யோசனைகள், பாவனைகள் சீர்ப்படும்படி ஜெபியுங்கள். தேவனை அறிகிற அறிவினால் நிரப்பப்படும்படியாகவும், உங்கள் இருதயம் பொல்லாததாகவும் கெட்டதாகவும் இல்லாதபடியும் உங்களை நீங்கள் அறியும்படியாகவும் ஜெபியுங்கள். ஜீவனும் வல்லமையுமுள்ள தேவ வார்த்தை உங்கள் ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும், நினைவுகளையும் யோசனைகளையும் வெட்டிப் பிரிக்க வளைந்துகொடுங்கள். எவ்வளவுக்கெவ்வளவு உள்ளே பரிசுத்தமாகுகிறீர்களோ அவ்வளவுக்கவ்வளவு வெளியே பகுத்தறிவுள்ளவராவீர்கள்.

5. இன்னொரு மூடத்தனம் அநேகரைக் கொன்றுக் கொண்டிருக்கிறது. அதுதான் உயிர்த்தெழுதல் மற்றும் உலகின் முடிவைக் குறித்த அவநம்பிக்கை. மரணத்திற்குப் பிறகு என்ன? உலக முடிவில் என்ன? என்பதை பலரும் அறியாதிருக்கிறார்கள். இதனால் இஷ்டப் போக்கில் வாழ உற்சாகம் கொள்கின்றனர். இதைக் குறித்த பவுலின் விளக்கத்தை அவர் கொரிந்தியருக்கு எழுதின முதல் கடிதத்தில் காணலாம். *"மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால், புசிப்போம் குடிப்போம், நாளைக்குச் சாவோம் என்று சொல்லலாமே. மோசம் போகாதிருங்கள்;* (உயிர்த்தெழுதல் இல்லையென்று சொல்லி உங்களை வஞ்சிக்கிறவர்களோடே) ஆகாத உரையாடல்கள் (தேவனுக்குப் பயந்து சுத்த வாழ்வு வாழும்) *நல்லொழுக்கங்களைக் கெடுக்கும். நீங்கள் பாவஞ்செய்யாமல் நீதிக்கேற்ப விழித்துக்கொண்டு,* ***தெளிந்தவர்களாயிருங்கள்...*** *ஆகிலும், மரித்தோர் எப்படி எழுந்திருப்பார்கள், எப்படிப்பட்ட உடலோடே வருவார்களென்று ஒருவன் சொல்வானாகில்,* ***புத்தியீனனே,*** *நீ விதைக்கிற விதை செத்தாலொழிய உயிர்க்கமாட்டாதே... மரித்தோரின் உயிர்த்தெழுதலும் அப்படியே இருக்கும்"* (1 கொரி 15:32-42 அடைப்புகள் எனது).

நாம் ஒருமுறை மரித்து உயிர்த்தெழுதலில் நியாயத்தீர்ப்படைவோம். ஒரு பூனையாகவோ பாம்பாகவோ மறுபடியும் பிறக்கப்போவதில்லை. உயிர்த்தெழுதலை விசுவாசிக்காதவர் மரித்துப்போன தம் பிரியமானவருக்காக ஏங்கி ஏங்கி நாட்களை வீணடிப்பர். சாவு பயத்தால் செத்து வாழ்வர். வாழ்வின் எல்லைக்கோட்டில் நித்திய வாழ்வின் வெளிப்பாடு அவர்களுக்கு

பயங்கரமாயிருக்கும். ஆனால் தங்கள் பாதையை மாற்றிக்கொள்ள காலமின்றி தவித்து நிற்பர். எத்தனை பயங்கரம்! ஞானவான்களோ தங்கள் மரணத்திற்கு தங்களை ஆயத்தப்படுத்தி மகிமையான உயிர்த்தெழுதலை எதிர்நோக்கிக் காத்திருப்பர். அவர்கள் மரணத்திற்காய் துக்கித்தாலும் அருமையானவரை சந்திக்கும் நம்பிக்கையில் மகிழ்ச்சியாயிருப்பர்.

6. மூடர்களின் அணிவகுப்பில் இன்னொரு விதமான புத்தியீனர் செல்வதைக் காணுங்கள். இவர்கள் தமக்குக் கீழ்ப்பட்டவர்களை, விதவைகளை, அனாதைகளை, அந்நியரை கஷ்டப்படுத்தி துன்புறுத்தி முட்டித் தள்ளி முன்னேறுபவர். கடவுள் தம்மைப் பார்க்கவில்லை என்று நினைக்கிறார்கள் (சங் 94:5-10). "*கர்த்தர் பாரார், யாக்கோபின் தேவன் கவனியார் என்று சொல்லுகிறார்கள்.*" இவர்களைக் குறித்து வேதம் சொல்வதென்ன? "*மக்களில்* ***மிருககுணமுள்ளவர்களே***, *உணர்வடையுங்கள்;* ***மூடரே***, *எப்பொழுது புத்திமான்களாவீர்கள்?*" தொடர்ந்து பாடகன், செவிகளை உண்டாக்கினவர் கேளாரோ? கண்களைப் படைத்தவர் பாராமுகமாயிருப்பாரோ? மக்களுக்கு அறிவைப் போதிக்கிறவர் அறியாரோ? என்று பாடுகிறார். நாம் பிறரை நடத்தும் விதத்தைக் கர்த்தர் கூர்ந்து கவனிக்கிறார்.

பலவீனரை, அந்தஸ்தில் குறைந்தவரை, பிறரை, அசட்டை செய்வது, ஏமாற்றுவது, எரிச்சல் உண்டாக்குவது, அவமதிப்பது, தொல்லை கொடுப்பது தேவனது கண்களை உறுத்தும் காரியம். யேசபேலும் ஆகாபும் நாபோத்தின் சொத்தைப் பறிமுதல் செய்து கொண்டாடினர். அது கொண்டாட்டமா? காது கூசும் அவர்களது முடிவைக் கண்டு எச்சரிக்கை அடையுங்கள். புதிய மாணவர் கேவலமாக ராகிங் செய்யப்படுகின்றனர். பள்ளியில் இளையவராகவோ அலுவலகத்தில் சிறியவராகவோ வீட்டில் உதவியாளராகவோ இருக்கலாம். நமது சொந்த மாமியாராகவோ மருமகளாகவோ பெற்றோரின் கோப வீச்சுகளை எதிர்த்துப் போராட முடியாத பிள்ளையாகவோ வாயில்லா துணைவராகவோ அல்லது பிச்சைக்காரராகவோ இருக்கலாம். அன்னாரை எப்படி நடத்துகிறோம்? நாகரீகமாகவா ஆங்காரமாகவா? அதிகாரத்திலிருப்பவர்கள் தமக்குக் கீழிருப்பவருக்கு இழைக்கும் மரியாதைக் குறைவுகள் உள்ளத்தை உடைக்கின்றன. "ஞானமற்ற அதிகாரி மழுங்கின கோடாரி— செதுக்குவதற்குப் பதிலாக சிதைப்பான்," என்றார் ஆனி பிராட்ஸ்ட்ரீட். இந்த மூடரின் வரிசையில் நாமும் எண்ணப்படவேண்டாம். திக்கற்றவர்களின்

தேவனது வல்லமையை குறைவாய் மதிப்பிடுகிறோம். தேவனுக்கு மேலாக நம்மை உயர்த்தி அவரது ஆசனத்தில் உட்காரப்பார்க்கிறோம். சர்வ ஞானியின் கண் பார்வைக்குத் தப்பித்துக்கொள்ளலாம் என்ற நப்பாசை நமக்கு!

*7. **ஞானத்தை அசட்டைபண்ணி புத்திமதியை வெறுக்கிறவன் அடுத்த வடிகட்டின மூடன்*** (நீதி 1:7). அதைவிட மோசம் இவன் பேதமையை விரும்புவதுதான் (1:22). ஞானம் இவனுக்கு எட்டாதப் பழமல்ல. கேட்டால் கிடைக்கும். அது உயர நின்று: *"வந்து பெற்றுக் கொள்ளுங்கள். உங்களுக்குத் தானே நான். நான் எளிமையான மொழியில் சிறப்பானவைகளைப் பேசுவேன். வெள்ளி, பொன், வைரம் என்று ஏன் ஓடுகிறீர்கள்? நான் அவற்றைவிட விலையேறப்பெற்றவள். என்னை நேசிக்கிறவர்களை நான் நேசிக்கிறேன். என்னை ஊக்கமாய்த் தேடுகிறவர்கள் கண்டுபிடிப்பார்கள்,"* என்கிறது (நீதி 8). பிரச்னை இதுதான். இவனுக்கு ஞானத்தின் மேல் நாட்டமும் கிடையாது, அதை அவன் தேடுவதும் கிடையாது. பெற்றுக்கொள்ள மார்க்க முண்டு ஆனால் மனமில்லை. அழிவின் கரையில் ஊசலாடிக்கொண்டி ருப்பவன் இவன்.

வாலிபர் முக்கியமாக சிந்திக்கவும்! ஞானம், ஞானம் என்று கதறிவிட்டால் ஞானம் கிடைத்துவிடாது. ஞானமானவற்றைச் செய்யத் துணியவேண்டும். கும்பகர்ணன்களுக்கு ஞானம் வெகுதூரம். சோம்பேறிகள் தம் விதியை நொந்துகொள்வர். மூடன் ஞான வார்த்தைகளை அசட்டை செய்து ஆலோச னைக்குச் செவியடைத்துக் கொள்ளுகிறான் (நீதி 23:9). அவனுக்கு அவனே வழிகாட்டி. அவன் செல்லும் வழியே சரி என்கிறான் (நீதி 26:12). புத்திசாலியோ வழிதவறாமல் செல்கிறான். போதும், போதும், உனக்கிருக்கிற ஞானம் போதும் என்று சொல்லும் உன் இதயத்தை நம்பாமல் எப்பாடுபட்டாகிலும் ஞானத்தைப் பெற்றுக்கொள். அதுவே ஒளிமயமான எதிர்காலத்திற்கு வாசலைத் திறந்துவிடும்.

8. முட்டாளிலும் முட்டாள் பாவத்தை ஒரு பொருட்டாக எண்ணாத வன். "மூடர் *பாவத்தைக் குறித்துப் பரியாசம் பண்ணுகிறார்கள்"* (நீதி 14:9). அவனது மூடத்தனத்தை வெள்ளையடித்து மறைக்கமுடியாது; அது அனைவருக்கும் அம்பலமாயிருக்கிறது. பாவத்தை அவன் கொசுக்கடியாக நினைக்கிறான். பாம்போடு விளையாடுவதுபோல பாவத்தோடு விளையாடு கிறான் (10:23). தேவனையும் அதிகாரிகளையும் துச்சமாகவும் பரியாசமாகவும் எண்ணுகிறான். நல்லது கெட்டது என்று அவனுக்கு ஒன்றுமில்லை. தேவனது

எச்சரிப்புகளை அவன் கண்டு கொள்வதில்லை. பாவத்தை வெறுத்து அதை விட்டுவிட அவன் தன் மனச்சாட்சியைப் பழக்குவிக்கவில்லை (13:19ஆ). பாவத்தைப் பருகும்போது அவனது மனச்சாட்சி அடித்துக்கொள்வதில்லை. ஒருவேளை தன் மனச்சாட்சியின் வாயைக் கட்டிவிட்ட கிறிஸ்தவனாகவும் விசுவாசியுமாகக்கூட அவன் இருக்கலாம். பாவத்தை விட்டுவிடும் நோக்க மின்றி அதில் புரளுகிறான். அவன் ஆலோசனையைக் கேட்டாலும், நற்செய்திக் கூட்டங்களுக்குச் சென்றாலும், அங்கு பாவத்தையும் அதன் சம்பளத்தையும் குறித்து விரிவாகக் கேட்டாலும், பாவத்தை விட்டுவிட்டு சுத்தமாய் வாழ அவன் முயற்சி எடுப்பதில்லை. இவ்வுலகில் பரிசுத்தமாய் வாழ்வது கூடாத காரியமென்று உறுதியாய் நம்புகிறான். கீழ்ப்படியாமை யிலிருந்து நீதிக்குத் திரும்புவதை 'ஞானம்' என்கிறது வேதம் (லூக் 1:17).

இதை ஒரு வஞ்சகம் என்றுகூடச் சொல்லலாம். பாவம் என்பது ஒரு பெரிய பிரச்னையல்ல என்று நினைக்கும் வஞ்சகத்திற்குள் அவன் மாட்டிக்கொள்ளு கிறான் (நீதி 14:8ஆ). வேலை தேடி வந்த ஒரு குரங்கின் கதையை நாமறிவோம். எஜமான் ஒரு வாழைப்பழத்தை அதன் கையில் கொடுத்து தான் திரும்பி வரும்வரை அதை பத்திரமாய் வைக்கச் சொல்லிச் சென்றார். சோதனைக்கு வழி வைக்கக்கூடாதென்று குரங்கு தன் கண்களை இறுக மூடிக்கொண்டது. பின்பு, பார்த்தால் பாவமா என்று கண்களைத் திறந்து பார்த்து ரசித்தது. பின்பு, முகர்ந்து பார்த்தால்கூடவா பாவமாகிவிடும் என்று சொல்லி முகர்ந்து பார்த்தது... நக்கிப் பார்த்தது... விழுங்கிவிட்டு ஓடியேவிட்டது. இந்தக் கோமாளி தன் சுயக்கட்டுப்பாட்டை அளவுக்கு மீறி நம்புகிறான். பாவத்தோடு விளையாடி நாளடைவில் அதன் அடிமையாகிறான். எப்பொழுது வேண்டு மானாலும் என்னால் நிறுத்தமுடியும் என்று நினைத்து பொறியில் மாட்டிக் கொண்டுத் தவிக்கிறான். தன் குறுகுறுக்கும் மனச்சாட்சியை மழுக்கு வதற்காக போதை மருந்துகள், பானங்கள், சிற்றின்பங்களை நாடிச் செல்லுகிறான். பாவிகளை தண்டிக்குமளவு கடவுள் கொடியவரல்ல என்று நினைக்கிறான். எச்சரிக்கை. பாவத்தை பயங்கரமாகப் பாவியுங்கள். சின்ன ஓட்டையும் கப்பலை மூழ்கடித்துவிடும். அதன் அருகிலேயேப் போகாதீர்கள். "*சோதனைக்குள் எங்களைப் பிரவேசிக்கப்பண்ணாமல்,*" என்று ஆண்டவர் கற்றுக்கொடுத்த ஜெபத்தை காலையில் ஜெபித்துவிட்டு சோதனையில் காலை வைக்கக்கூடாது.

ஞானத்தின் இரகசியத்தை ஆராய மனங்கொண்டிருந்த அரசன் சாலொமோனிற்கு தேவன் ஞானத்தை அளித்தார். ஆனால் அதன் பாதையில்

அவர் நடக்கவில்லை. அவர் தன் அறிவைப் பெருக்கிக் கொண்டாலும் தன் உள்ளுணர்வுகளை அடக்கிக்கொள்ளாத ஒரே காரணத்தினால் துக்கமான முடிவைத் தழுவினார். அறிவீனம் என்று தான் அறிந்திருந்த பாதையிலே துணிகரமாகச் சென்றார். பின்பு தன் கடந்த வாழ்வைத் திரும்பிப்பார்த்து பொன்மொழி ஒன்றை உதிர்த்தார்: *"இருளைப் பார்க்கிலும் வெளிச்சம் எவ்வளவு உத்தமமோ, அவ்வளவாய் மதியீனத்தைப் பார்க்கிலும் ஞானம் உத்தமம்"* (பிர 2:13). அந்தகாரத்தின் அதளபாதாளத்திற்குச் சென்று இவ்வெளிப்பாட்டை கண்டுபிடிக்கத் தேவையில்லை. ஒளியில் இருந்திருந்தால் 'ஏ ஒன் ஞானி' என்று இன்று உலகப்புகழ் பெற்றிருப்பார். படிப்பினையை உணர்ந்து, அறிவீனம் என்னும் காட்டினின்று தப்பி வெளியேறுவோம். நமது பாவங்களை விட்டு மனந்திரும்பாமல், "கர்த்தர் நல்லவர்" என்று ஒருவரை ஒருவர் உற்சாகப்படுத்தி ஏமாந்துபோக வேண்டாம்.

*9. **வாழ்வே கும்மாளம்தான் எனக் கூத்தடிக்கும் உல்லாச மூடனையும்*** சந்திக்கிறோம். *"**மூடரின்** இருதயம் களிப்பு வீட்டிலே இருக்கும்"* (பிர 7:4ஆ). வாழ்க்கையில் விளையாட்டும் வேடிக்கையும் அத்தியாவசியம். ஆனால் வாழ்வெல்லாம் ஹ ஹா ஹி ஹீ என்று நினைத்துவிடக்கூடாது. நாணயத்தின் மறுபக்கம் வாழ்வைக் கருத்தூன்றிய தாகக் காண்பது. வாழ்க்கை என்பது வேலை, உழைப்பு, வியர்வை, உயர்வு. சொல்லப்பட்ட வசனத்தின் தொடர்ச்சியில், *"**மூடனின்** பாடல்," "**மூடனின்** நகைப்பு"* குறித்து வாசிக்கிறோம். மூடன் உல்லாசத்தை விரும்பி திரையரங்கு களிலும் நடன அரங்குகளிலும் வீடியோ விளையாட்டுகள் போன்றவற்றிலும் நேரம் செலவழிக்க ஓடுகின்றான். வாழ்க்கை சமநிலையாயிருக்கவேண்டும். அதை மிக சீரியசாக எடுக்கவும் கூடாது, மிக லேசாக எடுக்கவும் கூடாது. மிக கருத்தூன்றியதாக வாழ்வைக் கணித்து உயிரை ஊற்றி வாழ்ந்தால் சிறு தோல்வியும் நம்மை உடைத்துச் சுக்குநூறாக்கி மீண்டும் எழ முடியாமல் ஆக்கிவிடும். மிக இலேசாக எடுத்தால் வாழ்க்கையைப் பூரணமாகப் பயன்படுத்திக்கொள்ளாமல் நாளை குப்பை மேட்டின் மேல் உட்கார்ந்திருக்க நேரிடும். வாழ்க்கையில் ஏதோ ஒன்றைச் சாதிக்க நினைத்து, நாற்காலியில் உட்கார்ந்து, காலை ஆட்டிக்கொண்டு, நடந்துவிடும் என்று நம்பிக்கை யோடிருந்துவிட்டால் போதுமா? சாதனையை நீங்கள்தானே சாதிக்க வேண்டுமன்றோ!

10. முட்டாள்களிலேயே மோசமான முட்டாள் கிறிஸ்துவை நம்பாதவன். 1 கொரிந்தியர் 1:18-31இலுள்ள பவுலின் விவாதம் கருத்து நிறைந்தது. நரக பாதையில் நகர்ந்து கொண்டிருப்பவர்களுக்கு சிலுவையைப் பற்றிய உபதேசம் **பைத்தியமாயிருக்கிறது**, ஆனால் நமக்கோ கிறிஸ்து தேவ பெலனும் ஞானமுமானார் என்று எழுதுகிறார்.

நோயாளிகளை எங்கு பார்த்தாலும் அவர்களுக்கு மருந்து எழுதிக் கொடுப்பது என் வழக்கம். ஒருமுறை இரயிலில் பயணிக்கும்போது தடித்த ஒரு மனிதரது வயிற்றில் பெரிய வெள்ளைப் படைகள் இருப்பதைக் கண்டேன். அவரது சட்டைக்கும் வேட்டிக்கும் இடைப்பட்ட சிறிய இடைவெளியில் இதைக் கவனித்தேன். அது மிகுந்த அரிப்பை உண்டுபண்ணும் சாதா சரும நோய். அது சுலபமாக குணமாக்கக்கூடிய நோயாதலால் பாவப்பட்டு அவருக்கு மருந்து எழுதிக்கொடுக்க நினைத்தேன். ஆகவே அவரது படையைக்குறித்து விசாரித்தேன். அடுத்த விநாடி அவரது முகம் மாறியது. தனது சட்டையை இழுத்து விட்டுக்கொண்டு தனக்குப் படையேதும் கிடையாது என்று சாதித்தார். அவரது மனைவியும் அவரோடு சேர்ந்துக்கொண்டு எனது துணிச்சலைக் குறித்து முகத்தைத் தூக்கிக்கொண்டனர். அவருக்காக இன்னும் பரிதாபப்பட்டேன். தனக்கு குஷ்டம் என்று நினைத்து அதை மறைக்க முற்பட்டார் என்று நினைக்கிறேன். நான் ஒரு மருத்துவர் என்று அவர் அறிந்திருந்தால்! அது குணமாக்கக்கூடிய நோய் என்று அவர் அறிந்திருந்தால்! நான் இலவசமாக அவருக்கு மருந்து எழுதிக் கொடுத்திருப்பேன் என்று அவர் அறிந்திருந்தால்! அவர் வாழ்வெல்லாம் கஷ்டப்பட்டிருக்கத் தேவையில்லை.

அவரைக் குறித்து அவ்வப்போது நினைவு வரும். இப்படித்தான் தேவனது இலவச ஈவைத் தள்ளிவிடுகிறோம். நமக்கு இரட்சிப்பில்லை; நமது பாவங்கள் மன்னிக்கப்பட முடியாதவை என்ற பிசாசின் பொய்யை நம்புகிறோம். பின்பு கைக்கெட்டாத ஆறுதலையும் சமாதானத்தையும் தேடி அங்குமிங்கும் அலைந்து, பணத்தைச் செலவழித்து, நேரத்தையும் வீணடிக்கிறோம். தேவனது இலவச ஈவை கைநீட்டிப் பெற்றுக்கொண்டால் எத்தனை நலமாயிருக்கும்! அவர் சற்று ஞானமுள்ளவராய் இருந்திருந்தால் எத்தனை நலமாயிருந் திருக்கும்!

2000 ஆண்டுகட்கு முன்பாக நீச சிலுவையில் உயிர்நீத்த ஒருவர் மேல் நம்பிக்கையை வைப்பது மடமை என சிலர் நினைக்கிறார்கள். சிலருக்கு மட்டுமே அதன் ஞானம் விளங்குகிறது. கிறிஸ்து கண்ணைப் பறிக்கும்

ஏதாவதொரு அற்புதத்தைச் செய்துகாட்டி தன்னை நிரூபிக்க வேண்டுமென யூதர் எதிர்பார்த்தனர். தத்துவ ஞானிகளான கிரேக்கர் மனிதனின் இரட்சிப்பிற்கு ஞானமுள்ள ஒரு திட்டத்தை அவர் தீட்ட எதிர்நோக்கி நின்றனர். சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவின் மூலமான மீட்பின் திட்டம் அவர்களுக்கு அர்த்தமற்றதாகத் தெரிந்தது.

கிறிஸ்துவின் விசுவாசிகள் இவ்வுலகத்தால் முட்டாள்களென்று அற்பமாய் எண்ணப்படுகின்றனர். ஆனால் இவர்களே இப்பூவில் சிறந்த ஞானிகள். அவிசுவாசிகள் உலகிலேயே அறிவீனர். கிறிஸ்துவை சோதனைக் குழாயில் போட்டு நிரூபிக்க முடியாது. விசுவாசம், விசுவாசம், விசுவாசம் மட்டுமே.

ஒன்றுமில்லாத பைத்தியங்களை வேண்டுமென்றே தெரிந்தெடுத்த தினால் தேவன் உலகின் ஞானவான்களை மூடராக்கினார். எப்படி? அவருக்குள் இருப்பவருக்கு கிறிஸ்து இயேசுவே ஞானமானார்! (1 கொரி 1:30) இதை உங்களால் விசுவாசிக்கக் கூடுமானால் கிறிஸ்துவே உங்கள் ஞானமாகி, உங்கள் அறிவீனத்தை அகற்றி உங்களை ஞானவானாக்குவார்.

முடிவாக, ஒவ்வொரு பிள்ளையிலும் (ஒவ்வொருவரிலும்) அறிவீனம் உண்டு. "*பிள்ளையின் நெஞ்சில் **மதியீனம்** ஒட்டியிருக்கும்; அதைத் தண்டனையின் பிரம்பு அவனை விட்டு நீக்கும்*" (நீதி 22:15). பிள்ளைகள் மற்றும் வளர்ந்து வருபவரின் மதியீனத்தை நீக்கும் பெரும் பொறுப்பு பெற்றோர், ஆசிரியர், தலைவர் மற்றும் பெரியவரின் தோள்களில் சுமத்தப்பட்டிருக்கிறது. வளர்ந்து வருபவர் (எவ்வயதிலும்) ஞானவான்களின் ஆலோசனைகளை ஏற்று துன்மார்க்கரின் ஆலோசனையை ஒதுக்கித் தள்ளி (சங் 1:1) தம் வாழ்விலுள்ள மடமைகளைத் துடைத்து எறியவேண்டும். இதை வாசிப்பத னால் புத்திசாலியாகிவிட முடியாது. உங்கள் மதியீனம் இன்னதென்று கண்டுகொண்டு ஞானமெய்த இரட்டிப்பான முயற்சியெடுங்கள். மதியீனம் எனும் பிரச்னையைத் தீர்க்க ஒரே வழி வரிந்துகட்டிக்கொண்டு காரியத்தைக் கைகூடிவரப்பண்ணுவதுதான். யுத்தத்தில் வெற்றியடைய சிறிய போர்களை ஒன்றன் பின் ஒன்றாக மேற்கொள்வதே வழி. அப்படியானால் நிச்சயம் ஞானம் உங்கள் சொத்தாகும்!

3

செத்த ஈக்கள்

சரித்திரத்தின் உதயத்திலிருந்து மனிதன் ஞானத்திற்காக வேட்டை யாடிக் கொண்டேதான் இருக்கிறான். நாம் எல்லாரும் முட்டாள்களல்ல; ஆனால் சிலவேளை மதியீனமாக நடந்து கொள்ளுகிறோம். ஞானச் செம்மல்களிடம் கூட அறிவீனமெனும் கறை இருக்கத்தான் செய்கிறது. சாலொமோன் இசை வடிவில் எழுதுகிறார், *“செத்த ஈக்கள் தைலக்கார னுடைய பரிமளதைலத்தை நாறிக் கெட்டுப்போகப்பண்ணும்; ஞானத்திலும் கனத்திலும் பேர்பெற்றவனைச் சொற்ப* ***மதியீனமும்*** *அப்படியே செய்யும்”* (பிர 10:1). பரிமளதைலம் தன்னைச் சுற்றிலும் கமகமக்கும். ஒருவனது புகழும் அப்படியே. ஆனால் அவனது வாழ்வின் அற்ப அறிவீனம் அவனது ஞானத்தின் வாசனையை மிஞ்சிய துர்நாற்றத்தை பரப்பிவிடும். தைலத்தை தயாரிக்க எவ்வளவு கடினமான உழைப்பு தேவை! கேவலம், ஒரு செத்த ஈ அதையெல் லாம் வீணடித்து விடுகிறது. நமது சாட்சியை நாறப்பண்ணி, நமது வாழ்வை மங்கிப்போகப்பண்ணும் “சொற்ப மதியீனங்களைக்” குறித்து வேதம் என்ன சொல்கிறதென்று பார்க்கலாம். இந்த செத்த ஈக்களை நமது வாழ்வை விட்டுத் தூக்கியெறிய முயற்சிப்போம்.

1. குமட்டக்கூடிய அளவு ஒருவரைச் சுற்றிலுமுள்ள காற்றைப் பாழாக்கும் முதலாவது செத்த ஈ, தேவனது வார்த்தைக்குச் செவியடைத்துக் கொள்வதுதான். இது அறிவீனத்திற்கு நடத்துகிறதென்பதைக் காணலாம்: *“இன்று நான் உனக்கு விதிக்கிற உன் தேவனாகிய கர்த்தருடைய எல்லாக்*

கற்பனைகளின்படியும் நடக்க கவனமாயிருப்பதற்கு, அவர் சத்தத்திற்கு செவிகொடாதே போவாயாகில், இப்பொழுது சொல்லப்படும் சாபங்களெல்லாம் உன்மேல் வந்து, உனக்குப் பலிக்கும். "என்ன சாபம்? "கர்த்தர் உன்னைப் **புத்தி மயக்கத்தினாலும், குருட்டாட்டத்தினாலும், மனத்திகைப்பினாலும்** வாதிப்பார். குருடன் அந்தகாரத்திலே தடவித் திரிகிறதுபோல, நீ பட்டப் பகலிலே தடவிக்கொண்டு திரிவாய்" (உபா 28:15,28,29).

குறிக்கப்பட்ட கோடுகளின் நடுவே ஜாக்கிரதையாய் அடிவைத்து நடக்கா திருப்போமானால் வாழ்வின் முக்கியக் கட்டங்களில் முகத்தில் கரிபூசிக் கொள்வோம் என்பதில் சந்தேகமில்லை. தேவமக்கள் பலருக்கு இது நடந்திருக்கிறது. நேபுகாத்நேச்சார் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டப் பாத்திரம். ஆகவேதான் அவரது கனவுக்கு தெளிவு காண தானியேலை அவரது தர்பாருக்கு தேவன் அனுப்பினார். "மெய்யாய் உங்கள் தேவனே தேவர்களுக்குத் தேவனும், இராஜாக்களுக்கு ஆண்டவருமாயிருக்கிறார்," என்று நேபுகாத்நேச்சார் அறிக்கையிட்டார் (தானி 2:47). ஆனால் சீக்கிரமாக தேவனுக்கு விரோதமான கொடூரப் பாவியாகி, மக்கள் ஆராதிக்க பொற்சிலை ஒன்றை வடித்தார். தேவனோ அவரை விட்டுவிட மனதற்றவராய் மறுபடியும் தன்னை வெளிப்படுத்தினார். மறுபடியும் தன் இருதயத்தைக் கடினப்படுத் தினார். தேவன் ஒரு சொப்பனத்தின் மூலம் அவரை எச்சரித்தார். ஆனாலும் அவரது இதயம் மேட்டிமையாயிற்று. அதன் விளைவென்ன? அவர் **மிருகத்தைப்** போலானார். அவர் தன் கண்களை வானத்துக்கு ஏறெடுத்த போது அவரது **புத்தி** அவருக்குத் திரும்பி வந்தது (தானி 4:33,34,36).

தேவனால் தெரிந்தெடுக்கப்பட்ட இஸ்ரவேலின் ராஜாவாகிய சவுல் எவ்வளவு ஞானியாயிருந்திருக்கவேண்டும். ஆனால் அற்பமாய்த் தோன்றிய தொரு தேவ கட்டளைக்குக் கீழ்ப்படியாததினால் சாமுவேல், "***புத்தியீனமாய்ச்*** *செய்தீர்; உம்முடைய தேவனாகிய கர்த்தர் உமக்கு விதித்தக் கட்டளையைக் கைக்கொள்ளாமற்போனீர்*" என்றார் (1 சாமு 13:13,14). கர்த்தருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும், சர்வாங்க தகனங்களும், பலிகளும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்குமோ என நேரடியாய் சவுலைக் கேட்டார். தேவன் தெரிந்தெடுத்த ராஜாவின் சோக முடிவைப் பாருங்கள்: "அப்படியே சவுல் கர்த்தருடைய வார்த்தையைக் கைக்கொள்ளாமல், கர்த்தருக்குச் செய்த தன் துரோகத்தினிமித்தமும், அவன் கர்த்தரைத் தேடாமல் அஞ்சனம் பார்க்கிறவர்களைக் கேட்கும்படிக்குத் தேடினதினி

மித்தமும் செத்துப்போனான்" (1 நாளா 10:13). சொற்ப மதியீனத்திற்காக எத்தனை பெரிய கிரயம் செலுத்தினார்! இது குறி கேட்கிறவர்களுக்கும் அஞ்சனம் பார்க்கிறவர்களுக்கும்கூட ஓர் எச்சரிக்கை.

நமதாண்டவர் தமது மலைப் பிரசங்கத்தில் கற்றுக்கொடுத்தவைகளை இங்கே நினைவூட்டிக்கொள்வது பொருத்தமாயிருக்கும். "*நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு இவைகளின்படி செய்யாதிருக்கிறவன் எவனோ, அவன் தன் வீட்டை மணலின்மேல் கட்டின* ***புத்தியில்லாத*** *மனிதனுக்கு ஒப்பிடப்படுவான்*" (மத் 7:26). வார்த்தைகள் இதைக் காட்டிலும் தெளிவாயிருக்க முடியுமா? கண்டதையும் நினைத்துக் கொண்டிராமல் கவனம் செலுத்தும் இதயத்துடன் வார்த்தை வார்த்தையாக சிறு நுணுக்கத்தையும் விட்டுவிடாமல் வேதத்தை வாசியுங்கள். வசனமற்ற வாழ்வு காலி தலையும் காலி இதயமும் கொண்ட வாழ்வாகும். ஒவ்வொருமுறை வேதத்தைத் திறக்கும்போதும் சற்று ஞானமடைகிறீர்கள்.

2. நமது பரிமளதைலத்தை நாறச் செய்யும் மற்றொரு செத்த ஈ, தேவ சித்தத்தை அறியாமலிருப்பது. அடிக்கடி நான் ஜெபிக்கும் ஜெபம், "ஆண்டவரே, வாழ்க்கையில் பெரிய தவறுகளைச் செய்துவிடாதபடி என்னைக் காத்துக்கொள்ளும்," என்பது. தேவ சித்தத்தை அறிவது கடினம் என்று சிலர் எண்ணுகின்றனர். தேவனோ பொறுப்பை நம்மேல் தூக்கிப்போடுகிறார். "*நான் உனக்குப் போதித்து, நீ நடக்கவேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன்; உன்மேல் என் கண்ணை வைத்து, உனக்கு ஆலோசனை சொல்லுவேன். வாரினாலும் கடிவாளத்தினாலும் வாய் கட்டப்பட்டாலொழிய, உன் கிட்டச் சேராத* ***புத்தியில்லாக் குதிரையைப்*** *போலவும்* ***கோவேறு கழுதையைப்*** *போலவும் இருக்க வேண்டாம்*" (சங் 32:8,9). கருத்தை இன்னும் விளக்கத் தேவையில்லை. தம் கண்களால் நமக்கு ஜாடை காட்ட அவர் ஆயத்தம். நமது கண்கள் அவர் கண்கள்மேல் பதிந்திருக்கின்றனவா என்பதுதான் கேள்வி. தேவ சத்தத்தை சரியாய்க் கேட்டு, பின்னும் கீழ்ப்படியாமலிருப்போமானால் நாமே சுட்டுப்போட்ட முட்டாள்கள்.

பிலேயாம் என்றொருவன் இருந்தான். ஞானவான் என்றெண்ணப்பட்ட அவன், தேவசித்தம் அறிவதில் சற்று தடுமாற்றம் கொண்டான். தனது வழியில் அவனை நடத்த கடவுள் அவனுக்கு வாரையும் கடிவாளத்தையும் போட வேண்டியிருந்தது. (அவனது கண்கள் ஆதாயத்தையல்லவா நோக்கியிருந்தன!) அவனது கழுதை அவனைக் காட்டிலும் ஞானமாயிருந்தது

வேடிக்கையாயில்லையா ? (எண் 22:23). அவனைக் குறித்து பேதுரு தனது இரண்டாம் கடிதத்தில், *"பேசாத* ***மிருகம்*** *மனிதர் பேச்சைப் பேசித் தீர்க்கதரிசியினுடைய* ***மதிகேட்டைத்*** *தடுத்தது,"* என்றெழுதுகிறார் (2:16). எத்தனை முட்டாளாகி விட்டான். ஆம், தேவனுடைய சித்தத்தை செய்வதற்கு செலுத்தவேண்டிய கிரயத்தைவிட அவருடைய சித்தத்தை செய்யாதிருக்கும் போதே அதிகக் கிரயம் செலுத்தவேண்டிவரும்.

எபேசியரில் பின்வருமாறு ஆலோசனை பெறுகிறோம்: *"ஆகையால், நீங்கள்* ***மதியற்றவர்களாயிராமல்,*** *கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்துகொள்ளுங்கள்"* (5:17). நாம் என்ன செய்ய வேண்டுமென்று ஆண்டவர் விரும்புகிறார் என்பதை அறியாமல் வாழ்க்கையில் நடைபோடுவது அதிகமான நேரத்தையும் சக்தியையும் வீண்டிக்கும். பவுலைப்போல நாம் ஒவ்வொருவரும், *"ஆண்டவரே, நான் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர் ?"* என்று அனுதினமும் ஜெபிக்கவேண்டும். அவரைப்போல அவரது சித்தம் செய்ய மனதுள்ளவர்களாயிருப்போமானால் அவரை நடத்தியதுபோல நம்மையும் அழகாய் நடத்துவார். அப்பொழுது மலை ஆடுகளைப்போல் உறுதியான கால்களை உடையவர்களாயிருப்போம். நம்மில் பலர் தேவசித்தமில்லாத பல நற்காரியங்களைச் செய்கிறோம். அவைகளைக் களைந்தெறிவோமானால், தேவன் நாம் நிச்சயமாய்ச் செய்யவேண்டு மென்றிருக்கிறவற்றைச் செய்யப் போதுமான சக்தியும் நேரமும் உடையவர் களாயிருப்போம். களைகளைப் பிடுங்கி எறிந்தால் பூச்செடிகள் பூத்துக் குலுங்கும். வாழ்க்கை வரையறுக்கப்பட்டது. ஒவ்வொரு சொட்டு நேரத்தையும் சேமியுங்கள். நமக்கு அதிக நேரமில்லை. எஞ்சிய வாழ்க்கையில் நீங்கள் என்ன செய்யவேண்டுமென்று தேவன் விரும்புகிறார் என்பதை ஐயந்திரிபுர உணர்ந்து அதில் மும்முரமாய் செயல்படுங்கள். நீச்சல் தெரியாதவன் கைகளையும் கால்களையும் விசிறியடிப்பதைப் போல வாழ்க்கையில் பரசியடிக்காதீர்கள்.

"எல்லா ***ஞானத்தோடும்,*** *ஆவிக்குரிய* ***விவேகத்தோடும்*** *அவருடைய சித்தத்தை அறிகிற அறிவினாலே நிரப்பப்பட வேண்டு"*மென்று பவுல் தன் கனி களுக்காக விண்ணப்பித்தார் (கொலோ 1:9). விண்ணுலகில் அவருடைய சித்தம் செய்யப்படுவதுபோல் மண்ணுலகிலும் செய்யப்படவேண்டுமென்று (இவ்வுலகில் நாம் அவருடைய சித்தம் செய்ய வேண்டுமென்று) நம் தகப்பனிடம் கேட்கும்படி இயேசு கற்பித்தார். தேவனுடைய இதய வாஞ்சையை அறியும்படியாக ஜெபம் நம் மனதை தெளிவடையச் செய்கிறது. "நான் சொல்லு

கிறவைகளைச் சிந்தித்துக்கொள்; கர்த்தர் எல்லாக் காரியங்களிலும் உனக்குப் ***புத்தியைத்*** *தந்தருளுவார்,"* என்று பவுல் தீமோத்தேயுவுக்கு ஆலோசனை கூறுகிறார் (2 தீமோ 2:7). பல விபரங்களை நாம் ஒன்று சேர்த்து, நமது மூளையைப் பயன்படுத்தி, யோசித்து, அதன்பின் தெளிவுக்காக தேவனை நோக்கிப் பார்க்கவேண்டும்.

ஓர் எடுத்துக்காட்டு—இத்தலைமுறை வாலிபப் பெண்கள் யாவரும் படித்து நல்ல வேலை கிடைக்க ஜெபிக்கிறார்கள். நல்ல மனைவியாய் வீட்டைப் பேணுவது தன்னைக் குறித்த தேவனது சித்தமாயிருக்கலாமே என்று அவர்களுக்குத் தோன்றுவதில்லை. திறந்த மனதுள்ளவர்களாயிராவிட்டால் தேவ சித்தம் அறிவது எண்ணெய் கையால் விரால் மீனைப் பிடிப்பது போலாகலாம். தேவன் சொன்னது சொன்னதே என ஒத்துக்கொள்ளப் பழகுவோம். மறுவார்த்தை பேச வேண்டாம்.

திரு. யூஜீன் பீட்டர்சன் *மெசேஜ்* என்ற தனது ஆங்கில வேதாகம விளக்கத்தில் கூறியுள்ளதை மொழிபெயர்த்துக் கூற விரும்புகிறேன். "மனுக்குலத்தின் ஒரு பிடிவாதப் பழக்கம் தேவனுக்கு மூக்கணாங்கயிறு போட முயற்சிப்பதுதான். அவரை நமது கட்டுக்குள் கொண்டுவரப் படாதபாடு படுகிறோம். நமது செயல் திட்டங்களை ஓட்டச் செய்யும் மோட்டாராக அவரைப் பயன்படுத்தப் பார்க்கிறோம். நமது திட்டங்கள், ஆர்வங்கள், ஆசைகளுக்குள் அடங்குமளவுக்கு அவரை நசுக்கி உள்ளே திணிக்கப்பார்க்கிறோம். ஆனால் நம்மைக்காட்டிலும் முரடான வேத வாக்கியங்கள் நாம் அப்படிச் செய்யமுடியாது என்கின்றன. தேவனை நமது திட்டத்திற்குள் அடக்கமுடியாது, நாமே அவரது திட்டத்திற்குள் அடங்கவேண்டும். தேவன் ஒரு கருவியோ, உபகரணமோ, கடன் பத்திரமோ அல்ல."

தேவனது சித்தத்தை நழுவவிட்டு வழிவிலகிப் போயிருப்பீர்களானால் அடிச்சுவட்டைப் பின்பற்றி சென்ற வழியே திரும்பி தேவனிடம் வாருங்கள். அவர் உங்கள் வாழ்வை முழுமையாக்கி புதிய துவக்கத்தை அருளுவார். கண்கள் சிவக்க அழுத இரவுகள் மாறி சிரிப்பொலி நிறைந்த நாட்கள் மலரும்.

3. எண்ணற்ற ஞானவான்களின் வாழ்க்கையைச் சிதறடித்து அவர்கள் பெயர்களை முகில்களை முட்டுமளவிற்கு நாறப்பண்ணிய செத்த ஈ ஒன்று விபச்சாரமாகும். இன்று வாலிபருக்கு இது விளையாட்டாகிவிட்டது. பாலியல் களங்கப்பேச்சுக்கள் சர்வதேச நாற்றமாகிவிட்டது. விபச்சாரத்தின் ஆவி

பூதமெனக் கிளம்பியிருக்கிறது. இஸ்ரவேலிலே பாலியல் பாவங்கள் மூடத்தனமெனக் கருதப்பட்டன. தாமார் அம்னோனால் கவர்ச்சிக்கப்பட்டு ஈர்க்கப்பட்டாள். அவனது உள்நோக்கை அறிந்தவுடன், "*இப்படிப்பட்ட* ***மதிகேடான*** *காரியத்தைச் செய்யவேண்டாம்... இஸ்ரவேலிலே* ***மதிகெட்டவர்களில்*** *ஒருவனைப்போல ஆவாய்,*" என்றாள் (2 சாமு 13:13). தூண்டில் புழுவைக் கடித்த அவளும் மதிகெட்டவள்தானே. அவனது அழைப்புக்கு இணங்காதிருந்திருக்கலாம் அல்லது ஒரு சிநேகிதியோடு சென்றிருக்கலாம் அல்லது உதவி நாடி சத்தமிட்டிருக்கலாம். வாலிபர் தம் உணர்வுகளுக்குக் கடிவாளம் போடக் கற்கவேண்டும். ஒரு தவறான தீர்மானம் உங்கள் வாழ்வையே நசுக்கி, உங்களுக்கு முட்டாள் பட்டம் வழங்கிவிடும். உங்கள் வாழ்வே சிறிது சிறிதாய் கசிந்து ஒன்றுமில்லாமல் போய்விடும்.

வாலிபர் திருமணமானவரோடு கொள்ளும் உறவுகள் இன்று அன்றாட செய்தி. ஒரு நகைச்சுவை கேட்டேன். ஒருத்தி தன் சிநேகிதியிடம், "என்ன? உன் காதலன் உன்னைக் கட்டிக்கொள்வாரா?" என்கிறாள். சிநேகிதி "நிச்சயமாக," என்கிறாள். முதலவள், "பின் திருமணத்தை ஏன் ஒத்திப்போடுகிறாய்? உனக்கெதுவும் சிக்கலா?" என்கிறாள். "இல்லை, இல்லை, எனக்குப் பூரண சம்மதம்," என்கிறாள் சிநேகிதி. "பின் என்னதான் தடை?" என்கிறாள். "அவரது மனைவி ஒத்துக்கொள்ள மறுக்கிறாளே," என பதில் வருகிறது. இன்றைய ஆண்களும் பெண்களும் சுயக் கட்டுப்பாடு இல்லாதவர்களாய் பிறரால் கட்டுப்படுத்த வேண்டியிருப்பது எத்தனை துக்ககரமான காரியம்!

"*விபச்சாரம் செய்கிறவன்* ***மதிகெட்டவன்.***" ஏன்? அது ஆன்மாவைக் கெடுத்து பெயர் புகழை அழித்துவிடும் அறிவற்றச் செயல். ஏனெனில், மூர்க்கங்கொண்ட துணைவரின் கோபக்கனலை நீங்கள் சந்திக்க வேண்டிவரும் (நீதி 6:32-35). நீங்கள் தடுமாறி, திரும்ப புத்தி சுயாதீனத்திற்கு வரும்போது மனஉரம் சிதைந்தவர்களாக வாலைச் சுருட்டிக்கொண்டு செல்லவேண்டிய நிலை வரும். ஆகவே மறுபாலரோடு சில்லறைத்தனமாக விளையாடுவதையும், சோம்பித் திரிவதையும், தூண்டிவிடுவதையும், கிளர்ச்சியூட்டுவதையும் அறவே துறந்துவிடுங்கள். அவன்/அவள் வலது கண்ணைப் போல் விலையேறப்பெற்றவராயிருந்தாலும் சோதனையை வீட்டுக்குள் வைத்துக்கொள்ளாதீர்கள். சரளமாய்த் தொட்டுப்பழகும் பட்டாம்பூச்சிகளை விஷமாய் எண்ணி, ஒதுங்கி ஓடுங்கள்.

ஒருநாள் சாலொமோன் ஜன்னல் வழியாகப் **பேதையரை** கவனித்துக் கொண்டிருந்தார். அவர்களுக்குள்ளே ஒரு **புத்தியில்லாத** வாலிபனைக்

கண்டார் (நீதி 7:7). தன்னை யாரும் பார்க்கவில்லை என்றெண்ணி அவன் இரவென்னும் போர்வை போர்த்திச் சென்றான். ஆனால் யாரோ ஒருவர் அவனை பலகணி வழியே பார்த்துக்கொண்டுதான் இருந்தார். சுலபமாய் அகப் படக்கூடிய தன் இரையை நோக்கிப் பாய்ந்தான். ஐயோ—டுமீல்! அவனே இரையாகிவிட்டான். இவன் வைத்ததுதான் முதல் அடி. அவள் வைத்தது அடுத்த அடி. திருமணமான அப்பெண் தன் படுக்கையறைப் பார்வையாலும், தேன்சொட்டும் நாவினாலும் அவனை வசீகரிக்க, அவன் அவள் பின்னே மூடன் விலங்கிடப்பட்டுப் போவதுபோலச் சென்றான் (வச 22). அதுவே முடிவாக அவனைக் குறித்து வாசிக்கிறோம். ஆம், அவனை அவள் உயிரோடே விழுங்கிவிட்டாள். ஒரே ஒரு இச்சையான பார்வையினால் தாவீது பத்து கற்பனை களில் ஐந்தை மீற நேர்ந்தது என்கிறார் அருள்திரு. டேவிட் பாசன். சில்லரைப் பெண்கள் தலைவர்களை கப்பற் சேதப்படுத்துகிறார்கள். வேலியே பயிரை மேய்வதும் சகஜமாகிவிட்டது. பயிரே, ஜாக்கிரதை! மறுபாலருடன் முட்டாள் தனமாக விளையாடாதே.

பாலியல் மிருகங்கள் எங்கும் உள்ளனர். அளவுக்கு மிஞ்சி நெருங்கிப் பழக முயற்சிக்கும் அறிமுகமானவர், அறிமுகமாகாதவர் முன்னிலையில் சற்றும் அசந்து விடாதீர். பாலியல் உணர்வுகள் சிங்கத்தைப் போன்றவை; அவற்றைக் கயிறு கட்டி நடத்திச் செல்லமுடியாது. யாரும் கட்டாயப்படுத்தினாலும் ஒரு அங்குலம் கூட விட்டுக்கொடுக்காதீர்கள். தொடுதலுக்கு சம்மதியாதீர்கள். விளையாட்டாக பாலுறவில் ஈடுபடாதீர்கள். உதவி தேவைப்பட்டால் அதே பாலரான ஒரு மூத்தவரை அணுகத் தயங்காதீர்கள். தேவனை இறுகப் பற்றிக்கொள்ளுங்கள். வாலிபர், நங்கையர், ஆண்கள், பெண்கள் அனை வருக்கும் இன்று முதுகெலும்பு தேவை. யாரும் உங்களை பயமுறுத்தி நட்பு கொள்ள இடமளிக்காதீர். மறுக்க உங்களுக்கு உரிமையுண்டு. பாலியல் சூழல் ஏற்படுமானால் உடனே அவ்விடத்தைக் காலிசெய்யுங்கள். பாலியல் ரீதியாக விரல்கள் உங்கள்மேல் உரசுமானால் உடனே எட்டிப்போய்விடுங்கள்.

தவறிவிட்டீர்களா? தேவனிடம் திரும்பி ஓடிவரப் பிந்திப்போகவில்லை. அவரே வாழ்க்கையின் திருப்புமுனை. சில பத்தாண்டுகட்கு முன்பு பரிசுத்த வாழ்வு சற்று சுலபமாயிருந்தது. இத்தலைமுறை வாலிபருக்குக் கூடுதல் ஞானம் தேவை. ஒவ்வொரு சோதனையையும் மேற்கொண்டு முன்னேறுவீர் களானால் ஏற்ற காலத்தில் தேவன் ஆசீர்வாத மழை பொழிவார்.

தங்கள் வடிகட்டிமீசை நனையாமல் கூழையும் குடிக்க முயற்சித்து இரட்டை வாழ்வு வாழும் பல மூடப் பரிசுத்தவான்களுமுண்டு. இவர்கள் ஏற்கெனவே பற்றி எரிந்துகொண்டிருக்கும் தேவ கோபாக்கினையில் எண்ணெயை ஊற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை விட்டு விலகுங்கள். தேவனது கடுங் கோபம் அவர்கள் மேல் வரும். தன் மனைவியை விட்டு வேறே பெண்ணிடம் செல்பவனைக் குறித்து வேதம், "*அவன்* ***புத்தியைக்*** *கேளாததினால் மடிந்து, தன்* ***மதிகேட்டின்*** *மிகுதியினால் மயங்கிப்போவான்,*" என்று கூறுகிறது (நீதி 5:23).

இன்டர்நெட் மற்றும் செல்போன் மூலம் தவறான தொடர்புகொள்ளுதல் பெரும் பாவமில்லை என்று சிலர் நினைக்கிறார்கள். உங்களையே ஏமாற்றிக் கொள்ளாதீர்கள். கிளர்ச்சியூட்டும் SMS உங்கள் வாழ்வை தளர்ச்சியடையச் செய்யும். உங்கள் துணைவரும் பயன்படுத்தக்கூடிய பொது இடத்தில் உங்கள் செல்போனை வைக்கத் துணியும்வரை உங்கள் உத்தமம் கேள்விக்குறிதான். ஆதாயம் தேடி ஒட்டிக்கொள்ளும் பெண், உத்தமப் பத்தினிக்கு கால்தூசியும் பெறமாட்டாள். என்றோ ஒருநாள் ஏதோ ஓரிடத்தில் பரிசுத்தமற்ற உறவைத் துண்டித்துத்தான் ஆகவேண்டும். சீக்கிரம் செய்தால் வேதனை குறைவு. வேறொரு பெண்ணுக்காக/ஆணுக்காக குடும்பத்தை தியாகம் செய்வது தக்கதுதானா? — எத்தனை வேதனை, எத்தனை நெஞ்சு வலி, எத்தனை பேச்சு — சிறுதுளி தற்காலிக சுய இன்பத்திற்காக!

4. நமது வாசனையைக் காத்துக்கொள்ள வாயாடித்தனமென்னும் செத்த ஈக்கும் தப்பித்துக்கொள்ளவேண்டும். "**மதியற்றப்** பெண் வாயாடியும், ஒன்றுமறியாத **நிர்மூடமுமாயிருக்கிறாள்**" (நீதி 9:13). ஏன் அவள் ஒன்றுமறியவில்லை? ஏனெனில் அவள் நேரத்தைப் பிரயோஜனமாக செலவழிக்காமல் அதை வம்பளப்பதில் போக்குகிறாள். இந்த அத்தியாயத்தின் துவக்கத்தில் ஞானமானது புத்தியீனனைப் பார்த்து அறிவீனத்தை விட்டுவிட்டு வாழ்வு பெற்று புத்தியின் பாதையில் நடக்க அழைக்கிறது. மதியற்றப் பெண்ணோ நேர்வழியே செல்பவனை ஆசைகாட்டி நரக பாதாளத்திற்கு அழைக்கிறாள். "***மூடனுடைய*** *வாய் அவனுக்குக் கேடு, அவன் உதடுகள் அவன் ஆத்துமாவுக்குக் கண்ணி*" (நீதி 18:7). நமது கவலையீனமான வார்த்தைகள் நமக்கே கண்ணியாகலாம். நாம் பேசும் விதம், பயன்படுத்தும் வார்த்தைகள், கடத்தும் செய்தி குறித்து அதிக கவன மாயிருக்கவேண்டும். நமது வார்த்தைகள் மக்களை உயிர்ப்பிக்கவேண்டும்,

கொல்லக்கூடாது. "நாம் கண்ணை மூடிக்கொண்டும் வாயைத் திறந்து கொண்டும் பிறக்கிறோம். இயற்கையின் இந்தத் தவற்றைச் சரிசெய்ய வாழ்வெல்லாம் பாடுபடுகிறோம்," என்றார் டேல் டர்னர்.

"யாகாவாராயினும் நாகாக்க; காவாக்கால், சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு," என்றுரைத்தார் திருவள்ளுவர். மற்ற பகுதிகளிலும் நாவைக் கட்டுப் படுத்த வேண்டும். "*புறங்கூறுகிறவன்* ***மதிகேடன்***" (நீதி 10:18). புறங்கூறு கிறவன் பிறனை முட்டாளாக்குவதாக நினைக்கிறான்; ஆனால் அவன் தன்னையே முட்டாளாக்கிக்கொள்ளுகிறான். பிறரது மதிப்பைக் குறைக்கும் தவறான வார்த்தைகள் நமது வாயினின்று வரவே கூடாது. புறங்கூறுதலைக் கேட்காதீர், கடத்தாதீர்.

யோசனையற்று வாயடிப்பதன் மற்றொரு ஆபத்து நமது சிந்தனைகளை வெளிப்படுத்துவதுதான். "*புத்திமானுடைய இருதயத்தில் ஞானம் தங்கும்;* ***மதியீனரிடத்தில்*** *உள்ளதோ வெளிப்படும்*" (நீதி 14:33). எண்ணங்கள் முதிர்ந்து, கனிந்து, வெளிப்படவேண்டும். மரியாள் தன் எண்ணங்களை தன் உள்ளத்தில் வைத்து வைத்தாள் (லூக் 2:19). இது கற்க வேண்டிய ஒரு கலை.

சிலவேளை படபடத்துப் பேசிவிட்டு, பின்பு வெட வெடத்துப் போகிறோம். "*தன் வார்த்தைகளில் பதறுகிற மனிதனைக் கண்டாயானால், அவனை நம்புவதைப் பார்க்கிலும்* ***மூடனை*** *நம்பலாம்" (நீதி 29:20).* "பேசுமுன் இருமுறை யோசியுங்கள்," என்பது நல்ல சட்டம். வாயை மூடிக்கொண்டிருக்க, இருக்கிற சக்தியெல்லாம் தேவை. தீர்மானங்களை அறிவிக்குமுன்பாக ஜெபிக்க நேரமெடுங்கள். உங்களை சற்று அமரப்பண்ணி, தெரிந்த விபரங்கள் எல்லாவற்றையும் யோசித்துப் பார்த்து பின்பு பதிலளியுங்கள். மின்னல் வேகத்தில் பதிலளிப்பதைக் காட்டிலும் சற்று அவகாசம் கேட்டு ஆற அமர பதில் சொல்லலாம்.

வம்பு, வளவளப்பை எப்படியும் நிறுத்தவேண்டும். பேசாமலிருந்தாலே ஞானி எனப் பெயர் பெறுவீர்கள். "*வம்பும்,* ***புத்தியீனமான*** *பேச்சும், பரியாசமும் தகாத வைகள்*" (எபே 5:4). உங்கள் விளையாட்டு வார்த்தைகள், கேலிப்பேச்சுகள், கிண்டல்கள், தமாஷ் குறித்து எச்சரிக்கை! சேரக்கூடாத கூட்டத்தோடு சேர்ந்து வம்பளக்காதீர்கள். நண்பரோடு சேர்ந்திருக்கும்போது தேவ பயத்தோடே நடந்து கொள்ளுங்கள். அசுத்தமான TV நிகழ்ச்சிகளைப் பார்த்து அருவருப்பானவைகளை மனதில் பதித்துக்கொள்ளாதீர்.

வாயாடித்தனமே அறிவீனம்தான். *"சொற்களின் மிகுதியில் பாவமில்லாமற் போகாது. தன் உதடுகளை அடக்குகிறவனோ **புத்திமான்**"* (நீதி 10:19). குறைவாய்ப் பேசி அதிகமாய் வேலை செய்யுங்கள். நாவின் தீமைகளைக் குறித்து விவரமாய் எழுதிவிட்டு, யாக்கோபு தன் கடிதத்தில் உடனே ஞானத்தைக் குறித்து எழுதுவது இரண்டையும் சம்பந்தப்படுத்துகிறது (யாக் 3).

5. எண்ணற்ற கிறிஸ்தவர் கோபத்திற்கு அடிமைப்பட்டுக் கிடக்கின்றனர்—அவரருகில் வந்தாலே மூக்கைப் பொத்திக்கொள்ளக்கூடிய செத்த ஈயின் துர்நாற்றம் வீசும். காயீனுக்கும் கோபத்திற்கும் ஒரே வயது. களங்கமற்ற துணைவர், பிள்ளைகள், அயலகத்தினர், ஊழியர் மீது மடைதிறந்து விடப்படுவது அது. பல குடும்பங்களை சின்னா பின்னமாக்கிக் கொண்டிருக்கிறது. கோபம் என்பது சுயநலம், பெருமை, கட்டுப்பாடின்மை, முதிர்ச்சியின்மை ஆகும். வெளியேற ஆக்ரோஷமாயிருக்கும் மிருகமது. *"நீடிய சாந்தமுள்ளவன் மகா புத்திமான்; முற்கோபியோ **புத்தியீனத்தை** விளங்கப்பண்ணுகிறான்"* (நீதி 14:29).

கோபம் உடல்நலத்தைப் பாதிக்கும். கோபத்தை ஆரோக்கியமான விதத்தில் வெளிக்காட்ட அறிவோமானால் அது நமக்கும் பிறருக்கும் பயனளிக்கும். *"பகையை மறைக்கிறவன் பொய் உதடன்"* (நீதி 10:18). மனத்தாங்கல் ஏற்படும்போது நாம் இரண்டு தவறுகளைச் செய்யலாம். ஒன்று எரிமலையாய் வெடிக்கலாம். இல்லாவிடில் கோபத்தை வெளிக்காட்டாமல் வெண்ணையாகப் பேசி பூசி மழுப்பலாம். இரண்டுமே உறவுக்கு உதவி செய்யாது. பிறரைப் புண்படுத்தாத விதத்தில் நமது உணர்வுகளை அன்னாருக்குத் தெரியப்படுத்தப் பழகவேண்டும். பிறர்மேல் வார்த்தைகளைக் கொட்டுவதைவிட தேவனிடம் கொட்டுவோமானால் பிறருக்கு நாம் எவ்வளவாய்ப் புண்பட்டுள்ளோம் என்பதை சாந்தமாய் விளக்க இயலும். சாந்தமான தலைவர்கள் நேசிக்கப்படுவார்கள். *"**மூடனுடைய** உதடுகள் விவாதத்தில் நுழையும், அவன் வாய் அடிகளை வரவழைக்கும்"* (நீதி 18:6).

ஒருவரது மண்டையைப் பிளந்துவிடவேண்டும் போல் தோன்றும்போது அச்சூழலைவிட்டு விலகுங்கள். மணிகளோ, நாட்களோ, மாதங்களோ நேரமெடுத்து கோபம் குளிரக் காத்திருங்கள். சூழலை யோசித்துப் பார்த்து ஜெபியுங்கள். பின் செய்யவேண்டியதைத் தீர்மானியுங்கள். *"மனிதனுடைய **விவேகம்** அவன் கோபத்தை அடக்கும்; குற்றத்தை மன்னிப்பது அவனுக்கு மகிமை"* (நீதி 19:11). மன்னிப்பதும் மறப்பதுமே நமக்கு மதிப்பு. *"உன் மனதில்*

*சீக்கிரமாய் கோபங்கொள்ளாதே; **மூடரின்** நெஞ்சிலே கோபம் குடிகொள்ளும்"* (பிர 7:9). இன்றே தீர்மானமெடுங்கள். ஆயிரம் கிலோமீட்டர் பயணம் துவங்குவது முதல் படியில்தான். "எந்த சூழ்நிலையிலும் மனம் பதறாமல் சாந்தமாயிருப்பவனே அடுத்தவனுக்கும் மேலானவன்," என்கிறார் தாமஸ் ஜெஃபர்சன். பழகப் பழக உங்கள் எரிமலைக் குமுறல்கள் மறந்தக் கதை யாகிவிடும்.

6. மன்னன் சாலமோன் உலாவச் சென்றபோது செத்த ஈயின் துர்நாற்றத்தை முகர்ந்து அதைப் பொன்மொழிகளாக எழுதி வைத்துள்ளார். *"சோம்பேறியினுடைய வயலையும் **மதியீனனுடைய** திராட்சத்தோட்டத்தையும் கடந்து போனேன். இதோ, அதெல்லாம் முள்ளுக்காடாயிருந்தது; நிலத்தின் முகத்தை காஞ்சொறி மூடினது, அதின் கற்சுவர் இடிந்து கிடந்தது. அதைக் கண்டு சிந்தனை பண்ணினேன்; அதை நோக்கிப் **புத்தியடைந்தேன்.** இன்னுங் கொஞ்சம் உறங்கட்டும், இன்னுங் கொஞ்சம் கைமுடக்கிக்கொண்டு நித்திரை செய்யட்டும் என்பாயோ ? உன் தரித்திரம் வழிப்போக்கனைப் போலும் உன் வறுமை ஆயுதமணிந்தவனைப் போலும் வரும்"* (நீதி 24:30-34).

சோம்பேறித்தனம் பொல்லாத செத்த ஈ. ஒவ்வொருவருடைய "வயலும்," "திராட்சத்தோட்டமும்" வெவ்வேறு. மாணவருக்கு அது கல்வி. புத்தகங்களை முதல் பக்கத்திலிருந்து கடைசி பக்கம்வரை கரைத்துக் குடியுங்கள். எதையுமே எப்போதும் சிறப்பாகச் செய்தால் வெற்றி காணாமல் போவது எப்படி ? இந்நாட்களில் போட்டி அதிகம். பெற்றோர் உங்களுக்காக செலவழித்து உங்கள் முயற்சிகளில் நீங்கள் துலங்கும்படியாக எல்லா வசதிகளையும் செய்து தருகிறார்கள். பெற்றோரைப் பெருமிதம் அடையச் செய்யுங்கள். "உழைப்பு என்னும் செலவைச் செலுத்தினால் எல்லா நன்மைகளையும் எங்களுக்கு விற்பவர் நீரல்லவா, ஓ, தேவனே," என்றார் லியானார்டோ டா வின்சி.

வணிகம் வளரவேண்டுமானால் துணிந்து சென்று காரியத்தை சாதிப் பவராய் நீங்கள் இருக்கவேண்டும். கடின உழைப்பாளிகள் செய்வதெல்லாம் வாய்க்கும். அவர்களே வேகமாய் உயர்வர். நேரமும் பலமும் இருக்குமானால் கூடுதல் பொறுப்புகள் கொடுக்கப்படும்போது அதை ஏற்க மறுக்காதீர்கள். ஓயா உழைப்பாளி எனப் பெயர் வாங்கவேண்டும். உங்கள் தொழில்நுட்ப அறிவை விருத்திசெய்து புதிய சாதனைகளைப் படையுங்கள். ஏணியில் ஏறிக்கொண்டே இருக்க வேண்டும். செய்ததையே செய்துகொண்டிராமல் புதுமைப் பித்தராயிருங்கள். இந்நாட்களில் வானம்கூட எல்லையில்லை.

வேலையை மேம்படுத்திக் கொண்டே இருக்கவேண்டும். தவறுகளைச் சரி செய்யுங்கள். கைதேர்ந்தவரிடமிருந்து ஆலோசனை பெறுங்கள். உங்கள் வேலையின் நுணுக்கங்களை அறிந்துகொள்ளுங்கள்.

தேவனைச் சேவிப்பவர்கள் ஊக்கமாய்ச் சேவிக்கவேண்டும். "*கர்த்தருடைய வேலையை அசதியாய்ச் செய்கிறவன் சபிக்கப்பட்டவன்*" (எரே 48:10). பல பணித்தளங்கள் முள்ளும் புதருமாயிருப்பதில் ஆச்சரியமில்லை. ஒருவன் தன் ஆயரிடம், "ஐயா, என் வயலைப் பாருங்கள். எப்படி விளைச்சல்! என் கரங்களே இதைச் செய்தன," என்கிறான். ஆயர் திருத்துகிறார், "நானும் தேவனும் செய்தோம்," என்று சொல்லவேண்டும் என்று. அவன் பதிலுரைக்கிறான். "ஆ, போதகரே, ஆண்டவர் மட்டுமே வயலை கவனித்துக் கொண்டிருந்தபோது, நீங்கள் வயலைப் பார்த்திருக்கவேண்டுமே!" வேடிக்கையாக இருந்தாலும் அதில் கருத்து இருக்கிறது. நாம் பாடுபடாத இடத்தில் தேவன் ஒன்றும் செய்யமாட்டார். பாடுபட்டால் பலனுண்டு. காரிருளில் தள்ளப்பட்ட பொல்லாதவனும் சோம்பேறியுமான வேலைக்காரனை நினைத்துக் கொள்ளுங்கள். கடிகாரத்தைப் பார்க்காமல் வேலை செய்பவர் சீக்கிரமாய் உயர்வு பெறுவர்.

வீட்டுப் பெண்கள் இரவு ஆடையிலேயே வாழக்கூடாது. காலையில் குளித்து, உடைமாற்றி, சுறுசுறுப்பாயிருக்கவேண்டும். வீட்டை நடத்துவது முழுநேர வேலை. நேரம் மிஞ்சினால் வீட்டுப் பெண்கள் வியாபாரம் செய்யவும் (நீதி 31), கர்த்தருக்கு ஊழியம் செய்யவும் எதிர்பார்க்கிறது வேதம் (1 தீமோ 5:10).

உறக்கம், TV, வீடியோ விளையாட்டுகள், வம்பளப்பு, மூட சிநேகிதர், சிற்றின்பங்கள் யாவும் நேரத்தை வீணடிப்பவை. இவை தேவைதான். ஆனால் எவ்வளவு போதுமானது என்று ஞானவான் அறிவான். சோம்பித் திரிவதை விட்டு, கொடுக்கப்பட்ட வேலையை தேவனைச் சார்ந்து சீராய்ச் செய்யுங்கள். சோம்பேறிகள் பிசாசுக்கு இலகுவான குறி.

7. வாசனை மிகுந்த நமது வாழ்வை துர்நாற்றமெடுக்கச்செய்யும் மற்றொரு செத்த ஈ ஆலோசனையைத் தள்ளிவிடுதலாகும். "*மூடர் ஞானத்தையும் போதகத்தையும் அசட்டை பண்ணுகிறார்கள்*" (நீதி 1:7). நாம் ஒருவருக்கொருவர் தேவை. இரும்பை இரும்பு கருக்காக்கும். ஆலோசனையை வெறுப்பதால் நமது வளர்ச்சி குன்றுவதோடல்லாமல் நாம் தவறிழைக்கவும் நேரிடும். நாமே சரி என எண்ணுவது இயல்பு. பிறரது கண்ணோட்டத்தில் காண்பது கடினம்தான்.

பெற்றோரது ஆலோசனையை உதறித் தள்ளினதால் உடைந்துபோன வாலிபர் பலர். "*மூடன் தன் தகப்பன் புத்திமதியை அலட்சியம் பண்ணுகிறான்; கடிந்துகொள்ளுதலை கவனித்து நடக்கிறவனோ விவேகி*" (நீதி 15:5). "***ஞானமுள்ள** மகன் தகப்பனைச் சந்தோஷப்படுத்துகிறான்; **மதியற்ற** மனிதனோ தன் தாயை அலட்சியம் பண்ணுகிறான்*" (நீதி 15:20). தகப்பனும் தாயும் TV, கல்வி, நண்பர், காதல், உடை போன்றவற்றைக் குறித்து இடித்துரைத்துக்கொண்டே இருக்கிறார்கள். உங்களை விட அவர்கள் குறைந்தபட்சம் 25 வருடங்கள் அனுபவம் மிகுந்தவர்கள். அவர்கள் சொல்வதை கவனித்துக்கேளுங்கள்.

இயேசு எப்படி ஞானமுள்ளவராயிருந்தார்? "*பிள்ளை வளர்ந்து, ஆவியிலே பலங்கொண்டு, **ஞானத்தினால்** நிறைந்தது*" (லூக் 2:40). அது தேவனருளிய ஞானம். "*இயேசுவானவர் **ஞானத்திலும்**, வளர்த்தியிலும், தேவ கிருபையிலும், மனிதர் தயவிலும் அதிகமதிகமாய் **விருத்தியடைந்தார்***" (2:52). இது இவ்வுலகில் அவரது ஞான வளர்ச்சி. இவ்விரண்டு வசனங்களுக்கிடையில் தான் இரகசியம் உள்ளது. 12 வயதில் ஒருநாள் எருசலேமிலிருந்து வீடு திரும்பும்போது பெற்றோருக்குத் தெரியாமல் தேவாலயத்துக்கு நழுவிவிட்டார். விளக்கம் கேட்டபோது அவர் மன்னிப்புக் கேட்கவில்லை. தனது வாழ்க்கைக் குரிய தேவசித்தத்தை பெற்றோருக்கு விளக்கினார். அகம்பாவமாகவா? இல்லை. அவர்களோடுகூட வீட்டிற்குத் திரும்பிப்போய் அவர்களுக்கு அடங்கி இருந்தார். **ஆகவே** புத்தியிலும், உடலிலும், சமூக நிலையிலும், ஆன்மீகத் திலும் வளர்ந்தார். பெற்றோர் அவருக்கு ஞானமாய் நடந்துகொள்ளும் விதத்தையும், உடல்நலத் தேவைகளையும், பிறரோடு பழகும் விதத்தையும் ஆன்மீகச் சட்டங்களையும் கற்றுத் தந்தனர். தேவனுக்கும் கீழ்ப்படிந்து பெற்றோருக்கும் செவிசாய்ப்பதென்பது கம்பிமேல் நடப்பது போன்றது. சில சமயம் நெருக்கப்படுவீர்கள். உங்களுடைய வாழ்வில் தேவனது சித்தம் இன்னதென்பதைக் குறித்த தெளிவு உங்களுக்கு இருக்கவேண்டும்; அதோடுகூட பெற்றோருக்கும் பிரியமாக நடந்துகொள்ளவேண்டும். ஈசாக்கை ஆபிரகாம் மோரியா மலையில் பலியிட அழைத்துச் சென்றபோது அவனுக்கு வயது 33 இருக்கும். சுலபமாக தன் தகப்பனை மேற்கொண்டிருக் கலாம். ஆனால் தன்னார்வமாக தான் வெட்டப்படுவதற்கு அடிபணிந்தான்.

"*பிள்ளையின் நெஞ்சில் **மதியீனம்** ஒட்டியிருக்கும்; அதைத் தண்டனையின் பிரம்பு அவனைவிட்டு அகற்றும்*" (நீதி 22:15). பிள்ளை களுக்கு இது வேதனையான பாதைதான். ஆனால் அதுவே நிச்சயமாய்

ஞானத்திற்கு நடத்தும் பாதை. *"மனிதனுக்குள்ளேயிருந்து புறப்படுகிறதே மனிதனைத் தீட்டுப்படுத்தும். எப்படியெனில், மனிதருடைய இருதயத்திற் குள்ளிருந்து... **மதிகேடும்** புறப்பட்டு வரும்"* (மாற் 7:20-22). மதிகேடு உங்களை தீட்டுப்படுத்தி உங்கள் பெயரை நாறப்பண்ணும். அதன் பிறப்பிடம் எங்கே ? இருதயம். உங்கள் இருதயத்தை எப்போதும் நம்ப முடியாது. நீங்கள் வளர வளர படிப்படியாக இருதயத்திலிருந்து மதியீனம் அகற்றப்பட வேண்டும். *"தன் இளம் பிராயத்தில் நுகத்தைச் சுமக்கிறது மனிதனுக்கு நல்லது"*(புல 3:27). நுகம் வேதனைதான்; ஆனால் அதுவே உங்களை சரியான பாதையில் நடத்தும்.

*"தங்கள் பார்வைக்கு **ஞானிகளும்,** தங்கள் எண்ணத்துக்கு **புத்திமான்களுமாய்** இருக்கிறவர்களுக்கு ஐயோ!"* (ஏசா 5:21). எந்த வயதிலும் ஆலோசனை தேவை. திறந்த மனதுள்ளவர்களாய் ஆலோசனையை ஏற்றுக்கொண்டு அந்த ஆலோசனை வேதத்திற்கொத்ததா என கண்டு கொள்ள கவனம் உள்ளவர்களாயிருங்கள்.

8. தேறின கிறிஸ்தவரும்கூட வழுக்கி விழக்கூடிய இன்னொரு படுகுழி சுயநம்பிக்கை. தேவனது இதயத்திற்கேற்ற மனிதன் தாவீதும் கூட, சாத்தான் இந்தச் செத்த ஈயைத் தன் பரிமளதைலத்தில் வீசியதை கவனிக்கவில்லை. தனது சேனாதிபதியின் ஆலோசனையையும் கேளாமல் தனது சேனையைக் கணக்கெடுத்து தன் புயபலத்தைக் கண்டறிய முற்பட்டதினால் மக்கள்மேல் பெரும் பாதகத்தை வரப்பண்ணினார். இதைக் குறித்து அவர், *"வெகு **புத்தியீன மாய்*** *செய்தேன்,"* என்று தேவனிடம் அறிக்கையிடுகிறார் (1 நாளா 21:8).

மன்னன் ஆசா நன்றாகத்தான் ஆரம்பித்தார். பலவீனனாய், *"கர்த்தாவே, பலமுள்ளவனுக்காகிலும் பலனற்றவனுக்காகிலும் உதவி செய்கிறது உமக்கு இலேசான காரியம்; எங்கள் தேவனாகிய கர்த்தாவே எங்களுக்குத் துணை நில்லும்; உம்மைச் சார்ந்து, உம்முடைய நாமத்தில் ஏராளமான இந்தக் கூட்டத்திற்கு எதிராக வந்தோம்; கர்த்தாவே, நீர் எங்கள் தேவன்; மனிதன் உம்மை மேற்கொள்ளவிடாதேயும்,"* என்று தேவனை நோக்கிக் கதறினார் (2 நாளா 14:11). தேவன் அவரது எதிரிகளை முறியடித்தார். ஆசா மேலும் மேலும் பலப்பட்டபோதோ தனக்குத் தானே திட்டமிடத் துவங்கினார். மற்ற அரசர்களின் உதவியே போதும் என்று எண்ணி பென்னாதாத்தின் ஒத்துழைப்பை நாடினார். தீர்க்கன் அனானி, *"தம்மைப்பற்றி உத்தம இருதயத்தோடிருக்கிறவர்களுக்குத் தம்முடைய வல்லமையை விளங்கப்*

பண்ணும்படி, கர்த்தருடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக்கொண்டிருக் கிறது; இந்தக் காரியத்தில் **மதியில்லாதவராயிருந்தீர்;** *ஆகையால் இது முதற்கொண்டு உமக்கு யுத்தங்கள் நேரிடும்,"* என்றார் (2 நாளா 16:9).

"***மதியீனன்*** *மூர்க்கங்கொண்டு துணிகரமாய் இருக்கிறான்"* (நீதி 14:16). ஆசாவும் சுயநம்பிக்கையினால் எழுந்த துணிச்சலுடன் தீர்க்கன்மேல் மூர்க்கங் கொண்டார். தன் மரணப்படுக்கையிலும் தேவனைத் தேடவில்லை. தேவனுக்கு உத்தமமாயிருந்தால் தமது வல்லமையை உங்களுக்கு வெளிப்படுத்தும்படியாக அவரது கண்கள் உங்கள் மேலேயே இருக்கும். உங்கள் பெலத்தையும் ஞானத்தையும் சார்ந்திராதீர்கள். பவுலின் முள் என்ன என்ற யூகத்திற்கு பல கூடு மை செலவாயிருக்கிறது. ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். அது அவரது சுயநம்பிக்கையை கசக்கி எறிந்து தேவன் மேலேயே சார்ந்துகொள்ளும்படி அவரை பெலவீனராக்கியது.

9. எண்ணற்ற கிறிஸ்தவர் துர்வுபதேசமென்னும் ஈ பறந்து வந்து தம் வேத அறிவென்னும் தைலத்தில் விழுந்து அதை நாறச்செய்ய இடமளித்து விட்டனர். இன்று துர்வுபதேசக்காரருக்கும் கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கும் பஞ்சமில்லை. அவர்களது செய்திகள் காட்டுத் தீயெனப் பரவுகிறது. பவுலின் நாட்களிலும் சூழ்நிலை இதேதான். கள்ளச் சகோதரர் தங்கள் உபதேசத்தை தந்திரமாய் இளம் சபைகளில் நுழைத்தனர். பவுல் மனக் கிலேசத்துடன் கலாத்திய சபைக்கு எழுதுகிறார், "**புத்தியில்லாத** *கலாத்தியரே, நீங்கள் சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமற்போகத்தக்கதாக உங்களை* **மயக்கினவன்** *யார்?... நீங்கள் இத்தனை* **புத்தியீனரா?"** (கலா 3:1-3). "**புத்தியீனமும்** *அயுக்தமுமான தர்க்கங்கள் சண்டைகளைப் பிறப்பிக்குமென்று அறிந்து, அவைகளுக்கு விலகியிரு,"* என்று தீமோத்தேயுவுக்கு எழுதுகிறார் (2 தீமோ 2:23). *"ஞானமென்று பொய்யாய்ப் பேர்பெற்றிருக்கிற கொள்கையின் விபரீதங்களுக்கும் விலகு"* (1 தீமோ 6:20). தீத்துவுக்கும், "**புத்தியீனமான** தர்க்கங்களையும் விட்டு விலகு," என எழுதுகிறார் (தீத்து 3:9).

இனம் தெரியாத குழுக்களை வீட்டிற்குள் அழைத்து அவர்களுடன் உபதேச விவகாரங்களை விவாதிக்காதீர்கள். துர்வுபதேச ஒலி, ஒளி நாடாக்களுக்குப் பஞ்சமில்லை. மெரினா கடற்கரைக்குப் போய் வருவது போல மோட்சத்திற்கும் நரகத்திற்கும் போய்வருவதாக மார்தட்டிக் கொள்ளுகிறார்கள் பிரசங்கிகள். அவர்களுக்கு நல்ல தொகை கொடுத்துவிட்டீர்களென்றால் போதும், உங்களை

வழிந்து வழிந்து ஆசீர்வதிப்பார்கள். வேதத்திற்குப் புறம்பானவற்றைப் போதித்து, சபையின் குணத்தைக் கெடுக்கும் பொய்யர்கள் இவர்கள். உங்கள் பணப்பையே அவர்கள் குறி. "கடவுள் என்னிடம் இதைச் சொன்னார், கடவுள் என்னிடம் அதைச் சொன்னார்" என்னும் அவர்களது சீர்கேடான வீண்பேச்சைக் கேட்டு மயங்கிவிடாதீர்கள். எதையும் வேதத்திலிருக்கிறதா என ஆராய்ந்து பார்ப்பதே ஞானம். டார்வின் உங்களை குரங்கென நம்பப் பண்ணினதைப் போல இவர்களும் உங்களை முட்டாளாக்கிவிடுவார்கள். "புன்னகையோடும் மென்மையான நாவோடும் ஒருவன் வந்து காலையிலிருந்து இரவுவரை பொய்களை ஊதி—'உங்களுக்கு வேண்டுவதையெல்லாம்—கூடுதல் பணம், மதுபான வகைகள், எதுவாயிருந்தாலும் சரி—தேவனிடமிருந்து பெற்றுக்கொள்ள வழிகாட்டும் செய்திகளை உங்களுக்குப் பிரசங்கிப்பேன்' என்பானானால்—அங்கேயே உடனேயே அவனை உங்கள் பிரசங்கியாகக் கூலிபொருத்திக்கொள்வீர்கள்!" என மீகா 2:11ஐ யூஜீன் பீட்டர்சன் விவரித்துள்ளார்.

10. ஆண்டவரது வருகைக்கு ஆயத்தமில்லாதிருப்பது இரண்டு முறை செத்தல்! (மத் 25). பத்துக் கன்னிகைகளைக் குறித்து வாசிக்கும் போதெல்லாம், "நல்லவேளை நான் புத்தியில்லாத கன்னிகைகளில் ஒருத்தியல்ல," என நினைத்துக்கொள்ளுவேன். ஆனால் Dr. கிறிஸ்டியன் வேலஸ் எழுதிய விரிவுரையை வாசித்தபின் ஆடிப்போனேன். கிழக்கத்திய திருமணங்கள் மிகத் தடபுடலாக இருக்குமாம். திருமண மண்டபங்களில் அகன்ற பெரும் வாசல்கள் இருக்குமாம். தேவையற்றோரை வெளியே நிறுத்துவதற்காக, மாப்பிள்ளையும் குழுவினரும் உள்ளே நுழைந்ததும் கதவுகள் பூட்டப்படுமாம். சிறப்பான உடையும் பெரிய பளபளப்பான வெள்ளி விளக்குகளும் ஆயத்தமாகுமாம். புத்தியற்ற கன்னியரின் நான்கு தப்புக் கணக்குகளை அவர் எழுதியுள்ளார். அதோடு என்னுடைய மூன்றையும் சேர்த்துள்ளேன்.

முதலாவதாக, மாப்பிள்ளை சரியான நேரத்தில் வந்துவிடுவார் என எண்ணினர். ஆண்டவர் திடுதிப்பென்று வருவேனென்று தெளிவாகச் சொன்னபின்னரும் அவரது வருகையின் நேரத்தை யூகிப்பது ஆபத்து. எப்போதுமே ஆயத்தமாயிருங்கள்.

இரண்டாவதாக, தங்கள் விளக்குகளில் இருக்கும் எண்ணெய் போதுமென்று எண்ணிவிட்டனர். தேவனைச் சந்திக்க ஆயத்தமாயிருப்பதாக நீங்கள்

நினைக்கலாம். ஆனால் உங்கள் உட்புறங்களை தகுதிப்படுத்தியிருக்கிறீர்களா? தெரிந்து கவலையீனமாய் விடப்பட்டவைகள் உங்களை முத்து வாசலுக்கு வெளியே நிறுத்திவிடக்கூடும்.

மூன்றாவதாக, எண்ணெய் வாங்கப் போதுமான நேரமிருக்கிறது என்று நினைத்து கடைசி வினாடியில் மாட்டிக்கொண்டனர். எதையும் ஒத்திப் போடாதீர்கள். திருமுழுக்கு எடுக்கவில்லையா? இன்றே ஒழுங்கு செய்யுங்கள். புண்படுத்தியவர்களோடு ஒப்புரவாகுங்கள்.

நான்காவதாக, போதுமானதும் கூடுதலுமாக வைத்திருந்த தங்கள் சிநேகிதிகள் ஆபத்திற்கு உதவுவர் என நினைத்துவிட்டனர். அதுதான் பெருந் தவறு, ஆருயிர் தோழிகள் பின்னால் திரும்பிப் பார்க்காமலேயே கலியாண மண்டபத்திற்குள் நுழைந்துவிட்டனர். கர்த்தருக்குப் பயந்த குடும்பத்திலோ ஆன்மீக சபையிலோ பூரண சுவிசேஷக் குழுவிலோ நீங்கள் அங்கத்தினராயிருக்கலாம். ஆனால் தனி நபராகவே தேவனைச் சந்திக்கவேண்டும்.

ஐந்தாவதாக, தங்கள் குறையை அறிந்திருந்தும் திருமணத்திற்கு தங்கள் ஆயத்தங்கள் போதுமென எண்ணிவிட்டனர். நாளெல்லாம் திருமண ஆடையை ஆயத்தப்படுத்துவதிலும் விளக்கைத் துலக்குவதிலும் செலவிட்டிருக்கலாம்—"சொற்பக்" குறைவு அவர்களை உதைத்து வெளியேற்றியது. "சொற்பக்" கவலையீனம். "சொற்பத்" தவறான யூகம். "சொற்ப" மதியீனம்!

ஆறாவதாக, மாப்பிள்ளை தங்களை இரக்கம் பாராட்டி உள்ளே அனுப்பி விடுவார் என யூகித்துவிட்டனர்—அவர்கள் அறிந்த அன்பான மாப்பிள்ளை தானே. அவர்களைத் தெரியக்கூடத் தெரியாது என அவர் சாதித்தபோது அரண்டுவிட்டனர் (மத் 25:12). ஒருவேளை மத்தேயு 7:21,22ஐ அங்கே நினைவு கூர்ந்தனரோ? *"உங்களை அறியேன்."* பரலோகத்திலிருக்கிற பிதாவின் சித்தத்தை தாங்கள் செய்யத் தவறியதை உணர்ந்து தலை குனிந்திருப்பரோ? ஒருவேளை 2 தீமோத்தேயு 2:19 உதயமாயிருக்கலாம்—*"தேவனுடைய உறுதியான அடித்தளம் நிலைத்திருக்கிறது; கர்த்தர் 'தம்முடையவர்களை அறிவார்' என்பதும், கிறிஸ்துவின் நாமத்தைச் சொல்லுகிற எவனும் அநியாயத்தை விட்டு விலகக்கடவனென்பதும் அதற்கு முத்திரையாயிருக்கிறது."* கடின மனிதன்தான் (மத் 25:24). எரியும் விளக்குகளின்றி உள்ளே

நுழைய முடியாதென்ற சட்டத்தை நன்கறிந்திருந்தும் அதன்படி நடந்து கொள்ளவில்லை.

ஏழாவதாக, விழாவில் கலந்துகொள்வோம் என நிச்சயமாயிருந்தனர். கிறிஸ்துவின் இரத்தத்தாலே கழுவப்பட்டு தேவனது கிருபையினால் இடுக்கமான வழியே சென்று கொண்டிருக்கிறோம். இடுக்கமான வழியையும் விசாலமான வழியையும் இணைக்கும் பல குறுக்குச் சாலைகளுண்டு. யார் வேண்டுமானாலும் எப்பொழுது வேண்டுமானாலும் வெளியேறலாம். எகிப்திலிருந்து புறப்பட்டவரில் 99%க்கும் அதிகமானோர் நெருக்கமான வழியிலிருந்து விசாலமான வழிக்கு வெளியேறினர். கடைசிவரை நெருக்கமான வழியை விடாதீர்கள்.

எல்லாம் மண்ணானது! வாழ்க்கையில் ஒரே முறை நடக்கும் அந்த திருநாளுக்கு அவர்கள் ஆயத்தமாயில்லை. எல்லாம் செய்தனர்—விடுமுறை எடுத்து, ஆடை அலங்காரம் செய்து, விளக்கை ஏற்றி, ஏன் நள்ளிரவுவரைகூட காத்திருந்தனர். இறுதி வினாடிவரை பத்து பேருக்கும் வித்தியாசமேயில்லை. இருவர் விளக்குகளிலும் எண்ணெய் இருந்தது. ஆயத்தமாயினர், ஆனால் போதுமான ஆயத்தமில்லை. எத்தனை துக்கம். கதவுகளுக்கு வெளியே தாங்கள் நாத்திகரோடும், விபச்சாரக்காரரோடும், பொய்யரோடும், கொலைகாரரோடும் நிற்பதைக் கண்டு தலையிலடித்துக் கொண்டனர். என்ன பயங்கரம், எத்தனை கொடுமை! நல்ல கிறிஸ்தவர்தான் ஆனால் கொஞ்சம் கவலையீனம். இன்னும் சில மில்லி எண்ணெய்— மணவாளன் வருகையிலிருந்து உள்ளே போகும்வரை —இருந்திருந்தால் போதுமே. அதற்காக நித்திய ஆக்கினையை அடையவேண்டும். ஏன் ? ஏனெனில் அவர்கள் அறிந்திருந்தனர், எச்சரிப்பு பெற்றிருந்தனர், போதுமான அவகாசம் அளிக்கப்பட்டிருந்தனர். இருப்பினும் அதைப் பொருட்டாக எண்ணாமல் சத்தியத்தை அறிந்தும் கீழ்ப்படியாமற் போனார்கள்.

செத்த ஈக்களை நமது வாழ்விலிருந்து ஈவிரக்கமின்றி பொறுக்கியெடுத்து வெளியே எறிவோமா ?

4

ஞானத்தைத் தேடி...

வாழ்க்கைப் புயலில் சிக்கிப் பயித்தியம் பிடித்தவர்கள் போலான ஒரு தம்பதியர் என்னிடம் வந்தனர். அவர்களிடம் பேசுகையில் அவள் இரண்டாவது குழந்தையைச் சுமந்துகொண்டிருக்கிறாளென்றும், கர்ப்பத்தைக் கலைக்க ஒரு மருத்துவமனையில் நாள் குறித்து விட்டார்களென்றும் அறிந்தேன். வீட்டில் பெரியவர்களும் குழந்தை வேண்டாமென்றனர். அவர்களது தீர்மானத்தை மாற்ற முயற்சி செய்தேன். அவர்கள், "உங்களுக்குப் புரியவில்லை," என்றனர். நானோ வசனத்திற்கே அவர்களது கவனத்தைத் திருப்பினேன். சில நாட்களுக்குப் பிறகு அவர்களை ஒத்துக்கொள்ளவைக்கமுடிந்தது. கனத்த இதயத்துடனும் வீங்கிய கண்களுடனும் திரும்பிச் சென்றனர். சில நாட்களில் அவர்களது பெரும் சிக்கல் ஒன்று தீர்ந்தது. பின்பு வியத்தகு அழகும் துடுதுடுப்புமுள்ள மகன் பிறந்தான். அதன் பின்பு பிரச்னைகள் ஒவ்வொன்றாய் மறைந்தன. இன்று அவன் அவர்களது கண்மணியாகவும் முழுக் குடும்பத்தின் உயிர்நாடியுமாக உள்ளான். அவர்கள் விசுவாசிகளானாலும் பதட்டமான சூழ்நிலைகளில் நல்லது எது கெட்டது எதுவெனத் தீர்மானிக்க முடியாதிருந்தனர்.

குழம்பிப்போய் செய்யவேண்டிய சரியான காரியம் இன்னதென்று தீர்மானிக்க முடியாதவர்களாய் தவித்து நின்றச் சூழ்நிலையேதும் உங்களுக்கு நினைவிருக்கிறதா ? வாழ்வில் இக்கட்டான சூழ்நிலைகளை நாம் யாவருமே சந்திக்கிறோம். கடினமான சூழ்நிலைகளை மட்டுமல்ல அன்றாட

வாழ்விலும்கூட காரியங்களை நிதானித்துச் செயல்பட நமக்கு ஞானம் தேவையாயிருக்கிறது. சீரற்ற நிலமையில் தாறுமாறாய்த் தீர்மானமெடுக்க முற்படுகிறோம். தேவனுக்கு விரோதமாய் அலறி உதைப்பதைத் தவிர்த்து தலையைப் பயன்படுத்துவோமானால் தேவன் செம்மையாய் வழிநடத்துவார்.

ஞானத்தைத் தேடுபவன் ஞானி; அதைக் கண்டு பிடித்துவிட்டதாக நினைப்பவன் பயித்தியக்காரன் என்பது முதுமொழி. ஒரு பெண் தான் ஞானத்தில் குறைவுள்ளவளென்று தாழ்மையோடு ஒத்துக்கொண்டு ஒரு ஞானியிடம் சென்று கற்றுக்கொள்ள நீண்ட பயணமொன்றை மேற்கொண்டாள். அது வேறு யாருமல்ல, ஞானத்தைத் தேடிச் செல்லும் நமது இருண்ட பாதையில் ஒளிக்கதிரை வீசும் சேபா தேசத்து இராணியே. அவளது பெயரை அறியோம்; அவளது பதவியே அவளது கையொப்பமாகிவிட்டது.

1 இராஜாக்கள் 10:1இல் இப்படி வாசிக்கிறோம், ***"கர்த்தருடைய நாமத்தைக் குறித்துச் சாலொமோனுக்கு உண்டாயிருந்த கீர்த்தியை*** *சேபாவின் இராணி கேள்விப்பட்டபோது, அவள்* ***விடுகதைகளினால்*** *அவனைச் சோதிக்கிறதற்காகவந்தாள்."* சாலொமோனின் புகழ் கொடிகட்டிப் பறந்தது. சாலொமோனின் சிறப்புக்கும் இஸ்ரவேலின் தேவனுக்கும் ஏதோ தொடர்பு இருக்கிறதென்று சேபாவின் அரசி அறிந்திருந்தாள். இந்த வல்லமையுள்ள இறைவனைக் குறித்து அறியும்படியாக வந்தாளோ? சாலொமோன் மூலமாகக் கர்த்தர் சாதித்த அனைத்தையும் அவள் கண்கூடாகக் கண்டபோது அவள் கர்த்தரைத் துதித்து இஸ்ரவேலுக்கான அவரது நித்திய அன்பை அறிக்கையிட்டாள் (வச 9). அவளது கேள்வி சரியானதுதான் என்று இயேசுவே உறுதிப்படுத்தினார் (மத் 12:42). "சாலொமோனின் இருதயத்திலே தேவன் அருளிய ஞானத்தைக் கேட்கிறதற்காக, சகல தேசத்தாரும் அவரது முகதரி சனத்தைத் தேடினார்கள்" (1 இரா10:23,24). எல்லாரது நாவிலும் சாலொமோனின் பெயர் ஒலித்தது. ஒருவர் ஞானத்தைத் தேடினதால் உலகமே உயிருள்ள தேவனைக் குறித்துக் கேள்விப்பட்டது.

சாலொமோனைக் குறித்த வேத அறிக்கையை வாசிக்கும்போது இரண்டு காரியங்கள் எடுப்பாய்த் தோன்றுகின்றன. ஒன்று, அவர் பலவற்றிற்குப் பெயர் பெற்றிருந்தாலும், எவ்வித ஐயமுமின்றி, உலகத்தை பிரமிக்கவைத்தது அவரது ஞானமே. அவரது சந்ததியில் அவர் அகிலவுலகப் பிரசித்தி

பெற்றவராயிருந்தார். இரண்டாவதாக, மக்கள் அவரது ஞானத்தைக் குறித்து மாத்திரமல்ல அவருக்கும் தேவனுக்குமுள்ள உறவைக்குறித்தும் கேள்விப்பட்டனர் (1 இரா 10:1,24; 2 நாளா 9:23). அவர்களில் ஒருத்தி சேபாவின் அரசி.

இன்றைய ஏமென் நாட்டின் அருகாமையிலிருந்தது சேபா. சேபாவின் வியாபாரிகளை ஏசாயா 60:6 குறிப்பிடுகிறது. தாவீது சாலொமோனுக்காக, ஒருவேளை அவரது முடிசூட்டு விழாவில் ஏறெடுத்த ஜெபத்தின் தீர்க்கதரிசன நிறைவேறுதலே சேபா இராணியின் வருகை எனலாம் (சங் 72:10,15,20). சேபாவிலிருந்து எருசலேம் சுமார் 2000 கி.மீ. தொலைவிலிருந்ததாகக் கணக்கிடப்படுகிறது. பாலைவனங்களின் வழியாய்க் கடினப் பயணம் செய்யத் துணிந்த அவளது வாஞ்சையை எண்ணிப்பாருங்கள். அவளை உந்தித் தள்ளியது என்ன? 1 இராஜாக்கள் 10:1இலிருந்து அவள் சாலொமோனின் கீர்த்தியை மட்டுமல்ல அக்கீர்த்தி கர்த்தருடைய பெயருக்குச் சம்பந்தப்பட்டது என்றும் கேள்விப்பட்டதாக அறிகிறோம்.

எனது மருத்துவரைப் பார்க்கச் செல்லும்போது அவரிடம் நான் கேட்கவேண்டிய யாவற்றையும் எழுதிக்கொண்டுச் செல்வேன். ஏனெனில் கேட்கவேண்டிய சந்தேகங்களில் முக்கியமான எதையும் மறந்துவிட நான் விரும்புவதில்லை. அப்படித்தான் அவளும் செய்திருப்பாளென்று கற்பனை செய்கிறேன். 'கடினமான கேள்விகளோடு' வந்தாள் என்கிறது ஆங்கில வேதம். அவளது கேள்விகள் என்னவாயிருந்திருக்கக்கூடும்? நான் அவளாயிருந்திருப்பேனானால் எனது முதல் கேள்விகள் பின்வருபவையாக இருந்திருக்கும்: எப்படி இந்த ஞானத்தைப் பெற்றீர்? இந்த ஞானத்தை நான் எப்படிப் பெறலாம்? பிரசித்திபெற்ற உமது தேவனின் பெயரென்ன? இந்தக் கடவுள் இஸ்ரவேலுக்கு மட்டும்தானா? இந்தக் கடவுள் என்னுடைய தேவர்களுக்கும் மேற்பட்டவரா? மற்றும் அவளது உள்ளத்தில் அலைமோதிக் கொண்டிருந்த பல கேள்விகள். சற்று கற்பனையைப் பறக்கவிடுவோமானால், யாருக்குமே கடினமான கேள்விகளான மரணத்திற்குப் பின்வரும் வாழ்க்கை மற்றும் அது சார்ந்த கேள்விகளையும் அவள் கேட்டிருக்கலாம்.

சாலொமோனின் பதில்களைக் கற்பனைச்செய்து பார்க்கலாம். சாலொமோனுக்கு ஞானம் கிடைத்தது எங்கனம்? சாலொமோன் அரியணை ஏறுகிறபோது கர்த்தரிடத்தில் அன்பு கூருகிறவராகவும் தன் தகப்பனாகிய தாவீதின் கட்டளைகளில் நடக்கிறவராகவும் இருந்தார் (1 இரா 3:3). கடவள்

சாலொமோன் மீது ஒரு விசேஷ அன்பு வைத்திருந்தார் (2 சாமு 12:24). அவருக்குச் சொப்பனத்தில் தோன்றி என்னவேண்டுமெனக் கேட்டார். சாலொமோனின் பதில் பச்சையாகவும் மாய்மாலமின்றி அப்பட்டமாகவு மிருந்தது: *"நானோவென்றால் போக்குவரவு அறியாத சிறு பிள்ளையாயிருக் கிறேன்"* (ஆங்கிலம்: என் கடமையைச் செம்மையாய்ச் செய்ய அறியாதவ னாயிருக்கிறேன் 1 இரா 3:7).

சாலொமோன் அரியணை ஏறத் துடித்துக்கொண்டிருக்கவில்லை; மாறாக பெரும் தேசமொன்றை நடத்தும் மாபெரும் பொறுப்பை எண்ணி குருவித் தலையில் பனம்பழத்தை வைத்ததுபோன்றத் தவிப்பிலிருந்தார். *"நீர் தெரிந்துகொண்டதும் ஏராளத்தினால் எண்ணிக்கைக்கு அடங்காததும் இலக்கத்திற்கு உட்படாததுமான திரளான மக்களாகிய உமது மக்களின் நடுவில் அடியேன் இருக்கிறேன். ஆகையால் உமது மக்களை நியாயம் விசாரிக்கவும், நன்மை தீமை இன்னதென்று வகையறுக்கவும், அடியேனுக்கு ஞானமுள்ள இருதயத்தைத் தந்தருளும்"* என வேண்டினார் (1 இரா 3:7-9).

ஞானத்தைப் பெறுவதற்குச் சாலொமோனின் உள்நோக்கம், பெயரோ புகழோ அல்ல, மக்களை ஆளுவதில் பெருந்தவறு எதுவும் செய்து விடாதிருக்கத்தான். மக்கள் ஆசீர்வதிக்கப்படும்படியாக தேவ ஞானத்தைத் தேடினார். தனது சரியான அல்லது தவறான தீர்மானங்களினால் மக்கள் பாதிக்கப்படுவர் என்பதை அறிந்திருந்தார். நம்மைச் சூழ இருப்பவர்கள் நாம் எடுக்கும் தீர்மானங்களினால் புண்படாதிருக்க நமக்கு தேவஞானம் எத்தனை அவசியம்! தனது மக்கள் ஆசீர்வதிக்கப்படும்படியான உள்நோக்குடனும், அவர்களுக்குச் சேவைசெய்யும் வாஞ்சையுடனும் அவர் தன்னைத் தாழ்த்தின விதம் தேவனது உள்ளத்தைப் பூரிக்கச் செய்தது. அங்கு சுயநலம் எதுவு மில்லை (1 இரா 3:10). சாலொமோனின் அபார ஞானம் எட்டாத இரகசியமல்ல. நேரடி நோக்குடன் நேரே தெய்வத்தை அணுகினார்.

சாலொமோனின் ஆசைப் பட்டியலில் பின்னுக்குத் தள்ளப்பட்டவை யாவை? தீர்க்காயுசு, செல்வம், எதிரிகளின் உயிர், கனம், இப்படிப்பட்டவை (1 இரா 3:10). ஞானத்தைத் தேடி வைராக்கியமாய்த் தொடருபவர் தமது உள்நோக்குகளைச் சரிப்படுத்தி இரண்டாந்தரமான ஆசைகளை முதுகுக்குப் பின்னாக எறிந்துவிடவேண்டும். அதுவே தேவனுக்குப் பிரியமாயிருக்கும். ஞானத்தைத் தேடி ஓடிய பலர் வாழ்க்கையில் மற்ற குறிகளினால் வழிவிலகி பாதையோரத்தில் சாய்ந்துவிட்டனர்.

ஆகவே தேவன் சாலொமோனுக்கு ஞானமும் உணர்வுமுள்ள இருதயத்தைத் தந்தார் (1 இரா 3:12). ஞானத்தின் உறைவிடமாக இருதயத்தைக் குறிப்பிடுவதில் வேதம் தவறு செய்துவிடவில்லை. ஞானம் மூளையில் இருப்பது என்று நாம் நினைக்கலாம். அது யாக்கோபு குறிப்பிடும் லௌகீக சம்பந்தமானதும், ஜென்ம சுபாவத்திற்குரியதும், பேய்த்தனத்துக்கடுத்ததுமான வித்தியாசமான ஞானம். பரத்திலிருந்து வருகிற ஞானம் இதயத்தில் குடிகொள்ளும். ஞானமுள்ளவன், இதயமும், ஈரமும், கனிவும் அன்பும் உள்ளவன். இருதயத்திலிருந்து மதிகேடு புறப்படுமானால் ஞானமும் அங்கிருந்தே புறப்படுகிறது (மாற் 7:22). எது எதை மிஞ்சுகிறது என்பதே காரியம்.

ஆகவே சாலொமோன் கேட்காத செல்வத்தையும் கனத்தையும் ஆண்டவர் அவனுக்கு அள்ளிக்கொடுத்தார். மெய்யாகவே, நாம் இறையரசையும் அதன் நீதியையும் முதலாவது தேடுவோமானால் இவையெல்லாம் நம்மைத் தேடிவரும்.

இன்று நாம் உலகில் பார்க்கும் அறிவுச் செறிவல்ல இந்த ஞானம். இது தேவனுடைய ஞானம். "*தேவன் அருளின ஞானம் ராஜாவுக்கு உண்டென்று கண்டு*" (1 இரா 3:28). ஆகவேதான் சாலொமோனின் ஞானம் சகல கிழக்கத்தியரின் ஞானத்தையும் எகிப்தியரின் சகல ஞானத்தையும் பார்க்கிலும் சிறந்ததாயிருந்தது (1 இரா 4:29-31). ஞானிகளுக்குப் பெயர் போனது கிழக்கு (மத் 2: 1). சாலொமோன் அவர்களையெல்லாம் மிஞ்சினவராயிருந்தார். இந்த iPods மற்றும் iPhones யுகத்தில் நாம் அடக்கமாய் தலைகுனிந்து 2000 ஆண்டுகட்கு முன்பாக நம்மைக்காட்டிலும் ஞானவான்கள் இருந்திருக்கிறார்கள் என்று ஏற்றுக்கொள்ளத்தான்வேண்டும்.

"*சாலொமோனின் ஞானத்தைக் குறித்துக் கேள்விப்பட்ட பூமியின் சகல இராஜாக்களிடத்திலுமிருந்து பல இனத்தவரான மக்களும் அவருடைய ஞானத்தைக் கேட்கிறதற்கு வந்தார்கள்*" (1 இரா 4:34). சேபா அரசியும் தீருவின் அரசனாகிய ஈராமும் அவர்களில் சிலர். இருவரும் கர்த்தரை மகிமைப்படுத்தினர் (2 நாளா 9:8; 2:11,12). எத்தனை அரசர்களும் அரசிகளும் யேகோவா தேவனை ஆராதிப்பவராகினர் என்று யாருக்குத் தெரியும்!

சேபாவின் அரசி சாலொமோனை முட்டாளாக்கி வேடிக்கைப் பார்க்கவல்ல, அவரது ஞானத்தின் ஆழத்தைக் கண்டறியும் மனோ வாஞ்சையுடன் வந்தாள். அவள் சாலொமோனுக்குக் கொண்டுவந்த பரிசுகளினாலே அவளது நல்லிதயத்தை அறியலாம். சாலொமோனைப்போன்ற வேலைப்பளு நிறைந்த

அரசனுக்கு அவள் கேட்டவைகளை "எல்லாம்" விளக்க நேரமிருந்தது. அவள் சாலொமோனுடைய "சகல" ஞானத்தையும் கண்டாள் (1 இரா 10:3,4). சிக்கல்களை விடுவிக்கும் வல்லவன் என்று சாலொமோன் பிரசித்திப் பெற்றிருந்தார். வெகுதூரம் பயணம் செய்து மாபெரும் மனிதனைச் சந்தித்து அவரது வார்த்தைகள் ஒவ்வொன்றையும் புசித்த அரசியின் பிரதிபலிப்பு என்னவாயிருந்திருக்கும்?

அவளது அடுத்தக் கேள்வியை நீங்கள் சுலபமாக யூகிக்கலாம். உம்மைப் போல நான் எப்படி ஞானம் எய்த முடியும்? சாலொமோன் தனது நீதிமொழிகளின் ஒரு பிரதியைக் கொடுத்திருப்பாரோ? "*கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்; பரிசுத்தரின் அறிவே அறிவு,*" என்றாவது நிச்சயமாகச் சொல்லியிருப்பார். இது மற்றொரு ஆய்வுரைக்கு நடத்தி யிருக்கும். சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்துக்குள் பிரவேசிக்கும் நடை மண்டபத்தின் வழியாய் அவளை ஆலயத்துக்கு அழைத்துச் செல்லும்போது அவர்களது உரையாடல் என்னவாயிருந்திருக்கும்? (1 இரா 10:5). பரிசுத்தரைக் குறித்து என்பது திண்ணம்.

தேவாலய அர்ப்பணிப்பு விண்ணப்பத்தை ஏறெடுக்கும்போது சாலொமோனின் வாஞ்சை என்னவாயிருந்தது? "*உம்முடைய மக்களாகிய இஸ்ரவேல் இனமல்லாத புறவினத்தவர் உமது மகத்துவமான பெயரையும், உமது பலத்த கரத்தையும், உமது ஓங்கிய புயத்தையும் கேள்விப்படுவார்களே. அப்படிப்பட்ட புறவினத்தவனும் உமது பெயரினிமித்தம் தூரதேசத்திலிருந்து வந்து, இந்த ஆலயத்துக்கு நேராக விண்ணப்பம்பண்ணினால், உமது வாழ்தலமாகிய பரலோகத்தில் இருக்கிற தேவரீர் அதைக் கேட்டு, பூமியின் மக்களெல்லாரும் உம்முடைய மக்களாகிய இஸ்ரவேலைப்போல உமக்குப் பயப்படும்படிக்கும், நான் கட்டின இந்த ஆலயத்துக்கு உம்முடைய பெயர் சூட்டப்பட்டதென்றும் அறியும்படிக்கும், உம்முடைய பெயரை அறியத்தக்கதாக அந்தப் புறவினத்தவன் உம்மை நோக்கி வேண்டிக்கொள்வதின்படியெல்லாம் தேவரீர் செய்வீராக*" (1 இரா 8:41-43). கடவுளின் பெயர் இஸ்ரவேலின் எல்லைக்குள்ளாக அடைக்கப்பட்டுப்போகாமல் ஒவ்வொரு புறவினத்த வரையும் எட்டவேண்டும் என்பதே அவரது ஏக்கமாயிருந்தது. சேபா அரசியில் அப்படிப்பட்ட ஒருவரைக் கண்டு அவளது இதயத்தின் கேள்விகளுக்கெல்லாம்

பதிலுரைக்க அவர் தீவிரமாயிருந்தார். இன்று நமக்குப் போதிப்பதுபோல் அவளுக்கும் தேவனுக்குப் பயப்படுவது எப்படி என்று போதித்தாரோ?

கையால் செய்யப்பட்டத் தனது தேவதா தேவதைகளை விட்டு அரசியின் உள்ளம் மெல்லவே உயிருள்ள தேவன் பக்கமாய்ச் சாயத்துவங்கியபோது அவள் அகிரிப்பா அரசனைப்போல, "உம்முடைய தேவன்மேல் நம்பிக்கை வைக்கிறதற்குக் கொஞ்சங்குறைய என்னைச் சம்மதிக்கப்பண்ணுகிறீர்," என்று கூவியிருக்கலாம். சாலொமோனின் அரசை அவள் சுற்றிப்பார்த்தபோது அவளது இதயம் ஆங்காங்கே நின்றுவிட்டது. உணர்ச்சிவசப்பட்ட அரசி, *"உம்முடைய மக்கள் பாக்கியவான்கள், எப்போதும் உமக்கு முன்பாக நின்று, உம்முடைய ஞானத்தைக் கேட்கிற உம்முடைய ஊழியக்காரரும் பாக்கியவான்கள்,"* என்றாள் (1 இரா 10:8). வேறு வார்த்தைகளில் சொன்னால், "என்னுடைய அரசி பதவியை இராஜிநாமா செய்துவிட்டு வந்து உம்முடைய சமூகத்தில் நின்று உம்முடைய ஞானத்தை இரவும் பகலும் கேட்க ஆவலாயிருக்கிறேன்," என்றாள். அவள் பார்த்த எல்லாவற்றிலும் அவளை வாயடைத்து நிற்கச்செய்தது சாலொமோனின் ஞானமே, ஏனெனில் மற்றெல்லாம் அவளுக்கிருந்தது. அவள் திரும்பிப்போய் இதேபோன்ற மாளிகையைக் கட்டலாம், பணியாளருக்குச் சீருடை அணிவிக்கலாம். ஆனால் அவளது தேவை அவரது புத்தி. அதை எட்டிப்பிடிக்கும் தூரத்தில் நின்றாள். "ஒவ்வொரு நிமிடமும் உமது ஞானத்தைக் கேட்கும் உமது பணியாளரின் பாக்கியம் எனக்கு இல்லையே," என்பதே அவளது இதயக்கதறல். உண்மையாய் நாம் ஞானத்தைத் தேடுகிறவர்களானால் கர்த்தருக்குப் பயப்படுவதில் துவங்கி அனுதினமும் வேதத்தைத் தோண்டித் துருவி பரிசுத்தரைக் குறித்து அறிவதில் நிலைக்கவேண்டும். இந்த அறிவே நம்மை ஞானவான்களாக்கும்.

பின்பு அவள் தேவனை ஸ்தோத்தரித்தாள் (1 இரா 10:9). சாலொமோனுக்கு வண்டி வண்டியாகப் பொன்னையும் சுகந்தவர்க்கங்களையும், இரத்தினங்களையும் கொடுத்தாள். சாலொமோன் மயங்கிவிழுந்தாரா? ஊஹூம், அதுதான் இல்லை. *"இராஜாவாகிய சாலொமான் தானே சந்தோஷமாய் சேபாவின் அரசிக்கு வெகுமதிகள் கொடுத்ததும் அல்லாமல், அவள் விருப்பப்பட்டுக் கேட்டது எல்லாவற்றையும் அவளுக்குக் கொடுத்தார்; பின்பு அவள் தன் பரிவாரத்தோடே தன் தேசத்திற்குத் திரும்பிப்போனாள்"* (1 இரா 10:13).

ஆகமங்களின் பிரதியையும் அவரது எழுத்துக்களின் பிரதியையும் கேட்டிருக்கலாம். பூரண திருப்தியாய், எல்லா சந்தேகங்களும் தீர்ந்தவளாக, மகிழ்ச்சிக் கடலில் முழ்கியவளாய் உன்னதமான தெய்வத்தைக்குறித்த ஒரு புதிய வெளிப்பாடுடன் நாடு திரும்பினாள். உலகின் பல அரசர்கள் சாலொமோனைத் தரிசிக்க வந்திருந்தும் இந்த அரசியின் வருகைமட்டும் விவரிக்கப்பட்டிருப்பதேன் ? தேவனின் ஞானத்தை அறிய அவளது மெய்த் தாகமே அதற்குக் காரணமாயிருக்கலாம்.

தாவீதின் குமாரரில் இருவர் சிறப்பெய்தியவர்— ஒன்று பெரியவராகிய சாலொமோன், மற்றொன்று சாலொமோனைக்காட்டிலும் பெரியவர். இதோ, சாலொமோனைக்காட்டிலும் பெரியவர் இங்கே இருக்கிறார். அவரது பாதத்தில் அமர்ந்து அவரது ஞானத்தைக் கேட்க நாம் எவ்வளவு நேரமும் முயற்சியும் எடுக்கிறோம் ? அவர் சாலொமோனை நேசித்தாரானால் நம்மையும் நேசிக்கிறார். அவரை அரசனாக ஆக்கினாரானால் நம்மையும் அரசர்களாக ஆக்கியிருக்கிறார். சிறுபிள்ளையைப்போல பச்சையாக, நமது கடமைகளைச் செவ்வனே செய்யமுடியாத அறிவீனத்தை அவரிடம் அறிக்கையிட்டு, சாலொமோனைப் போல ஞானத்திற்காகக் கெஞ்சுவோமானால் அவர் மறுப்பாரா ? ஞானத்தைக் குறித்து நமக்கு தேவனுடைய வாக்குத்தத்தமென்ன ? *"உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்துகொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன்; அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும். ஆனாலும் அவன் எவ்வளவாகிலும் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கக்கடவன்"* (யாக் 1:5,6). தைரியமாக, நம்பிக்கையோடே, ஊசலாடாமல் கேட்போம். தேவனது தாராளத்தின் அழகிய அம்சம் அவர் நம்மேல் கோபப்படமாட்டார் என்பதுதான்.

"தென்தேசத்து அரசி பூமியின் எல்லைகளிலிருந்து சாலொமோனுடைய ஞானத்தைக் கேட்க வந்தாள். இதோ, சாலொமோனிலும் பெரியவர் இங்கே இருக்கிறார். ஆதலால் நியாயத்தீர்ப்பு நாளிலே அந்த அரசி இந்தச் சந்ததியாரோடெழுந்து நின்று இவர்கள்மேல் குற்றஞ் சுமத்துவாள்" (மத் 12:42).

இராணி கேட்ட "எல்லாவற்றையும்" சாலொமோன் கொடுத்ததோடல்லாமல் தானே வேறு சந்தோஷமாய்க் கொடுத்தாரென்றால் நமது பரமபிதா தாராளமாய்,

ஏராளமாய் ஞானத்தையும் நாம் வாஞ்சிக்கும் எல்லாவற்றையும் அருளாம லிருப்பாரோ? அவரது வாக்கைப் பயன்படுத்திக்கொள்ளுகிறோமா?

"அவள் சாலொமோனிடத்தில் வந்தபோது, தன் மனதில் இருந்த எல்லாவற்றையும் குறித்து அவரிடத்தில் அளவளாவினாள்." சாலொமோன் தன் கடமைக்கும் மிஞ்சி அவள் கேட்டவைகளை "எல்லாம்" விடுவித்தார் (1 இரா 10:2,3). நம்மனைவருக்குமே பதில் காணமுடியாத பல கேள்விகள் உள்ளத்தில் உண்டு. வாழ்க்கையெனும் கடலில் அலசடிப்பட்டு வெறித்த வரைப்போல் தடுமாறி ஞானமெல்லாம் முழுகிப்போன நிலையிலிருக்கிறோம் (சங் 107:27). நாம் உள்ளந்திறந்து எல்லாவற்றையும் பேசக்கூடிய, சாலொமோனைக் காட்டிலும் ஞானியும் பெரியவருமான ஒருவர் உண்டு. இந்த அரசியின் கால் தடங்களைப் பின்பற்றுவோம். அவரிடம் பேசிப்பேசிப் நமது உள்ளத்தின் பாரங்களை இறக்குவோம். அவர் எல்லாவற்றையும் தெளி வாக்குவார்.

"நான் ஏன் இவ்வளவு முட்டாளாயிருக்கிறேன்? ஞானத்தைப் பெருக்கிக் கொள்ள மாத்திரை கிடைக்குமா?" என்று எப்போதாவது கவலைப்பட்டிருக் கிறீர்களா? ஒருவேளை சேபா அரசியும் அப்படியே எண்ணியிருக்கலாம். ஞானத்தைத் தேடி சாலொமோனிடத்தில் சென்று தான் நினைத்ததைவிட, எதிர்ப்பார்த்ததைவிட அதிகமாக ஆசீர்வதிக்கப்பட்டவளாகத் திரும்பினாள். ஞானத்தின் உறைவிடமாகிய சாலொமோனைக் காட்டிலும் பெரியவரிடத்தில் வந்து கேளுங்கள். தேவனிடத்தில் ஞானத்திற்காய்ப் போராடி ஜெபிக்கும் போது, சாலொமோனைப்போலப் பிரசித்திப்பெற்றவர்களாக உடனடியாக மாறா விடினும், நமது தனிப்பட்ட, குடும்ப மற்றும் சமூக வாழ்வில் நல்லது கெட்டதைப் பகுத்தறிந்து ஞானமானத் தீர்மானமெடுக்க அவர் உதவிச் செய்வார். மனச்சாட்சியை இழந்து, சரி எது தப்பு எது என்று வேறுபடுத்திப் பார்க்கத் தெரியாமல் தவிக்கும் உலகில் கிறிஸ்தவராகிய நாம் நன்மை எது தீமை எது, சரி எது தப்பு எது என்று உணர்ந்தறியக்கூடிய விவேகத்திற்காய் ஜெபிக்கக் காலமாயிற்று.

ஞானத்தைக் கண்டடைய சாலொமோன் காட்டும் வழி என்ன? *"ஞானத்தை வா என்று கூப்பிட்டு, புத்தியைச் சத்தமிட்டு அழைத்து, அதை வெள்ளியைப் போல் நாடி, புதையல்களைத் தேடுகிறதுபோல் தேடுவாயாகில்,*

அப்பொழுது கர்த்தருக்குப் பயப்படுதல் இன்னதென்று நீ உணர்ந்து, தேவனை அறியும் அறிவைக் கண்டடைவாய். கர்த்தர் ஞானத்தைத் தருகிறார், அவர் வாயினின்று அறிவும் புத்தியும் வரும். அவர் நீதிமான்களுக்கென்று மெய்ஞ்ஞானத்தை வைத்து வைத்திருக்கிறார்" (நீதி 2:3-7). இரண்டு காரியங்கள் இங்கே வலியுறுத்தப்படுகின்றன: ஒன்று—தேவனை நோக்கிக் கூப்பிடுவது இன்றியமையாதது. இரண்டு—பிரயாசம். சாலொமோன் இரண்டையும் செய்தார். சேபா அரசி இரண்டையும் செய்தாள். ஞான வேட்டையில் நாம் அவர்களைப் பின்பற்றுவோமாக.

"ஞானத்தைக் கண்டடைகிற மனிதனும் புத்தியைச் சம்பாதிக்கிற மனிதனும் பாக்கியவான்கள்" (நீதி 3:13).

5

குடும்ப வாழ்வில் ஞானம்

இன்றைய குடும்பங்கள் தம்மையே அழித்துக்கொள்ள மலை விளிம்பில் ஊசலாடிக் கொண்டிருக்கின்றன. 50 ஆண்டுகளுக்கு முன்பாக நாம் சினிமாவில் பார்த்தவை, 25 வருடங்களுக்கு முன்பாக நமது அக்கம்பக்கத்தில் நடப்பதைக் கண்டோம். இன்று அவை நமது குடும்பத்திலேயே நடக்கின்றன. பிசாசை முறியடிக்க நமக்கு பலே ஞானம் தேவை. முதல் குடும்பத்தைக்கூட அவன் விட்டுவைக்கவில்லயே. அறிவைத்தரும் கனியை அவர்களுக்குக் கொடுக்க தேவன் திட்டமிட்டார்; அவர்களோ கீழ்ப்படியாமல் போய் தங்களையே முட்டாள்களாக்கிக் கொண்டனர்.

பழைய ஏற்பாட்டில் இரண்டு பெண்கள் வீடு கட்டுதலோடு சம்பந்தப்பட்டவர்கள் — புத்தியுள்ளவள், புத்தியில்லாதவள். ***"புத்தியுள்ள** பெண் தன் வீட்டைக் கட்டுகிறாள் **புத்தியில்லாத** பெண்ணோ தன் கைகளினால் அதை இடித்துப் போடுகிறாள்"* (நீதி 14:1). புதிய ஏற்பாட்டில் இரு ஆண்கள் வீடு கட்டினர் — **புத்தியுள்ளவன், புத்தியில்லாதவன்** (மத் 7:24,26).

இயேசு சொன்னார், *"நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின்படி செய்கிறவன்"* **புத்தியுள்ளவன்.** ஞானம் என்பது ஆண்டவருடைய வார்த்தைகளை கவனமாய்க் கேட்டு, அதின்படி ஜாக்கிரதையாய்ச் செயல்படுதலே. ஆண்டவருடைய வார்த்தையின்படி கட்டப்படுகிற குடும்பம் ஒருபோதும் விழுந்துபோகாது. நோவா ஒரு வீட்டை, அல்லது பேழையை தேவனது வார்த்தையின்படியே கட்டினார். தேவனோடு அவர் வார்த்தைகளுக்கு

வார்த்தை விவாதிக்கவில்லை. அவர் "கொப்பேர்" மரம் என்றால் அவர் சரிதான் என்றார். அவர், இவ்வளவு நீளம், இவ்வளவு அகலம், இவ்வளவு உயரம் என்றால், அவர் நல்லது என்றார். எங்கே அடித்தளம் போட்டார் ? தேவனுடைய வார்த்தையில்! பேழைக்கு வேறெந்த அஸ்திபாரமும் கிடையாது. வெள்ளம் புரண்டது. காற்று ஓங்கி வீசியது. பேரலைகள் வீட்டின்மேல் மோதின; ஆனால் வீடு அழியவில்லை. ஏனெனில், அது தேவ வார்த்தையாகிய கன்மலையில் அடித்தளம் போடப்பட்டிருந்தது. எல்லா வீடுகளையும் மூழ்கடித்து நொறுக்கிய தண்ணீர் நோவாவினதை பாதுகாவலாக மலையுச்சிக்குத் தூக்கிச்சென்றது. டைட்டானிக் ஒரு பொறியியல் அதிசயம். கப்பற்தலைவன், "கடவுளே கூட இதை மூழ்கடிக்க முடியாது," என்றானாம். கடவுள் ஏன், கேவலம், ஒரு பனிக் கட்டி அந்த வேலையைச் செய்து முடித்தது.

திருமணம்

வீடு கட்டின நால்வரையும் குலுக்கி எடுத்தால் நான்கு தம்பதியரைக் கூட்டுச் சேர்க்கலாம் —

1. புத்தியுள்ள மனிதன் புத்தியுள்ளப் பெண்ணை மணக்கலாம். இதுவே இலட்சியம். மரியாள்–யோசேப்பு, ஆக்கில்லா–பிரிஸ்கில்லா, எலிசபெத்–சகரியா மற்றும் பல நல்ல எடுத்துக்காட்டுகள் உண்டு. இவர்கள் தங்கள் குடும்பங்களை தேவனுடைய வார்த்தையின்படி கட்ட அர்ப்பணித்திருந்தனர்.

2. புத்தியில்லாத மனிதன் புத்தியில்லாத பெண்ணை மணக்கலாம். இது மகா கேடு. ஆதாமும் ஏவாளும் ஞானத்தைப் பெற குறுக்கு வழியில் சென்று தங்களுக்காய் தேவன் வைத்திருந்த திட்டத்தை விரயமாக்கினர். அனனியாவும் சப்பீராளும் சுருண்டு விழுந்து உயிர்நீத்தனர். புத்தியில்லாத இருவர் வீடு கட்டினால் அது கூரையில்லாத குடிசைதானே!

3. புத்தியுள்ள மனிதன் புத்தியில்லாத பெண்ணை மணமுடிக்கலாம். ஒருவர் புத்தியுள்ளவராயிருந்தால் கூட, யோபுவும் அவனது மனைவியும் போல வாழ்க்கைப் படகை ஓரளவு சுமாராக ஓட்டலாம். "***நீ பயித்தியக்காரி*** *பேசுகிறது போலப் பேசுகிறாய்,*" என்றார் (2:10). வாழ்க்கை போராட்டமாயிருந் தாலும் முடிவு சம்பூரணமாயிருந்தது.

4. புத்தியில்லாத மனிதன் புத்தியுள்ள பெண்ணை மணக்கலாம். குடும்பத்தலைவன் புத்தியில்லாதவனானால் வாழ்க்கை எப்படி என்று சொல்லவியலாது. ஏனெனில் மனைவி ஓங்கிப் பேச இயலாது. இருப்பினும் புத்தியுள்ள பெண், எஸ்தர் அல்லது அபிகாயிலைப் போல தன் குடும்பத்தைக் காப்பாற்றலாம்.

இதனால்தான் வேதம் சரியான வாழ்க்கைத் துணையைத் தெரிந்தெடுப் பதை வலியுறுத்துகிறது. இங்குதான் கிறிஸ்தவ குடும்பம் துவங்குகிறது. உங்கள் வாழ்க்கையிலேயே நீங்கள் செய்யக்கூடிய மிக முக்கியமான தீர்மானம் யாரைத் திருமணம் செய்யப்போகிறீர்கள் என்பதுதான். இங்கு தவறினால் வாழ்க்கையெல்லாம் போராட்டமே. திருமணம் விளையாட்டல்ல. இது இருவர் சேர்ந்து கட்டும் மாளிகை. கடினமான வேலை. அடித்தளம் கற்பாறையில் ஆழமாய்த் தோண்டிப்போடவேண்டும். ஒருவர் புத்தியில்லாதவராயும் மற்றெருவர் புத்தியுள்ளவராயும் இருந்தால் ஒருவர் கட்டக் கட்ட அடுத்தவர் இடித்துக்கொண்டே இருப்பர்.

சரியாகப் பொருந்தாத ஷர்ட் அல்லது சல்வாரை கடையில் கொடுத்து திரும்ப மாற்றிக்கொள்வதுபோல வாழ்க்கைத் துணையை மாற்றவியலாது. வாழ்க்கையெல்லாம் இறுக்கமானச் சட்டையைப் போட்டுக் கொண்டிருக்கும் நிலையை கற்பனை செய்துபாருங்கள். சித்திரவதை! TV உங்கள் குருவாக வேண்டாம். பணமோ நிறமோ இனமோ தொழிலோ பிரதானமல்ல. ஞானமே பிரதானம். முதலாவது, வேதத்தின் போதனைப்படி வாழ உங்களை அர்ப்பணியுங்கள். அதுவே உங்களை ஞானியாக்கும். அதன் பிறகு, அதேப்போல தேவ வார்த்தைக்கு தன்னை அர்ப்பணித்திருக்கும் ஒருவரைத் தேட உங்கள் செருப்புத் தேயட்டும். அப்படியானால் எந்த வாழ்க்கைப் புயலுக்கும் அசையாத உறுதியான வீட்டை இருவருமாகக் கட்டலாம்.

‘சரி’ என்று ஒருவருக்கு தலையசைக்கும் முன்பாக, அவர் நல்ல கிறிஸ்தவரா என்று கண்டுபிடியுங்கள். கோயிலுக்குப் போகிறாரா? பெற்றோரை மதிப்பவரா? நல்ல சாட்சியுள்ளவரா? மறுபாலரை மதிப்பவரா? உங்களது தெரிந்தெடுப்பை உங்களது மேய்ப்பர் ஆன்மீகத் தலைவர் மற்றும் பெற்றோர் மகிழ்வோடு ஆமோதிக்கின்றனரா?

“குணசாலியான பெண்ணைக் கண்டுபிடிப்பவன் யார்? அவளுடைய விலை முத்துக்களைப் பார்க்கிலும் உயர்ந்தது ... தன் வாயை **ஞானம்** *விளங்கத் திறக்கிறாள்,”* என்று லேமுவேலின் தாய் சரியாகத்தான் சொன்னாள் (நீதி 31: 10,26). தன் மகனை ஞானமுள்ளப் பெண்ணைத் தெரிந்தெடுக்க வழி நடத்தினாள்.

ஒரு சின்னப் பயிற்சி செய்து பார்ப்போமா? இடது கையை விரித்து வலது கையின் சுண்டு விரலால் அதைத் தட்டுங்கள். நீங்கள் ஞானமுள்ளவரும் உங்கள் துணைவர் உங்கள் ஞானத்தில் 20 சதவீதமே உள்ளவருமானால் இப்படித்தான் உங்கள் சாட்சி ஒலிக்கும். இப்போது இரண்டு விரல்களால் தட்டுங்கள். பின்பு மூன்று, நான்கு, இறுதியில் இரு கைகளையும் தட்டுங்கள். இருவரும் ஞானமுள்ளவர்களானால் இதுவே உங்களது உரத்த சாட்சி.

குடும்பம்

பக்தியுள்ள குடும்பத்தின் அழகிய சித்திரம் ஒன்றை நீதிமொழிகள் 30: 24,26இல் காணலாம். *“பூமியில் சிறியவைகளாயிருந்தும், மகா ஞான முள்ளவைகள் நான்குண்டு. அவையாவன:... சத்துவமற்ற ஜெந்து வாயிருந்தும், தங்கள் வீட்டைக் கன்மலையிலே தோண்டி வைக்கும் குழிமுசல்களும் ...” “கன்மலைகள் குழிமுசல்களுக்கு அடைக்கலம்,”* என்றெழுதுகிறார் சங்கீதக்காரன் (சங் 104:18). இவை தங்களைப் பாதுகாத்துக்கொள்ளமுடியாத சத்துவமற்ற சிறு பிராணிகள். மான்களுக்குக் கொம்புகளும் சிங்கங்களுக்குப் பற்களும் கரடிகளுக்கு நகங்களும் உண்டு. இந்த அற்ப ஜெந்துக்களுக்கு ஒன்றும் கிடையாது. ஆகவே இவை கன்மலைகளின் வெடிப்புகளையும் பாறைகளையும் தஞ்சமாகக் கொள்ளும். காட்டு மிருகங்கள் இரை தேடி வரும்போது இந்த முயல்களைக் கண்டால் அவை கன்மலைக்குள் ஓடி பதுங்கிக்கொள்ளும். இப்படித்தான் பெலவீனர் பயில்வான்களாவர். இதுவே ஞானம். சத்துவமற்ற விசுவாசியின் சுவாரஸ்ய மான படத்தைப் பார்த்தீர்களா! ஒருவன் விசுவாசியாகிவிட்டால் அவன் அவிசுவாசியாயிருந்த நாட்களிருந்ததுபோல பிராண்டி கடித்துப் பட்சிக்க முடியாது. துப்பாக்கியும் கிடையாது. சிபாரிசும் கிடையாது. அவனது பாது காவல் கடவுள் மட்டுமே. கன்மலையாகிய கிறிஸ்து ஒருவரே அவனது அடைக்கலம் (1 கொரி 10:4). பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல

விழுங்கவரும்போது அவன் தன்னையும் தன் குடும்பத்தையும் கன்மலைக்குள் பதுக்கி வைக்கிறான். கன்மலையில் வீட்டைக் கட்டி தன் குடும்பத்தை அங்கு வைக்கிறவனே ஞானவான். கன்மலைக் குழிக்குள் வாழும் குழிமுசலைப் போல நாமும் கன்மலைக் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்படுவதே சரி.

தேவனது ஆலயப் பிராகாரங்களில் வேறு சில குடும்பங்களையும் பார்க் கலாம். ஒரு நாள் தாவீது தேவனை ஆராதிக்க ஆலயத்திற்குள் செல்கிறார். ஆலயத்திற்குள்ளே வீடுகளைக் கட்டி, பிள்ளைகளுக்கு உணவூட்டிக் கொண்டும் பாட்டுப் பாடிக்கொண்டும் குடும்பம் நடத்திக்கொண்டி ருந்தவர்களைக் கண்டு அசந்து நிற்கிறார். தேவனுடைய ஆலயத்திற்குள் குடும்பங்கள் வந்து தங்கியிருக்கும் அளவிற்கு கவலையீனமாய் இருந்துவிட்டதற்காக அரசர் தலையை வாங்கிவிடுவாரோ என்று நடுங்கிய வேலைக்காரர் அவர்களைத் துரத்த ஓடுகின்றனர். தாவீதோ கரமசைத்து நிறுத்துகிறார். "இருந்துவிட்டுப் போகட்டும். நான் இவர்கள்மேல் பொறாமைப் படுகிறேன். தேவனது பிரசன்னத்தில் 24 மணி நேரமும் வாழ ஏங்கிக்கிடக் கிறேன். என்னால் முடியாது. இந்தக் குடும்பங்கள் யாருடைய அனுமதியுமின்றி இங்கிருக்கின்றனர். இருந்துவிட்டுப் போகட்டும்,"என்கிறார். இவர்கள் யார்? *"என் ஆத்துமா கர்த்தருடைய ஆலயப் பிராகாரங்களின்மேல் வாஞ்சையும் தவனமுமாயிருக்கிறது ... உம்முடைய பீடங்களண்டையில் அடைக்கலான் குருவிக்கு வீடும், தகைவிலான் குருவிக்குத் தன் குஞ்சுகளை வைக்கும் கூடும் கிடைத்ததே. உம்முடைய வீட்டில் வாசமாயிருக்கிறவர்கள் பாக்கிய வான்கள்; அவர்கள் எப்பொழுதும் உம்மைத் துதித்துக்கொண்டிருப்பார்கள். உம்மிலே பெலன்கொள்ளுகிற மனிதனும், தங்கள் இருதயங்களில் செவ்வையான வழிகளைக் கொண்டிருக்கிறவர்களும் பாக்கியவான்கள். அழுகையின் பள்ளத்தாக்கை உருவ நடந்து அதை நீரூற்றாக்கிக்கொள்ளு கிறார்கள்; மழையும் குளங்களை நிரப்பும். அவர்கள் பலத்தின் மேல் பலமடைந்து, சீயோனிலே தேவ சந்நிதியில் வந்து காணப்படுவார்கள்"* (சங் 84:2–7). உங்கள் குடும்பத்தை தேவனுடைய பீடங்களண்டையில் வைத்திருப்பீர் களானால் நீங்கள் பாக்கியவான்கள். தேவனே உங்கள் பெலன். வாழ்க்கைப் பயணத்தில் கண்ணீரின் பள்ளத்தாக்கினூடே நடந்து அதை ஆசீர்வாதங் களாக மாற்றுவீர்கள். நித்திய வீட்டை அடையுமட்டும் பலத்தின்மேல் பலமடைவீர்கள்.

கதாநாயகனும் கதாநாயகியும்

குடும்பத்தில் மிக முக்கிய நபர்களாகிய கணவன் மனைவி காரியத்தைச் சற்றுப் பார்க்கலாம். *"வீடும் ஆஸ்தியும் பிதாக்கள் வைக்கும் சுதந்தரம்; **புத்தியுள்ள** மனைவியோ கர்த்தர் அருளும் ஈவு"* (நீதி 19:14). புத்தி என்பது சிந்தித்துச் செயல்படுவது. *"பாலியப் பெண்கள் **தெளிந்த புத்தியுள்ளவர் களும்** ..."* (தீத்து 2:4,5). தெளிந்த புத்தி என்பது எந்த சூழ்நிலைகளிலும் சரியான காரியத்தைச் செய்ய தீர்மானமெடுக்கும் கிருபை. ஆகவே மனைவியருக்கு புத்தியும் தெளிந்த புத்தியும் அவசியம் என்று காண்கிறோம். குடும்பத்தில் சிக்கல் ஏற்பட்டால் மக்கள் மனைவியிடம், "கணவன் மேல் பழியைப் போடாதே. உனக்கு எங்கே போயிற்று புத்தி ?" என்பார்கள். அப்படியே கணவருக்கும் குடும்ப வாழ்க்கையில் ஞானம் அவசியம். *"அந்தப்படி புருஷர்களே, மனைவியானவள் பலவீன பாண்டமாயிருக்கிறபடியால், உங்கள் ஜெபங்களுக்குத் தடை வராதபடிக்கு, நீங்கள் **விவேகத்தோடு** அவர்களு டனே வாழ்ந்து, உங்களுடனேகூட அவர்களும் நித்திய வாழ்வாகிய கிருபையைச் சுதந்தரித்துக்கொள்ளுகிறவர்களானபடியினால் அவர்களுக்குச் செய்ய வேண்டிய கனத்தைச் செய்யுங்கள்"* (1 பேதுரு 3:7). *"உத்தமமான வழியிலே **விவேகமாய்** நடப்பேன் ... என் வீட்டிலே உத்தம இருதயத்தோடு நடந்து கொள்ளுவேன்,"* என்கிறார் தாவீது (சங் 101:2).

விருப்பும் வெறுப்பும் மாறி மாறி வரும் தமது உறவில் கணவனும் மனைவியும் எப்படி ஞானமாய் நடந்து கொள்ளலாம் ? நீதிமொழிகளின் புத்தகத்தில் சில பதில்களைக் காணலாம். *"மனிதனுடைய **விவேகம்** அவன் கோபத்தை அடக்கும்; குற்றத்தை மன்னிப்பது அவனுக்கு மகிமை"* (நீதி19:11). கோபத்தினால் குடும்பங்கள் போர்க்களமாகிவிடுகின்றன. கணவனும் மனைவியும் வெவ்வேறு பின்னணியிலிருந்து வருவதினால் ஒருவர் குற்றத்தை ஒருவர் சகித்துக்கொள்வது கடினம்தான். குற்றம் என்பது வரம்பை மீறுவது; அதாவது எளிமையாய்ச் சொன்னால் கீழ்ப்படியாமை. மன்னிப்பது என்பது அதைக் காணாததுபோல் விட்டுவிடுவது, அல்லது, "சரி போவுது, இப்ப என்ன ஆயிற்று," என்று உங்களுக்குள்ளே சொல்லிக்கொண்டு சகித்துக்கொள்வது. அலறி, கத்தி, திட்டவேண்டும் என்று உந்தப்படும்போது, வாயை மூடிக் கொண்டு இருப்பது. உணர்வுகளைக் கொட்டும்போது முட்டாள்களாகிறோம். *"**மூடன்** தன் உள்ளத்தையெல்லாம் வெளிப்படுத்துகிறான்; **ஞானியோ***

அதைப் பின்னுக்கு அடக்கிவைக்கிறான்" (நீதி 29:11). ஒன்றுபட்டு சமாதானமாய் வாழத் தேவையான ஒழுங்குகளில் இதுவே மிகவும் கடினமானது. உணர்ச்சிகளை அடக்கக் கற்றுக்கொள்ளுங்கள். அடக்க முடியாமல் வெடித்துவிடுவோம் என்று பயப்படுவீர்களானால், வெளியே உலாவச் சென்றுவிடுங்கள். ஜெபித்து, அடங்கினபின் வாருங்கள். துணை வரை மாற்றும் பயனற்ற, சோர்புறச் செய்யும் முயற்சிகளைக் கைவிட்டு உங்களையே மாற்றிக்கொள்ளும் முயற்சியில் மும்முரமாய் மூழ்குங்கள்.

*"முற்கோபி **மதிகேட்டைச்** செய்வான்" (நீதி14:17).* மனத்தாங்கல்கள் கொலைக்கும் தற்கொலைக்கும் பிரிதலுக்கும் இப்படிப்பட்ட முட்டாள்தனமான காரியங்களுக்கும் நடத்துகிறது நாம் அறிந்ததுதானே. *"நீடிய சாந்தமுள்ளவன் **மகா புத்திமான்** முற்கோபியோ **புத்தியீனத்தை** விளங்கப்பண்ணுகிறான்"* (நீதி14: 29). கோபப்பட மறுப்பீர்களானால் சிந்தனை கூர்மையாகும். சுலபமாக காரியத்தைச் சரிசெய்வோம்.

வெடிகுண்டாய் வெடிப்பது கெட்டதானால், அமைதியாய்ப் பொறுமுவது அதைக்காட்டிலும் மேன்மையானதல்ல. அப்படியானால் ஆரோக்கியமான மாற்று மருந்துதான் என்ன ? தீப்பொறியில்லாமல் அதைச் செய்யலாம். கோபம் வரும்போது துணைவரிடம் அமைதியாக அவரோடு பேசவிரும்புவதாகக் கூறி ஒரு நேரத்தைக் குறியுங்கள். ஜெபத்துடன் உங்களை ஆயத்தம்பண்ணுங்கள். ஒரு முன்னுரையோடு, அமரிக்கையாய் கருத்துப் பரிமாற்றத்திற்காக அமருங்கள். அடுத்தவரைப் புண்படுத்தாத விதத்தில் உங்கள் உணர்வுகளை வெளிப்படுத்தப் பழகுங்கள். மன உணர்வுகளை அடக்கிப் பேசுங்கள்.

*"**அறிவாளி** தன் வார்த்தைகளை அடக்குகிறான்; **விவேகி** குளிர்ந்த மனமுள்ளவன். பேசாதிருந்தால் **மூடனும் ஞானவான்** என்று எண்ணப் படுவான்; தன் உதடுகளை மூடுகிறவன் **புத்திமான்** என்று எண்ணப் படுவான்"* (நீதி17:27,28). கோபத்தில் வர்த்தைகளைக் கொட்டாதீர்கள். நீங்கள் தவறானால் ஒத்துக்கொள்ளுங்கள் நீங்கள் சரியானால் வாயைப் பொத்திக்கொண்டிருங்கள் என்பது ஞானப் பழமொழி. நீங்களே சரியாயி ருந்தால்கூட மனக்குளர்ச்சியோடு அமரிக்கையாயிருப்பீர்களானால் உங்கள் துணைவரும் மனங்குளிர்வர். அமரிக்கையான ஆவியை உருவாக்க பல்லாண்டு கடினமான பயிற்சி தேவை. சீக்கிரமாய்த் துவங்கி குடும்பத்தைக் காப்பாற்றுங் கள். சண்டை துவங்கினால் ஞானியான துணைவர் விட்டுக்கொடுத்து

முற்றுப்புள்ளி வைப்பார். குறிப்பிட்டப் பேச்சு ஒன்றைத் துவங்கினால் நிச்சயமாய்க் குத்துச்சண்டையில் முடியும் என்று தெரிந்தால் அந்தப் பேச்சையே எடுக்காதீர்கள். எந்த முட்டாளும் சண்டையைத் துவங்கமுடியுமே (நீதி 20:3).

கணவனும் மனைவியும் இரு சுதந்திர நபர்களல்ல, ஒருவரையொருவர் சார்ந்திருக்கும் ஒரே உடலின் இரு பாகங்கள். ஆகவே பிரம்மச்சாரி உல்லாச நிலை இனி கிடையாது. திருமண மணியோசையின்போதே சாவு மணியும் ஒலிக்கிறது. நீங்கள் உங்களுக்கு மரித்து இன்னொருவருக்காக வாழத் துவங்குகிறீர்கள்.

கணவன் மனைவியினிடையில் மற்றொரு ஞானத்தின் அம்சம், கவனிக்கும் திறன். *"காரியத்தைக் கேட்குமுன் உத்தரம் சொல்லுகிறவனுக்கு அது* ***புத்தியீனமும்*** *வெட்கமுமாயிருக்கும்"* (நீதி 18:13). முட்டி மோதும்போது பொதுவாக நமது கவனம் நமது கருத்தை அக்கரைக்குக் கடத்தவதிலேதான் இருக்குமேயொழிய துணைவர் சொல்வதை கவனிப்பதில் இருக்காது. அடுத்தவர் சரியாக இருக்கலாம் என்பதை ஒத்துக்கொள்ளச் சிரமப்படுகிறோம். ஆகவே அவரது விவாதங்கள் செவிட்டுக் காதுகளில் விழுகின்றன. வாயைத் திறக்காமல் அடுத்தவர் சொல்வதை கவனிக்கப் படியுங்கள். அமரிக்கையான ஆவியை வளர்த்திருப்பீர்களானால் கவனிப்பது சுலபமாகும். யாக்கோபு சொல்வதுபோல, *"யாவரும் கேட்பதற்குத் தீவிரமாயும், பேசுகிறதற்குப் பொறுமையாயும், கோபிக்கிறதற்குத் தாமதமாயும் இருக்கக்கடவர்கள்"* (1:19). சிறு சிக்கலை வளரவிடுவதைவிட அவ்வப்போது சரி செய்து விடுவது நல்லது.

தொட்டால் சிணுங்கித்தனம் உறவுக்கு எதிரி. எதையும் பெரிதுபடுத்தக் கூடாது. சிணுங்கித்தனமிருந்தால் வார்த்தைளைத் துணைவர் கவனமாய்த் தெரிந்தெடுத்து, அளவுக்கு மீறி ஜாக்கிரதையாய் நடந்துகொள்ளும் நிலை ஏற்படும். கணவனும் மனைவியும் ஒருவருக்கொருவர் தாங்கள் தாங்களாகவே இருக்க சுயாதீனமளிக்கவேண்டும். குற்றச்சாட்டுகளையும், தைக்கும் வார்தைகளையும் தூசி தட்டுவதுபோல தட்டிவிட்டுக் கொள்ள வேண்டும். பலமணி நேரங்கள் அல்லது நாட்கள் அழுதுகொண்டேயிருப்பது, மௌன விரதம் சாதிப்பது எல்லாருக்கும் தொல்லை. அது தற்பெருமை; சண்டைக்குதான் நடத்தும். உங்கள் கணவர் என்றைக்கோ மறந்துவிட்ட பூசலை நீங்கள் இன்னும் நினைத்துப் புழுங்கிக் கொண்டிருக்கலாம்.

*"பட்டயக்குத்துகள்போல் பேசுகிறவர்களும் உண்டு: **ஞானமுள்ளவர்களுடைய நாவோ ஔஷதம்**"* (நீதி 2:18). வார்த்தைகளை அளந்து பேசுங்கள். மறைமுகமான, சுருக்கென்றுதைக்கும் வார்த்தைகள் ஆழமான தழும்புகளை உண்டாக்கும். ஒருவரை ஒருவர் முட்டாளாக்குவது ஒரு கணவன்–மனைவி விளையாட்டு. இந்த மரண விளையாட்டைத் தவிர்த்துவிடுங்கள். பழைய தவறுகள், குற்றங்கள், பாவங்களுக்குச் சமாதி கட்டிவிடுங்கள். அதற்கு பதிலாக உடனடியாகவும் நிரந்தரமாகவும் குணப்படுத்தும் கீலேயாத்தின் தைலமான ஆறுதல், உற்சாகம், பாராட்டுகளைப் பொழியும் வார்த்தைகளைப் பேசப் பழகுங்கள்.

விபச்சாரத்தின் மடமை

கானானியர் தாறுமாறான பாலுறவு பழக்கங்களுடையவர்களாயிருந்தார்கள். தேவன் அவற்றை அருவருப்பான தாறுமாறு என்கிறார் (லேவி 18:23; 20:12) ஆங்கில வேதம் (KJV) அதைக் "குழப்பம்" என்கிறது. இன்று பலர் இந்தக் கானானியப் பொறியில் மாட்டிக்கொண்டு ஞானத்தின் எதிர்மறையான "குழப்பத்தில்" ஆழ்ந்துள்ளார். கடவுள் இஸ்ரவேலருக்குக் கட்டளைகளைக் கொடுத்து, *"அவைகளைக் கைக்கொண்டு நடவுங்கள்; மக்களின் கண்களுக்கு முன்பாகவும் இதுவே உங்களுக்கு **ஞானமும் விவேகமுமா**[ய்] இருக்கும். அவர்கள் இந்தக் கட்டளைகளையெல்லாம் கேட்டு, இந்தப் பெரி[ய] இனமே **ஞானமும் விவேகமுமுள்ள** மக்கள் என்பார்கள்,"* என்றா[ர்] (உபா 4:6).

குடும்பத்தை அழிக்கும் பாவங்களில் மிகக் கொடூரமானது விபச்சாரமே. சாலொமோன் தெளிவாய் அதன் மடமையை எழுதுகிறார். *"பெண்ணுடனே விபச்சாரம் பண்ணுகிறவன் **மதிகெட்டவன்;** அப்படிச் செய்கிறவன் த[ன்] ஆத்துமாவைக் கெடுத்துப்போடுகிறான். வாதையையும் இலச்சையைய[ும்] அடைவான்; அவன் நிந்தை ஒழியாது. பெண்ணைப் பற்றிய எரிச்ச[ல்] புருஷனுக்கு மூர்க்கத்தை உண்டுபண்ணும்; அவன் பழி வாங்கும் நாளி[ல்] தப்பவிடான். அவன் எந்த ஈட்டையும் பாரான்; அனேகம் வெகுமதிகளை[க்] கொடுத்தாலும் அமர்ந்திருக்கமாட்டான்"* (நீதி 6:30–35). உங்கள் கணவ[ன்] மனைவிக்கு உங்களை நீங்கள் அர்ப்பணித்திராவிடில் 'ஐ லவ் யூ' என்[று] சொல்வதில் அர்த்தமேயில்லை.

திருடன் பசிக்காக திருடினால் இகழப்படான் (வச 30). ஆனால் தேவன் உங்களுக்குக் கொடுத்திருக்கிறபடியால் விபச்சாரத்திற்கு எவ்வித சாக்குப் போக்கும் கிடையாது. எப்போதுமே இக்கரைக்கு அக்கரை பச்சைதான். தேவனுடைய வசனத்திற்கு நெருங்கியப் போட்டி ஒழுக்கமற்றப் பெண்ணின் உதடுகள்தான். இரண்டுமே தேனுக்கு ஒப்பிடப்பட்டுள்ளன (நீதி 5:3; சங் 19: 10). அவளது தேனை நீங்கள் பருகும்போது அவள் உங்கள் ஞானத்தை உறிஞ்சி உங்களை முட்டாளாக்குவாள். பாரில் சிறந்த ஞானியை வடிகட்டின முட்டாளாக்கியது பெண்களல்லவோ.

சாலொமோன் பெண்கள் பின்னே ஓடியது ஏன்? தேவன் அவருக்கு ஞானத்தை அளித்தார். அவரோ அதன் வழியில் நடக்கத் தவறினார். அவர் பேதையர்களாகிய வாலிபருக்குள்ளே ஒரு **புத்தியீன** வாலிபனைக் கண்டார். அந்த வாலிபன் இரவின் போர்வையில் யாருக்கும் தெரியாமல் செல்வதாக நினைத்தான். ஆனால் ஒருவர் எங்கிருந்தோ அந்த நாடகத்தைப் பார்த்து, உலகம் முழுவதும் வாசிப்பதற்காக எழுதிவைத்தார். அந்த வாலிபனின் முதல் முட்டாள்தனம் அதுதான் (நீதி 7:6,7). உங்கள் பாவம் உங்களைக் கண்டு பிடிக்கும் என்பது நிச்சயம். ஒரு "**மூடன்** விலங்கிடப்பட்டு தண்டனைக்குப் போவதுபோலப் போனான்" (வச 22).

"இச்சக வார்த்தைகளைப் பேசும் அந்நியப் பெண்ணாகிய பரத்தைக்கு உன்னை விலக்கிக் காப்பதற்காக **ஞானத்தை** நோக்கி, நீ என் சகோதரி என்றும், **புத்தியைப்** பார்த்து, நீ என் இனத்தாள் என்றும் சொல்வாயாக" (நீதி 7: 4,5).

தப்பிக்க வழிகள்

உங்கள் ஷர்ட் பாக்கெட்டிலோ முந்தானையிலோ நெருப்புத் தழலை வைத்துக்கொண்டு துணி பொத்தலாகக்கூடாதென்று ஜெபித்துக் கொண்டு தழலின் மேல் நடக்காதீர்கள்.

உங்கள் ஊழியத்தின் ஆசீர்வாதங்களால் உங்கள் பரிசுத்தத்தை அளக்காதீர்கள்.

பிறர் எச்சரிக்கும்போது செவிகொடுங்கள். எதிர் பேசாதீர்கள்.

☐ துணைவருக்குக் கீழ்ப்படியுங்கள். சாதாரண நட்புறவாயிருந்தாலும் உங்கள் துணைவர் விரும்பாவிடில் விட்டுத் தொலையுங்கள். குடும் சமாதானத்தை சுயநலம் குதறிவிடும்.

☐ ஆன்மீகக் கவர்ச்சியைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்.

☐ தொடுதலைத் தவிர்த்துவிடுங்கள்.

☐ திருமணமாகாதவர் திருமணத்தைக் குறித்து சிந்திக்கலாம். விதவை களும், மனைவியை இழந்தவரும் தேவையை உணர்ந்தால் மறுமணம் செய்து கொள்ளவேண்டும். மூத்தவர் அவர்களை ஊக்குவித்து உதவிசெய் வேண்டும்.

☐ திருமணத்தில் கிளர்ச்சியை எதிர்பாராமல், நட்புறவிலும் அன்பிலு திருப்தியடைய வேண்டும்.

☐ சோதனையின் அகோரத்தைத் தணிக்கும்படியாக துணைவரோடு இனி பாலுறவு வாழ்வை அனுபவியுங்கள்.

பிள்ளைகள்

அடுத்து வருவது பிள்ளை வளர்ப்பு. பிள்ளை வளர்ப்பில் நாம் செய் வேண்டியதற்கும் செய்து கொண்டிருப்பதற்கும் இடையே கொடூரமா இடைவெளி இருக்கிறது. நவீன பெற்றோரின் வரைபடத்தை யோபு 39:13–17இ தெளிவாய்க் காணலாம். *"தீக்குருவிகள் தங்கள் செட்டைகளை அசைவா ஓடுகிற ஓட்டம், நாரை தன் செட்டைகளாலும் சிறகுகளாலும் பறக்கிறதற்கு சமானமாகுமோ?* (ஆங்கில வேதம் காண்க) *அது தன் முட்டைகளை தரையிலே இட்டு, அவைகளை மணலிலே அனலுறைக்க வைத்துவிட்டு போய், காலால் மிதிபட்டு உடைந்துபோம் என்பதையும் காட்டு மிருகங்க அவைகளை மிதித்துவிடும் என்பதையும் நினைக்கிறதில்லை. அது த குஞ்சுகள் தன்னுடையதல்லாதது போல அவைகளைக் காக்காத கடி குணமுள்ளதாயிருக்கும். அவைகளுக்காக அதற்குக் கவலையில்லா படியினால் அது பட்ட வருத்தம் விருதாவாம். தேவன் அதற்குப் **புத்தியை** கொடாமல், **ஞானத்தை** விலக்கி வைத்தார்."*

புத்திகெட்டத் தீக்கோழி இங்கு புத்தியுள்ள நாரை அல்லது கொக்கிற் ஒப்பிடப்பட்டுள்ளது. புத்தியுள்ள நாரை உயரமான தேவதாரு மரங்களி

[illegible]ளையில் தம் கூட்டைக் கட்டி குஞ்சுகளைப் பாதுகாப்பாக வைக்கும் (லூ [illegible] 17) என் 27:8. பெருமையுள்ள தீக்குருவியின் ஆசைகளா ஆசைய, [illegible]ன்புள்ள கொக்கினோடு ஒப்பிட முடியாது என்று ஆங்கில வேதத்தில் [illegible] NKJV. இன்று கணவனும் மனைவியும் தீவிரமாக சாதனையில் [illegible]றங்கியுள்ளனர். பட்டங்கள் பெறுவது, வெளிநாட்டுப் பயணங்கள், தொழில் [illegible] மாளிகை கட்டுதல், புகழ்ச்சி—என்ன கிரயம் செலுத்தி? பிள்ளை[illegible] விற்று இவற்றைச் சம்பாதிக்கிறோம்?

[illegible]ளைகளை வேலைக்காரியிடம் விட்டுவிட்டு அவர்கள் அனுபவிக்கும் [illegible]ங்களைக் கண்டுகொள்ளாமல் இருக்கிறோம். ஒரு குடும்பத்தோடு [illegible]ருக்கும்போது அவர்களது இரு சிறுமிகளோடு விளையாடிக் [illegible]ண்டிருந்தேன். கூட்டங்களுக்குப் போகும்போது பெற்றோர் அவர்களை [illegible] "[illegible]காரனிடம்" விட்டுச்செல்வது வழக்கம். சிறுமியர் அந்தச் "[illegible]காரன்" செய்வதைக் கூறி வாயைப் பொத்திக்கொண்டுச் சிரித்தனர். [illegible]ர்ச்சியடைந்து பெற்றோரை எச்சரித்தேன். இன்னொரு 2 வயது பையன் [illegible] வேலைக்காரியால் பாலியல் கொடுமைக்கு ஆளானான். [illegible]ர்கள் காப்பகத்திலிருக்கின்றனர், காயப்பட்டிருக்கின்றனர். வேலைக் [illegible] கையில் அவர்கள் வாங்கும் கிள்ளுகளையும் அடிகளையும் [illegible]ளோம். இருப்பினும் பெற்றோர் தம் பிள்ளைகள் பாதுகாவலாயிருப் [illegible] நினைக்கின்றனர். பிள்ளைகள் பொதுவாக புது நபர்களால் பாலியல் [illegible]டுமைக்குள்ளாவதில்லை. அநேகமாக அவர்களைப் பாதிப்பது நெருக் [illegible] அருகாமையிலானவர்களே. வீட்டிக்குள்ளேயேகூட நடக்கலாம்.

இந்த சாதனைப் பித்து குடும்ப வாழ்க்கையின் கழுத்தை நெறித்துக் [illegible]ண்டிருக்கிறது. சாதனை ஆசை நல்லதுதான்; ஆனால் சாதனைப் [illegible]ராசை வேண்டாம். அப்படியானால் பிள்ளைகளை அணைத்துக் கொள்ளவும், [illegible] கொடுக்கவும், அவர்களது பள்ளி விழாவுக்குச் செல்லவும், [illegible]வர்களோடு நேரம் செலவழிக்கவும், அடுத்தவன் நம்மை முந்திச் செல்லவும் விட்டுக் கொடுத்தலாகும்! நாரையைப்போல எளிய வாழ்க்கை மற்றும் மகிழ்ச்சியான குடும்பத்தில் சந்தோஷமாயிருங்கள். உலக முழுவதையும் ஆதாயப்படுத்திவிட்டுப் பிள்ளைகளை இழந்து போகாதீர்கள். தீக்குருவியை குரூரமானப் பறவை என்கிறது வேதம் (புல 4:3) பெற்றோரின் நேரம் மற்றும் அக்கறையைப் பெற்றுப் பிள்ளைகளுக்குக் கொடுக்காவிட்டால் அது குரூரம்தானே!

தீக்குருவிக்கு அருகே நின்றால் நாரையை யாரும் திரும்பிக்கூடப் பார்க்கமாட்டார். அப்படித்தான், கரிசனையுள்ள பெற்றோர், சாதனைப் படைத்த தம் சகாக்கள் அருகே காட்சியளிப்பர். ஆனால் வேதம் அவர்களை ஞானிகள் என்கிறது. மற்றவர்களது பார்வையை விரும்புகிறோம். நமது சாதனை நம்மைத் தீக்குருவிகளாக்கி ஞானத்தைப் பறிகொடுக்கச் செய்கிறது. புத்தியுள்ள குழிமுசலோடு புத்தியில்லாத தீக்குருவியை ஒப்பிட்டுப்பாருங்கள். கணவனும் மனைவியும் திரைக்கடல் ஓடி திரவியம் தேடி, பிள்ளைகளை கவனிக்க நேரமோ சக்தியோ இல்லாதவர்களாகிறோம். உங்கள் முதன்மை யானது என்ன? சாதனைகளா, பிள்ளைகளா?

தீக்குருவியைப்போல பிள்ளைகளிடம் குரூரமாயிருக்கக்கூடியவை — அவர்களைக் கோபப்படுத்துவது அல்லது எரிச்சல் மூட்டுவது அல்லது அளவுக்கு மீறி கண்டிப்பது அல்லது அளவுக்கு மீறி கட்டுப்படுத்துவது அல்லது இரும்புக் கையால் அவர்களை ஆளுவது (எபே 6:4). அதிகாரியைப் போல பிரம்பால் ஆளுவது அவர்களை அடிமைகளாக்கும். அளவுக்கு மீறி கண்டிப்பவர்கள் அன்பினால் அரவணைத்து நடத்த மறக்கும் பெற்றோர். படிப்பே தெய்வம் என எண்ணும் பெற்றோர், பிள்ளைகளால் முடியாத அளவு அவர்களைத் தள்ளிவிட்டு, பள்ளியில் பிரகாசிக்க எதிர்பார்ப்பர். கோபக்காரப் பெற்றோர் தங்கள் கோபத்தை எல்லாம் பிள்ளைகள்மேல் கொட்டுவார்கள். இவையெல்லாம் பிள்ளைகளைப் புண்படுத்தி, நோகச்செய்து, மனநிலைப் பாதிப்புக்குள்ளாக்கி கசப்புற்றவர்களாய், குழம்பினவர்களாய் கோபக்காரராய் ஆக்கிவிடும். பெற்றோருடன் பலப்பரீட்சைக்கு நிற்க வலுவற்றவர்களாய், தங்கள் விரக்தியை வேறுவிதத்தில் வெளிப்படுத்துவர். சிலர் தங்கள் பிள்ளைகளை விடுதியில் விடுவதே சிறந்தது என எண்ணலாம். அப்படியல்ல, வீடே சிறந்தது. விடுதி அனுபவம் அழிக்க முடியாத பாதிப்புகளை ஏற்படுத் தலாம். அன்பை வெளிப்படையாய் காட்டுதல், புரிந்துகொள்ளுதல், கொஞ்சுதல், அணைத்துக்கொள்ளுதல் அவர்களோடு நேரம் செலவழித்தல், சிரித்து விளையாடுதல், வெளியே அழைத்துச் செல்லுதல், நண்பர் போன்றவை பிள்ளைகள் முதிர்ச்சியான சமநிலைப் பெரியவர்களாக வளர உதவி செய்யும்

இயேசுவைப்போல அவர்கள் ஞானத்தில் வளரும்படியாக அவர்களுக்கு வேத வசனத்தைப் போதியுங்கள். பள்ளிப்பாடங்களைச் செய்ய எவ்வளவு வற்புறுத்துகிறோம். தேவனது வார்த்தையைப் போதிப்பதில் அத்தனை

வராக்கியம் காட்டுகிறோமா? இப்படித்தான் யூதச் சிறுவர் வேதத்தைக் ற்றனர். ஆகவேதான் தலைசிறந்த ஞானிகளில் யூதர் சிலர் உள்ளனர். ப்படிக் கற்றுதான் இயேசு ஞானத்தில் வளர்ந்தார். வேத அறிவில் லவீனராய் இருக்கிறார்களென்று டியூஷன் வைக்கயோசிக்கிறோமா? சாசு நமது குறியைத் தந்திரமாய் திசைமாற்றுகிறான்.

கர்த்தருக்குப் பயப்பட பிள்ளைகளுக்குப் போதியுங்கள். அதுவே ானத்தின் ஆரம்பம் (நீதி 1:7). ஞானத்திற்காய் ஜெபிக்கக் கற்பியுங்கள். னெனில் தேவனே **ஞானத்தை** அருளுகிறவர் (2:6). நேர்மையாய் நடக்க வர்களைப் பழக்குவியுங்கள். அப்படியானால் மெய் **ஞானத்தை** அடைவர் 7). வேதத்தை நேசிக்க அவர்களை நடத்துங்கள், அதுவே பேதையை ானியாக்கும் (சங் 19:7,8). பிரம்பைக் கையாடப் பயப்படாதீர்கள். அதுவே ள்ளையின் நெஞ்சில் ஒட்டியிருக்கும் **மதியீனத்தை** அவனை விட்டு கற்றும் (நீதி 22:15). உறவில் அவர்களைச் சிறந்திலங்கச் செய்யுங்கள். துவே **ஞானிக்கு** அடையாளம் (11:12). ஆலோசனைக்குச் செவிகொடுக்க வர்களைப் பழக்குங்கள். அது அவர்களை **ஞானத்தில்** வளர்க்கும் (12:15). ப்படிதலைச் சட்டமாக்குங்கள், அதனால் **ஞானவானின்** தகப்பன் என்று யர் பெறுவீர்கள் (13:1). **ஞானமுள்ள** தோழரை அவர்களுக்குத் தெரிந் டுங்கள். அதினால் அவர்கள் நாசமடையாமல் காப்பீர்கள் (13:20). ன்னையே கட்டுப்படுத்திக்கொள்ள பயிற்சி அளியுங்கள். அதினால் தியீனமான செயல்களுக்கு விலக்கிக் காப்பீர்கள் (14:29). சண்டையில் லகிக்கொள்ளப் போதியுங்கள். அதினால் அடிகளுக்குத் தப்புவித்து ானியாக்குவீர்கள் (18:6). உண்மை பேசுவதை வீட்டுப் பழக்கமாக் ங்கள், அதினால் பிள்ளைகள் சகாக்களைக் காட்டிலும் **புத்தி** பெறுவர் 1). செய்வதைச் சீக்கிரமாய்ச் செய்யுங்கள். பின்னால் **மூடத்தனத்தை** கற்றுவது முடியாத காரியம் (27:22). கடிந்துகொள்ளத் தயங்காதீர்கள். அது வனை **புத்திசாலியாக்கும்** (29:15). கடினமாய் உழைக்கக் கட்டாயப் த்துங்கள், அதினால் மகா **ஞானியாவான்** (30:24,25). மதுபானத்தைக் ண்ணிலும் காட்டாதீர்கள், அதினால் கேலிக்குத் தப்புவான் (20:1).

ன்னிப்பின் ஞானம்

மகிழ்ச்சியான திருமணம் என்பது மன்னிக்கும் மாண்பில் சிறந்த இருவர் ணைவதாகும். தாவீதரசன் தன் மகன் அப்சலோமின்மேல் மிகுந்த

கோபமாயிருந்தார். தெக்கோவாவின் **புத்தியுள்ள** பெண் சமாதானம் செய்து வைத்தாள். அவளுடைய விளக்கமாவது: *"நாம் மரிப்பது நிச்சயம், திரும்பச் சேர்க்கக்கூடாதபடிக்கு, தரையில் சிந்திய தண்ணீரைப்போல் இருக்கிறோம்"* (2 சாமு 14:1,2,14,20). வாழ்வே மாயம். ஆண்டவரே மன்னிக்கும்போது நாம் எம்மாத்திரம்? இன்றிருந்து நாளை புகையைப்போல மறைந்துபோகும் வாழ்க்கையில் கோபத்தைக் கோயில் கட்டிக் கும்பிடுவதில் அர்த்தமில்லை. நம்மில் பெரும்பாலானோர் நமது துணைவரையும் பிள்ளைகளையும் மன்னித்து விடவே விரும்புகிறோம். ஆனால் கௌரவம் விடமாட்டேன் என்கிறதே. தூக்கித் தூக்கி அடிக்கும் குண்டும் குழியுமான பாதையாயிருந்தாலும் மன்னிப்பின் பாதையே குடும்ப வாழ்வின் கிரீடம் எனலாம். சமாதானம் செய்ய முதலடி எடுத்து வைப்பது நீங்களாகவே இருக்கட்டும்.

ஞானவான்களின் வீடு

"வீடு **ஞானத்தினாலே** கட்டப்பட்டு, **விவேகத்தினாலே** நிலை நிறுத்தப்படும். அறிவினாலே அறைகளில் அருமையும் இனிமையுமான சகலவிதப் பொருள்களும் நிறைந்திருக்கும். **ஞானமுள்ளவன்** பெலமுள்ளவன்; ***அறிவுள்ளவன்*** தன் வல்லமையை அதிகரிக்கப்பண்ணுகிறான். நல்யோசனை செய்து யுத்தம்பண்ணு. ஆலோசனைக்காரர் அநேகரால் ஜெயங்கிடைக்கும் (நீதி 24: 3–6).

வீடு நிறைய செல்வமிருக்குமானால் — தேவ பயம், இரட்சிப்பு, மன்னிப்பு, சமாதானம், பிள்ளைகள், கணவன், மனைவி, நற்சாட்சி, இப்படி — திருடன் வருவது நிச்சயம்தானே. உங்களுக்கு ஞானம் இருக்கலாம். ஆனால் அறியாமையும் இருக்கலாமே. "*ஆலோசனையைக் கேட்கிறவர்களிடத்திலோ* **ஞானம்** உண்டு" (நீதி13:10). உங்களுக்குள்ளேயே திணறிக்கொண்டிருக்க வேண்டாம். உங்கள் மேய்ப்பர் மற்றும் அவரது மனைவியிடம் அல்லது பயிற்சி பெற்ற ஆலோசகரிடத்தில் செல்லுங்கள். குடும்பம் நார்நாராகப் பிய்க்கப்படும் போது, முடிந்தது என்று முடிவுகட்டிவிடாதீர்கள். எல்லாவற்றையும் விட்டுவிட்டு ஓடிவிடும் எண்ணத்தையும் கைவிடுங்கள். உங்கள் திருமணத்தைப் பொக்கிஷமாகக் கருதுவீர்களானால் லேசில் விட்டுக்கொடுக்காதீர்கள். திருமணம் முறிந்துவிடாமல் பாதுகாக்கப்படவேண்டும் என்ற உங்களது அர்ப்பணிப்பை உறுதிப்படுத்துங்கள். நீதிமொழிகள் 24:10,14 வசனங்கள் நம்பிக்கையூட்டுகின்றன: "*ஆபத்துக்காலத்தில் நீ சோர்ந்துபோவாயானால், உன் பெலன்*

குறுகினது ... **ஞானத்தை** அறிந்துகொள்வது உன் ஆத்துமாவுக்கு இன்பமாயிருக்கும்; அதைப் பெற்றுக்கொண்டால், அது முடிவில் உதவும், உன் நம்பிக்கை வீண்போகாது.''

ஞானத்திற்காய் ஜெபியுங்கள். உங்கள் குடும்பத்திற்கு நம்பிக்கையுண்டு. உங்கள் மணவாழ்வு மண்ணோடு மண்ணாயிற்று என்று நினைக்காதீர்கள். நம்பிக்கையற்ற சூழ்நிலையாக இருக்கலாம். *''யுத்த ஆயுதங்களைப் பார்க்கிலும்* ***ஞானமே*** *நலம்''* (பிர 9:18). ஞானமாய் யுத்தம் செய்தால் சிறப்பாக யுத்தம் செய்யலாம். போராயுதங்களைப் பயன்படுத்துவதைவிட உட்கார்ந்து என்ன செய்யலாமென்று திட்டமிடுங்கள். குழப்பத்தில் ஞானத்துளிகள் உருவாகி ஒன்றுசேர்ந்து தீர்வைக்காணச்செய்யும். தேவனை நம்பி புத்தியைப் பயன்படுத்துங்கள் (2 தீமோ 1:7). ஞானமுள்ள பெண்ணொருத்தி தீமையை வெளியே எறிந்து ஒரு பட்டணத்தையே காப்பாற்றினாள் (2 சாமு 20:16, 21,22). உங்கள் குடும்பத்தைக் காயப்படுத்திக்கொண்டிருக்கும் காரியத்தை வெளியே விசுறுங்கள். சுலபமல்ல. நிற்கும் இடத்தில் உறுதியாக விட்டுவிடாமல் நிற்கவாவது செய்யுங்கள். கடின நாட்களில் தத்தளித்து உயிர்பிழைத்து வந்தால் நல்ல நாட்களைக் காணலாம் (யோபு 42:10).

நீங்கள் தனிப் பெற்றோரானால், பிரிந்து வாழ்பவரானால், விவாகரத்தான வரானால், கணவனையோ மனைவியையோ இழந்தவரானால் கவலைப் படாதீர்கள். நீங்களும் உங்கள் வாழ்க்கைக்கு தேவனுடைய சித்தத்தைப் பின்பற்றலாம். கடவுள் உங்களுக்காய் கரிசனையுள்ளவர்.

நேரத்தைச் செலவழித்தலில் ஞானம்

''நீங்கள் ***ஞானமற்றவர்களைப்போல*** *நடவாமல்,* ***ஞானமுள்ளவர்*** *களைப்போலக் கவனமாய் நடந்து கொள்ளப்பார்த்து, நாட்கள் பொல்லாதவை களானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளுங்கள். ஆகையால் நீங்கள்* ***மதியற்றவர்களாயிராமல்,*** *கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்துகொள்ளுங்கள்''* (எபே 5:15–17).

கொடுக்கப்பட்ட நேரத்தை ஞானமாய்ப் பகிர்ந்தளிக்காவிடில் முதன்மையான வைகளுக்கு முதலிடம் கொடுக்கத் தவறிவிடுவீர்கள். கடவுள் முதல், குடும்பம் அடுத்து, வேலை அல்லது ஊழியம் மூன்றாவது என்பது பின்பற்ற ஒரு நல்ல சட்டம்.

நின்று யோசியுங்கள். ஒவ்வொரு தருணத்திலும் நீங்கள் ஞானமாக நடந்து கொள்கிறீர்களா அல்லது புத்தியீனமாய் நடந்துகொள்ளுகிறீர்களா என்று சிந்தியுங்கள்.

"உங்களில் **ஞானியும் விவேகியுமாயிருக்கிறவன்** எவனோ, அவன் **ஞானத்திற்குரிய** சாந்தத்தோடே தன் கிரியைகளை நல்ல நடக்கையினாலே காண்பிக்கக்கடவன். உங்கள் இருதயத்திலே கசப்பான வைராக்கியத்தையும் விரோதத்தையும் வைத்தீர்களானால், நீங்கள் பெருமை பாராட்டாதிருங்கள்; சத்தியத்திற்கு விரோதமாய் பொய்சொல்லாமலுமிருங்கள். இப்படிப்பட்ட **ஞானம்** பரத்திலிருந்து இறங்கிவருகிற ஞானமாயிராமல், லௌகிக சம்பந்தமானதும், ஜென்ம சுபாவத்துக்குரியதும், பேய்தனத்துக் கடுத்ததுமாயிருக்கிறது. வைராக்கியமும் விரோதமும் எங்கே உண்டோ, அங்கே கலகமும் சகல துர்ச்செய்கைகளுமுண்டு. **பரத்திலிருந்து வருகிற ஞானமோ** முதலாவது சுத்தமுள்ளதாயும், பின்பு சமாதானமும், சாந்தமும், இணக்கமுமுள்ளதாயும், பட்சபாதமில்லாததாயும், மாயமற்றதாயும் இருக்கிறது. நீதியாகிய கனியானது சமாதானத்தை நடப்பிக்கிறவர்களாலே சமாதானத்திலே விதைக்கப்படுகிறது." (யாக் 3:13–18). வேதத்திற்கு முன்பாகத் தலை வணங்கி பரத்திலிருந்து வருகிற ஞானத்தை வீட்டிலே வெளிப்படுத்துங்கள்.

ஞானவான் தன் வீட்டை கன்மலையிலே கட்டினான். வெள்ளம் புரண்டு வந்து வீட்டைத் தாக்கியது. வீட்டையோ எதுவும் அசைக்க முடியவில்லை. மூடன் தன் வீட்டை மணலிலே கட்டினான். புயல் வீசி, இராட்சத அலைகள் எழும்பி, வீட்டில் மோதியபோது அது அட்டையால் கட்டின வீடுபோல் தூள்பறந்தது.

உங்கள் வீட்டைக் கட்டுகிறீர்களா அல்லது இடிக்கிறீர்களா?

- உதவிக்கு: 09843011943

6

பொதுவாகக் காணமுடியாத பொது அறிவு

பத்து அல்லது பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பாக நடந்த காரியமிது. சுறுசுறுப்பான நெடுஞ்சாலையில் மாலை நடைபயின்று கொண்டிருந்தேன். மோட்டார் சைக்கிள் ஒன்று என் அருகே வந்து நின்றது. “எப்படியிருக்கிறீர்கள் ?” என்று அன்போடு விசாரித்தார் அவர். “நன்றாகத்தான் இருக்கிறேன், ஆனால் நீங்கள் யார் என்று தெரியவில்லையே,” என்று பதிலளித்தேன். என் கணவர் தன் பணியை ராஜினாமா செய்யுமுன்பாக அவரோடு மருத்துவமனையில் பணி செய்ததாகக் கூறி மிகவும் தெரிந்தவர்போல் எல்லாவற்றையும் விசாரித்தார். பின் தான் கட்டியிருக்கும் புதிய வீட்டை வந்து பார்க்கவேண்டுமென்று வருந்தி அழைத்தார். “இல்லை, இல்லை” என்று நான் மறுத்தும் அவர் வீடு மிக அருகில்தான் இருக்கிறது என்று வற்புறுத்தவே புது வீட்டிற்கு ஜெபிக்க அழைக்கிறாராக்கும் என்று எண்ணினேன். அரை மனதாக “சரி” என்று சொல்லிவிட்டு நடக்க ஆரம்பித்தேன். “பைக்கில் உட்கார்ந்துகொள்ளுங்கள்,” என்று சைகை காட்டினார். ஒப்புக்கொண்டபின் என்ன செய்ய? பின்னால் அமர்ந்து கொண்டேன். நெடுஞ்சாலையிலிருந்து திரும்பி ஏதோவொரு பகுதிக்குள் சென்று ஒரு வீட்டின்முன் நிறுத்தினார். “அடடா, என் மனைவி வெளியே போயிருக்கிறாள். சரி, என் புதிய வீட்டை வந்து பாருங்கள்,” என்று ஒரு 500 ரூபாய் நோட்டை என் கையில் திணித்தார். காணிக்கை கொடுக்கிறாராக்கும் என்று சந்தோஷமாக வாங்கிக் கொண்டேன். தொடர்ந்து சென்றார். இருட்டத்

துவங்கியிருந்தது; வீடுகள் சொற்பமாயின, தெருவிளக்குகள் காணாமற் போயின, பிறகு ரோடும் மண்ரோடானது. மனம் பதைக்கத் துவங்கியது. "பைக்கை நிறுத்துங்கள்," என்றேன். நிறுத்தினார். "உடனடியாக என்னை மெயின்ரோட்டில் கொண்டுபோய் விடுங்கள்," என்று சற்று உரக்கவே கத்தினேன். "அப்ப . . . நீங்க வரலியா ?" என்றார். "வரலை" என்றேன். "என் பணத்தைக் கொடுங்கள்," என்று கையை நீட்டினார். இப்போதுதான் என் மூளையில் ஒரு துடிப்புடன் ட்யூப் லைட் போல பளிச்சிட்டது. கடவுளே, எங்கே வந்து மாட்டிக்கொண்டேன் என்று 500 ரூபாய் நோட்டை எடுத்துக் கொடுத்தேன். கடவுளுடைய கிருபையால் மறுபடியும் என்னைக் கொண்டு வந்து மெயின் ரோட்டில் விட்டார்.

சிலர் மறுபடியும் பிறக்கும்போது தலை மேலாகப் பிறக்கின்றனர் (breech) என்கிறார் பிலிப் யான்சி. நானும் அப்படித்தான் போலும். தலை எனக்கு எப்போதுமே கடைசியில்தான் வரும். யாரும் என்னைச் சுலபமாக ஏமாற்றிவிடலாம். என்னைப் போன்ற ஒரு முட்டாள் என் ஆண்டவரைப்போல ஒரு ஆண்டவரில்லாமல் இவ்வுலகில் பிழைப்பது அரிது என்று அடிக்கடி நினைப்பேன். பொது அறிவு என்பது பொதுவாக அரிதாகிவிட்டது என்பதென்னவோ உண்மைதான். இந்த நிகழ்வை நினைக்கும் போதெல்லாம், *"ஒளியின் பிள்ளைகளைப் பார்க்கிலும் இந்த உலகத்தின் பிள்ளைகள் தங்கள் சந்ததியில் அதிக* ***புத்திமான்களாயிருக்கிறார்கள்,"*** என்ற இயேசுவின் திருவாய்மொழி நினைவிற்கு வரும் (லூக் 16:8). அழைக்கப்பட்டால் ஜெபத்திற்கு என்று நினைக்கிறோம்; காசு கொடுத்தால் காணிக்கை என்று வாயைப் பிளக்கிறோம்! உலக மக்கள் இத்தனை தந்திரக்காரராய் இருக்கும்போது அவர்களுக்கு பதிலடி கொடுக்க நமக்குப் போதிய சமயோசித புத்தி உண்டா ?

"ஆண்டவரே, என்னைப் பாம்பைப் போலாக்கும்," என்று எப்போதாவது ஜெபித்திருக்கிறீர்களா ? "இல்லை" என்றுதான் பதில் சொல்வீர்கள் என்று அறிவேன். விசுவாசிகளுக்கு புத்தி மட்டு ஆகிவிட்டதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. இயேசு நாம் புறாவைப்போல கபடற்றவர்களாயும் பாம்பைப்போல புத்தியுள்ளவர்களாயும் இருக்கவேண்டும் என்றார். எந்தச் சூழலில் அவர் இதைச் சொன்னார் தெரியுமா ? பன்னிருவரை ஊழியத்திற்கு அனுப்புகையில் இயேசு, *"ஆடுகளை ஓநாய்களுக்குள்ளே அனுப்புகிறதுபோல, இதோ, நான்*

உங்களை அனுப்புகிறேன்; ஆகையால் பாம்புகளைப்போல **முன்மதியுள்ளவர்களும்** புறாக்களைப் போலக் கபடற்றவர்களுமாய் இருங்கள்," என்றார் (மத் 10:16). புறாவை *"அறிவில்லாப் பேதை"* என்றழைக்கிறது வேதம் (ஓசி 7:11). யார் வேண்டுமானாலும் புறாவை துவம்சப்படுத்தி அதன் கழுத்தைத் திருகி எறியலாம். அது எதிர்த்துப் போராடாமல், கீச் என்று சப்தம் கூடப் போடாமல் உயிர்விடும். அதனால்தான் அது அறிவற்றது என்று அழைக்கப்படுகிறது. நாம் அப்படித்தான் இருக்கவேண்டுமென்று தேவன் விரும்புகிறாரா? பாம்பு மிகவும் பொல்லாதது என்றறிவோம். புறாவின் அறிவீனத்தையும் பாம்பின் தீயகுணத்தையும் களைந்துவிட்டு அவைகளின் கபடின்மையையும் புத்திக்கூர்மையையும் கற்றுக்கொள்ளச் சொல்லுகிறார். நாம் புறா—பாம்பாயிருக்க விரும்புகிறார் தேவன். கிறிஸ்தவன் பாதி புறாவாகவும் பாதி பாம்பாகவும் இருக்கவேண்டும். அப்படித்தான் இயேசுவும் இருந்தார். *"பஸ்காபண்டிகையிலே அவர் எருசலேமிலிருக்கையில், அவர் செய்த அற்புதங்களை அனேகர் கண்டு, அவருடைய பெயரில் விசுவாசம் வைத்தார்கள். அப்படியிருந்தும், இயேசு எல்லாரையும் அறிந்திருந்தபடியால், அவர்களை நம்பி இணங்கவில்லை"* (யோ 2:23,24). எதிலும் கொஞ்சம் சந்தேகப்படுவது பாதுகாவலானது.

இவ்விரண்டு குணங்களும் ஒரு கிறிஸ்தவனை வடிவமைக்க வேண்டும் - கபடின்மையும் புத்தியும். கடவுள் மென்மையான தாயாகவும் கடினமான கண்டிப்புடைய தகப்பனாகவும் இருக்கிறார். பரிசுத்த ஆவியானவர் குளிர்ந்த தண்ணீரும் பட்சிக்கிற அக்கினியுமாமே. இயேசு ஆட்டுக்குட்டியாயிருந்தாலும் ஆக்ரோஷமான சிங்கமுமாயிருக்கிறார். *"நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்,"* என்று சொன்னவர் சாட்டையை எடுத்து தீயோரைப் பின்னிவிட்டார். கடவுள் நம்மை அவர் சாயலில் படைத்திருக்கிறபடியால் நாமும் இக்குணங்களில் கற்றுத் தேறவேண்டும். பரிசுத்தவான்கள் இவ்விரு குணங்களையும் கொண்டிருந்தனர். யோபுவை சாதுவாகவே நாம் அறிவோம். ஆனால் அவர் தன் மனைவியைப் "பயித்தியக்காரி" என்றழைத்தார். *"நான் அநியாயக்காரருடைய கடைவாய்ப் பற்களை உடைத்தேன்,"* என்கிறார் (29:17). யாருடைய தாடையையாவது உடைத்திருக்கிறீர்களா? இன்று இதைச் செய்ய முற்படுவோமானால் கைது செய்யப்படுவோம். ஆனால் தீமையை எதிர்த்து இத்தனை தீவிரம் காட்டுகிறோமா என்பதுதான் கேள்வி. நாம் தசையற்ற, சோகைபிடித்த வலுவற்ற சோதைப் புறாக்களாகிவிட்டோம்.

பத்துக் கன்னியரைக் குறித்து சற்றுப் பார்க்கலாம். புத்தியற்றவர்கள், "சுமையைச் சுமப்பானேன்; எண்ணெய் பத்தாமல் போனால் யாரையாவது கேட்டு வாங்கிக்கொள்ளலாம்," என்று எண்ணியிருப்பர். அதிர்ச்சி காத்திருந்தது அவர்களுக்கு. புத்தியுள்ள ஐவர் தர மறுத்துவிட்டனர். ஒன்றாக அலங்காரம் செய்து ஒன்றாக நடனமாடி ஒன்றாகத் தூங்கினரே; எத்தனை நெருங்கிய நண்பராயிருந்தனர்! "உங்கள் அயலாரை உங்களைப் போலவே நேசிக்க வேண்டாமா?" என்று புத்தியற்ற கன்னியர் கேட்டிருப்பர்.

அப்படியானால், அயலாரை நேசிப்பதென்றால் என்ன? இதைத் தெளிவுபடுத்திக்கொள்ள வேண்டும். உங்களைப் போலவே உங்கள் அயலாரை நேசிப்பதென்றால், முதலாவது உங்களை நேசிப்பதாகும். உங்களை நீங்கள் நேசிக்கவில்லையென்றால் உங்களைப்போல உங்கள் பக்கத்துவீட்டுக் காரரை நேசிப்பதெப்படி? உங்கள் உரிமைகளையே உங்களுக்குக் காக்கத் தெரியாவிட்டால் அடுத்தவரது உரிமைகளை எப்படிக் காப்பீர்கள்? உங்களை பிறர் துவேஷப்படுத்த அனுமதிப்பீர்களானால் உங்கள் நண்பர் துவேஷப்படுத் தப்படுவதை எப்படித் தடைசெய்யப் போகிறீர்கள்? உங்களது நித்திய ஜீவனைப் பாதுகாத்துக்கொள்ள உங்களுக்குத் தெரியாவிட்டால் உங்கள் அயலாரை எப்படி நித்திய ஜீவனுக்கு நடத்தப்போகிறீர்கள்?

புத்தியற்ற கன்னியர், "அப்படியானால் நீங்கள் எங்கள் சிநேகிதி களாயிருக்கப் போவதில்லையா?" என்று கேட்டிருக்கலாம். புத்தியுள்ள கன்னியர், "நிச்சயமாக, உங்கள் சிநேகிதிகளாக இருக்கத்தான் விரும்பு கிறோம். ஆனால் இம்மட்டும்தான். நட்புறவிற்காக கலியாணவிருந்தை நாங்கள் இழந்துபோகத் தயாராயில்லை. வரம்பை மீராதீர்கள். நித்திய வாழ்வை இழக்குமளவிற்கு உங்களோடு நாங்கள் சிநேகம் பாராட்டமுடியாது," என்றிருப்பர்.

இது கடைசிக்காலம். நமது எண்ணெயே குறைவுபடும் நாட்களிவை. நமது சோதனைகளையும் வேதனைகளையும் மேற்கொள்ளப் போராடித் தவித்துக் கொண்டிருக்கிறோம். அநேகருடைய அன்பும் தணிந்துபோம். ஜாக்கிரதை! உங்களுக்கு மீந்திருக்கும் எண்ணெயையும் காலிசெய்ய பலர் காத்திருக் கின்றனர். தேவன் உங்களுக்கென்று நியமிக்காத காரியங்களுக்காக உங்கள் நேரத்தையும் தாலந்துகளையும் வீணடிப்பர். "உங்களால் வரமுடியுமா?" என்று கேட்பார்கள். "சாரி, முடியாது" என்று சொன்னால், "தயவு செய்து," என்று

பரிதாபமாகப் பார்ப்பார்கள். நீங்கள் ஏன் வரவேண்டுமென்று 101 காரணங்களை அடுக்குவார்கள். முதலாவதாக, தீர்மானிக்க கெடு கேளுங்கள். பின்பு, போகலாமா வேண்டாமா என்று திடமாகத் தீர்மானியுங்கள். அதன் பின்பு, எடுத்தத் தீர்மானத்தில் உறுதியாக நில்லுங்கள். நீங்கள் செய்யவேண்டிய தெல்லாம், அவர்கள் உங்களை விடும்வரை, "முடியாது," "முடியாது," "முடியாது," என்று பொறுமையாகச் சொல்ல வேண்டியதே. நம்மில் சிலர் முட்டாள்தனமாக நமது எண்ணெயைக் கொடுத்து விடுகிறோம். நம்மில் பலரும் நமது நித்தியவாழ்வு போனாலும் போகட்டும் உறவு முறிந்துவிடக்கூடாது என்று எண்ணுகிறோம். மற்றவர்களுக்கு உக்கிராணக்காரராவதற்கு முன்பாக நமக்கு நாமே உக்கிராணக்காரராயிருக்க வேண்டும்.

தன்னுரிமை பாராட்டல் என்பது நமது உரிமைகளுக்காய்ப் போராடுவது, அல்லது நமது உரிமைகளை விட்டுக்கொடுக்க மறுப்பது, அல்லது பிறர் நம்மை துவேஷப்படுத்த அனுமதியாதிருப்பது. தேவன் தன் உரிமைகளை நிலைநாட்டுவதில் உறுதியானவர். "*இம்மட்டும் வா, மிஞ்சி வராதே; உன் அலைகளின் பெருமை இங்கே அடங்கக்கடவது,*" என்று அலைகளுக்கு எல்லையைக் குறித்தார் (யோபு 38:10,11). உங்கள் வாழ்க்கைத் துணைக்கு, நண்பருக்கு, தலைவருக்கு, பணியாளர்களுக்கு, பிள்ளைக்கு, பெற்றோருக்கு, அயலாருக்கு, மாமியாருக்கு, மருமகளுக்கு, யாவருக்கும் எல்லைக் கோட்டை வரையுங்கள். இயேசு தலைநிமிர்ந்து நின்றார். "*யோவான் கொடுத்த முழுக்கு தேவனால் உண்டாயிற்றோ? மனிதரால் உண்டாயிற்றோ? யாரால் உண்டாயிற்று?*" என்று இயேசு கேட்டார். வசமாக மாட்டிக்கொண்டோம் என்று கண்டுகொண்ட அவர்கள், "*எங்களுக்குத் தெரியாது,*" என்றார்கள். அப்பொழுது இயேசு, "*நானும்... உங்களுக்குச் சொல்லேன்,*" என்றார். "எனக்கும் தெரியாது," என்று அவர் சொல்லவில்லை. அது கோழைத்தனமான பதில். அவர் தைரியமாக முதுகெலும்புள்ளவராக பதிலளித்தார் (மத் 21:25). துருவித் துருவிக் கேள்வி கேட்கும் ஒவ்வொருவருக்கும் நீங்கள் பதில்சொல்லிக்கொண்டிருக்கத் தேவையில்லை. தைரியமாக, "நான் பதில்சொல்லத் தேவையில்லை," அல்லது "உங்களுக்கு எதற்கு அந்த விஷயம்?" என்று சொல்லலாம்.

"உன் சட்டையை யாராவது எடுத்துக்கொண்டால் உன் பனியனையும் கொடுத்துவிடு," என்றார் இயேசு. யாரோ உங்கள் சட்டையை எடுத்துக்

கொண்டதால், நீங்கள் பனியனைக் கொடுத்துவிட்டீர்கள் என வைத்துக் கொள்ளலாம். நீங்கள் வேறொரு சட்டையும் பனியனும் வாங்கி அணிகிறீர்கள். அந்த சட்டையையும் அவன் எடுத்துக்கொள்கிறான். நீங்கள் மறுபடியும் பனியனைக் கொடுத்துவிடுகிறீர்கள். மூன்றாம் நாளும் அப்படியே நடக்கிறது என்றால் அவன் என்ன சட்டை பனியன் வியாபாரம் செய்கிறானா என்று நீங்கள் யோசிக்கவேண்டும். உங்களுக்குப் பகுத்தறிவு தேவை. பழைய ஏற்பாட்டில் நூறு ஆடுகள் வைத்திருந்த ஒருவர் ஒரேயொரு ஆட்டுக்குட்டி வைத்திருந்த வனது ஆட்டுக்குட்டியை எடுத்துக்கொண்டதை வாசிக்கிறோம். ஆண்டவர், "போகட்டும், விட்டுவிடு" என்று சொல்லவில்லை, பணக்காரன்மேல் மிகுந்த கோபம் கொண்டார்.

முதல் மகனின் உரிமை ஏசாவினது. மேற்போக்காக வேதத்தை வாசித்தால் ஏசா உலகப்பிரகார சிந்தையுடையவனாக இல்லாமல் பெருந்தன்மையாக தன் தம்பிக்கு தன் உரிமையைக் கொடுத்துவிட்டான் என்று நினைக்கலாம். ஆனால் ஆண்டவரோ அவன்மேல் கோபங்கொண்டார். அது தேவன் அவனுக்குக் கொடுத்த ஈவு; அதை அவன் சாதாரணமாக அல்லது அற்பமாக நடத்தினான். அது தேவனை அவமதிப்பது போலாகும். கடவுள் நமக்கு சில உரிமைகளைக் கொடுத்திருக்கும் போது நாம் முதுகெலும்போடு தேவன் கொடுத்த உரிமைகளைப் பாதுகாக்க எதிர்பார்க்கிறார். தன்னுரிமை காத்தல் அகங்காரமாகிவிடக்கூடாது. மிகுந்த தாழ்மையோடும் பணிவோடும் உறுதியோடும் செய்யப்படவேண்டியது. ஆகவே தன்னுரிமை காத்தல் என்பது அகங்காரமல்ல.

வாழ்வின் எல்லா பகுதிகளிலும் நமக்கு புத்தி தேவை. இங்கு இரண்டை மட்டும் பார்க்கலாம்—

1. பெற்றோரும் பிள்ளைகளும்

2. கணவரும் மனைவியரும்

பெற்றோரும் பிள்ளைகளும்

வளர வளர பிள்ளைகள் உரிமை கொண்டாடத் துவங்குவர். பருவமெய்தி பெரியவர் ஆகும்போது இன்னும் அதிகமாக சுயஉரிமைக்காகப் போராடுவர். இயேசுவின் வாழ்க்கையில் ஒரு பொருத்தமான எடுத்துக்காட்டு உண்டு.

இயேசு குடும்பத்துடன் எருசலேமிற்குச் சென்றபோது அவருக்கு வயது பன்னிரெண்டு. திரும்பும்போது அவரைக் காணவில்லை. மரியாள் கர்ப்பமாக இருந்திருக்கலாம்; மூன்று அல்லது நான்கு சிறுபிள்ளைகள் அவளைத் தொற்றிக்கொண்டிருந்திருக்கலாம். இயேசு தன்னைக் கவனித்துக் கொள்ளக் கூடிய அளவிற்குப் பெரியவர் என்று பெற்றோர் எண்ணியிருப்பர். மூன்று நாட்களுக்கு இயேசு திட்டமிடாமல் மறைந்துவிடவில்லை. பல்தேய்க்க பிரஷ், பற்பசை, டவல் மற்றும் மாற்று உடைகளை எடுத்துச் சென்றிருப்பார். உங்களை ஒரு கேள்வி கேட்க விழைகிறேன்—இயேசு செய்தது சரியா? தப்பா? 'சரி' என்று சொல்வீர்களானால் உங்களது பன்னிரெண்டு வயது பிள்ளையும் இப்படிச் செய்ய அனுமதிக்கவேண்டும். 'தப்பு' என்று சொல்வீர்களானால் இயேசு தப்பு செய்தார் என்று ஒப்புக்கொள்ளவேண்டும்.

என் தலையை உடைத்து இறுதியில் ஒரு முடிவிற்கு வந்தேன். உங்கள் பிள்ளைகள் தன்னுரிமை கொண்டாடத் துவங்கும்போது அவர்கள் நீங்கள் கற்றுக்கொடுத்த வழியில்தான் செல்கிறார்களா என்று அமைதியாக கவனியுங்கள். ஆம் என்றால் சாவதானமாக இருங்கள், ஆனால் விழிப்பாய் இருங்கள். இயேசு தேவாலயத்தில்தானே இருந்தார், சினிமா தியேட்டரில் இல்லையே. அவர் திரும்பிவந்து பெற்றோருக்குக் கீழ்ப்படிந்திருந்து **ஞானத்தில் விருத்தியடைந்தார்.** இப்படித்தான் பிள்ளைகள் ஞானத்தில் வளருவார்கள். அவர்கள் பறக்கச் சிறகடிக்கும்போது அவர்களது சிறகை நாம் முறித்துவிடக்கூடாது. முட்டைகள் பொரிக்கவேண்டும் உடைக்கப்படக் கூடாது. முட்டைமேலிருந்து சீக்கிரம் எழுந்துவிட்டால் அவை பொரிக்காது. அதிக நாட்கள் அவற்றின்மேல் அழுத்தமாக உட்கார்ந்துவிட்டால் அவை உடைந்துபோகும். நம்முடைய நாட்கள் இயேசுவின் நாட்களைப் போலல்ல என்பதை நீங்கள் மறந்துவிடக்கூடாது. இவ்வுலகம் நம் பிள்ளைகளுக்கு பாதுகாவலற்ற இடமாகிவிட்டது.

அவர்கள் சுயேச்சையாக தவறான பாதையில் செல்வார்களானால் ஆவன செய்யவேண்டும். சிகை அலங்காரம், உடை போன்றவற்றில் விட்டுப் பிடிப்பீர் களானால் போதை மருந்துகள், பாலியல் விவகாரங்கள் மற்றும் இரவு கும்மாளங்களில் இறுகப் பிடிக்கலாம். உங்கள் பிள்ளைகள் உங்களை முட்டித்தள்ள இடங்கொடுக்காதீர்கள். பன்னிரெண்டு வயதில் ஒரு பிள்ளை தேவனது சித்தத்தை தானே அறிய முடியும் வயதை எட்டியிருந்தும் பெற்றோரின் கீழிருக்க வேண்டும்.

முதிர்ந்த பிள்ளைகள் பெற்றோரிடம் தன்னுரிமை காக்கப் பழகவேண்டும். நீங்கள் வளர்ந்து முதிர்ச்சியடையும்போது பெற்றோர் மற்றும் ஆவிக்குரிய தலைவர்களின் உதவியோடு என்ன மேற்படிப்பு படிப்பது, யாரைத் திருமணம் செய்வது, தேவனை முழுநேரமாய்ச் சேவிப்பது அல்லது என்ன வேலையில் சேர்வது போன்ற முக்கியத் தீர்மானங்களை எடுக்கப் பழகவேண்டும். முடிவான தீர்மானம் உங்களுடையதே.

கணவரும் மனைவியரும்

கணவரும் மனைவியரும் கோடு கிழிக்கக் கற்கவேண்டும். இதைக் கற்றுக்கொள்ளாததினாலே பல மனைவியர் அடிவாங்கிச் சாகின்றனர். உங்களுக்கு உதவக்கூடிய முதிர்ந்த ஒரு தம்பதியரைத் தேர்ந்தெடுங்கள். அடுத்தமுறை உங்களை அடிக்க கணவன் கையை ஓங்கும்போது நிமிர்ந்து நின்று, அவரது கண்களைப் பார்த்து தைரியமாக, இந்தத் தம்பதியர் அல்லது ஆயரிடம் சொல்லப்போவதாகச் சொல்லுங்கள். அதையும் மீறி அடித்தால் நீங்கள் சொன்னதைச் செய்யுங்கள்.

கடுமையான சூழ்நிலைகளில் பொது அறிவு காற்றில் பறந்துவிடுகிறது. தவறான உறவிலிருந்த மனைவியைக் கணவன் கையும் மெய்யுமாகப் பிடித்த போது இரண்டு குடும்பங்களுக்குமிருந்த நட்புறவு அறுந்துபோன எடுத்துக் காட்டைப் பாருங்கள். உறவு முறிவிற்கு மனைவி கணவனையே குற்றஞ் சாட்டிக் கொண்டிருந்ததால் அவர் குற்றவுணர்வினால் கூனிக்குறுகிப் போனார். உறவு முறிவிற்குக் காரணம் நீங்கள் செய்ததல்ல உங்கள் மனைவி செய்தது என்று விளக்கப்பட்டபோது குற்றவுணர்விலிருந்து விடுபட்டு சமாதானம் பெற்றார். தேவையற்ற குற்றவுணர்வுகளை நீங்கள் சுமக்கத் தேவையில்லை.

கணவன் மனைவிக்கிடையே ஒருமனம் எத்தனை அவசியமோ, இருமனமும் அத்தனை அவசியம். ஒத்துக்கொள்ள முடியாது என்று பணிவுடன் சொல்லத் தயங்காதீர்கள். *"கர்த்தருடைய ஆவியைச் சோதிக்கிறதற்கு நீங்கள்* ***ஒருமனப்பட்டதென்ன,"*** என்று பேதுரு சப்பீராளைக் கேட்டார். சாராளுடன் ஆபிரகாம் ஒத்துப்பாடி இஸ்மவேலைப் பெற்றெடுத்தார்.

சாலொமோனின் உன்னதப்பாட்டில் கணவன் தன் மனைவியைச் *சந்திரனைப்போல் அழகி* என வருணிக்கிறார். இது அவளது புறா குணம்.

சூரியனைப்போல் பிரகாசம் என்பது அவளது பாம்பு குணம். வேதம் தெளிந்த புத்தியையும் பகுத்தறிவையும் குறித்துப் பேசுகிறது. படையைப்போல கெடி என்பதும் அவளது பாம்பு குணம் (உன் 6:10). ஆபத்தில் சீறி கர்த்தர் கொடுத்த உரிமைகளைக் காக்கும் குணமிது. குடும்பம் தேவன் அருளிய உரிமைகளில் ஒன்று.

ஒரே ஒரு காரியத்தைமட்டும் இங்கு விளக்க விரும்புகிறேன்—சந்தேகம். உலகம் கேடுகெட்டுப் போனதால் எல்லாரும் எல்லாரையும் சந்தேகப்படுகிறார்கள். நீங்கள் அன்னாரைச் சந்தேகப்படுகிறீர்கள், அன்னார் இன்னாரைச் சந்தேகப்படுகிறார், இன்னார் உங்களைச் சந்தேகப்படுகிறார்! எலி—பூனை ஓடிபிடி போல.

சந்தேகம் இருபுறமும் கருக்குள்ளப் பட்டயம் – நிபுணரின் அறுவை சிகிச்சைக் கத்தியாகவும் பயன்படலாம் அல்லது உங்கள் தொண்டையையும் அறுத்துவிடலாம். இது பிளேடின் கூர்மையான முனையில் நடப்பது போன்றது. நீங்கள் யாரையும் நம்பத் தேவையில்லை – பிரசங்கியோ போதிக்கிறவரோ பாடகரோ உபவாசித்து ஜெபிப்பவரோ – யாருமே மனிதர்தான். ஆன்மீகக் கவர்ச்சி மிக ஆபத்தானது; ஆகையால் ஆன்மீகச் சூழலில் இரட்டிப்பான ஜாக்கிரதை அவசியம். கொரிந்து சபையில் நடந்ததை மறந்துபோக வேண்டாம்.

சந்தேகத்தை நான்கு கோணங்களிலிருந்து பார்க்கலாம் –

1. **நீங்கள் ஒருவரைச் சந்தேகிக்கிறீர்கள்.**

அதாவது, உங்கள் துணைவரை ஒருவர் தொடர்வதாக நினைக்கிறீர்கள். விழிப்புடன் எச்சரிக்கையாயிருங்கள். சந்தேகம் உங்கள் உறவுகளைப் பாதிக்கக் கூடாது. அப்படியானால் உறவு உடைந்துபோகும்; உடைந்த உறவுகளை மறுபடியும் கட்டி எழுப்புவது சுலபமல்ல. ஒரு சான்றுக்காக ஜெபித்து வாருங்கள். சான்று இருந்தால் அதன் அடிப்படையில் செயல்படலாம் மற்றபடி அமரிக்கையாயிருங்கள். வயிற்றெரிச்சலினாலும் இரத்தக் கொதிப்பினாலும் நீங்கள் ஏன் சாகவேண்டும்? உங்கள் துணைவர் தன் ஆன்மீக யுத்தங்களைச் செய்யவும் விட்டுவிடவேண்டும். அவர் வலையில் சிக்காமல் இருக்கலாமே. சிறு சிறு சில்மிஷங்களை பெரும்பான்மையோர் பொறுத்துக்கொள்ள வேண்டியதாக உள்ளது. ஆவிக்குரியவர் தடுமாறினாலும் சீக்கிரம் உறுதியாக

நின்றுவிடுவர். விளையாட்டு வினையாக மாறினால் நீங்கள் இடைபடலாம். எல்லோரையும் சந்தேகிக்க அவசியமில்லை. ஒரு கெட்டவரை நீங்கள் சந்திக்கும்போது நல்லவர் பத்து பேராவது உங்களைச் சுற்றி இருப்பர்.

2. யாரோ உங்களைச் சந்தேகிக்கிறார்கள்.

நீங்கள் அவரது துணைவர்மேல் கண்போடுகிறீர்களென்று ஒருவர் நினைத்தால் அந்தக் குடும்பத்தை விட்டு விலகிவிடுங்கள். தங்களிடையேயுள்ள மனத்தாங்கல்களைச் சரிசெய்துகொள்ள அவர்களுக்கு அவகாசம் கொடுங்கள். அக்குடும்பத்தில் சமாதானம் நிலைகொள்ள ஜெபியுங்கள். நீங்கள் ஆன்டியோ, அங்க்கிளோ தாத்தாவோ பாட்டியோ — கவனமாகத்தான் நடந்துகொள்ள வேண்டும். உங்கள்மேல் அவர்களுக்கு நம்பிக்கை வரும்வரை காத்திருங்கள்.

3. உங்கள் துணைவரைச் சந்தேகிக்கிறீர்கள்.

"யாரை நினைத்துக்கொண்டிருக்கிறீர்கள் ?" என்று கேட்கக்கூடாது. நாம் மனதைப் பார்க்கக் கூடியவர்களல்ல. கடவுள் மட்டுமே அதைச் செய்யக்கூடும். கடவுள் இடத்தை நாம் எடுக்கக்கூடாது. ஒவ்வொருவரும் முதலாவது தேவனுக்கே உத்திரவாதமுள்ளவர்களாயிருக்கிறோம். உங்களைப் புண்படுத்துமுன்பாக அவர்கள் தேவனைப் புண்படுத்துகிறார்கள். தனிப்பட்ட சுதந்திரத்தை நீங்கள் பறிக்கக்கூடாது. கட்டளை கொடுத்தபின் தேவனே ஆதாமின் கைகளைக் கட்டிவைக்கவில்லையே. உங்களுக்கு உண்மையாயிருக்கத் தெரிந்துகொள்வதன் மூலம் அவர் உங்கள்மேல் வைத்துள்ள அன்பை நிரூபிக்கவேண்டும். சில சூழ்நிலைகள் மிக மோசமாயிருந்தால் உங்கள் உதவி தேவைப்படலாம். ஒருவர் உங்களை ஏமாற்ற நினைத்துவிட்டால் எப்படியும் ஏமாற்றலாம். நாம் 24 மணி நேரமும் ஒன்றாக இருப்பதில்லையே. பெரியவர் ஒருவரை நாம் அடக்கியாள முடியாது.

அதோடு, அந்த மூன்றாம் நபர் உறுதியான ஆன்மீக நபராயிருப்பாரானால் உங்கள் துணைவரது வலையில் விழமாட்டார்களே. ஆகவே பொறுத்திருங்கள். உங்கள் கையை அழுக்காக்கிக் கொள்ளாதீர்கள். எல்லாரோடும் விளையாட முடியாது என்ற பாடத்தையும் உங்கள் துணைவர் கற்றுக்கொள்ளலாம். அவருக்கும் இது ஒரு ஆன்மீகப் போராட்டம்தானே.

உங்கள் துணைவர் உங்கள் கால்களையேச் சுற்றிச்சுற்றி வர எதிர்பார்க்கக்கூடாது. மற்றவர்களோடு பழகவும் அனுமதிக்கவேண்டும். சிரிப்பு, தமாஷ், கதைபேசுதல், கலந்துரையாடல், ஆலோசனை கொடுத்தலும் பெற்றுக்கொள்ளுதலும் மற்றும் உதவி செய்தல் போன்றவைதான் வாழ்க்கை. நிஜமாகவே பயப்படக் கூடியது எதுவும் நடக்கிறதா அல்லது இல்லாததைப் பார்த்து பயப்படுகிறீர்களா என உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

அடுத்தவரும் பொறுப்புடன் நடந்துகொள்ளவேண்டும். யாரோடாவது சிநேகமாயிருக்க விரும்பினால் தனிப்பட்ட உறவை வளர்ப்பதைத் தவிர்த்து குடும்பமாக சிநேகிதராயிருங்கள். நாம் யாவருமே சந்தேகத்திற்கு இடமளிக்காமல் நடந்துகொள்வோமானால், வாழ்வதற்கு உலகம் சிறந்த இடமாவதோடுகூட நட்புறவுகள் வாழ்நாள் முழுவதும் நீடிக்கும்!

உங்கள் துணைவர் உங்களைச் சந்தேகிக்கிறார்.

அந்த உறவைத் தியாகம் செய்யுங்கள். அது உங்கள் வலது கண்ணைப்போல அருமையானதாக இருந்தாலும் பிடுங்கி எறியுங்கள். உலகிலேயே மிக முக்கியமான நபர் உங்களுக்கு உங்கள் துணைவர்தான். பாதிக்காதீர்கள். அது சாதா நட்புறவாயிருந்தாலும் எப்படியிருந்தாலும் வேண்டவே வேண்டாம். அன்னாருக்கு விளக்கம் தரத் தேவையில்லை. ஒரு ஆலோசனை அளிக்க விரும்புகிறேன் – எதிர்பாலரைத் தொட்டுப் பேசாதீர்கள். அது உங்களைப் பலச் சிக்கல்களுக்குத் தூரமாக்கும்.

எங்கோ வாசித்த சில வரிகளை உங்களுக்கு எடுத்துரைக்க விரும்புகிறேன். "பாதுகாப்பற்ற உணர்வு மற்றும் 'ஒருவர் என் சொத்து' என இறுகப் பற்றிக் கொள்வதினால் எழக்கூடிய அசிங்கமான மனநிலையே பொறாமை எனலாம். இருப்பினும் அது நமக்குப் பிரியமானவர் பறிபோய்விடுவரோ என்ற நிலையை எதிர்கொள்வதற்கான சரியான எதிர்ச் செயலாகவும் அமையலாம். நேசத்திற்குப் பாதுகாவல் பொறாமை — நாம் உசிதமாகக் கருதும் உறவிற்கு வரக்கூடிய பாதகத்திற்கான எதிர்ப்பு – ஆனால் நாம் நம்மைக் கேட்டுக் கொள்ள வேண்டிய ஒரு கேள்வி: ஆபத்தாக நான் காணும் இது நிஜமா ? நிழலா ?"

சூலமித்தி சொல்லுகிறாள், *"நான் என் நேசருடையவள், என் நேசர் என்னுடையவர்."* அந்தக் குரல் பதிவு செய்யப்பட்டிருக்குமானால் நாம் நினைப்பது போல இனிமையாகவும் கண்ணியமாகவும் இல்லாமல்

இருக்கலாம். *"நீர் என்னை உமது இருதயத்தின்மேல் முத்திரையைப் போலவும், உமது புயத்தின்மேல் முத்திரையைப்போலவும் வைத்துக் கொள்ளும்; நேசம் மரணத்தைப்போல் கொடியது* (மரணம் நம்மைப் பிரிக்கும் வரைக்கும்); *நேசவைராக்கியம்* (பொறாமை) *பாதாளத்தைப்போல் கொடிதாயிருக்கிறது"* (உன் 8:6) என்கிறாள் சூலமித்தி. ஆகவே பொறாமை யோடல்ல அன்போடு செயல்படுங்கள். இதய முத்திரை 'நீங்கள்' உணர்ந்து கொள்வதற்காக; புயத்தின் முத்திரை 'பிறர்' காண்பதற்காக. ஆகவே அன்பு உங்கள் பாதுகாவலாக இருக்கட்டும், பொறாமையல்ல.

ஞானத்தைப் பெறுவது எப்படி ?

1. **ஜெபியுங்கள் (யாக் 1:5).** தினந்தோறும் ஞானத்திற்காய் ஜெபியுங்கள். ஆண்களுக்கும் பெண்களுக்கும் தேவையான தெளிந்த புத்தியைக் குறித்து வேதம் அதிகமே போதிக்கிறது. வாசித்து, முது கெலும்புடன் நடந்துகொள்ளக் கற்றுக்கொள்ளுங்கள்.

2. **வேதத்தை வாசித்துக் கீழ்ப்படியுங்கள்.** அது வடிகட்டின தேவ ஞானம். நீங்கள் வேதத்தைத் திறக்கும்போதெல்லாம் கொஞ்சம் கூடுதல் ஞானவான்களாகிறீர்கள். எவ்வளவு அதிகமாக வேதத்தை வாசிக்கிறீர்களோ அவ்வளவு ஞானவானாவீர்கள்.

3. **அனுபவத்திலிருந்து கற்றுக்கொள்ளுங்கள்.** 2 தீமோத்தேயு 1:7 இல் சொல்லப்பட்டிருப்பது பரிசுத்த ஆவியல்ல, நமது ஆவி. *"தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும்* ***தெளிந்த புத்தியுமுள்ள*** *ஆவியையே கொடுத்திருக்கிறார்."* ஆகவே பயமின்றி உங்கள் உரிமையைக் கேளுங்கள்; அன்போடு உங்கள் உரிமையைக் காத்துக்கொள்ளுங்கள், அகங்காரத்தோடல்ல; முதுகெலும்போடு உரிமை பாராட்டுங்கள், பலவீனமாயல்ல; அந்தக் காரியத்தில் தேவனது சித்தத்தை அறிந்தவர்களாய் தெளிந்த புத்தியோடு சுய உரிமையை நிலை நாட்டுங்கள், குழம்பிய மனதோடல்ல.

ஊழியத்தில் நடந்த ஒரு வேடிக்கையைச் சொல்லி முடிக்க விரும்புகிறேன் மிஷனரி ஒருவர் திருமணமாகி நேரே வருடாந்திர முகாமுக்கு வந்தார். "எப்படி இருக்கிறீர்கள்?" என்று கேட்டோம். "உன்னதப்பாட்டில் இருக்கிறேன்," என்றார். பின்பு பணிக்களத்திற்குச் சென்றுவிட்டனர். ஆறு மாதங்கள் கழித்து

அவரைப் பார்த்தபோது, "எப்படி இருக்கிறீர்கள்?" என்று விசாரித்தோம். "புலம்பலில் இருக்கிறேன்," என்று பதிலளித்தார்! இந்த இடை ஆறு மாதங்களில் பல வெளிப்படுத்தல்களைப் பெற்றிருப்பார் என்று நம்புகிறேன். இப்போது இருபது ஆண்டுகள் ஆகிறது, அவர்கள் பிரமாதமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே நமது அயலகத்தார், நண்பர்கள், பிள்ளைகள், துணைவரின் உறவினர்கள், துணைவர், அந்நியர், மற்றவர் களோடுள்ள சிக்கல்களோடு நாம் சிறப்பாய் முன்னேறிச் செல்வோம் என்பது நிச்சயம். வாழ்க்கையின் சவால்களைச் சந்தித்து தேவனோடு முன்னேறிச் செல்வோம்.

"ஆண்டவரே, எங்களைப் பாம்புகளைப்போல புத்திக்கூர்மை உள்ளவர்களாகவும் புறாக்களைப்போல கபடற்றவர்களுமாக மாற்றுவீராக. இயேசுவின் நாமத்தில் வேண்டுகிறோம் பிதாவே. ஆமென்"

7

ஆண்டவரே, நான் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர்?

ஆக்டோபஸ் சொன்னது பலிக்குமா, கிளி சொன்னது பலிக்குமா என்பதை ஊர்ஜிதம் செய்ய உலகமே காலில் வெந்நீரை ஊற்றிக்கொண்டு நின்றிருந்தது. ஒரு கிலோவிற்கும் அதிகமான மூளையையுடைய மனிதன் குருவி மூளையை நாடிச் செல்கிறான். மனுக்குலம் கிடு கிடு பாதாளத்தை நோக்கி உருண்டு சென்றுகொண்டிருக்கிறது என்பதற்கு வேறு எடுத்துக்காட்டு தேவையா? நாமும் அப்படித்தானா அல்லது நமது பாதையை நிர்ணயிக்க, "ஆண்டவரே, நான் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர்," என்ற கேள்வியைக் கேட்டு முன்செல்கிறோமா? அன்றாடத் தீர்மானங்களிலிருந்து மண்டையை பிளக்கும் தீர்மானங்கள் வரை வாழ்வில் எதிர்பாராத திருப்பங்களிலெல்லாம் இக்கேள்வியைப் பலமுறை நாமெல்லாருமே கேட்கிறோம். இங்கே குட்டிக்கரணம் அடித்து இன்னும் எழமுடியாமல் அண்ணாந்து கிடப்பவர் பலர். தேவனுடைய சித்தம், கண்டெடுக்க முடியாத புதைபொருள் என்று நினைப்பீர்களானால் நினைவிலிருத்திக்கொள்ள வேண்டியது:

☛ அது ஏற்கனவே வெளிப்படுத்தப்பட்டது. "*அவர்* ***தமது திருவுளத்தின் மறைபொருளை*** *நமக்குத் தெரியப்படுத்தியுள்ளார்*" (எபே 1:9).

☛ தமது **திருவுளத்தை நமக்கு வெளிப்படுத்துவதே** அவரது விருப்பம் (எபே 1:9).

☛ தேவன் நம்மைத் தெரிந்தெடுத்ததின் நோக்கமே அவரது சித்தத்தை வெளிப்படுத்ததான். "**தேவனுடைய திருவுளத்தை நீ அறியவும் ... அவர்** *உன்னை முன்னமே தெரிந்துகொண்டார்* "(அப் 22:14). இது பவுலைக் குறித்து சொல்லப்பட்டதாயிருந்தாலும் நம்மெல்லாருக்குமே தகும்.

☛ வழிதவறி நாம் அலைவதில்லை என்று கடவுள் வாக்குரைத்திருக்கிறார். *"அங்கே நெடுஞ்சாலை இருக்கும்; அது பரிசுத்த வழி என்னப்படும்; தீட்டுள்ளவன் அதிலே நடந்து வருவதில்லை; அந்த வழியில் நடக்கிறவர்கள் பேதையராயிருந்தாலும் திசைகெட்டுப் போவதில்லை"* (ஏசா 35:8).

வங்கி இருப்பில் வைக்கப்பட்ட நகையைப் போன்றது தேவசித்தம். சாவி நமது கையில்; கொஞ்சம் முயற்சி செய்தால் திறந்துவிடலாம். தேவனது பிள்ளை எவருமே அவரது திருவுளத்தை அறியலாம். தனது மனதைத் திறந்து காட்டு வதே தகப்பனது ஆவல் — மனதை அறிய பிள்ளைக்கு மனமிருக்குமானால்!

தேவனது திருவுளத்தை அறிவது அத்தனை இன்றியமையாததா? ஆமென்று அடித்துக் கூறலாம். *"என்னை நோக்கி, 'ஆண்டவரே, ஆண்டவரே' எனச் சொல்பவரெல்லாம் விண்ணரசுக்குள் செல்வதில்லை. மாறாக, விண்ணுலகிலுள்ள என்* ***தந்தையின் திருவுளத்தின்படி*** *செயல்படுபவரே செல்வர்* " (மத் 7:21). அந்த பயங்கர நியாயத்தீர்ப்பின் நாளில் நமது வீரதீரச் செயல்களெல்லாம் செல்லாக்காசுகளாகிவிடும். பிடிவாத கீழ்ப்படியாமை நமது சவப்பெட்டியில் அடிக்கும் கடைசி ஆணியாகிவிடும். மேலும் இயேசு, "**ஆகவே,** நான் சொல்லும் இவ்வார்த்தைகளைக் கேட்டு இவற்றின்படி செயல்படுகிற எவரும் பாறைமீது தம் வீட்டைக் கட்டிய அறிவாளிக்கு ஒப்பாவார்"என்றார். வேதமே வழிகாட்டி என்பதை இப்படியாக வலியுறுத்தினார். பேதையும் புரிந்துகொள்ளத்தக்கப் பாடநூல் இது. யெப்தா பஞ்சாகமங்களை அறிந்திருப்பாரேயாகில், நமது தெய்வம் நரபலியை அருவருக்கிறவர் என்பதைப் புரிந்துகொண்டு தன் மகளையே நரபலி செலுத்தும் கொடிய குற்றத்திற்குத் தப்பியிருப்பார் (ரோ 2:17,18).

பிசாசு **அவனது சித்தத்தை** நாம் நிறைவேற்றும்படியாக நம்மைச் சிறைபிடிக்கப் பார்க்கிறான். நமது **சுயசித்தம்** நம்மை மண்ணோடு ஒட்டிக்கொள்ளச் செய்கிறது. ஆனால் அபயமிடுவோமானால் ஆண்டவர் தமது வலது கரத்தை நீட்டி நம்மைத் தூக்கி நிறுத்தி **அவரது சித்தத்தைச்**

செய்ய நம்மை பலப்படுத்துவார். சித்தங்கள் மோதும் யுத்தமிது (2 தீமோ 2:26). போகமுடியாது என்று சொன்ன மூத்தமகன் மனம்வருந்தி பின்பு அப்பாவின் திராட்சத் தோட்டத்தில் வேலை செய்யச் சென்றானே. அவனே தகப்பனது திருவுளத்திற்கு இசைந்து சென்றவன் (மத் 21:28).

அவரது திருச்சித்தம் என்று வேதத்தில் அப்பட்டமாக வெளிப்படுத்தப்பட்டவைகளைக் குறித்த தெளிவு முதலாவது நமக்கு அவசியம். இவற்றைக் குறித்து குழப்பமடைந்து தேவனது திருவுளத்தை அறியும்படியாக நாம் ஜெபிக்க வேண்டியதில்லை.

1. நாம் முன்குறிக்கப்பட்டவர்கள்.

நாம் முன்குறிக்கப்படாததால் மோட்சத்தில் நமக்கு இடம் கிடைப்பது சந்தேகம் என்று நாம் ஐயுறத் தேவையில்லை. ஐயந்திரிபுற வேதம் எடுத்துரைக்கிறது, *"நாம் தூயோராகவும் மாசற்றோராகவும் தம் திருமுன் விளங்கும்படி, உலகம் தோன்றுவதற்கு முன்பே கடவுள் நம்மைக் கிறிஸ்து வழியாகத் தேர்ந்தெடுத்தார். அவர் நம்மை இயேசு கிறிஸ்துவின் மூலம் தமக்குச் சொந்தமான பிள்ளைகளாக்கிக்கொள்ள அன்பினால் முன்குறித்துவைத்தார். இதுவே அவரது விருப்பம்...* ***கடவுள் தமது திருவுளத்தின் திட்டத்தின்படி*** *அனைத்தையும் செயல்படுத்தி வருகிறார். அவரது தீர்மானத்தால் நாம் முன்குறிக்கப்பட்டு, கிறிஸ்து வழியாய் அவரது உரிமைப்பேற்றுக்கு உரியரானோம்"* (எபே 1:4,5,11). நமது கடமை பரிசுத்த வாழ்வு மட்டுமே.

2. நாம் தொலைந்து போவதில்லை.

புயலின் கோரப்பிடியில் சிக்கித் தவித்த சீடரைப்போல நாமும் அவ்வப்போது, "ஆண்டவரே, மடிந்து போகிறோமே," என்று கதறுகிறோம். 99 ஆடுகளை விட்டுவிட்டு தொலைந்துபோன ஒரு ஆட்டைக் குறித்து ஆண்டவர் சொல்லி விட்டு, *"அவ்வாறே இச்சிறியோரில் ஒருவர்கூட நெறிதவறிப் போகக்கூடாது என்பதே உங்கள்* ***விண்ணகத் தந்தையின் திருவுளம்,"*** என்றார் (மத்18:12-14). நெறிதவறிப்போகும் ஆபத்திற்குப் பாதுகாவல், ஒருவரையொருவர் திருத்துதல் என்று இதே அத்தியாயம் ஆலோசனை கூறுகிறது.

3. **பொல்லாத உலகத்தினின்று விடுதலை.**

நங்கூரம் பாய்ச்சப்படாத கப்பல் கடலுக்குள் இழுத்துச் செல்லப்படுவது போல தேவனது கிருபையைப் பற்றிக்கொள்ளாதிருப்போமானால் இப்பொல்லாத உலகில் மூழ்கிப்போவோம். ஆனால் திடன்கொள்ளுங்கள். நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து **"தம் தந்தையாம் கடவுளின் திருவுளத்திற்கேற்ப** இன்றைய பொல்லாத காலத்தினின்று நம்மை விடுவிக்குமாறு நம்முடைய பாவங்களின் பொருட்டுத் தம்மையே ஒப்புவித்தார்" (கலா 1:3-6). 'கிருபை மட்டுமே' என்பதே கலாத்தியர் நிருபத்தின் செய்தி.

4. **நமது பரிசுத்தமாகுதல்.**

"நீங்கள் தூயோராவதே கடவுளுடைய திருவுளம்..." (1தெச 4:1-3). சுற்றியிருந்து வரும் செய்திகளால் குழம்பிவிடாதீர்கள். அளவுக்கு மீறி ஆன்மீகமாகாதே என்பர் சிலர். மற்றவர்களைப் புண்படுத்தாதபடி உன் பரிசுத்தத்தின் தரத்தை சற்று குறைத்துக்கொள் என்போருமுண்டு. *"நீங்கள் என்மீது அன்பு கொண்டிருந்தால் என் கட்டளைகளைக் கடைபிடிப்பீர்கள்,"* என்றார் இயேசு (யோ 14:15). தேவனைப் பிரியப்படுத்தும் நோக்கமே உங்கள் மனதை நிறைத்திருக்குமானால் தேவனது திருச்சித்தமாகிய உங்கள் தூய்மையை நீங்கள் இழப்பதென்பது கூடாத காரியம்.

5. **நன்றிநிறை இருதயம்.**

ஆசீர்வாதங்களைக் காட்டிலும் ஆழ்துயரத்திலும், ஆறுதல்களைக் காட்டிலும் அல்லல்களிலும், உயரத்தைக் காட்டிலும் உரசல்களிலும் கவனம் செலுத்துவது மனதின் இயல்பு. பத்துபேரில் ஒருவர் மட்டுமே திரும்பிவந்து நன்றி நவின்றது இயேசுவை ஏமாற்றமடையச் செய்தது. "எல்லாச் சூழ்நிலையிலும் நன்றிகூறுங்கள். உங்களுக்காக **கிறிஸ்து இயேசு வழியாய்க் கடவுள் வெளிப்படுத்திய திருவுளம்** இதுவே" (1தெச 5:18). எதையுமே அவர் நமக்கு நன்மையாய் மாற்ற வல்லவராகையால் நமது வாழ்வில் அவர் நேரிடச் செய்யும் எல்லாவற்றிற்காகவும் நன்றிகளை ஏறெடுக்கப் பழகுவோம். தேவனுக்கு மட்டுமல்ல நமக்கு உதவிசெய்யும் மனிதருக்கும் நன்றியுள்ளவர்களாயிருந்து வார்த்தைகளால் அதை வெளிப்படுத்த மறவாதிருப்போம்.

6. எல்லா மனிதரது இரட்சிப்பு.

கேடி அல்லது குடிகாரனைக் கண்டால் அவசரமவசரமாக நகர்ந்து விடுகிறோமே, ஏன்? ஆண்டவர் அவனையும் நேசிக்கிறார், அவனும் இரட்சிப்படைய விரும்புகிறார் என்பதை நம்மால் நம்பமுடியவில்லையா? இளைய சீடன் தீமோத்தேயுவின் சந்தேகங்களை நீக்க பவுல் எழுதும்போது, *"இதுவே நம் மீட்பராகிய கடவுளின்முன் சிறந்ததும் ஏற்புடையதுமாகும். எல்லா மனிதரும் மீட்புப் பெறவும் உண்மையை அறிந்துணரவும் வேண்டுமென* ***அவர் விரும்புகிறார்,"*** என்றெழுதுகிறார் (1 தீமோ 2:3,4). அடுத்தமுறை யாரிடமாவது கிறிஸ்துவைப்பற்றிப் பேச உந்தப்படுவீர்களானால், இது தேவசித்தமா எனத் தயங்காதீர்கள்.

7. நன்மை செய்தல்.

"இவ்வாறு நீங்கள் நன்மையைச் செய்ய முன்வருவதன் மூலம், மதிகெட்ட அறிவிலிகளை வாயடைக்கச் செய்யவேண்டுமென்பதே ***கடவுளின் திருவுளம்"*** (1பேது 2:15). யாருக்கும் எப்பொழுதும் நன்மை செய்வதே பழக்கமானால் நமது விரோதிகள் நமக்கு விரோதமாக எதுவும் பேச இடமளிக்காமல் போகிறோம். இயேசு நன்மை செய்கிறவராய்ச் சுற்றித் திரிந்தார் (அப் 10:38). *"உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்"* (மத் 5:44).

8. நன்மை செய்து தீங்கனுபவித்தல்.

துன்புறும்போதுதான் நமது எல்லாமே சோதிக்கப்பட்டு நமது விசுவாசமும் உலுக்கப்படும். நன்மை செய்தும் அடிவாங்கும்போது குழம்பிப்போய் நமது நற்செயலையே கேள்வி கேட்கிறோம். "ஏன், ஏன், ஏன்?" எனப் புலம்புகிறோம். ஆண்டவர் பதிலளிக்கிறார்: *"தீமை செய்து துன்புறுவதைவிட* ***கடவுளுக்குத் திருவுளமானால்,*** *நன்மை செய்து துன்புறுவதே மேல்"* (1பேது 3:17).

வேதத்தை ஆராய்ந்து பார்த்து, குறிப்பிட்டக் காரியத்தைக் குறித்த தேவ சித்தம் இன்னதென்று கண்டுபிடிக்க முயலுங்கள். அவரது சித்தம் செய்வதே நமது அர்ப்பணமாயிருக்க வேண்டும். அதுவே நமது ஏக்கமாயிருக்க வேண்டும். தேவ சித்தம் நிறைவேற்றவே நாம் வாழவேண்டும் என்கிறார் பேதுரு (1பேது 4:1-3). பிலேயாம் தூதனைக் காணக்கூடாத அந்தகனாகவும் பேசு

கழுதையைக் குறித்து அதிசயிக்காமல் அதோடு பேச முற்பட்டவனாகவும் இருந்தது ஏன்? ஏனெனில் அவனது மனது தேவசித்தத்தை அறிவதில் இல்லாமல் வேறெங்கோ இருந்தது. தேவ சித்தம் செய்வதில் கண்ணும் கருத்துமாயில்லாவிட்டால் அது கழுவின மீனிலும் நழுவின மீனாகிவிடும். யாக்கோபின் சத்தம் என்ற எச்சரிப்பு கிடைத்தும் ஏசாவின் கரங்களினால் ஏமாந்துபோவோம்.

திருவுளத்தோடு இணைந்து செல்ல நமக்கு மனமில்லையானால் அவர் தமது உள்ளத்தை நமக்குத் திறக்கமாட்டார். "***அவரது திருவுளத்தின்படி*** *நடக்க விரும்புவோர்... அறிந்துகொள்வர்*" (யோ 7:17). இயேசு தமது தகப்பனது சித்தத்தைச் செய்வதிலேயே கண்ணுங் கருத்துமாயிருந்தபடியால் அவரது மனதை அறிவதில் தடுமாறவில்லை. ***"என் விருப்பத்தை நாடாமல் என்னை அனுப்பியவரின் விருப்பத்தையே நாடுகிறேன்,"*** என்றாரவர் (யோ 5:30;6:38).

தேவ சித்தத்தை அறிய முற்படுமுன் சுயசித்தத்தை காலின் கீழ் நசுக்கி விடுவது மிக முக்கியம். மனதில் திட்டங்களைத் தீட்டிக்கொண்டு நல்ல பிள்ளைப்போல எசேக்கியேலிடம் தமக்காக ஆண்டவருடைய வார்த்தை உண்டோ என்று கேட்க வந்த யூதர்களைப் போல நாமிருக்கக் கூடாது. *"என் மக்கள் வழக்கம்போல் உன்னிடம் வருகின்றனர். அவர்கள் முன்னிலையில் அமர்ந்து உன் சொற்களைக் கேட்கின்றனர். ஆனால் அவற்றையோ கடைபிடிப்பதில்லை. அவர்களின் உதடுகள் அன்பொழுகப் பேசுகின்றன; உள்ளமோ நேர்மையற்றப் பொருளைத் தேடி ஓடுகின்றது"* (எசே 33:30-32).

தேவசித்தம் நிறைவேற்ற பசிதாகமுள்ளவர்களாய் இருக்கவேண்டும். "என்னை ***அனுப்பினவரின் திருவுளத்தை*** நிறைவேற்றுவதும் அவர் கொடுத்த வேலையைச் செய்து முடிப்பதுமே என் உணவு," என்றார் இயேசு (யோ 4:34). வீட்டிலும் தொழிற்கூடத்திலும் சாதாரணக் காரியங்களிலும்கூட அவர் சித்தம் செய்ய நாடவேண்டும். அடிமைகளுக்குப் பவுல் எழுதுவதை வாசியுங்கள். *"அடிமைகளே, நீங்கள் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிவதுபோல் இவ்வுலகில் உங்களுக்குத் தலைவர்களாக இருப்பவர்களுக்கு அச்சத்தோடும், நடுக்கத்தோடும், முழுமனதோடும் கீழ்ப்படியுங்கள். மனிதர்களுக்கு உகந்தவர்களாகுமாறு, வேலை செய்வதாகக் காட்டிக்கொள்பவர்களாயிராமல் கிறிஸ்துவின் பணியாளராய்க்* ***கடவுளின் திருவுளத்தை*** *உளமார நிறைவேற்றுங்கள்"* (எபே 6:5,6).

நல்லது கெட்டது தெரிந்தெடுப்பதில் வித்தையொன்றுமில்லை. நல்லவற்றில் சிறந்ததைத் தெரிந்தெடுப்பதற்குதான் யோசனையும் கூர்மையும் அவசியம். ஆன்மீகச் சிந்தையை வளர்த்துக் கொள்வதினால் நமது ஆவியும், தேவ ஆவியும் இணைந்து நம்மை நேர்பாதையில் நடத்தும். "*அப்போது **கடவுளின் திருவுளம்** எது எனத் தேர்ந்து தெளிவீர்கள். எது நல்லது, எது உகந்தது, எது நிறைவானது என்பதும் உங்களுக்குத் தெளிவாகத் தெரியும்*" (ரோ 12:2).

என் மனப்போக்கில்தான் நான் போவேன் என்று பிடிவாதமாயிருப் போமானால், தேவன் பிலேயாமை விட்டது போல நம்மையும் நம் போக்கிற்கே விட்டுவிடுவார். தேவனது சித்தத்தை அறியும்படியாக இஸ்ரவேலின் மூப்பர் எசேக்கியேலிடம் வந்தனர். தேவனது பதில் நம்மை அதிர வைக்கிறது: *"மானிடா! இம்மனிதர் சிலைகளிடம் தங்கள் மனதைப் பறிகொடுத்து, அவற்றைத் தங்கள்முன் எழுப்பும் தீச்செயலில் ஈடுபட்டிருக்கிறார்கள். இவர்கள் என் **திருவுளத்தை** அறிய நான் விடுவேனோ... அவர்களுக்கு ஆண்டவராகிய நானே அவர்களின் எண்ணற்ற சிலைகளுக்கேற்ப பதில் அளிப்பேன்"* (எசே 14:3,4). இறைச்சித்தம் அறிவதற்குத் தடங்கலாக நமது இதயத்தில் நிறுத்தப்பட்டிருக்கும் சிலைகளை, ஜெபிக்கத் தாழிடும் முன்பாகவே தூக்கி எறிவோம்.

சாய்வு நாற்காலியில் அமர்ந்துகொண்டு, ஆண்டவர் கதவைத் தட்டி தங்கத் தாம்பாளத்தில் தமது சித்தத்தை நமது கையில் அன்பளிப்பார் என்று எதிர்பார்க்க முடியாது. வேலை தேடுவீர்களானால், வீட்டில் உட்கார்ந்து கொண்டு, "ஆண்டவரே, உமக்குச் சித்தமான வேலையைத் தாரும்," என்று ஜெபித்துக் கொண்டிருக்க முடியாது. செருப்புத் தேயப் படியேறணும், செய்தித்தாள்களில், கண்வலிக்கத் தேடணும். சோம்பேறிகளை கர்த்தர் நடத்துவதில்லை. தேவ சித்தத்தை அறிய முழுமுயற்சி எடுப்போமானால் ஒவ்வொரு நிகழ்வும் ஒரே திசையைச் சுட்டிக்காட்டும். "*அறிவிலிகளாயிராமல், **ஆண்டவருடைய திருவுளம்** யாது எனப் புரிந்துகொள்ளுங்கள்*" (எபே 5:17).

சிலவேளைகளில் கைகட்டி அமர்ந்திருந்து போகும் போக்கிற்கு விட்டுவிடுவது சிறந்ததாயிருக்கும். பவுல் எருசலேமில் கைதாகப் போவதை தீர்க்கன் அகபு, நடித்துக் காட்டினார். கிறிஸ்துவிற்காய் மரிக்கவும் தயாராயிருப்பதாகக் கூறி பவுல் எல்லாரையும் அடக்கிவிட்டார். பவுலை இணங்கவைக்கமுடியாத தோழர், ***"ஆண்டவரின் திருவுளப்படி** நடக்கட்டும்,"* என்று பேசாமல் இருந்துவிட்டனர் (அப் 21:14).

மட்டுமல்ல, நம்மால் மாற்றமுடியாததை ஏற்றுக்கொள்வதே ஞானம். அதில்தான் சமாதானம் இருக்கிறது. கணவனும் மனைவியும், பெற்றோரும் பிள்ளைகளும், ஊழியனும் உடன் ஊழியனும், எஜமானும், வேலைக்காரனும் ஒருவரோடொருவர் சுமுகமாய் வாழக் கற்றுக்கொள்ளவேண்டும். தேவனைக் குறைகூறக் கூடாது.

ஆயிரம்தான் சொன்னாலும், தேவன் நமக்கு இருளின் பாடத்தைப் படிப்பிக்கும் வேளைகளும் உண்டு. தட்டுத் தடவினாலும் எவ்வழியும் தென்படாத வேளைகளும் வாழ்வில் வரலாம். இப்படிப்பட்ட வேளைகளில்தான் நமது மனதில் ஏசாயா 50:10 ஒளிவீச வேண்டும்: *"உங்களில் எவன் கர்த்தருக்குப் பயந்து, அவரது தாசனின் சொல்லைக் கேட்டு, தனக்கு வெளிச்சம் இல்லாததினால் இருட்டிலே நடக்கிறானோ, அவன் கர்த்தருடைய நாமத்தை நம்பி, தன் தேவனைச் சார்ந்துகொள்ளக்கடவன்."*

தன் சிறு பிள்ளையின் விரலைப் பற்றி தகப்பன் அழைத்துச் செல்கிறார். இதே தகப்பன் தன் முதிர்ந்த மகனை இப்படி அழைத்துச் சென்றால் எப்படி இருக்கும்? நாம் ஆன்மீக வளர்ச்சியில் வளர்ந்து வரும்போது நமது சமயோசித புத்தியைப் பயன்படுத்தி பகுத்தறிவு காட்டும் பாதையில் செல்லவேண்டுமென்று தேவன் எதிர்பார்க்கிறார்.

சவுலுக்கு சாமுவேல் ஒரு நல்ல ஆலோசனை கொடுத்தார்: *"இந்த அடையாளங்கள் உனக்கு நேரிடும்போது **சமயத்துக்கு ஏற்றபடி நீ செய்;** தேவன் உன்னோடே இருக்கிறார்"* (1 சாமு 10:7). நாம் தேவனோடு நடப்பவர்களானால், அவரை நம்பி, ஜெபத்தோடு, சரியாகத் தோன்றுவது எதுவோ அதை தைரியமாகச் செய்யலாம். பவுலடிகளார், தீமோத்தேயுவுக்கு இரண்டு கடிதங்களில் பல அறிவுரைகள் எழுதினார். அதில் சுரீரென்று உரைக்கும் வரிகள்: *"நான் சொல்லுகிறவைகளைச் சிந்தித்துக்கொள்; கர்த்தர் எல்லாக் காரியங்களிலும் உனக்குப் புத்தியைத் தந்தருளுவார்"* (2 தீமோ 2:7). தேவனது பொதுவான ஆலோசனையாகிய வேதத்தினால் நிறைந்திருப்போமானால் குறிப்பிட்ட சூழ்நிலைகளுக்கு தேவன் நமக்கு சமயோசித புத்தியை அருளுவார். மோசேயின் மாமனார் தன் ஆலோசனையை மோசேயின் மேல் திணிக்கவில்லை. அறிவுரை அளித்துவிட்டு மோசேயே தீர்மானமெடுக்க விட்டுவிட்டார்: *"இப்பொழுது என் சொல்லைக் கேளும்,*

உமக்கு ஒரு ஆலோசனை சொல்லுகிறேன்; தேவனும் உம்மோடுகூட இருப்பார்... இந்தப் பிரகாரம் நீர் செய்வதும், இப்படித் தேவன் உமக்குக் கட்டளையிடுவதும் உண்டானால்..." (யாத் 18:19,23).

சூழ்நிலையை சீர்தூக்கிப் பார்த்து பகுத்தறிவு காட்டும் வழியிலே செல்லுங்கள். உள்ளுணர்விற்குச் செவிகொடுங்கள். சரியாகத் தோன்ற வில்லையா? அப்படியானால் செய்யத் துணியாதீர்கள். ஆன்மீகத் தலைவர்களது ஆலோசனையையும் தெரிந்த விவரங்களையும் ஆராய்ந்து விவேகமாய் எட்டெடுத்துவையுங்கள். பச்சைக் கொடிகளையும் (பவுல் மற்றும் குழுவினருக்கு லீதியாளின் அழைப்பு) சிவப்புக் கொடிகளையும் (கழுதை முன்செல்ல மறுத்து இறுதியில் பிலேயாமின் கீழ் படுத்துக்கொண்டது) கவனித்துச் செல்லுங்கள்.

இப்படித் துணியும்போது பொதுவாக ஒரு நிச்சயமின்மை இருக்கத்தான் செய்யும். எரேமியாவின் உறவினன் தனது நிலத்தை விலைபேச வருவாரென்று ஆண்டவருடைய வார்த்தை எரேமியாவிற்கு வந்தது. அவர் அப்படியே வந்தபோதுதான் பேர்போன தீர்க்கதரிசியாகிய எரேமியாவிற்கு ஆண்டவருடைய வார்த்தை ஊர்ஜிதமாயிற்று. "**அப்பொழுது** அது ஆண்டவரின் வாக்கு என்று நான் அறிந்துகொண்டேன்," என்றெழுதுகிறார் அவர் (எரே 32:6-8). இடைபட்ட வேளை அவருக்கு மேகமூட்டமாகத்தான் இருந்தது. "இருந்தால்" "இருக்கலாம்" "என்று நம்புகிறேன்" போன்ற நிச்சயமின்மையைக் குறிக்கும் வார்த்தைகள் பவுலின் எழுத்துக்களில் தாராளமாய்ப் பயன்படுத்தப் பட்டுள்ளன (1கொரி 16:6,7).

நமது முழு வாழ்க்கைக்கும் ஊழியத்திற்குமான தமது திருச்சித்தத்தைக் கடவுள் ஒரேயடியாக வெளிப்படுத்துவதில்லை. ஒவ்வொரு படியாக, ஒவ்வொரு நாளாகத்தான் நடத்துகிறார். சவுல் பவுல், "நான் என்ன செய்யச் சித்தமாயிருக் கிறீர்" என்று கேட்டபோது அற்பமாகக் காணப்பட்ட ஒரு அடிதான் அவருக்குக் காட்டப்பட்டது: *"நீ எழுந்து நகருக்குள் செல்; நீ என்ன செய்யவேண்டும் என்பது அங்கே உனக்குச் சொல்லப்படும்"* (அப் 9:6). அந்தச் சிறு வழிநடத்துதலுக்கு அவர் கீழ்ப்படிந்தபோது அவரது வாழ்க்கையின் இறுதிவரை அவருக்குச் 'சொல்லப்பட்டது.' துக்ககரமாக மற்றொரு சவுல் கில்காலுக்குச் சென்று காத்திருக்கும்படி பணிக்கப்பட்டபோது அவர் முழுமையாய்க் கீழ்ப்படியவில்லை — சென்றார், ஆனால் காத்திருக்கவில்லை (1 சாமு 10:8). சாமுவேலின்

மரணத்திற்குப்பின் அவரோடு பேச தவியாய்த் தவித்தார் சவுல். ஏனெனில் அவருக்கு சாமுவேலைத்தான் தெரியும், ஆண்டவரைத் தெரியாது. நிலைமையை அவர் உணர்ந்தபோது ஏற்கனவே பிந்திப் போய்விட்டது. கடந்தகாலத்தின் கவலையீனத்தைக் கண்ணீரோடு அறுத்தார். *"சவுல் ஆண்டவரிடம் ஆலோசனைகேட்க, ஆண்டவர் கனவு மூலமோ, ஊரிம் மூலமோ அவருக்குப் பதிலளிக்கவில்லை"* (1 சாமு 28:6). அவரது வாழ்க்கை சரிவடைந்து, திருவுளத்தை அறிய குறி சொல்லும் பெண்முன் அவரை நிறுத்தியது. நம்மில் எத்தனை பேர் இதைப்போல ஆக்டோபஸ்களையும் கிளிகளையும் தேடுகிறோம்? வெளிப்படுத்தப்பட்ட தேவ சித்தத்திற்கு சவுலைப்போல கீழ்ப்படியாமலிருப்போமானால், தேவன் அதற்குமேல் தம்முடைய சித்தத்தை வெளிப்படுத்தமாட்டார்.

தேவனுடைய சித்தத்தைச் செய்வது நமக்கு பாரமாயிருக்க வேண்டாம். உமது **திருவுளம்** நிறைவேற்றுவதில் நான் மகிழ்ச்சி அடைகின்றேன்," என்று பாடுகிறார் தாவீது (சங் 40:8). ஆகவே தேவன் அவரை மகிழ்வோடு நடத்தினார். *"நான் உனக்கு அறிவு புகட்டுவேன்; நீ நடக்க வேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன்; உன்னைக் கண்ணோக்கி, உனக்கு அறிவுரை கூறுவேன். கடிவாளம் பூட்டி வாரினால் இழுத்தாலன்றி உன்னைப் பின்தொடர்ந்து வராத குதிரை போன்றோ கோவேறு கழுதை போன்றோ அறிவிலியாய் இராதே!"* (சங் 32:8,9). கடிவாளம் பூட்டி வாரினால் கட்டி உங்களை நேர்பாதைக்கு ஆண்டவர் இழுத்த சம்பவம் ஏதாவது நினைவிற்கு வருகிறதா? முரட்டாட்டம் பிடிப்போமானால் ஆண்டவர் நமது தனி வாழ்விலும், குடும்ப வாழ்விலும், சமூக வாழ்விலும் நெருக்கத்தைக் கொண்டுவந்து, வலது பக்கமும் இடது பக்கமும் சுவரெழுப்புவார். வழிதவறிய அடையாளங்களைக் கண்டு கொள்வோமானால் பின்னோக்கி நடந்து, விட்டபாதையில் வந்து சேர வாய்ப்புண்டு.

*"**உமது திருவுளம்** விண்ணுலகில் நிறைவேறுவதுபோல மண்ணுலகிலும் நிறைவேறுக!"* என்று ஜெபிக்கக் கற்பித்தார் இயேசு (மத் 6:10). *"**உம் திருவுளத்தை** நிறைவேற்ற எனக்குக் கற்பித்தருளும்,"* என்று தாவீது ஜெபித்தார் (சங் 143:10). தேவனது மனவிருப்பத்தின்படியே எல்லாவற்றையும் செய்ய வேண்டுமென்ற வாஞ்சையே தாவீதின் சீர்மிகு வாழ்க்கைக்குக் காரணம். தேவ சித்தம் செய்வதில் ஆண்டாண்டாக வளர்ந்து தேறுகிறோம்; இக்கட்டுப்பாட்டில்

ஜெபம் கைகொடுக்கிறது. உடனடித் தீர்மானங்களுக்கு உதவி செய்கிறது ஜெபமானது தேவனை வளைப்பதல்ல, நம்மை வளைப்பது. புதிய கிறிஸ்தவர் **கடவுளின் திருவுளத்தைப்** பற்றிய அறிவை நிறைவாக அடையவேண்டும் அனைத்திலும் ஆண்டவருக்கு உகந்தவற்றைச் செய்து அவருக்கு ஏற்புடையவர் களாய் நடந்துகொள்ளவேண்டும் என்று பவுலும் எப்பாப்பிராவும் தவறாமல் இறைவனிடம் வேண்டினர் (கொலோ 1:9;4:12). நமக்காகவோ பிறருக்காகவோ நாம் இப்படி வேண்டுதல் செய்திருக்கிறோமா?

தேவ சித்தத்தையும் சுய சித்தத்தையும் அடையாளங்காண, முறையே இயேசுவையும் யூதாசையும் எடுத்துக்காட்டுகளாகக் கொண்டு பட்டியலிட் டுள்ளேன். நாற்சந்தியில் நிற்கும்போது வழிகாட்ட அவை நமக்கு உதவும்.

தேவசித்தம் – இயேசு	**சுயசித்தம் – யூதாஸ்**
பொதுவாக நான் விரும்பாததாக இருக்கும் (மாற் 14:36)	எனக்கு விருப்பமானதாக இருக்கும்
மெதுவாய் நிகழ்வது	திடீர் நிகழ்வு
வேதத்தின் ஆமோதிப்பு	உலக ஆசையால் விரட்டப்படுவது
தேவனது மெல்லிய சத்தம் (1இரா 19:12)	பிசாசின் கூச்சல்
சமயோசித புத்தி	உள்ளுணர்வின் வேகம்
ஆலோசகர்	குத்திவிடுபவர்—பிரதான ஆசாரியர், யோபுவின் நண்பர்
ஜெபத்தின் பலன். "உமது சித்தம் செய்யப்படுவதாக."	ஜெபமற்ற தீர்மானம்
கடினம்	சுலபம்
இறுதியில் மகிழ்ச்சி	இறுதியில் துக்கம்

தேவனுடைய சித்தத்தைச் செய்வதன் பலன்களைச் சொல்லிமுடியாது. அதனால் நாம் தேவனுடைய நெருங்கின குடும்பத்தினராகிறோம்: *"**கடவுளின் திருவுளத்தை** நிறைவேற்றுபவரே என் சகோதரரும் சகோதரியும் தாயும் ஆவார்,"* என்றார் இயேசு (மாற் 3:35). அவரது சித்தத்தோடு இழையோடினால் வேதத்தைப் புரிந்துகொள்வது சுலபமாகும் (யோ 7:17). ***அவரது திருச் சித்தத்தின்படி*** வேண்டுதல் செய்தால் அவர் செவிசாய்க்கிறார் (1யோ 5:14). *"உலகம் மறைந்து போகிறது; அதன் தீய நாட்டங்களும் மறைந்து போகின்றன. ஆனால் **கடவுளின் திருவுளத்தை** நிறைவேற்றுபவர் என்றும் நிலைத் திருப்பார்"* (1 யோ 2:17).

*"எல்லாச் சூழ்நிலைகளிலும் **கடவுளின் திருவுளத்தை** முழுமையாக நிறைவேற்றுவதில் தேர்ச்சிபெற்றவர்களாயும் நிலைத்து நிற்பவர்களாயும்"* இருப்பதே நமது வாழ்வின் இலக்காகும். அவரே, *"இயேசு கிறிஸ்துவைக் கொண்டு தமக்கு முன்பாகப் பிரியமானதை உங்களில் நடப்பித்து, நீங்கள் தம்முடைய **சித்தத்தின்படிச்** செய்ய உங்களைச் சகலவித நற்கிரியையிலும் சீர்பொருந்தினவர்களாக்குவார்"* (கொலோ 4:12; எபி 13:20,21).

தேவனது சித்தத்தை இழப்பதினால் வரக்கூடிய விளைவுகள் பயங்கரமாயிருந்தாலும் நாம் அப்படி இழந்திருப்போமேயானால் 'எல்லாம் முடிந்தது' என்று முடிவுகட்டிவிடக்கூடாது. கற்றுக்கொள்ள மனமிருக்கு மேயானால் முன்னேறிச்செல்லும்போது இழந்த நமது அரசின் வாசல்கள் மறுபடியும் விரிவாய்த்திறப்பதைக் காணலாம். தோல்வியிலிருந்து விலைமதிப்பான பாடங்களைக் கற்றுக்கொள்ளுகிறோம். இறுதியில் தேவன் நமது தோல்வியிலும் நன்மை காணச்செய்வார். நாமும் நமது தவறை சரிசெய்ய முழுமூச்சுடன் செயல்பட வேண்டும்.

"உமது திருவுளத்தை நிறைவேற்ற இதோ வருகிறேன்" (எபி 10:9).

8

உயிர் காக்கும் உடை

"நான் தோல்வியுற்றவள்; வாழ்க்கையில் முற்றும் தோற்றவள்," என்று அழுத நாளைத் திரும்பிப் பார்க்கிறேன். சட்டென்று என் மகள் கடிந்து கொண்டாள், "அம்மா, நீங்கள் தோல்வியுற்றவர்களானால் யார்தான் வெற்றி பெற்றவர்?" என் மகளின் கேள்வி என் இதயத்தில் மூழ்கியது. மக்கள் நான் வெற்றி பெற்றவள் என்று நினைக்கிறார்கள். பின் ஏன் நான் என்னை தோல்வியைத் தழுவினவளாகக் காண்கிறேன்? இந்தக் கேள்வியை என் இதயம் அலசிப் பார்த்தபோது எனக்குள் எழுந்த எண்ணங்களை உங்களோடு பகிர்ந்துகொள்ள விழைகிறேன். இதை இரண்டு பாகங்களாகப் பிரிக்கிறேன் –

அ) என் வாழ்வை நான் தோல்வியாகக் காண்பது ஏன்?

ஆ) என் வாழ்க்கையை வெற்றி வாழ்க்கையாக மாற்றுவது எப்படி?

வாருங்கள் பார்க்கலாம்.

வாழ்க்கை என்பது ஆழ்கடல் அனுபவம். மத்தேயு 8:23-27இல் இயே காற்றையும் கடலையும் அமர்த்தியதை வாசிக்கிறோம். பழைய ஏற்பாட்டிலு அதற்கு நிகரான ஒரு சம்பவம் உண்டு. முன்னுரையாக அதை வாசிப்ப பொருத்தமாயிருக்கும் —

"கப்பலேறி, கடல்யாத்திரைபண்ணி, திரளான தண்ணீர்களிலே தொழி செய்கிறார்களே, அவர்கள் கர்த்தருடைய கிரியைகளையும், ஆழத்தி

அவருடைய அதிசயங்களையும் காண்கிறார்கள். அவர் கட்டளையிட பெருங்காற்று எழும்பி, அதின் அலைகளைக் கொந்தளிக்கப்பண்ணும். அவர்கள் ஆகாயத்தில் ஏறி, ஆழங்களில் இறங்குகிறார்கள், அவர்கள் ஆத்துமா கிலேசத்தினால் கரைந்து போகிறது. வெறித்தவனைப்போல் அலைந்து தடுமாறுகிறார்கள்; அவர்களுடைய ஞானமெல்லாம் முழுகிப் போகிறது. அப்பொழுது தங்கள் ஆபத்திலே அவர்கள் கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகிறார்கள், அவர்கள் இக்கட்டுகளுக்கு அவர்களை நீங்கலாக்கி விடுவிக்கிறார். கொந்தளிப்பை அமர்த்துகிறார், அதின் அலைகள் அடங்கு கின்றது. அமைதலுண்டானதினிமித்தம் அவர்கள் சந்தோஷப்படுகிறார்கள்; தாங்கள் நாடின துறைமுகத்தில் அவர்களைக் கொண்டுவந்து சேர்க்கிறார். அவர்கள் கர்த்தரை அவருடைய கிருபையினிமித்தமும், மனுபுத்திரருக்கு அவர் செய்கிற அதிசயங்களினிமித்தமும் துதித்து, மக்களின் சபையிலே அவரை உயர்த்தி, மூப்பர்களின் சங்கத்திலே அவரைப் போற்றுவார்களாக" (சங் 107:23-32).

பதறவைக்கும் ஒரு காட்சி. இப்படிப்பட்ட அனுபவங்களில்தான் நாம் கடவுளுடைய அதிசயமான கிரியைகளைக் காண்கிறோம். அவரே புயலை எழும்பப் பண்ணுகிறார். நாம் முடியைப் பிய்த்துக்கொண்டு பயித்தியம் பிடித்தவர்கள் போலாகிறோம். ஆனால் அவரை நோக்கிக் கூப்பிடும்போது அவர் அலைகளை அமர்த்தி, நம்மை சாட்சியாக நிமிர்ந்து நிற்கப் பண்ணுகிறார்.

அ) என் வாழ்வை நான் தோல்வியாகக் காண்பது ஏன்?

1. நான் பாதகமானவைகளை மட்டுமே காண்கிறேன்.

சாதகமானவைகளைக் காணாமல் விடுகிறேன். மனித மனம் பாதகமான வைகளையே உற்றுநோக்கும் தன்மையுள்ளது. மிகச் சிலரே பிடிவாதமான சாதகச் சிந்தனையுள்ளோர். கானானுக்குள் சென்ற 12 வேவுகாரரில் 10 பேர் பெரிய வெள்ளைத்தாளின் நடுவிலிருந்த கறுப்புப் புள்ளியைத்தான் கண்டனர். இருவர் மட்டுமே கறுப்புப் புள்ளியைச் சுற்றியிருந்த பெரும் வெள்ளைப் பகுதியைக் கவனித்தனர்.

தாவீதின் பட்டாளத்திற்கு அது பெரும் கொண்டாட்டமான நாள். ஆனால் தாவீதோ கண்ணீர் வடித்துக்கொண்டிருந்தார். தன்னுடைய உயிர், குடும்பம் மற்றும் மக்கள் காப்பாற்றப்பட்டதை அவரால் காணமுடியவில்லை. அவருடைய மனது அவரது மகன் அப்சலோமிற்காக துக்கமுறுவதிலேயே கவனமாயிருந்தது.

புயலை மட்டுமே பார்க்காதீர்கள்; படகு, துடுப்புகள், உதவியாளர்கள், எல்லாவற்றிற்கும் மேலாக தேவன் இருப்பதைக் கண்ணோக்குங்கள். அது உங்களை உறுதியாய் நிற்கச் செய்யும். நான் 100 நோயாளிகளுக்கு வெற்றிகரமாக சிகிச்சை அளித்திருக்கலாம். ஆனால் ஒரு நோயாளி மரித்துப்போனால் இந்த வேலைக்கே நான் அருகதையற்றவள் என்று நினைத்துவிடுகிறேன். தவறு செய்யாதிருக்க நான் கடவுளல்ல என்பதை ஒத்துக்கொண்டு தேவன் என்னைப் பயன்படுத்திவந்த விதத்திற்காக அவரைத் துதிக்கவேண்டும். வாழ்க்கையில், நடுங்கவைக்கும் கெட்ட நேரங்கள் உண்டு. ஆனால் பரலோக இன்பமனுபவித்த நல்லவேளைகளும் உண்டே. வாழ்க்கையைத் தொடர அதுவே உந்துவிசையாகும்.

ஒரு பாடல் நினைவிற்கு வருகிறது —

சிலுவைகளை எண்ணுவதை விட்டு
சிறப்புகளை எண்ணிப் பாருங்கள்.
நஷ்டங்களை எண்ணுவதை விட்டு
லாபங்களை எண்ணுங்கள்.
கண்ணீர்களை எண்ணுவதை விட்டு
களிப்புகளை எண்ணுங்கள்.
எதிரிகளை எண்ணுவதை விட்டு
நண்பர்களை எண்ணுங்கள்.
அழுகைகளை எண்ணுவதை விட்டு
ஆனந்தங்களை எண்ணுங்கள்.
பயங்களை எண்ணுவதை விட்டு
தைரியங்களை எண்ணுங்கள்.
நலிந்த வருடங்களை எண்ணுவதை விட்டு
நிறைந்த வருடங்களை எண்ணுங்கள்.
கேவலமான நடத்தைகளை எண்ணுவதை விட்டு
உங்கள் கனிவான நடத்தைகளை எண்ணுங்கள்.
சொத்தை எண்ணுவதை விட்டு
சுகத்தை எண்ணுங்கள்.
உங்களை நம்புவதை விட்டு
கடவுளை நம்புங்கள்!

2. தினமும் ஏதோ ஒரு சிக்கலையோ தோல்வியையோ சந்திக்கிறேன்.

இது எனக்கு ஒரு அனுதின சிலுவையாகக்கூட இருக்கலாம். சில பெண்கள் தம் கணவரிடமிருந்து சமையலைக் குறித்தோ உருவத்தைக் குறித்தோ தினமும் பேச்சு கேட்க வேண்டிவரலாம். சில ஆண்கள் அரிக்கும் மனைவியையோ தொட்டாலும் பட்டாலும் வள்ளென்று எரிந்து விழும் தலைவரையோ தினந்தோறும் எதிர்கொள்ளும் நிலை ஏற்படலாம். இப்படிப்பட்ட அனுதின ஊசிக் குத்துகள் நம்மைக் கிளறிவிட்டு அந்த நாளையே பாழாக்கிவிடும். அம்மனநிலையிலிருந்து உடனடியாக எகிறிக் குதித்து நம் மனதை இலகுவாக்கிக்கொள்ளக் கற்றுக்கொள்ளவேண்டும். எதையுமே லைட்டாக எடுத்துக்கொள்ளப் பழகுங்கள். முதல் வ்குப்பில், 10ஆம் வகுப்பில், B.A.வில், M.A வில் தோல்வியடைந்திருக்கலாம். உங்கள் தோல்விகளை யெல்லாம் கூட்டிப் பார்த்தால் இப்பொழுது வாழ்க்கையில் எவ்வளவு தூரம் வந்திருக்கிறீர்கள் என்று பார்ப்பீர்கள். "என்னுடைய வாழ்க்கையில் மறுபடியும் மறுபடியுமாய்த் தோல்வியடைந்திருக்கிறேன். ஆகவேதான் வெற்றி காண் கிறேன்," என்கிறார் மைக்கேல் ஜார்டன். எத்தனை ஞானமான வார்த்தைகள்! எவ்வளவு அதிகமாய்க் கீழே விழுகிறீர்களோ அவ்வளவு அதிகமாய் எழுந்திருப் பதில் அனுபவம் பெறுகிறீர்கள்.

"அவர் நியாயத்திற்கு **ஜெயம்** கிடைக்கப்பண்ணும் வரைக்கும், நெறிந்த நாணலை முறிக்காமலும், மங்கி எரிகிற திரியை அணைக்காமலும் இருப்பார்" (மத் 12:20). நெறிந்த நாணலைப் போலவும் மங்கி எரிகிற திரியைப் போலவும் நீங்கள் உணரலாம். நிற்பதற்குக் கால்கள் இல்லாததுபோல உணரலாம். ஆனால் நீங்கள் செய்வதெல்லாம் நியாயமானதாக இருக்கும்படிமட்டும் பார்த்துக்கொள்வீர்களானால் அவர் வெற்றிக்கு உங்களை நடத்துவார். படகிற்குள்ளே வருகிற நீரைப் பார்த்துக் கலங்காதீர்கள். அதை காலி செய்துகொண்டே இருங்கள். கடந்த காலத்தை முதுகுக்குப் பின்னே போட்டுவிட்டு அடிமேல் அடி வைத்து முன்னேறுங்கள். புதிய துவக்கம் துவங்க பிந்திப் போய்விடவில்லை.

3. முடிவிற்கு நான் காத்திருப்பதில்லை.

அப்போது நடப்பதை வைத்து தீர்மானம் எடுக்கிறோம். உலுங்கும் படகையே பார்த்துக் கொண்டிருக்கிறோம். *"ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு காலமுண்டு,"*

என்கிறது பிரசங்கி 3:1. பதினோராம் வசனத்தில், *"அவர் சகலத்தையும் அதினதின் காலத்திலே நேர்த்தியாகச் செய்திருக்கிறார்,"* என்று வாசிக்கிறோம். யோசேப்பு பார்வோனின் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டாலும் *"கர்த்தர் யோசேப்போடே இருந்தார்"* (ஆதி 39:21). ஆதியாகமம் 40:1இல்: *"இந்த நடபடிகளுக்குப் பின்பு ..."* என்று வாசிக்கிறோம். 41:1, *"இரண்டு வருடம் சென்றபின்பு ..."* என்று துவங்குகிறது. ஆகவே கதை படிப்படியாகத் தொடர்கிறது. வாழ்க்கை ஒரு தொடர்கதை.

விடுதியில் விடப்படும் மிஷனரிக் குழந்தைகளைக் குறித்துக் கவலைப் படுவேன். ஆனால் இன்று அவர்கள் பிரகாசமாகத் திருமணம் செய்து நல்ல வேலையில் இருப்பதைப் பார்க்கும்போது தேவனைத் துதிக்கிறேன். வாழ்க்கை ஒரு புத்தகம். சோகமாக முடியும் புத்தகங்களை விரல்விட்டு எண்ணிவிடலாம். எல்லாக் கதைப் புத்தகங்களும் சுபமாகவே முடிகின்றன. யாராவது கதையின் முடிவை முதலாவது வாசிப்பார்களா ? சுவாரஸ்யமே போய்விடுமே. கதையின் சிக்கல்களும் திடீர்த் திருப்பங்களும்தான் கதையின் இழையோட்டத்தை சுவாரஸ்யமாக்கி உச்சக்கட்டத்தில் முடிக்கின்றன. அதுதான் வாழ்க்கை.

சிறைச்சாலையில் நடந்ததென்ன ? யோசேப்பின் அதிர்ஷ்டம் திரும்பத் துவங்கியது. மூழ்கிப்போன நிலையில் இருட்டறையில் தவித்துக்கொண்டி ருக்கும்போது அரசர் அவரை விடுதலையாக்கி தன் வீட்டிற்கும் தன் ஆஸ்திபாஸ்தி எல்லாவற்றிற்கும் அதிகாரியாக்கினார். அரசரின் பிரபுக் களைத் தன் மனதின்படி கட்டி அரசரது மூப்பர்களை ஞானிகளாக்கினார் யோசேப்பு (சங் 105:18–22). ஒவ்வொரு சூழ்நிலையிலும் கர்த்தர் உங்களைப் புடமிட்டு மற்றவர்களுக்குப் போதிக்க உருவாக்குகிறார். யோசேப்பைப் போல சிறியவற்றிலும் உண்மையுள்ளவர்களாயிருங்கள். உங்கள் சமையலோ, பணக்காரியங்களோ, நேரத்தைச் செலவிடுதலோ, நாக்கை அடக்குதலோ சீராக இருக்கட்டும். இயேசு உங்கள் படகை உலுக்கும்போது அது கடல் யாத்ரீகரைப் போல சாட்சி சொல்லுதலில் முடிவடையும்.

4. மற்றவர்கள் என்னைப்பற்றிச் சொல்வதை நம்பிச் சோர்படைகிறேன்.

இயேசு சிரபோனிக்கேயா பெண்ணிடம், பிள்ளைகளின் உணவை நாய் களுக்குப் போட முடியாது என்றார். நீங்களும் நானும் உடனே கோபித்துக் கொண்டு இடத்தைக் காலிசெய்திருப்போம். அவளோ தோல்வியைத் தழுவத்

தயாராயில்லை. "நான் நாய்தான் ஆண்டவரே, என் பங்கைத் தாரும்," என்றாள். பேச்சுப் போட்டியில் வெற்றிபெற்றது அவளே. மற்றவர்களுடைய சொல்லம்புகளால் எவ்வளவு சுலபமாகப் புண்படுகிறோம். புண்படுத்தும் சொற்களைச் சவாலாக எடுத்துக் கொள்ளுங்கள். சாதகமாக அவைகளை எடுத்துக்கொண்டு உங்களைத் திருத்திக்கொள்ளுங்கள். உங்களது செயல்களுக்கு பிறர் என்ன எதிர்ச்செயல் புரிகிறார்கள் என்பதைக் கவனித்து தேவையான இடத்தில் உங்களைத் திருத்திக்கொள்ளுங்கள். சூடான விவாதமொன்றில் என் மகள், "அம்மா, உங்கள் நாக்கு கூர்மையானது," என்றாள். எடுத்த எடுப்பில் நான் ஒத்துக்கொள்ள மறுத்தாலும், என்னுடைய வார்த்தைகளை தேவன் மென்மையாக்கும்படி தினமும் ஜெபிக்கத் துவங்கினேன். என்னதான் நாம் முயற்சி செய்தாலும் யாராவது நம்மைக் குறைகூறிக்கொண்டுதான் இருப்பார்கள். அதைக்குறித்துக் கவலைப்படாதீர்கள். நீங்கள் தங்கப் பதுமையாயிருக்கத் தேவையில்லை. இயேசுவையும்தான் குறைகூறினார்களே. உங்களை மேம்படுத்திக்கொண்டே இருங்கள். அவமதிப்புகளை சட்டை செய்யாதிருக்கப் பழகுங்கள்.

வயதான தனது கழுதையைப் புதைத்துவிட விரும்பிய எஜமானின் கதையைப்பற்றிப் படித்திருப்பீர்களென்று நம்புகிறேன். பெரிய குழி தோண்டி, கழுதையை அதில் தள்ளிவிட்டு, மண்ணை அள்ளி வீசிக்கொண்டே இருந்தார். முடிக்கும்போது கழுதை வெளிநடப்புச் செய்தது. ஒரு வாளி மண் மேலே விழுந்ததும் அதன்மேல் ஏறி நின்றுகொள்ளும். அப்படியாக வெளியேறியது! இந்தத் தத்துவத்தைக் கற்றுக்கொள்வோமானால் நம்மைத் தின்றுகொண்டிருக்கும் இராட்சத எட்டுக்கால் பூச்சியின் ஒரு காலையாவது வெட்டிவிட்டோம் எனலாம்.

சோர்பிலிருந்து வெளிவரமுடியாமல் திணறுவீர்களானால் மருத்துவப் பரிசோதனைக்குச் செல்வது உசிதம். உடல் ரீதியான கோளாறு ஏதாவது இருக்கலாம்.

5. தேவனது கண்ணோட்டத்தில் என்னைக் காணத் தவறுகிறேன்.

"தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும்; நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்" (1யோ 5:4). தேவன் நம்மைத் தோல்வியுற்றவர்களாக அல்ல ஜெயம் கொண்டவர்களாகவே காண்கிறார்.

வாழ்க்கையின் ஒவ்வொரு போராட்டமும் ஒரு விசுவாசப் பரீட்சையே. ஒவ்வொரு சோதனையிலும் ஒரு பாடத்தைக் கற்றுக்கொள்ளுங்கள். உங்கள் மனைவி கோபித்துக்கொண்டு தன் பெற்றோரிடம் சென்றுவிட்டால், போனால் போகட்டும் போடா என்று விட்டுவிடத் தோன்றும். ஆனால் அவளை நேசிக்க வேண்டுமென்பது கடவுளுடையக் கட்டளையாயிற்றே. உங்கள் கணவர் மன்னிப்புக் கேட்காவிட்டால் நீங்கள் தாழ்ந்துபோய் ஒப்புரவாகலாமே. ஒவ்வொரு சிறிய வெற்றியும் ஒரு பெரிய யுத்தத்தில் வெற்றிக்கு வழிநடத்தும். *"அற்ப விசுவாசிகளே, ஏன் பயப்படுகிறீர்கள் ?"* என்று ஆண்டவர் கடிந்து கொள்ள வழி வைக்காதீர்கள். விசுவாசத்தில் வல்லவராகுங்கள் (மத் 8:26).

6. நித்தியக் கண்ணோட்டத்தில் என்னைக் காணத் தவறுகிறேன்.

*"...**ஜெயங்கொண்டவர்கள்** தேவ சுரமண்டலங்களைப் பிடித்துக் கொண்டு அந்தக் கண்ணாடிக் கடலருகே நிற்கிறதையும் கண்டேன்"* (வெளி 15:2). இதுவே நமது எதிர்காலம். ஜெயங்கொண்டவர்கள்! எந்தப்பாடும் நமது எதிர்காலத்தை நினைப்பூட்டி நம்மை உற்சாகப்படுத்த வேண்டும். இந்தப் பூலோக வாழ்வுதான் முடிவுபோல நடந்துகொள்ளாதீர்கள். நித்தியத்தோடு ஒப்பிட்டால் இவ்வுலக வாழ்வு ஒரு புள்ளிதான். சீடர்கள், *"அமிழ்ந்துபோகிறோமே,"* என்று அலறினார்கள். *"அக்கரைக்குப் போவோம் வாருங்கள்,"* என்று இயேசு சொன்னதை மறந்துபோனார்கள். படகை ஓட்டிக்கொண்டே இருங்கள். புயலோ, அலையோ துடுப்புப் போடுவதை நிறுத்திவிடாதீர்கள். வாழ்க்கை கனவுபோல் ஓடிவிடும். ஆகவே மகிழ்ச்சியோடே பயணம் செய்யுங்கள். கண்மூடி கண்திறக்கும் நேரத்தில் அக்கரையில் வெற்றி வேந்தராக உங்கள் கிட்டாரை வாசித்துக்கொண்டு நிற்பீர்கள்.

7. எனக்கென்று ஒரு தராசை வைத்திருக்கிறேன்.

"கள்ளத்தராசு கர்த்தருக்கு அருவருப்பானது; சுமுத்திரையான நிறைகல்லோ அவருக்குப் பிரியம்" (நீதி 11:1). என்னையும் பிறரையும் தேவனது அளவு கோலினால் அளக்க நான் கற்றுக்கொள்ள வேண்டும். நமது கணிப்பு பிழையாகலாம். ஒரு பகுதியில் தோல்வியடையும் மனைவி மறுபக்கத்தில் சாதனையாளராகலாம். பாராட்டுச் சொல்லை அளந்து பேசும் கணவன் அடிக்கடி வெளியே கூட்டிக்கொண்டு போகிறவராயிருக்கலாம். ஆகவே ஒன்றிரண்டு காரியங்களைக் கொண்டு ஒருவரை அளக்காதீர்கள். ஒட்டுமொத்தமாகக் குற்றஞ்சாட்டாதீர்கள். "நான் கெட்டவள்" அல்லது

"அவன் கெட்டவன்" என்ற அதிரடித் தீர்மானத்திற்கு வந்துவிடாதீர்கள். இன்னும் அவரை நீங்கள் சரியாகப் புரிந்துகொள்ளாமலிருக்கலாம். ஆகவே அன்பே உங்கள் வாழ்க்கை முறையாகட்டும். எல்லாரையும் கடவுள் நேசித்தாரே. அவரது அடிச்சுவடுகளில் நடப்போம். நான்செய்த தராசினால் என்னையோ மற்றவர்களையோ அளக்க முற்படுவது கசப்பிற்கும் காயத்திற்கும் காரணமாகலாம். முழு விவரம் தெரியாமல் நாம் முடிவுகட்ட வாய்ப்புண்டு.

உங்கள் வாழ்க்கை தோல்வியல்ல! உங்கள் வாழ்க்கை தோல்வியல்ல என்று முடிவுகட்டிவிட்டால் போதாது. வாழ்க்கையை சம்பூரணமாகக் கட்டி எழுப்ப வேண்டும்.

ஆ) *வாழ்க்கையை வெற்றிகரமாக வாழ்வது எப்படி?*

நமது வாழ்க்கையின் வெற்றி நமது கையில்தான். ஏவாள் படுதோல்வி அடைந்தாள். ஆனால் சிதறிய தன் வாழ்க்கைத் துண்டுகளைப் பொறுக்கி எடுத்துச் சேர்த்து நல்ல முடிவைக் கண்டாள். பேதுரு குட்டிக் கரணம் போட்டுத் துயரத்தில் மூழ்கினார். ஆனால் நீந்திக் கரையேறி தங்கப் பதக்கத்துடன் வாழ்வை முடித்தார்! உற்சாகமடைவோம். உங்கள் வாழ்வை அமோக வெற்றியாக்க இதோ சில குறிப்புகள்.

1. **உங்கள் பாவத்தை எதிர்கொள்ளுங்கள்.**

"எதினால் ஒருவன் ஜெயிக்கப்பட்டிருக்கிறானோ அதற்கு அவன் அடிமைப்பட்டிருக்கிறானே" (2 பேது 2:19ஆ). அது பொய், திருட்டு, சண்டை, தொட்டால் சிணுங்கித்தனம், சோம்பல், வெட்டிப் பேசும் நாவு, சல்லாபம், கோபம், அவமதித்தல், பேராசை, குடும்பத்தைக் கவனியாதிருத்தல், நேர்மையின்மை இப்படி எதுவாகவும் இருக்கலாம். இந்தச் சிறுநரிகளே தோட்டத்தைக் கெடுப்பவை. நூற்றுக்கு நூறு முயற்சி எடுத்து உங்கள் பாவத்தை வேரோடு பிடுங்கி எடுங்கள். பாவத்தோடு வாழ்க்கையைத் தொடருதல், ஆட்டுக்கல்லைக் கழுத்தில் கட்டிக்கொண்டு பந்தயத்தில் ஓடுவது போல.

நான் ஸ்ரீலங்கா போகும்போது ஒருவர் சில அமெரிக்க டாலர்களைக் கொடுத்தார்கள். அது சட்டத்திற்குப் புறம்பானது என்று நான் கேள்விப் பட்டதால் தயங்கினேன். ஆனால் எல்லாரும் ஊக்கப்படுத்தவே சரி என்று என்

வேதத்தின் முதல் பக்கத்தில் அவற்றை வைத்து என் பையை அடுக்கினேன். கடைசி நிமிடத்தில் குற்றவுணர்வு என்னைக் குடைந்தெடுத்ததால் டாலர்களை எடுத்துவிட்டேன். ஸ்ரீலங்கா விமான நிலையத்தில் அதிகாரி என் பையைத் திறந்தார்; கையை உள்ளே விட்டு என் வேதத்தை வெளியே எடுத்தார். முதல் பக்கத்தைத் திறந்தார், மூடினார், உள்ளே வைத்துப் பையை மூடி போகலாம் என்று கையசைத்தார். ஸ்தம்பித்தேன், ஆனால் ஒரு வாழ்க்கைப் பாடத்தைக் கற்றுக்கொண்டேன்.

2. தேவன் விரும்பும் நபராக இருங்கள்.

நீங்கள் ஒரு மனைவியானால், வேதத்தில் மனைவியரைக் குறித்துப் படித்து தலைசிறந்த மனைவியாவதற்கு முயற்சி எடுங்கள். கடவுளிடம், "ஆனால் ஆண்டவரே, என் கணவர் தொண்டையில் மாட்டின மீன் முள் போல ... அதான் நான் இப்படி ..." என்று சொல்லமுடியாது. ஆண்டவர்: "வரிசையில் அவர் அடுத்ததாக உனக்குப் பின்னாகத்தான் நிற்கிறார். அதை அவரிடம் பேசிக் கொள்ளுகிறேன். ஆனால் உன்னைப் பொறுத்தவரை நான் சொன்னது போன்ற மனைவியாயிருந்தாயா?" என்பார். அப்படியே கணவனுக்கும். பணியாளர் தலைவரைக் குறித்தும், தலைவர் பணியாளரைக் குறித்தும் குறை கூறாதீர்கள். மாணவரும் ஆசிரியரும் அப்படித்தான். மிஷனரிகள் மிஷன் அரசியலில் மூழ்கிப் போகாமல் உங்கள் வேலையில் பிரகாசியுங்கள். உங்கள் குணம் பிறரது நடத்தையைப் பொறுத்து மாறாமல் தேவனது வார்த்தையைப் பார்த்தே மாறவேண்டும். அவனைக் குறித்து உனக்கென்ன? நீ என்னைப் பின்பற்றிவா என்றார் இயேசு (யோ 21). உங்கள் கண்கள் வேதத்திலிருந்து உங்களுக்கும் மறுபடி வேதத்திற்குமாகப் பாயட்டும். எத்தனைச் சிறந்த நபராக இருக்கமுடியுமோ அத்தனை முயற்சி செய்து நித்தியப் பரிசுக்காகக் காத்திருங்கள்.

3. எல்லாம் முடிந்தது என்று ஒருபோதும் ஒத்துக்கொள்ளாதீர்கள்.

அது பிசாசின் பொய். எல்லாம் இன்னும் முடியவில்லை. *"பிள்ளைகளே, நீங்கள் தேவனால் உண்டாயிருந்து, அவர்களை* ***ஜெயித்தீர்கள்;*** *ஏனெனில் உலகத்திலிருக்கிறவனிலும் உங்களிலிருக்கிறவர் பெரியவர்"* (1 யோ 4:4). சிக்கலைக் கண்டவுடனே திரும்பி ஓடிவிடக் கூடாது. இறுதிவரைப் போராடுங்கள். இறுதிவரை நம்பிக்கையாயிருங்கள். மத்தியில் எல்லாமே

தோல்வி போலதான் தெரியும். விடாப்பிடி குணமே வெற்றிக்கு வழிநடத்தும். சிக்கலான திருமணத்தைக் கைகழுவ மறுத்துவிடுங்கள். பிசாசு வல்லவன் தான்; ஆனால் தேவன் சர்வல்லவர்! நமது வாழ்க்கையை வெற்றியாக்குவது அதுதான். ஆஸ்வால்டு ஜே. ஸ்மித் மிஷனரியாகப் போகக்கூடாத அளவு பெலவீனராயிருந்தார். மருத்துவரது சான்றிதழ் அவருக்குக் கிடைக்கவில்லை. ஆகவே நூற்றுக்கணக்கான மிஷனரிகளை அனுப்பினார். தனது உடல் நிலையைப் பார்த்து அவர் சோர்ந்துபோய் உட்கார்ந்திருக்கலாம். ஆனால் வல்லவனை சர்வவல்லவரது வல்லமையினால் தோற்கடித்தார்.

4. சிக்கல்களை ஒரு தடத்திலும் மகிழ்ச்சியை (அல்லது ஊழியத்தை) வேறொரு தடத்திலும் விடுங்கள்.

புயல் வீசியது; இயேசுவோ நித்திரையாயிருந்தார். பவுலும் பேதுருவும் பாடுகளின் மத்தியில்தான் மகிழ்ச்சியைக் குறித்து எழுதினர். கரங்களில் சங்கிலிகள் ஒலிக்க பவுலும் சீலாவும் பாடல்கள் பாடினர். கஷ்டங்களும் துயரங்களும் வாழ்க்கையில் பூனைபோல் நுழைந்துவிடும். அவற்றை வேறு தடத்தில் விடாவிட்டால் அந்தப் பளுவினால் நீங்கள் நொறுங்கிப்போய் ஆவியின் அனலை இழந்துவிடுவீர்கள். இயேசுவுக்கும் பிரச்னைகள் இருந்தன. ஆனால் அவற்றை தனது மகிழ்ச்சிக்கு இணைகோடாக ஓடவிட்டார். எடுத்துக்காட்டாக யோவான் 16:32,33 வாசியுங்கள்: *"நீங்கள்... என்னைத் தனியே விட்டுவிடுங்காலம் வரும்."* அதனாலென்ன? *"ஆனாலும் நான் தனித்திரேன், பிதா என்னுடனேகூட இருக்கிறார்." "உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு."* அதனாலென்ன? *"ஆனாலும் திடன்கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன்."* அழும்போது அழுங்கள். பின்பு கண்களைத் துடைத்துக்கொண்டு வாழ்க்கையின் பிரகாசமான பக்கத்தைப் பாருங்கள். அது உங்களைப் புதிய குறிக்கோளுக்கு நேரே உந்தித்தள்ளும். துக்கங்கள் உங்கள் வாழ்க்கையைச் சிதைத்துவிடாதபடி பார்த்துக்கொள்ளுங்கள்.

கடலில் குளிக்கும்போது சுறாவிற்கு உணவாக தனது இடது கையை இழந்துவிட்ட 16 வயது பெத்தானி ஹாமில்டன் சொல்கிறாள்: "கடவுள் சுறாமீனை என்னைக் கடிக்கச் செய்தார் என்று நான் சொல்லவில்லை. இது நடக்கும் என்று அவர் அறிந்திருந்தார். அது நடந்தாலும் என் வாழ்க்கை சந்தோஷமாகவும் அர்த்தமுள்ளதாகவும் அமைய வழிவகுத்தார் என்று நினைக்கிறேன். மற்றவர்கள் தேவனில் நம்பிக்கை வைக்க நான் உதவக்

கூடுமானால் என் இழப்பை ஆதாயமாக எண்ணுவேன்." இவளல்லவா வெற்றி வாழ்க்கையின் இரகசியத்தைக் கண்டவள்! இப்போது ஒற்றைக்கையோடு பல சீ சர்ஃபிங் போட்டிகளில் கலந்துகொண்டு பதக்கங்கள் பெற்றுவருகிறாள்.

5. தினமும் சாதகமான ஏதாவதொன்றைச் செய்யுங்கள்.

அது குடும்பத்திற்கு ஒரு கேக் செய்வதோ, பிள்ளைகளோடு விளை யாடுவதோ, வயதான எளியவர் ஒருவருக்கு உணவளிப்பதோ போன்ற சாதாரணக் காரியமாகவும் இருக்கலாம்; அல்லது விபத்தில் சிக்கிய ஒருவருக்கு உதவியளிப்பது போன்ற பெரிய காரியமாகவும் இருக்கலாம்; நாளின் இறுதியில் அது உங்களுக்கு மனநிறைவை அளித்து தோல்வி உணர்வையும் சோர்பையும் மேற்கொள்ள உதவும்.

இரவு சுமார் 7 மணிக்கு ஒரு பெண் வந்து தன் வேதனைகளை என்னிடம் ஊற்றினாள். தினமும் நான் பார்க்கும் T.V. செய்தியை அணைக்க வேண்டியதாயிற்று. சுமார் ஒரு மணி நேரம் கொட்டித் தீர்த்தாள். என் நேரமெல்லாம் போகிறதே என்று நினைத்துக்கொண்டே அவள் சொல்வதைக் கவனமாய்க் கேட்டேன். கடைசியில் ஆலோசனை அளித்து, உற்சாகப்படுத்தி, ஜெபித்து அனுப்பினேன். தன் இதய பாரம் நீங்கிவிட்டதாகவும் லகுவாக உணருவதாகவும் சொல்லி மகிழ்ச்சியோடு சென்றாள். அன்றைய என் காரியங்கள் சில தடைபட்டாலும் இரவு படுக்கைக்கு மனநிறைவுடன் மனமகிழ்ச்சியாக திருப்தியுடன் சென்றேன்.

தினமும் சாதகமான ஏதாவதொன்றைச் செய்வதினால் வாழ்க்கையை நாம் பார்க்கும் விதமே மாறிவிடும். தோல்வியுற்றவரைப் போல உணராமல் வாழ்க்கையை வாழ்வது ஆசீர்வாதமாக உணருவீர்கள். எத்தனை முறை தனிமையில் தவித்து, என்னைக் கேட்பாரில்லை என அங்கலாய்த் திருக்கிறோம். ஆனால் அக்கம்பக்கத்தில் தனிமையில் வாடுபவரைக் குறித்துச் சிந்தித்திருக்கிறோமா? அவர்களைச் சந்தித்து உற்சாகப்படுத்தி வரலாமே என நினைத்திருக்கிறோமா? சாதக சிந்தனையின் இரகசியமே உங்களை மறந்து பிறரைக் குறித்து சிந்திப்பதுதான். அதுவே இயேசுவின் மனோபாவனையாக இருந்தது.

6. வாழ்க்கை கடினமென்பதை ஒத்துக்கொள்ளுங்கள்.

வாழ்க்கை ஒரு மலைப்பாதைதான். அது எப்பொழுது திடீரென்று திரும்பும் என்று சொல்லவே முடியாது. புயல்கள் வீசுவது நிச்சயம். "ஒரு பெரிய மலையில்

ஏறின பின்பு ஒருவன் கண்டறிவது, ஏற இன்னும் பல மலைகள் உண்டு என்பதுதான்," என்றார் நெல்சன் மண்டேலா. நகோமி ஒரு பஞ்சத்தையும் குடும்பத்தில் மூன்று மரணங்களையும் ஒரு இழப்பையும் தைரியமாகச் சந்தித்தாள். தேவனையே குற்றஞ்சாட்டிக் கொண்டிருந்தாள். ஆனால் கைகழுவிவிடவில்லை. அந்தகாரம் அவளைச் சூழ்ந்துகொண்ட வேளையில் தானே ஒளிக்கதிர் இருளைக் கிழித்துக் கொண்டு வந்தது. என்ன ஒளி? உலகத்தின் ஒளி!

நான் படித்த ஒரு கட்டுரையின் ஆசிரியர் (அவர் பெயரை மறந்துபோனேன்), "உண்மையான சிக்கல்களையும் தொல்லைகளையும் வேறுபிரிக்கக் கற்றுக் கொண்டால் நீடூழி வாழ்வீர்கள்," என்கிறார். "உங்கள் கழுத்து உடைந்து விட்டால், உங்களுக்கு சாப்பிட ஒன்றுமில்லை என்றால், உங்கள் வீடு தீப்பற்றி எரிந்தால் அது மெய்யான சிக்கல்தான். மற்ற எல்லாமே தொல்லைதான். வாழ்க்கை தொல்லைதான். வாழ்க்கை கட்டிவிழுந்த கஞ்சிதான். ஓட்ஸ் கஞ்சியில் கட்டியும், துக்கத்தில் தொண்டையை அடைக்கும் கட்டியும், மார்பில் கட்டியும் ஒன்றல்ல. வித்தியாசத்தைப் புரிந்துகொள்ளவேண்டும்," என்கிறார் அவர். தனது ஓட்ஸ் கஞ்சியில் கட்டி இருந்ததற்காகக் கத்திய ஒருவருக்கு அவர் கொடுத்த ஆலோசனை இது.

வாழ்க்கையின் எல்லா கேள்விகளுக்கும் பதில் காண முயற்சிக்காதீர்கள். ஏன் எனக்கு? ஏன் இது? ஆனால் விசுவாசத்தில் வல்லவராகுங்கள். ஒவ்வொரு பிரச்னையும் நமது நரம்புத் திறனைப் பரீட்சை பார்த்து நாம் எதால் செய்யப்பட்டிருக்கிறோம் என்று நாமே கண்டுபிடிக்க ஒரு பொன்னான சந்தர்ப்பமேயன்றி வேறல்ல.

ஜயா F. ஸ்டான்பில் பாடினார்—

நான் பார்க்கும்படியாக அவர்
என் கண்களைக் கண்ணீரினால் கழுவினார்;
என் நொருங்கிய இருதயம்
போர்வையில் வந்த ஆசீர்வாதமே.

என் இதயத்தைக் கிழித்து உள்ளே பார்த்தார்;
பாபமும் மூடப் பெருமையும் நிறைந்திருக்கக் கண்டார்.
என்னைக் குருடாக்கின யாவற்றையும்
துடைத்துச் சுத்தமாக்கினார்;

அப்போதுதான் கார்மேகங்களின் ஓரத்திலிருந்த
வெள்ளி விளிம்புகளைக் கண்டேன்.
இதுதான் எனக்குச் சிறந்தது என்று
இப்போது புரிந்துகொண்டேன்;

நான் பார்க்கும்படியாக அவர்
என் கண்களைக் கண்ணீரினால் கழுவினார்.

வாழ்க்கையின் முடிவில் நாமெல்லோருமே இப்பாடலைப் பாடலாம் என்று நினைக்கிறேன்.

ஆண்டவர் யோபுவிடம் மன்னிப்பு கேட்கவில்லை. அவர் தேவன். அவர் தேவனாகவே இருக்கட்டும். அவரை நாம் கேள்வி கேட்கமுடியாது. ஆனால் இயேசு உங்கள் தண்ணீரைத் திராட்சரசமாக்கமுடியும் என்பதை நினை விலிருத்திக் கொள்ளுங்கள்!

வெளிப்படுத்தல் 17:14இல் இப்படியாக வாசிக்கிறோம்: *"இவர்கள் ஆட்டுக்குட்டியானவருடனே யுத்தம் பண்ணுவார்கள்;* ***ஆட்டுக்குட்டி யானவர்*** *கர்த்தாதி கர்த்தரும் இராஜாதி இராஜாவுமாயிருக்கிறபடியால்* ***அவர்களை ஜெயிப்பார்****; அவரோடு கூட இருக்கிறவர்கள் அழைக்கப்பட்ட வர்களும் தெரிந்துகொள்ளப்பட்டவர்களும் உண்மையுள்ளவர்களுமாயிருக் கிறார்கள்."* எதிரியை வீழ்த்துவது ஆட்டுக்குட்டியானவரின் வேலை; நாம் அவருடனேகூட சும்மா இருப்போம். *"ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத் தினாலும் தங்கள் சாட்சியின் வசனத்தினாலும்அவனை* ***ஜெயித்தார்கள்*** (வெளி 12:11). இது நமது பொறுப்பு. அப்படித்தான் நகோமி ஜெயித்தாள். அப்படித்தான் யோபு ஜெயித்தார். யோபுவின் மனைவியை நினைத்துப் பாருங்கள். வெட்கம்!

7. உங்களைச் சந்தோஷப்படுத்திக்கொள்ளத் தீர்மானியுங்கள்.

மகிழ்ச்சியாயிருக்க முயற்சி எடுப்பவர்களின் புதையல்தான் மகிழ்ச்சி. அது தானாக வந்துவிடாது. சிலவேளை நாமாகவே அதற்கு நேராக நம்மை உந்தித்தள்ள வேண்டிவரும். எப்பொழுதும் மூஞ்சைத் தூக்கிவைத்துக் கொண்டிருப்பது சிக்கலிலிருந்து தப்ப சுலபமான வழி என்கிறார் இறையியல் வல்லுனரான டென்னிஸ் பிரேஜர். "மகிழ்ச்சியாயிருக்க முயற்சி எடுக்

வேண்டும் என்பது பலருக்குப் புதுமையாயிருக்கிறது. ஆனால் மெய் மகிழ்ச்சி நமது கையில்தான் இருக்கிறது," என்கிறார் அவர். சபை, ஐக்கியங்கள், பொருட்காட்சி, சர்க்கஸ், கடைத்தெரு, பொழுதுபோக்கு, வெளியே சாப்பிடுதல், உல்லாசப் பயணம், விளையாட்டுகள், பிள்ளைகள், பேரப் பிள்ளைகள் இப்படிப் பல சுத்தமான சந்தோஷங்கள் உண்டு. பொருட்காட்சி வந்தால் கட்டாயமாகப் போய் ஒரு பெரிய அப்பளம் வாங்கிச் சாப்பிட்டுவிட்டு சில இராட்டினங்களில் ஏறி சிறுபிள்ளைகளைப் போல் கூச்சலிட்டுக்கொண்டே சுத்திவிட்டு வந்து பாருங்கள்! பாடல்கள் பாடிப் பாருங்கள். நமது வாழ்வை உல்லாசமாக்க இவை சில எளிய வழிகள். உங்கள் வாழ்வைத் துடிப்புள்ள தாக்க எத்தனையோ வழிகளுண்டு. சிந்தை ஒரு சிறு உல்லாசப் பயணம் போய் வர அனுமதிப்பீர்களானால் உங்கள் உள்ளத்தின் இறுகல் இலகுவாகும். பல அற்புதமான ஐடியாக்களும் இதனால் மலரலாம்.

கடந்தகாலத்தையோ எதிர்காலத்தையோ குறித்துக் கவலைப்படாமல் "இங்கு" "இப்பொழுதில்" வாழுங்கள். இல்லாவிட்டால் வாழ்க்கையை அனுபவிக்க முடியாது. நான் காபி குடிக்கும்போது வேறெதுவும் செய்வதில்லை. ஒவ்வொரு சொட்டையும் ருசிக்கிறேன். நிகழ்கால அந்த வினாடியில் வாழும் கலையைக் கற்றுக்கொள்ளுங்கள். இந்த ஆலோசனை சாதாரணமாகத் தெரிந்தாலும் நடை முறையானது. "உலகத் தோற்றத்திலிருந்து சிறந்த நாள் இதுதான். அதில் விசேஷமென்னவென்றால் நான் அதில் வாழ்கிறேன்," என்றார் ஒரு ஜாலி நபர். இந்த நொடியை நீங்கள் அனுபவிக்கவில்லை என்றால் அது என்றென்றுமாய் காணாமல் போய்விடும். *"கர்த்தருக்குள் மகிழ்ச்சி யாயிருப்பதே உங்களுடைய பெலன்"* (நெகே 10:8 இ).

முடிவாக ஒரு கேள்வியைக் கேட்க விரும்புகிறேன் — சீடர்கள் அலராமல் படகில் அமைதியாயிருந்திருப்பார்களானால் அமிழ்ந்து போயிருப்பரா? நிச்சயமாக இல்லை! சக்தி வீண்தானே! "ஒவ்வொரு நாளைக்கும் இரண்டு கைப்பிடிகள் உண்டு. அதை நாம் கவலை என்னும் கைப்பிடியாலோ அல்லது விசுவாசமென்னும் கைப்பிடியாலோ கையாளலாம்," என்கிறார் ஹென்றி வார்டு பீச்சர். பிரச்னைகளில் நம்மையே கொன்றுக்கொள்ளுகிறோம். புயல் இயேசுவையும்தான் குலுக்கிற்று, ஆனால் அவரோ தன் பிதாவை நம்பியிருந்த படியால் அயர்ந்த நித்திரையிலிருந்தார். நாம் தேவனது மார்பில் அவரது செட்டைகளுக்கடியில் இருக்கிறோம். அமரிக்கையாயிருங்கள்.

'மகிழ்ச்சியென்பது துன்பமில்லாமையல்ல தேவனது பிரசன்னம்' என்றார்

ஒருவர். ஆகவேதான் பவுல் பிலிப்பியர் 4:4-6இல், "*எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்; சந்தோஷமாயிருங்கள் என்று மறுபடியும் சொல்லுகிறேன்... நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். அப்பொழுது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தனைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்,*" என்கிறார். இந்த சூத்திரம் உங்கள் பிரச்னைகளைப் போக்கிவிடாது, ஆனால் உங்கள் அடியாழத்திலுள்ள தோல்வி உணர்வைத் தூக்கி எறிந்துவிட்டு வாழ்க்கையை முழுமையாய் வாழ வழிகாட்டும்.

நீங்கள் மூழ்கும் நிலையில், யாராவது உயிர்காக்கும் உடை ஒன்றைத் தூக்கி எறியமாட்டார்களா, என்று தவித்துக்கொண்டிருக்கிறீர்களா? இதோ, இந்த ஆலோசனைகளைப் போட்டுக்கொள்ளுங்கள்; வாழ்க்கை என்னும் அலைமோதும் ஆழ்கடலில் ஒருபோதும் மூழ்கிப்போகமாட்டீர்கள்!

9

ஈர நெஞ்சம்

ஆண்டவரது சேனையின் கொடி இரக்கம் என்றுதான் நினைக்கிறேன். ரக்கம் நிறைந்த நமதாண்டவர், பாவி, பரிசுத்தவான், மதம், இனம் என்று ாமல் யாவரிடமும் இரக்கமாயிருக்க நம்மை வேண்டுகிறார். ஈவிரக்கம் ட்ட ஈர நெஞ்சம் வேண்டுமானால் பின்வரும் ஏழு தத்துவங்களை மனதில் ாள்வதவசியம்.

சட்டத்திற்குமேல் இரக்கம் என்ற தத்துவம்

கடவுள் நமக்குப் பத்து கட்டளைகளையும் சட்ட திட்டங்களையும் ருளியிருக்கிறார். ஆனால் பழைய ஏற்பாட்டிலும் கூட சட்டத்திற்கு மேலாக ரக்கமே ஓங்கியிருந்தது. விபச்சாரத்தில் பிடிபட்டப் பெண்ணை கல்லெறிந்து ால்ல மக்கள் தீவிரமாயிருந்தனர்; இயேசுவோ அவளை மன்னிக்கவே ரிந்துகொண்டார். சட்டம், சட்டம் என்று வாதாடினவர்கள் அழுகின டைகளை முகத்தில் பூசிக்கொண்டவர்களாக இடத்தைக் காலி செய்தனர். ியாளுக்கும் அதே கொடிய கதிதான் — நீதிமானாகிய யோசேப்பு அவளை வமானத்திற்கு ஆளாக்காமல் இரகசியமாய்த் தள்ளிவிட யோசிக்காவிடில்! ந்தயத்தில் நீதியுள்ளவர்கள், எப்போது நியாயந்தீர்க்க வேண்டும், எப்போது க்கம் பாராட்ட வேண்டும் எனத் தீர்மானிப்பதில் தடுமாறமாட்டார்கள். க்கம் மட்டுமே மனித இதயத்திற்கு ஈரம் தரவல்லது.

எசேக்கியா பஸ்காவை நியமித்தபோது பலர் தங்களைச் சுத்தம்பண்ணிக் கொள்ளாதிருந்தும் எழுதியிராதபிரகாரமாய்ப் பஸ்காவைச் சாப்பிட்டார்கள். எசேக்கியா, *"தங்கள் இருதயத்தை நேராக்கினவர்கள் பரிசுத்த ஸ்தலத்திற்கேற்ற சுத்தாங்கம் அடையாதிருந்தாலும், கிருபையுள்ள கர்த்தர் அவர்கள் எல்லாருக்கும் மன்னிப்பாராக,"* என்று வேண்டினார். *"கர்த்தர் எசேக்கியாவின் விண்ணப்பத்தைக் கேட்டு, மக்களுக்கு அனுகூலஞ் செய்தார்"* (2 நாளா 30:18,19). மத்தேயுவின் வீட்டில் இயேசு உணவருந்திக் கொண்டிருந்தபோது, போக்கிரிகள் வந்து அவரோடு அமர்ந்தனர். பரிசேயர் பதைத்து இயேசுவின் சீடர்களைத் துளைத்தனர். இயேசு சுடச்சுட பதிலளித்தார்: *"பலியையல்ல, இரக்கத்தையே விரும்புகிறேன் என்பதின் கருத்து இன்னதென்று போய்க் கற்றுக்கொள்ளுங்கள்; நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தேன்,"* என்றார் (மத் 9:13). பாவிகளுக்கு இரக்கம் தேவை என்பதையே அப்படிக் குறிப்பிட்டார். இயேசு பழைய ஏற்பாட்டின் மகனாக வாழ்ந்ததால் பாவிகளோடு நெருக்கமாயிருக்க முடியாது. நியாயப்பிரமாணத்திற்கடியில் பாவிகள் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர். அவர்களுக்கு அரவணைப்போ அன்போ இரக்கமோ கிடையாது. குற்றம்சாட்டும் அவர்கள் ஆவியை இயேசு கண்டித்தார்.

வேறொருமுறை இயேசு விளைந்த நிலம் வழியே தம் சீடருடன் செல்லும்போது பசித்த சீடர்கள் கதிர்களைக் கொய்து தின்றனர். ஓய்வுநாள் சட்டத்தை மீறியதற்காக பரிசேயர் கொதித்தனர். இயேசு மறுபடியும் அதே வசனத்தைச் சுட்டிக்காட்டி, *"பலியையல்ல இரக்கத்தையே விரும்புகிறேன் என்பதின் கருத்து இன்னதென்று அறிந்தீர்களானால், குற்றமில்லாதவர்களை நீங்கள் குற்றப்படுத்தமாட்டீர்கள்,"* என்றார் (மத் 12:7). அவர்கள் பசியாயிருந்தபடியால் சட்டத்தை மீறினாலும் குற்றமற்றிருந்தனர். இங்கும் நியாயத்தீர்ப்புக்கு முன்பாக இரக்கம் மேன்மை பாராட்டுவதைக் காண்கிறோம் (யாக் 2:13). இயேசுவின் இதயம் சட்டத்தின் பக்கமாயல்ல இரக்கத்தின் பக்கமாகவே சாய்வதைக் காணலாம். துலைந்துபோன ஆடுகளுக்காகவே தான் அனுப்பப்பட்டதாக இயேசு கருதினபோதிலும், பிசாசு பிடித்த தன் மகளுக்காக ஒரு கானானியப் பெண் கெஞ்சினபோது அவளை விரட்டிவிடவில்லை (மத் 15:24).

தசமபாகம் எவ்வளவு கொடுக்கவேண்டுமென்று கால்குலேட்டரைப் பார்க்கிறோம்; ஆனால் நியாயப்பிரமாணம் கற்பிக்கிற விசேஷித்தவை

ளாகிய நீதியையும் இரக்கத்தையும் விசுவாசத்தையும் விட்டுவிட்டோமே! த் 23:23). பரிசேயர் முகம்சுளிக்க இயேசு ஓய்வுநாளில் ஒருவரைக் ணப்படுத்தினார். அவர்களுக்கு சட்டமே தெய்வம்; இயேசுவுக்கோ ரக்கமே பிரதானம் (லூக் 6:9).

எந்தச் சட்டத்திற்கும் விதிவிலக்கு உண்டு. சட்டத்திற்காக ஒருவருக்கு ரக்கம் பாராட்டாமலிருப்பதெப்படி ? அடிக்கடி சட்டத்தையும் இரக்கத்தையும் நிலைப்படுத்தும் சூழ்நிலைகள் ஏற்பட்டாலும் மக்களை இரக்கக் ண்களாலேயே பார்க்கப் பழகுவோம். வேலைக்காரன் தன் காலைப் றிக்கொண்டு அழுதபோது அரசன் கடனை மன்னித்தது சட்டத்தை துக்கி இரக்கம் காட்டியதுதான். ஆனால் வேலைக்காரன் தன்னிடம் ன்பட்டவனது தொண்டையை நெரித்து சட்டத்தின்படி சிறைச்சாலையில் ட்டது அரசனிடம் அவன்பெற்ற இரக்கத்தை திவாலாக்கியது.

நான் இரவு ட்யூட்டி செய்துகொண்டிருந்தபோது விபத்தில் காயமுற்ற 10 து சிறுவனை சுயாதீனமற்ற நிலையில் கொண்டுவந்தனர். தலைக்குள் த்தக் கசிவு எனக் கண்டேன். தலையில் ஒரு துளை செய்து இரத்தத்தை வளியேற்றினால் உயிரைக் காப்பாற்றலாம்,. ஆனால் அதற்குரிய புதங்களோ நிபுணரோ அப்போது இல்லை. வேறொரு மருத்துவமனைக்கு த நோயாளியையும் அனுப்பக்கூடாது என்பது எங்கள் மருத்துவமனையின் றுதியான சட்டம். தகப்பனைக் கூப்பிட்டு, விளக்கி, பையனின் அட்டையில், ருத்துவர் ஆலோசனையைக் கேட்காமல் என் விருப்பப்படி எடுத்துச் சல்கிறேன்," என்று எழுதி, தகப்பனின் கையொப்பம் வாங்கினேன். டவென்று பையனை ஆயத்தப்படுத்தி அருகிலுள்ள மருத்துவமனைக்கு னுப்பிவைத்தேன். அடுத்த நாள் தகப்பன் வந்து பையனுக்கு உடனடி அறுவை கிச்சை செய்யப்பட்டு அவன் நன்றாக இருப்பதாகக் கூறிச் சென்றார். ரிவான கீழ்ப்படியாமை!

"தன்னிடத்தில் அன்புகூருகிறதுபோல் பிறனிடத்தில் அன்புகூருகிறது வாங்கதகனம் முதலிய பலிகளைப் பார்க்கிலும் முக்கியமாயிருக்கிறது" ற் 12:33).

உடல் தத்துவம்

விசுவாச சகோதரருக்கு இரக்கம் காட்டுவதை வேதம் வலியுறுத்துகிறது. *ன் **சகோதரரில்** எளியவனான ஒருவன் இருந்தால், எளியவனாகிய உன்*

***சகோதரனுக்கு** உன் இருதயத்தை நீ கடினமாக்காமலும், உன் கையை மூடாமலும் ... கொடுப்பாயாக"* (உபா 15:7).

நாம் கிறிஸ்துவின் உடல், ஒவ்வொரு விசுவாசியும் ஒரு பாகம். *"ஒரு அவயவம் பாடுபட்டால் எல்லா அவயவங்களும் கூடப் பாடுபடும்"* (1கொரி 12:26அ). எளிய விசுவாசி ஒருவரை கிறிஸ்துவின் உடலிலிருந்து அப்புறப்படுத்த முடியாது. பிள்ளைப்பேற்றில் துடிக்கும் ஒருவர் ஆனந்தமாய் பாடிக்கொண்டிருப்பதோ, சிறுநீரகக்கல்லினால் கத்திக்கொண்டிருக்கும் ஆணொருவர் நடனமாடிக் கொண்டிருப்பதோ இயற்கைக்கு மாறானவை. இன்று நடப்பது அதுதானே. அத்தியாவசியத் தேவைகளுடனிருக்கும் விசுவாசிகள் பலரைக் கண்டும் பாராமுகமாயிருக்கிறோமே. அவர்கள் கண்ணீர் வடித்துக்கொண்டிருக்கும்போது நாம் கொண்டாட்டங்களில் குதூகலித்துக் கொண்டிருக்கிறோமே!

ரோம சாம்ராஜ்ஜியத்தைக் கொடிய பஞ்சம் ஆட்டிப் படைத்தது. சீடர்கள் பணம் சேகரித்து யூதேயாவில் குடியிருக்கிற **சகோதரருக்கு** அனுப்பி னார்கள் (அப் 11:29). மக்கெதோனியா விசுவாசிகள், முகம் கறுத்துப்போன ஏழை கிறிஸ்தவர்களின் முகத்தை மலரப்பண்ண தாங்களும் உதவிசெய்ய வேண்டுமென வேண்டிக்கொண்டனர் (2 கொரி 8:3,4). விசுவாசிகளான விதவைகளுக்கென ஆதிச்சபை பராமரிப்புப் பணி செய்தது (அப் 6:1).

யோவான் தனது கடிதத்தில் இத்தத்துவத்தை ஆணியடியாக அடிக்கிறார். *"ஒருவன் இவ்வுலக ஆஸ்தி உடையவனாயிருந்து, தன் **சகோதரனுக்குக்** குறைச்சலுண்டென்று கண்டு, தன் இருதயத்தை அவனுக்கு அடைத்துக் கொண்டால், அவனுக்குள் தேவ அன்பு நிலைகொள்ளுகிறதெப்படி ?"* (1 யோ 3:17). முன்பின் தெரியாத நற்செய்தியாளர்களின் பயணத்தில் அவர்களை பராமரித்த காயுவைப் பாராட்டி தனது மூன்றாம் கடிதத்தில் எழுதுகிறார் யோவான் (3 யோ 3–8). வேறொரு மொழிபெயர்ப்பு இவ்விதமாய்க் கூறுகிறது "அருமை நண்பனே, முன்பின் தெரியாத கிறிஸ்தவ சகோதர சகோதரிகளுக்கு நீ விருந்தோம்பல் அளிக்கும்போது உன் விசுவாசத்தை வெளிக்காட்டுகிறாய். நீ செய்வது நற்செயல்." திருத்தூதுவர் கூட்டங் களுக்காக வரும்போதோ பயணிக்கும்போதோ அவர்களைப் பராமரிப்பதை பாரமாக எண்ணாதீர்கள். ஆசீர்வதிக்கவே ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறோம்.

பின்தங்கியவர் மத்தியில் மனிதாபிமானப் பணி செய்வதை ஆதிச்சபை மேற்கொண்டிருந்தாலும் அவர்களது முதல் கரிசனை விசுவாசக் கூட்டத்தைச் சேர்ந்தவர்களே. "நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத் தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக **விசுவாசக் குடும்பத்தார்களுக்கும்** நன்மை செய்யக்கடவோம்" (கலா 6:10). கவனமாய் சுகபோக வாழ்வைத் தவிர்ப்போமானால் நமது சகோதர சகோதரிகளுக்குக் கொடுக்கப்போதுமானது இருக்கும். வாழ்க்கை முறையை சற்று மாற்றி அமைத்துக் கொண்டால் போதும். ஏன் நாம் பெருகவும் அவர்கள் சிறுகவும் வேண்டும்?

முடிவில்லாத தேவைகளைக் குறித்து காந்திஜீ சொன்னதாவது: "பெருகுவதல்ல, நாமாகவே வேண்டுமென்றே நமது தேவைகளைக் குறைத்துக் கொள்வதே நாகரீகம். மெய்யான சந்தோஷமும் திருப்தியும் நாம் இதனால் அடைவதோடு சேவைத் திறனும் கூடும். விடாமுயற்சியினால் நமது தேவைகளைக் குறைக்கலாம். தேவைகள் குறைந்தால் மகிழ்ச்சி கூடும் — ஆரோக்கியமான உடல், நிம்மதியான மனம்!"

ஆலயத்தில் உட்கார்ந்திருக்கும்போது தேவையிலுள்ளோர் யாரேனும் உண்டோ என்று சுற்றும் முற்றும் பார்த்து அவர்களது வாழ்வு செழிக்க என்ன செய்யலாமென்று யோசியுங்கள். ஏழை விசுவாசிகளுக்குக் கொடுக்கும் உதவியை குறைத்து விலைவாசி உயர்வை நாம் சமாளிக்கக் கூடாது. கடினமான நாட்களை அவர்கள் எப்படிச் சமாளிப்பார்கள் என்று யோசித்து நமது ஈகையைக் கூட்ட வேண்டும்.

சிங்கக் கூட்டம் ஒன்று தனித்தக் காட்டெருமை ஒன்றைத் தாக்குவதை டிஸ்கவரி சானலில் பார்த்தேன். அதைப் பார்த்த எருமைக் கூட்டம் அவ்விடத்திற்கு விரைந்தது. சிங்கங்களைத் தம் கொம்புகளால் ஒவ்வொன்றாகத் தூக்கி எறிந்து விட்டு காயப்பட்ட எருமையிடம் திரும்பின. எருமைகள் போனவுடன் தம் இரையைக் கைப்பற்ற சிங்கங்கள் காத்துநின்றன. எருமைக் கூட்டம் விழுந்து கிடந்த எருமையைச் சுற்றி நின்று அதன் காயங்களை நக்கி அது தன் கால்களில் எழுந்து நிற்க மெல்லவே முட்டி முட்டி எழுப்பின. பின் காயப்பட்ட எருமையை மையத்தில் வைத்து கூட்டமாய் நடந்து சென்றன. இது மாக்களிடமிருந்து மக்கள் கற்கவேண்டிய பாடம்!

3. சிறப்புச் செயல் தத்துவம்

சாதாரணமாய் நாம் செய்வதையல்லாமல் விசேஷித்து செய்யும் அசாதாரணச் செயலை சிறப்புச் செயலெனலாம். உலகம் தேவையுற் றோருக்குச் செய்வது நல்லது. ஆனால் நாம் செய்வது சிறப்பாயிருக்க வேண்டும். அதையே தேவன் எதிர்பார்க்கிறார்.

பாபிலோனியர் இஸ்ரவேலருக்கு ஈவிரக்கம் காட்டாததால் தேவன் பாபிலோனியர் மேல் சினங்கொண்டார். ஆண்டவர் தம் மக்களால் சலிப்படைந்து அவர்களை எதிரிகளது கையில் தண்டனையாக ஒப்புக் கொடுத்தார். ஆனால் அதிலும் கருணை எதிர்பார்த்தார். துக்ககரமாக பாபிலோனியர் ஈவிரக்கமின்றி வயதானவர்களையும் கடுமையாக வேலைவாங்கினர் (ஏசா 47:6).

கைதிகள் கொடூரமாக நடத்தப்பட எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் அங்கும் ஆண்டவர் தயவை எதிர்பார்க்கிறார். அவர்கள் தண்டனைக்குப் பாத்திரர் என்பதால் உலகம் இதை ஒத்துக்கொள்வது கடினம்தான். ஆனால் தண்டனையிலும் கனிவும் மென்மையும் அவசியம்.

இயேசு இப்போதனையை உயர்மட்டத்திற்குத் தூக்கிப் போதித்ததாவது: *"உங்களுக்கு நன்மை செய்கிறவர்களுக்கே நீங்கள் நன்மை செய்தால், உங்களுக்குப் பலன் என்ன ? பாவிகளும் அப்படிச் செய்கிறார்களே. திரும்பக் கொடுப்பார்களென்று நம்பி நீங்கள் கடன்கொடுத்தால் உங்களுக்குப் பலன் என்ன ? திரும்பத் தங்களுக்குக் கொடுக்கும்படியாகப் பாவிகளும் பாவிகளுக்குக் கடன் கொடுக்கிறார்களே. உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள், நன்மை செய்யுங்கள், கைம்மாறு கருதாமல் கடன் கொடுங்கள்; அப்பொழுது உங்கள் பலன் மிகுதியாயிருக்கும், உன்னதமானவருக்கு நீங்கள் பிள்ளைகளாயிருப்பீர்கள்; அவர் நன்றியறியாதவர்களுக்கும் துரோகி களுக்கும் நன்மை செய்கிறாரே. ஆகையால் உங்கள் பிதா இரக்கமுள்ள வராயிருக்கிறதுபோல நீங்களும் இரக்கமுள்ளவர்களாயிருங்கள்"* (லூக் 6:32–36). பிதாவின் தரத்தை எட்ட வேண்டும்!

நமக்கு விஷமமாய் குழிபறிப்பவர்களுக்கு நாம் உதவிக்கரம் கொடுப்போமா அல்லது வசதியாய் மறந்து விடுபவருக்குக் கடன் கொடுப்போமா விஷமியான ஒரு பிச்சைக்காரனுக்குக்கூட நாம் தருமம் செய்வதில்லையே

தாவீதின் வாழ்க்கையைப் படித்து சிறப்புச் செயல்களைக் கற்றுக் கொள்ளுங்கள். எதிரிகளின் பிள்ளைகளை முக்கிய நபர்களைப்போல நடத்துங்கள். உங்களைத் துன்புறுத்துபவரைக் கண்டால் உங்கள் புன்னகை கனிப்பாக மாற வேண்டாம்.

உன்–அயலானை–நேசித்து–உன்–எதிரியைப்–பகைப்பாயாக யுகத்திலும் கூட, உன் பகைவனின் கைபேசி கிடப்பதைக் காண்பாயானால் அதை அவரிடம் ஒப்படை, வழியில் அவரது வாகனம் நின்றுபோய் திணறிக்கொண்டிருப்பாரானால் உதவி செய் என்பதே தேவனது அறிவுறுத்தல் (யாத் 23: 4,5).

சாலொமோனும் இதைத்தான் போதிக்கிறார்: *“உன் சத்துரு பசியாயிருந்தால், அவனுக்குப் புசிக்க ஆகாரங் கொடு; அவன் தாகமாயிருந்தால், குடிக்கத் தண்ணீர் கொடு. கர்த்தர் உனக்குப் பலனளிப்பார்”* (நீதி 25:21,22). தாவீது சவுலைத் தப்பவிட்டதும் அவரது மரணத்திற்குப் பிறகு அவரது மகன் மேவிபோசேத்தைப் பராமரித்ததும் சிறப்புச் செயல்களாகும். *“நீ தீமையினாலே வெல்லப்படாமல் தீமையை நன்மையினாலே வெல்லு”* (ரோ 12:21). எதிரிகள் உண்டோ? அவருக்காவது அவரது குடும்பத்திற்காவது உதவிசெய்ய தருணத்தை எதிர்நோக்கியிருங்கள். அதுவே தேவனுக்குப் பிரீதியாயிருக்கும்.

“எல்லாரும் கைவிடும்போது கையைப் பற்றிக்கொள்பவனே மெய் நண்பன்,” என்றார் வால்டர் வின்சல். உலகம் ‘யூஸ்லெஸ்’ என்று குப்பையில் எறிந்தவர்களைத் தேடி அரவணையுங்கள். கண்ணியமாய் அவர்கள் வாழ வழிவகுங்கள். “இயேசுவைத் தவறான இடங்களில் தேடுகிறோம். அவர் மாறுவேடத்தில் தெருக்களைச் சுற்றிக் கொண்டிருக்கிறார்,” என்றெழுதுகிறார் பிலிப் யான்சி. அவரை அடையாளம் கண்டுகொள்ளத் தவறிவிட வேண்டாம்.

4. சமநிலைத் தத்துவம்

கானானியருக்கு சமநிலைப் பிரமாணமே கிடையாது. ஏழைகள் செல்வந்தருக்கு அடிமைகள். தம் மக்கள் கானானில் குடியேறியபோது அவர்களும் அப்படியாகிவிடுவதை கர்த்தர் விரும்பவில்லை. ஆகவே யாரும் தம் நிலத்தை நிரந்தரமாக விற்கக்கூடாது என்பதைச் சட்டமாக்கினார் (லேவி 25:23). இந்தச் சட்டத்தினால் இஸ்ரவேலர் எவரும் நிலமற்றவராவது தவிர்க்கப்பட்டது. நிலம் சமமாகப் பகிர்ந்தளிக்கப்பட்டதால் ஏற்றத்தாழ்வு

குறைக்கப்பட்டது. இஸ்ரவேலர் இந்தச் சட்டத்தை மீறினபடியால் ஏற்றத் தாழ்வ அதிகமானது. நெகேமியா தலையிட்டு சமநிலையை நிலைநாட்ட வேண்டியதாயிற்று (5:1–13). இப்படியாக நெகேமியா ஏழை யூதர்களின் சமூக நிலையை உயர்த்தினார்.

தத்துவம் தெள்ளத்தெளிவாயிருக்கிறது. சிலர் அதிகமாகவும் சில குறைவாகவும் மன்னா சேகரித்தனர். ஆனால் அளந்தபோதோ யாவருக்கும் சமமாயிருந்தது. நமது விளைச்சல்களை ஏழைகளோடு பகிர்ந்துகொள்ள தேவன் எதிர்பார்க்கிறார். இதனால் பணக்காரர் சீமான்களாவதையும் ஏழைகள் தரித்திரராவதையும் தவிர்க்கலாம். வாய்ப்பேச்சை விட்டுவிட்டு கைவரிசையை காட்டுவோம். போவோர் வருவோர் முருங்கை இலைகளைப் பறித்ததினால் தன் சுற்றுச்சுவருக்கு வெளியே இருந்த முருங்கைக் கிளைகளைத் தரித் விட்டதாக ஒரு சகோதரி கூறியபோது வருத்தமானேன். பறித்தாலென்ன நல்ல உணவல்லவா அது. தெருவில் செல்லும் எந்த மிராசுதார் உங்க முருங்கைக் கீரையைப் பறிக்கப்போகிறார் ? ஏழைகளை ஏன் தன செய்கிறீர்கள் ? உங்கள் சுற்றுச்சுவருக்கு அருகேயுள்ள கொய்யா அல்ல கருவேப்பிலை மரம் ஏழைகளைப் போஷிக்கட்டுமே. தேங்காய் சுற்றுச்சுவருக் வெளியே விழுந்தால் எடுக்கப் பாயாதீர்கள். லேவியராகமம் 19:9,10இ கருத்து அதுதான்.

சமநிலையின் தேவையை அடிக்கோடிட்டு விளங்கும்படியா திருமுழுக்கினன் யோவான் மக்களுக்குப் போதித்தார்: *"இரண் அங்கிகளை உடையவன் இல்லாதவனுக்குக் கொடுக்கக்கடவன்; ஆகாரத் உடையவனும் அப்படியே செய்யக்கடவன்"* (லூக் 3:11). இரண்டே உடைகள உடையவன் நம்மைப் பொறுத்தவரை ஏழைதான். அவனும்கூட ஒன்றுமில்ல வனை விடப் பணக்காரனாயிராதபடிக்கு ஒன்றைக் கொடுத்துவி வேண்டுமாம். அதிகாரத்தோடு யோவான் எப்படி இப்படிப் போதிக்க முடிந்தது ஏனெனில் அவர் தன்னிச்சையாக தனது வசதியான ஆசாரியர் வீட் விட்டுவிட்டு எளிமையான வனாந்திர வாழ்வைத் தெரிந்துகொண்டார். பண துணி மற்றும் உணவுக்கான இச்சைகளை மேற்கொண்டுவிட்டபடிய தைரியமாக அதைப் பிரசங்கிக்க முடிந்தது.

போதுமான துணிமணிகள் இருந்தால் மேலும் வாங்காதீர்கள். எதுவு அதிகமாக இருந்தால் எளியவருக்குக் கொடுத்துவிடுங்கள். தேவை

மிஞ்சியிருந்தால், மகாத்மா காந்தி நம்பினதென்னவெனில்: மிஞ்சியிருப்பது உங்களுடையதல்ல, அது வறியவருக்கு பகிர்ந்தளிக்கப்படவேண்டியது என்பதே. எதுவுமே இரண்டு தேவையில்லையே. இரண்டு கைக் கடிகாரங்கள், இரண்டு ஜோடி பாதரட்சைகள், தங்கச் சங்கிலிகள், வீடுகள் எதற்கு? எளிமையாய் வாழுங்கள். உடைகளானாலும் ஷூக்களானாலும் விலையேறப் பெற்ற கம்பெனி பொருட்களை வாங்குவதைவிட்டு சற்று மலிவான, தரமான அதே பொருளை வாங்கலாமே. அல்லது, நமது ரசனைக்கேற்றதாக இல்லாவிட்டாலும் பிறர் ஈவாகக் கொடுத்தவற்றைப் பயன்படுத்தலாம். ‘நான் விரும்புவது எனக்கு இப்பவே வேண்டும்’ என்றப் பிடிவாத ஷாப்பிங் ஆவியை மேற்கொள்ளுங்கள். பணமிருப்பதினால் செலவழிக்கவேண்டும் என்பதில்லை. பங்களா கட்ட பணத்தை வீசாதீர்கள். உங்கள் தேவைக்கேற்ற எளிய வீடாகக் கட்டுங்கள். கொண்டாட்டங்கள் சாதாரணமாக இருக்கட்டும்.

“தாங்கள்மாத்திரம் தேசத்தின் மையத்தில் வாசமாயிருக்கும்படி மற்றவர் களுக்கு இடமில்லாமற்போகுமட்டும், வீட்டோடே வீட்டைச் சேர்த்து, வயலோடே வயலைக் கூட்டுகிறவர்களுக்கு ஐயோ!” (ஏசா 5:8). சாப்பாடு, உடை தட்டுப் பாடில்லாதிருந்தால் திருப்தியாயிருப்போம். நில அபகரிப்பு வழக்குகள்தான் எத்தனை! பணக்காரர் இன்னும் பணக்காரராகப் பேராசைப்படாமல் ஏழைகளின் நிலையைக் கொஞ்சமாவது உயர்த்தலாம். ஒன்றிரண்டு குடும்பங்களைத் தெரிந்தெடுத்து அவர்களைத் தூக்கிவிடுங்கள் — அது உங்கள் பணியாட்களாக இருக்கலாம். உலகமே பொருளாதாரச் சரிவைச் சந்தித்துக் கொண்டிருக்கும்போது இல்லாதோரின் நிலை என்ன?

ஆதித் திருச்சபை இத்தத்துவத்தைச் செயல்படுத்தியது: *“விசுவாசி களெல்லாரும் ஒருமித்திருந்து, சகலத்தையும் பொதுவாய் வைத்து அநுபவித் தார்கள். காணியாட்சிகளையும் ஆஸ்திகளையும் விற்று, ஒவ்வொருவனுக்கும் தேவையானதற்குத்தக்கதாக அவைகளில் எல்லாருக்கும் பகிர்ந்து கொடுத்தார்கள்”* (அப் 2:44,45; 4:32). இன்று இதைக் கடைபிடிக்க முடியுமா? இந்தக் கேள்வி உலகனைத்திலுமுள்ள சிந்தனையாளர்களை கலக்கிவிட்டி ருக்கிறது. கீழேத் தள்ளப்பட்டவர்களை கண்ணியமாக வாழவைப்பதே நோக்க மாகும். இது நடைமுறைக்கடுத்ததாகத் தெரியாவிட்டாலும் பின்னாட்களில் பவுல் நடைமுறைப்படுத்தி விளக்குகிறார்: *“மற்றவர்களுக்குச் சகாயமும் உங்களுக்கு வருத்தமும் உண்டாகும்படியல்ல,* ***சமநிலையிலிருக்கும்***

படியாகவே சொல்லுகிறேன். ***சமநிலைப் பிரமாணத்தின்படியே,*** *அவர்களுடைய செல்வம் உங்கள் வறுமைக்கு உதவும்படிக்கு இக்காலத்திலே உங்களுடைய செல்வம் அவர்களுடைய வறுமைக்கு உதவுவதாக"* (2 கொரி 8:13–15).

திருமுழுக்கினன் யோவான் சாமியாரைப்போல வாழ்ந்தார். இயேசுவோ சாதாரணமாக, ஆனால் எவ்வளவு எளிமையாக வாழமுடியுமோ அவ்வளவு எளிமையாக வாழ்ந்தார். ஒவ்வொருவரும் நமக்குப் பொருத்தமான வாழ்க்கைத் தரத்தைத் தெரிந்துகொள்ளவேண்டும். மற்றவர்கள் வசதியாக வாழ நாம் வியர்த்துக்கொட்டத் தேவையில்லை; ஆனால் பவுல் சொல்வதுபோல தாராளமாக, இப்போ இருப்பதைவிட கூடுதல் தாராளமாக இருப்போம் — இன்னும் கொஞ்சம் தியாகம், இன்னும் கொஞ்சம் கவனம்.

வலிக்கும்வரை கொடுப்போம் என்றச் சந்தர்ப்பச் சூழலில்தான் பவுல் இயேசுவின் ஈகையைக் குறித்துப் பேசுகிறார்: *"அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு, உங்கள் நிமித்தம் தரித்திரரானாரே"* (2 கொரி 8:9). நமது வாழ்க்கை மாறும்வரைக் கொடுப்போம், வலிக்கும்வரைக் கொடுப்போம்!

கோடிக்கணக்கானோரைப் போஷிக்கப் போதுமான உணவில்லாததினால் ஏழைகள் பட்டினியாயிருக்கின்றனர் என்றக் கட்டுக்கதையை மக்கள் நம்புகின்றனர். உண்மை என்னவென்றால், நம்மெல்லாருக்கும் போதுமானதும் அதற்குக் கூடுதலாகவுமே இருக்கிறது. அநியாயமான உணவு பகிர்ந்தளித்தலே ஏழ்மைக்குக் காரணம். நமது கண்முன்னே இருக்கும் வறுமையை சட்டை செய்யாமலிருப்பதற்கும், வீணடிக்கப்படும் அல்லது சுகபோகமாய் வீசி எறியப்படும் ஒவ்வொரு பைசாவிற்கும் நாம் தேவனுக்குக் கணக்கு கொடுக்கவேண்டும்.

மேசையிலிருக்கும் எந்த உணவை சாப்பிடுவது என்று தீர்மானிக்க முடியாமலிருப்போமானால் அதிகமாக சமைக்கிறோம் என்று அர்த்தம். வேண்டாமென்று ஒரு உணவைத் தள்ளுகிறீர்களென்றால் என்னோடுகூட வாருங்கள், நமது நாய்க்குப் போடும் உணவை உண்ண ஏங்கிக் காத்திருக்கும் ஒரு கூட்டத்தை உங்களுக்குக் காட்டுகிறேன்.

ஏழைகளுக்குக் கொடுக்கிறோம், ஆனால் நமது தரம் அப்படியேதானே இருக்கிறது. நமது தரத்தைச் சற்றுக் குறைத்து அவர்களை உயர்த்து வோமானால் நலம். இப்பொழுதெல்லாம் தாழ்ந்த வாழ்வு, உயர்ந்த சிந்தனை கிடையாது; மாறாக உயர்ந்த வாழ்வும் தாழ்ந்த சிந்தனையுள்ளவர்களாக இருக்கிறோம். பணக்காரராகிவிட்டு வருத்தத்தை உணருகிறோம். அதைவிட வருத்தமாகிவிட்டு பணக்காரராக உணரலாமே!

ஆகவே வலிக்கும்வரை உதவுங்கள். ஆனால் வரம்பை மீறிவிடாதீர்கள். குடும்பத்தை மனரம்மியமாகக் காத்துக்கொள்ளுங்கள். "இன்று எல்லோரும் வெளியே சாப்பிடலாம் வாங்க," என்று துணைவர் அழைக்கும்போது, "அந்தப் பணத்தை ஏழைகளுக்குக் கொடுக்கலாமே," என்று சொல்லாதீர்கள். இயேசு நளத தைலத்தை மனதாரப் பெற்றுக்கொண்டார். பிலிப் யான்சி சொல்லுகிறார்: "மற்றவர்களை கவனிக்கும்படியாக உங்களை கவனித்துக் கொள்ளுங்கள். இரத்தக் கண்ணீர் வடிக்கும் இருதயம் இரத்தம் வடிந்து செத்துவிடுமானால் அது யாருக்கும் பயனில்லையே." ஒவ்வொருவரும் நாம் ஆழ்ந்து சிந்தித்து, விவரங்களை அலசிப்பார்த்து நமது மனச்சாட்சியின் படியே செயல்பட வேண்டும்.

5. மனித உரிமைத் தத்துவம்

நாம் பிறக்கும் முன்பாகவே சில உரிமைகளை உடையவர்களாயி ருக்கிறோம் — தாயின் கர்ப்பத்திலிருந்தே வயிற்றிலுள்ள குழந்தைக்கு வாழ உரிமையுண்டு. ஆனால் அவை மனிதராகக் கருதப்படுவதில்லை. ஆயிரக்கணக்கான சிசுக்கள் அனுதினமும் கொல்லப்பட்டு காக்கைக ளுக்கும் எலிகளுக்கும் நாய்களுக்கும் குப்பைத் தொட்டியில் வீசப்படுகின்றன. இது மனித உரிமை மீறலாகும். பிறவாத குழந்தையின் உரிமைக்காக தனிநபர்களும் குழுக்களும் போர்புரிந்து கொண்டிருக்கின்றனர்.

பிள்ளைகளுக்கும் உரிமைகள் உண்டு. அவை காற்றில் எறியப்ப டுகின்றன. சரியான கல்வி, உணவு, உடை, சுதந்திரம் பெற அவர்களுக்கு உரிமை உண்டு. ஆயிரக்கணக்கானப் பிள்ளைகள் துர்பிரயோகத்திற்கும் கவனிப்பின்மைக்கும் வேதனைக்கும் தங்கள் வீட்டிலேயே ஆளாகின்றனர். சிலர் தம் பெற்றோராலேயே கொடுமையாக கச்சையினால் அடிக்கப் படுகின்றனர். பெண் பிள்ளைகளே அதிகமாகப் பாதிப்படைந்து உணவையும் கல்வியையும் இழக்கின்றனர். பலர் பாலுறவு துர்பிரயோகத்திற்கு ஆளாகி

பேராசையுள்ள ஆண்கள் கையில் சிக்கித் தவிக்கின்றனர். நமது அயலகத்தில் இப்படியொரு நிலையைக் காண்போமானால் என்ன செய்வோம்? ஏதாவது செய்வோமா அல்லது அந்தக் கெட்ட ஆசாரியனைப்போலவும் லேவியனைப் போலவும், நமக்கு ஏன் இந்த வம்பு என்று சிக்கலை விட்டு பக்கமாய் விலகிப் போவோமா? தலையிட்டு ஒரு பிள்ளையைப் பாதுகாப்பது ஆபத்தான வேலைதான். ஆனால் அது நமது வேலையல்லவா? இதையெல்லாம் வேறுக்கவே முடியாது என்று நினைத்துவிடாதீர்கள்.

"ஊமையனுக்காகவும் திக்கற்றவர்களெல்லாருடைய நியாயத்துக்காகவும் உன் வாயைத் திற. உன் வாயைத் திறந்து, நீதியாய் நியாயந்தீர்த்து, சிறுமையும் எளிமையுமானவனுக்கு நியாயஞ்செய்" (நீதி 31:8,9).

பிள்ளைகளை மக்களாக மதிக்கிறோமா? அவர்களது உணர்வுகளையும் நாம் சிந்திக்கவேண்டும். பெற்றோருக்கு எதிராக அவர்களுக்கு வலிமை கிடையாதாகையால் அவர்களைப் பேச்சினாலும் அடித்தும் அவமதிப்பது சுலபம். நண்பர்முன் அவர்களை வெட்கப்படுத்துதல், அவர்களது தவறுகளை எள்ளி நகையாடுதல், அவர்களது தோற்றத்தைக் கிண்டல் செய்தல் போன்றவை துன்புறுத்தல்களாகும்.

இயேசு பிள்ளைகளை மதித்து அவர்களுக்காகப் பரிந்து பேசினார் (லூக் 18:15). பிள்ளைகளைக் கொண்டுவந்த பெற்றோரை சீடர்கள் விரட்டினர் அக்குழந்தைகள் சற்றுப் பெரியவர்களாயிருந்திருந்தால் கேள்வி கேட்டிருப்பர் அவர்களுக்காகப் பேச ஒருவர் தேவைப்பட்டபோது இயேசு தம் சத்தத்தை உயர்த்தினார். நாமும் பிள்ளைகளைப் பார்த்துக் கத்துகிறோம், அதட்டு கிறோம், விரட்டுகிறோம். பையன்கள்தான் முக்கியம் என்று நினை போமானால் நமது எண்ணத்தை மாற்றிக்கொள்ளவேண்டும்.

நமது அயலகத்தில், மழலையர் பள்ளியில், மற்றும் பள்ளிகளி துன்புறுத்தல்களுக்கு விழிப்பாயிருந்து துன்புறும் பிள்ளைக்கு ஆன உத செய்யவேண்டும். பொறுப்பில் உள்ளவர்களை உஷார்படுத்துவது நம கடமை. பிள்ளை ஒன்றைத் துன்புறுத்துபவருக்கு இயேசு எத்தனை பயங்கரமான தண்டனை கூறினார்! பிள்ளைகளைத் துன்புறுத்தாமலு துன்புறுத்தலை கண்சாடையாய் விடாமலும் இருப்போமாக (மத் 18:6 பிள்ளைகளை துன்புறுத்துபவர்களை சிறையிலடைத்து சாவியை

தொலைத்துவிடவேண்டும். துன்புறும் பிள்ளையைக் குறித்து அறிவிக்க 1098ஐ தொலைபேசியில் அழைக்கலாம் அல்லது அந்தப் பிள்ளையையே அவ்வெண்ணில் பேச ஊக்குவிக்கலாம்.

துன்புறுத்தப்படும் பெண்களைக் குறித்து தினமும் வாசிக்கிறோம். கேள்விப்படுவோமானால், தலையிட்டு அதை ஒரு முடிவிற்குக் கொண்டுவர நமக்கு முதுகெலும்பு தேவை. நான் செய்தித்தாளில் வாசித்த ஒரு வாக்கியம், "ஒரு பெண் தான் அடிவாங்கத் தேவையில்லை, தன்னை யாரும் அடிக்கமுடியாது, எல்லாருக்கும் உரிய உரிமை தனக்கும் உண்டு என்பதை அறிந்திருக்கவேண்டும்." உங்கள் பகுதியில் வீட்டு வன்முறை அல்லது தன்மானக் கொலை (honour killing) உண்டா என்று சிந்தித்துப் பாருங்கள். அதைக் குறித்து என்ன செய்யலாம் என்று திட்டமிடுங்கள்.

வீட்டு வன்முறைக்கு இரையாவோர் அமைதியாய் துன்பமனுபவிக்கத் தேவையில்லை. சட்டம் உங்கள் பக்கம். *வீட்டு வன்முறையிலிருந்து மகளிர் பாதுகாப்புச் சட்டம்* (The Protection of Women from Domestic Violence Act — PWDVA) உங்களைப் பாதுகாக்கும். இதிலும் பல ஓட்டைகள் உண்டு. ஆனால் விடுதலைக்கும் நியாயத்திற்கும் தற்போது சிறந்தது இதுவே.

மனித உரிமை மீறலுக்குச் சரியான வேத எடுத்துக்காட்டு நாபோத். இஸ்ரவேலின் பொல்லாத அரசன் ஆகாப், தனது அரண்மனையை ஒட்டியிருந்த நாபோத்தின் கீரைத் தோட்டத்தை வாங்க விரும்பினார். அது பாரம்பரியச் சொத்தானதால் நாபோத் அதை விற்க மறுத்துவிட்டார். கோபமும் எரிச்சலுமடைந்த ஆகாபிடம் அவரது துஷ்ட மனைவி யேசபேல், "இஸ்ரவேலின் இராஜாவா இப்படி நடந்துகொள்வது ?" என்று சொல்லி நாபோத்தைக் கொலைசெய்ய ஒழுங்கு செய்தாள். அதிகாரத்தின் சிம்மாசனத்தில் வீற்றிருப்பதினால், நமது விருப்பப்படி மக்களை ஆட்டிப் படைக்க நமக்கு உரிமை கிடையாது. ஒவ்வொருவரது உரிமையும் மதிக்கப்பட வேண்டும்.கர்த்தரின் வார்த்தையை ஆகாபுக்கு எலியா உரைத்தார், *"நாய்கள் நாபோத்தின் இரத்தத்தை நக்கின இடத்திலே உன்னுடைய இரத்தத்தையும் நாய்கள் நக்கும்."* அது சீக்கிரமே நடந்தேறியது (1 இரா 21).

பின்வரும் திருவசனங்களைக் கவனியுங்கள் —

"ஏழைகளின் நியாயத்தைப் புரட்டுகிறவர்களுக்கு ஐயோ" (ஏசா 10:1,2).

"எளியவர்களின் நியாயத்தைத் தீரார்கள். இவைகளை விசாரியாதிருப்பேனா ?" (எரே 5:28,29).

"மனிதருடைய நியாயத்தைப் புரட்டுகிறதையும், மனிதனை அவனுடைய வழக்கிலே மாறுபாடாக்குகிறதையும், ஆண்டவர் காணாதிருப்பாரோ ?" (புல 3:35,36).

"சாட்சியாகிய ஒருவன், இடப்பட்ட ஆணையைக் கேட்டிருந்தும், தான் கண்டதையும் அறிந்ததையும் தெரிவியாதிருந்து பாவஞ்செய்தால், அவன் தன் அக்கிரமத்தைச் சுமப்பான்" (லேவி 5:1).

6. அன்புத் தத்துவம்

"எனக்கு உண்டான யாவற்றையும் நான் அன்னதானம் பண்ணினாலும் ... அன்பு எனக்கிராவிட்டால் எனக்குப் பிரயோஜனம் ஒன்றுமில்லை" (1கொரி 13:3).

அன்பற்ற ஈகையை பவுல் விசிறியடிக்கிறார். நமது நற்செயல்களுக்குப் பின்னான நமது உள்நோக்கை ஆராய்வது நல்லது. நரகத்திற்குப் பயந்தா ? செய்தித்தாளில் இடம்பிடிக்கவா ? யாரோடும் போட்டியிடவா ? சமூக சேவையா ? அல்லது நமக்குக் கொடுக்கப்பட்ட கடமை என்று செய்கிறோமா ? மக்களைப் போஷிக்கும் முன்பாக இயேசு மனதுருகினார்.

இயேசு சொல்லிவிட்டாரேயென்று நமது விரோதிகளுக்கு நன்மை செய்வது எளிது. ஆனால் சத்துருக்களைச் சிநேகிப்பதா ? முடியுமா அது ? அன்பு மாயமற்றதாய் இருக்கவேண்டுமானால் அது உன்னதத்திலிருந்து வரவேண்டும். களங்கமற்ற அன்புடன் நமது எதிரிகளுக்கு நன்மை செய்யவேண்டும். இயேசு, *"உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள், நன்மை செய்யுங்கள் ... அப்பொழுது உங்கள் பலன் மிகுதியாயிருக்கும். உன்னதமானவருக்கு நீங்கள் பிள்ளைகளாயிருப்பீர்கள்,"* என்று சொல்லும்போது தமது விரலை நமது பிரச்னையில் வைக்கிறார் (லூக் 6:35). இப்படிப்பட்ட அன்பு நம்முடைய இருதயங்களில் கொழுந்து விட்டெரியவேண்டுமானால், பரிசுத்த ஆவியினாலே நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிற தேவனுடைய அன்பு தூண்டிவிடப்படவேண்டும் என்று இறைவனது பாதத்தைப் பற்றி மன்றாடவேண்டும். எந்த நற்செயலையும் செய்ய அன்பு குனியும், ஏனெனில் *"அன்பு தயவுள்ளது"* (1 கொரி 13:4).

இதயத்தில் அன்பில்லையானால் மோசமான இருதய நோயுடையவர்கள் நாம். உங்கள் பிள்ளையின் பிறந்தநாளன்று அரசு மருத்துவமனையின் சிறுவர் வார்டிலுள்ள நோயாளிகளுக்குப் பரிசுகள் கொடுத்து வாருங்கள். உங்கள் பிறந்தநாள் அன்று பொது வார்டுக்கும் உங்கள் பெற்றோர் பிறந்த நாளன்று ஒரு முதியோர் இல்லத்திற்கும் சென்று அவர்களை மகிழ்வித்து மனஇருள் நீக்கி வரலாம்.

நினிவே மக்கள் துன்மார்க்கராயிருந்தும் தேவன் அவர்களை நேசித்தார். அவரது குரலுக்கு செவிசாய்த்து அவர்கள் மனந்திரும்பியபோது அவர் குறித்த தண்டனையை நிராகரித்தார். யோனா எரிச்சலடைந்து, சீறி, *"...நீர் இரக்கமும் மன உருக்கமும், நீடிய சாந்தமும் மிகுந்த கிருபையுமுள்ளவரும், தீங்குக்கு மனஸ்தாபப்படுகிறவருமான தேவனென்று அறிவேன். இப்போதும் கர்த்தாவே, என் பிராணனை என்னைவிட்டு எடுத்துக்கொள்ளும்; நான் உயிரோடிருக்கிறதைப் பார்க்கிலும் சாகிறது நலமாயிருக்கும்,"* என்று விண்ணப்பம் பண்ணினார் (4:1–3). இந்த அன்புதான் வலதுகைக்கும் இடதுகைக்கும் வித்தியாசம் தெரியாத 1,20,000 மக்களைக் காப்பாற்றியது. அவரது அன்புதான் என்னே! நமது வம்புதான் என்னே!

துக்கப்படுகிறவர்களுடனே துக்கப்படுதல் நற்செயல்தான். இயேசு சாவு வீட்டிற்குச் சென்று 'தலையைக் காட்டிவிட்டு' நழுவிவிடவில்லை. *"இயேசு கண்ணீர் விட்டார்."* மக்கள் அவரது அன்பைக் கண்கூடாகக் கண்டனர் (யோ 11: 35,36).

நல்ல சமாரியன் உவமையின் மையம் அன்பே. *"பிறனிடத்தில் அன்பு கூரு,"* என்ற உறவாடலில் முளைத்த கதை இது. ஆசாரியனுக்கோ லேவியனுக்கோ அடிபட்டவன்மேல் அன்பு கிடையாது. அவனுக்கு உதவிசெய்து விடுதிக்குத் தூக்கிச் சென்று இரவெல்லாம் கண்விழித்துப் பார்த்து செலவழிக்கும் அளவிற்கு அவனை நேசித்தது ஒரு சமாரியனே. கடமை உணர்வோடுகூட அன்பால் தோய்ந்த இதயம் அவசியம் (லூக் 10:27).

ரெம்யா ராஜப்பா (24) மற்றும் வினிதா (23) என்ற கேரளா தாதியர் தம் நோயாளிகளுக்கு எவ்வளவோ உதவி செய்தனர். ஆனால் கொல்கொத்தா மருத்துவமனை தீ விபத்தில் தம் உயிரையே அவர்களுக்காக தியாகம் செய்தது, அவர்கள் தம் பணியை அன்பினாலே செய்தனர் என்பதை நிரூபித்தது. நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காகத் தன் உயிரைக் கொடுக்கிறான் என்றார் இயேசு.

அன்பும் நற்செயல்களும் இணைபிரியா இரட்டையர் என்பதை எபிரெயர் புத்தக ஆக்கியோனின் எழுத்துக்களில் காணலாம்: ***"அன்புக்கும் நற்செயல் களுக்கும்*** *நாம் ஏவப்படும்படி ஒருவரையொருவர் கவனித்து..."* (10:24). அன்பு ஓட்டுனர் இடத்தில் உட்கார்ந்தால் நற்செயல்கள் பின்தொடர்ந்து வரும். அன்பின் திருத்தூதுவர் இவ்வாறு எழுதுகிறார்: *"ஒருவன் இவ்வுலக ஆஸ்தி உடையவனாயிருந்து, தன் சகோதரனுக்குக் குறைச்சலுண்டென்று கண்டு தன் இருதயத்தை அவனுக்கு அடைத்துக் கொண்டால், அவனுக்குள் தேவ அன்பு நிலைகொள்ளுகிறதெப்படி ? என் பிள்ளைகளே, வசனத்தினாலும் நாவினாலுமல்ல, செயலினாலும் உண்மையினாலும் அன்புகூரக்கடவோம்"* (1 யோ 3:17,18). நமது பணத்தையோ பொருளையோ சுலபமாக ஏழைகளுக்குக் கொடுத்துவிடலாம். ஆனால் இந்த சமூகச் சிக்கலை அன்பினால் போராடி வெல்வதே தேவனது இதயத்தைத் தொடும். குளிர்காலப் பனியில் எத்தனையோ பேர் உயிரிழக்கின்றனர். வசதியுள்ள ஒவ்வொரு கிறிஸ்தவனும் அபயமிடும் தன் அயலான் சத்தம் கேட்டு சில கம்பளிகளைக் கொடுத்தால் இப்படிப்பட்ட அவலத்தைத் தவிர்க்கலாமே. நமது கைகள் மறைமுகமான கொலைகளால் இரத்தக்கறை படிந்திருக்கிறது.

நமது துணைவருக்கு பல நன்மைகளைச் செய்யலாம். அதைக் கடமைக்காகவா அல்லது அன்பினாலா செய்கிறோம் என்பதைச் சரிபார்ப்பது நல்லது. இந்தச் சந்ததி பிள்ளைகளுக்கும் வாலிபருக்கும் நிறைய அன்போடுகூட உறுதியான கண்டிப்பும் தேவையென்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

ஞானமுள்ள மருத்துவர் ஒருவர் இப்படிச் சொன்னார்: "எனது 30 ஆண்டுகால வைத்தியத்தில் பல மருந்துகள் கொடுத்திருக்கிறேன். ஆனால் மனிதருக்குச் சிறந்த மருந்து கரிசனையும் அன்பும் என்பதையே கண்டு பிடித்திருக்கிறேன்." "அது வேலை செய்யாவிட்டால்?" என வினவினார் ஒருவர். அவர் புன்முறுவலோடு பதிலளித்தார், "டோசைக் கூட்டுங்கள்!"

7. திரும்பி வரும் தத்துவம்

நாமும் ஒரு நாள் மற்றவரது இரக்கத்தை நாடி நிற்க வேண்டிவரும். சாலையில் அடிபட்டுக் கிடக்கும் உங்களுக்கு யாரும் உதவிசெய்ய வராத நிலையைக் கற்பனைசெய்து பாருங்கள். பிறர் உங்களுக்கு என்ன

செய்யவேண்டுமென்று விரும்புகிறீர்களோ அதை நீங்கள் பிறருக்குச் செய்யுங்கள். முன்னெச்சரிக்கையாக இப்போதே இரக்கம் காண்பிப்போம். "இரக்கம் உள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் இரக்கம் பெறுவார்கள்" (மத் 5:7).

நாம் செல்வந்தராய் இருந்தால் யாருடைய உதவியும் நமக்குத் தேவையில்லையென்று நினைக்க வாய்ப்புண்டு. பிளேட் திரும்பலாமே. ஒருவருக்கொருவர் உதவிசெய்வதே வேதப்பிரமாணம் (சக 7:9). இவ்வாழ்க்கையில் ஒவ்வொருவருக்கும் துன்பமெனும் அல்வாவில் ஒரு துண்டு கிடைக்கத்தான் செய்யும். ஆகவே ஆயத்தமாயிருப்போம். ரூத் தன் மாமியாருக்கு இரக்கம் பாராட்டினாள்; பிறரிடம் இரக்கம் பெற்றாள்.

தயையுள்ள மனிதன் தன் ஆத்துமாவுக்கு நன்மை செய்துகொள்ளுகிறான் என்பது உண்மையே (நீதி 11:17). *"எவன் தண்ணீர் பாய்ச்சுகிறானோ அவனுக்குத் தண்ணீர் பாய்ச்சப்படும்"* (நீதி 11:25). *"ஏழையின் கூக்குரலுக்குச் செவியை அடைத்துக் கொள்ளுகிறவன், தானும் சத்தமிட்டுக் கூப்பிடும்போது கேட்கப்படமாட்டான்"* (நீதி 21 :13).

பிறருக்கு உதவுவதினால் நமக்கே உதவுகிறோம். ஆனால் நமது உள்நோக்கு அதுவாக இருக்கக்கூடாது. தான் விரும்பும் உபவாசத்தைக் குறித்து ஆண்டவர் தம் உள்ளத்தைத் திறக்கிறார்: *"அக்கிரமத்தின் கட்டுகளை அவிழ்க்கிறதும், நுகத்தடியின் பிணையல்களை நெகிழ்க்கிறதும், நெருக்கப்பட்டிருக்கிறவர்களை விடுதலையாக்கிவிடுகிறதும், சகல நுகத்தடிகளையும் உடைத்துப்போடுகிறதும், பசியுள்ளவனுக்கு உன் ஆகாரத்தைப் பகிர்ந்து கொடுக்கிறதும் துரத்துண்ட சிறுமையானவர்களை வீட்டிலே சேர்த்துக்கொள்ளுகிறதும் ஆடையில்லாதவனைக் கண்டால் அவனுக்கு ஆடை கொடுக்கிறதும், உன் மாம்சமானவனுக்கு உன்னை ஒளிக்காமலிருக்கிறதும் அல்லவோ எனக்கு உகந்த உபவாசம்."* கடவுள் அதோடு நிறுத்திவிடவில்லை. மேற்கண்டவைகளைச் செய்கிறவருக்கு வரும் ஆசிகளை வரையறுக்கிறார்: *"அப்பொழுது விடியற்கால வெளுப்பைப் போல உன் வெளிச்சம் எழும்பி, உன் சுகவாழ்வு சீக்கிரத்தில் துளிர்த்து, உன் நீதி உனக்கு முன்னாலே செல்லும்; கர்த்தருடைய மகிமை உன்னைப் பின்னாலே காக்கும். அப்பொழுது நீ கூப்பிடுவாய்; கர்த்தர் மறு உத்தரவு கொடுப்பார்; நீ சத்தமிடுவாய்: இதோ, நான் இருக்கிறேன் என்று சொல்லுவார்"* (ஏசா 58:6–9). வழிநடத்துதலுக்கும் தேவைகள் சந்திக்கப்படுதலுக்கும், உடல் நலத்திற்கும் செழிப்பிற்கும் வாக்குகள் அடுத்தடுத்த வசனங்களில் வருகின்றன.

பாவப்பட்டவர்களைக் குறித்த நிர்விசாரமாகிய பாவத்திற்காக ஆண்டவர் சோதோமை அழித்தார் (எசே 16:49). எருசலேமின் வீழ்ச்சிக்கு ஒரு காரணம் அவர்கள் பரதேசியை ஒடுக்கினதும் திக்கற்றவனையும் விதவையையும் ஒடுக்கினதுமே (எசே 22:7). நேபுகாத்நேச்சார் அரசன் செழிப்புற தானியேல் கூறிய ஆலோசனை ஒடுக்கப்பட்டவர்களுக்கு இரங்குவதே (4:27). லாசருவை கவனிக்காததற்காகவே ஐசுவரியவான் நரகத்திற்குச் சென்றான் (லூக் 16:19).

இரக்கம் காட்டுவோருக்கு இரக்கம் கிடைப்பது மட்டுமல்ல பரலோகத்தில் மிகுந்த பலன் காத்திருக்கிறது. "*நீ பகல் விருந்தாவது இராவிருந்தாவது பண்ணும்போது, உன் சிநேகிதரையாகிலும் உன் சகோதரரையாகிலும், உன் உறவினரையாகிலும், ஐசுவரியமுள்ள அயலகத்தாரையாகிலும் அழைக்க வேண்டாம்; அழைத்தால் அவர்களும் உன்னை அழைப்பார்கள், அப்பொழுது உனக்கு பதிலுக்குப் பதில் செய்ததாகும்.*" இதுதான் நமது எக்ஸ்ரே— நாம் செய்வது இதுதான். இயேசு கொடுத்த ஆலோசனை என்ன ? "*நீ விருந்துண்ணும் போது ஏழைகளையும் ஊனரையும் சப்பாணிகளையும் குருடரையும் அழைப்பாயாக. அப்பொழுது நீ பாக்கியவானாயிருப்பாய்; அவர்கள் உனக்கு பதில் செய்யமாட்டார்கள்; நீதிமான்களின் உயிர்த்தெழுதலில் உனக்குப் பதில் செய்யப்படும்*" (லூக் 14:12–14). தரித்திரருக்கு பல விருந்துகள் கொடுங்கள். ஏதோ காசும் சோறுமல்ல, விருந்து! யார் அவர்களுக்கு வண்ண விளக்குகள் போட்டு ஐஸ்கிரீமும் குலாப்ஜாமூனும் கொடுப்பார்கள்! மேஜை நாற்காலிகூட போடலாமே. நாம் அதிகமாகச் சாப்பிடுறோம், அவர்களுக்கு உணவு பற்றாக்குறை. நீங்கள் அவர்களை ஆசீர்வதியுங்கள். ஆயக்காரனாகிய மத்தேயுவே நமக்கு வழிகாட்டியவர். இயேசுவிற்கு விருந்துசெய்து அனேக ஆயக் காரரையும் பாவிகளையும் அழைத்து இயேசுவுக்கும் அவரது சீடர்களுக்கும் சமைத்த விருந்துணவை அவர்களுக்கும் பரிமாறினார் (மத் 9 :10).

"*பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்கவேண்டாம்; இங்கே பூச்சியும் துருவும் அவைகளைக் கெடுக்கும்; இங்கே திருடரும் கன்ன மிட்டுத் திருடுவார்கள். பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவையுங்கள்; அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை; அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதும் இல்லை*" (மத் 6 :19–20). பிச்சைக்காரர் ஓடுதான் நமக்கு காட்ரெஜ்! "*பரலோகத்தில் உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும்,*" என்று வாக்களித்துதான் இயேசு அந்தப் பணக்கார வாலிபனை எல்லாவற்றையும் விற்று தரித்திரருக்குக் கொடுக்கச்

சொன்னார். சீக்கிரமாய் பரலோகம் செல்வோம். அங்கே சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு, "அடப் பாவமே! இப்படித் தெரிந்திருந்தால், கூடக் கொடுத்திருப்பனே," என அங்கலாய்ப்போமா? அப்படியானால் இப்போதே கொடுப்போம்! (1 தீமோ 6:17–19).

பொருளாதார ஆசிகள் மட்டுமல்ல ஆன்மீக ஆசிகளும் ஈகையைத் தொடரும். சாப்பிடுமுன் கைகழுவுவதில் இயேசு வெரி குட் அல்ல. அதைக் கண்டு ஆச்சரியப்பட்ட பரிசேயரை முட்டாள்கள் என்றார். *"பரிசேயராகிய நீங்கள் உணவுப் பாத்திரங்களின் வெளிப்புறத்தைச் சுத்தமாக்குகிறீர்கள், உங்கள் உள்ளமோ கொள்ளையினாலும் பொல்லாப்பினாலும் நிறைந்திருக்கிறது. மதிகேடரே ... உங்களுக்கு உண்டானவைகளில் பிச்சை கொடுங்கள், அப்பொழுது சகலமும் உங்களுக்குச் சுத்தமாயிருக்கும்"* (லூக் 11: 37– 41). கொள்ளை, பொல்லாப்பினால் நிறைந்த இருதயத்திற்குப் பரிகாரம் தேடுகிறோமா? ஏழைகளுக்குக் கொடுத்துப் பார்ப்போம்.

"இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்." என்ன பாக்கியம் கிட்டும்? *"அவர்கள் இரக்கம் பெறுவார்கள்."*

பமீலா பார்போசா என்ற இந்தியப் பெண்மணி பிரான்சிலிருந்து ஜெர்மனி திரும்பிக்கொண்டிருக்கும்போது டோலோஸ் விமான நிலையத்தில் தன் விமானத்தைப் பிடிக்க முடியவில்லை. அந்நிய தேசத்திலே உதவியின்றி கண் கலங்கி நின்றாள். இரவை ஹோட்டலில் கழிக்குமளவு பணமுமில்லை. அப்போது கவுன்டரிலிருந்த பிரெஞ்சுப் பெண் அன்னாரைக் காத்திருக்கச் சொல்லி சில நிமிடங்களில் தனது வீட்டிற்கு அழைத்துச் சென்றார். இரவு உணவிற்கும் நல்ல நித்திரைக்கும் பின்னர் காலை, விமான நிலையத்திற்கு அழைத்துச் சென்று ஜீன் மாரி என்ற அப்பெண் அவளை முதல் விமானத்தில் அனுப்பி வைத்தார். பமீலா அதற்காய் நன்றி சொன்னபோது அவருக்குக் கிடைத்த பதில், "நன்றி சொல்வதை நிறுத்துங்கள். நிச்சயமாய் இது திரும்பி வரும். என் பிள்ளைகளுக்குத் தேவையான நேரத்தில் கடவுள் தம் தேவதூதரை அனுப்புவார்!" ஆம் இரக்கம் திரும்பிவராமல் போகாது!

ஈர நெஞ்சத்தோடு ஈவிரக்கம் காட்டுவோம்!

10

பெண்கள் நம்பும் பொய்கள்

வேதத்திற்குப் புறம்பான, முற்றிலும் தவறான கருத்துக்களை பெண்களின் மனதில் விதைத்து அவர்களைச் சாத்தான் பட்ட மரங்களாக்குகிறான். பெண்களும் பலர் அதற்குத் தலையசைத்து தேவனது சித்தத்தை தம் வாழ்வில் இழந்துபோகின்றனர். குறைந்தது ஏழு பொய்களையாவது அம்பல மாக்க விரும்புகிறேன்.

1. நான் ஆணுக்குக் குறைந்தவள்.

இல்லை, நீ குறைந்தவளல்ல. கணவன் தலையானால் மனைவி கழுத்து; இரண்டுமே முக்கியம்தான். காரில் எது முக்கியம் ? ஸ்டீரிங் வீலா, எஞ்சினா, கீயரா ? குடும்பம் ஓர் அமைப்பு. ஆண் எத்தனை முக்கியமோ பெண்ணும் அத்தனை முக்கியமே.

இரண்டே விதமான மக்கள்தான் உள்ளனர் — வேதத்தைச் சார்ந்தவர், வேதத்திற்குப் புறம்பானவர். பாக்கியவான்கள் யார் ? ஆண்களா, பெண்களா ? இயேசு போதித்தது, *"ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்... சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்..." "நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்,... நீங்கள் உலகத்திற்கு வெளிச்சமா யிருக்கிறீர்கள்."* ஆணோ பெண்ணோ அல்ல, "நீங்கள்" என்பதையே இயேசு வலியுறுத்தினார். யார் பெரியவர், ஆணா பெண்ணா ? *"இந்தப் பிள்ளையைப் போலத் தன்னைத் தாழ்த்துகிறவனெவனோ, அவனே இறையரசில்*

பெரியவனாயிருப்பான்" (மத் 18:4). "இவைகளைக் கைக்கொண்டு போதிக்கிறவனோ, இறையரசில் பெரியவன் என்னப்படுவான்" (மத் 5:19). ஆணா பெண்ணா என்று போட்டியிடுவதை விட்டுவிட்டு நம்முடைய ஆன்மீக வாழ்வில் முன்னேறுவதில் கவனம் செலுத்துவோம்.

"நீங்கள் எல்லாரும் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே. ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக திருமுழுக்குப் பெற்றவர்கள் எத்தனை பேரோ, அத்தனை பேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே. யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும் பெண்ணென்றுமில்லை; நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள்," என்கிறது கலாத்தியர் 3:26–27. கிறிஸ்துமஸ் தாத்தா உடையணிந்து ஒருவர் வரும்போது, உள்ளிருப்பவர் ஆணா பெண்ணா என்று அறிய முடியுமா? கிறிஸ்துவை அணிந்துகொள்வதும் அப்படித்தான். நம் யாவரையும் ஒன்றாக்குகிறார்.

ஆணுக்குப் பெண் குறைவு என்ற எண்ணம் உள்ளத்தில் ஒளிந்து கொண்டிருக்குமானால் ஆணுக்கு நிகராகக் காரியங்களைச் செய்ய முற்படுவாய். சாத்தான் முதலாவது தவறான எண்ணத்தை ஊட்டிவிட்டு, பின் ஆணைப்போலாகத் தள்ளிவிடுவதினால் நீ தேவன் உனக்களித்த அழைப்பை அசட்டை செய்ய உந்துவான். வீட்டிற்கு வெளியே வேலை செய்வதற்கு வேதம் மறுப்புத் தெரிவிக்கவில்லை. பெண்கள் வெளிவேலையே செய்யாத யுகத்திற்குத் திரும்பவேண்டுமென்று நானும் போராடவில்லை. ஆணுக்குக் கட்டளை அதுதான். பாடுபட்டு வியர்வை சிந்தி சம்பாதிப்பது ஆணுக்குக் கொடுக்கப்பட்ட தண்டனை. வேதனையோடு பிள்ளை பெறுவதோடுகூட நீ கூடுதலாக உன்னை ஏன் தண்டித்துக்கொள்ள வேண்டும்?

பெண்கள் கூடுதல் வேலை செய்வதால் மிகவும் பாதிக்கப்படுவது இறையரசுதான். இறையரசுக்கான ஜெபம் குறைவுபடுகிறது, வேலையாட்கள் பற்றாக்குறை, வேதத்தைக் கற்று, போதிக்க பெண்களும் போதவில்லை. பெண்கள் ஊழியமும், பெண்கள் வேத ஆராய்ச்சிக் குழுக்களும் பஞ்சப் பாட்டுப் பாடுகின்றன. சுயாதீனத்தையும் சுய கௌரவத்தையும் நாடுவதாலேயே பெண்கள் வேலைக்கு வேட்டையாடுகின்றனர். அவற்றை வீட்டிலேயே கொடுத்துவிட்டால்? வேலை செய்வோர் கூட்டத்தில் பெண்கள்

அலையலையாய் சேருவதையும், அட்டகாசமாய் வாழ்வதையும் காணும் இளம் பெண்கள், வீட்டில் தரித்திருக்கும் எண்ணத்தை தூர தூக்கி எறிகின்றனர்.

வேலை செய்தே தீரவேண்டுமென்றால் வீட்டிலிருந்தே செய்யலாம் அல்லது பகுதி நேரம் செய்யலாம். ஒரு பெண்ணின் எதிர்காலம் மெல்லிய இழையில் தொங்குவதால் அவள் ஒரு வேலையில் தேர்ச்சி பெற்றிருப்பது அவசரத்திற்கு உதவும்.

*2. **கணவனுக்கு நூற்றுக்குநூறு கீழ்ப்படியவேண்டும்.***

இல்லை, அவசியமில்லை. கணவர் தெய்வங்களல்ல, நம்மைப்போல் மனிதர்தான். அமைப்பு செவ்வனே இயங்கும்படியாக தேவன் ஆணைத் தலையாக்கினார். நாம் தவறு செய்வது போலவே அவர்களும் தவறு செய்யலாம். அவிசுவாசிகளான கணவர் மட்டுமல்ல, விசுவாசிகளும் கூடத்தான். கணவருக்குப் பெண்களை அடிபணிய அழைக்கும் முன்பாக எபேசியர் ஐந்தாம் அத்தியாயத்தில் வசனம் 8இல் இருந்தே முன்னுரையாக பவுல் எழுதுகிறார்: *"முற்காலத்தில் நீங்கள் அந்தகாரமாயிருந்தீர்கள், இப்பொழுதோ கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிறீர்கள்;* ***வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்துகொள்ளுங்கள்"*** (வச 8). குருட்டுப் பூனையைப் போல் நடவாமல் தேவன் நமக்களித்த வெளிச்சத்தில் நடக்கவேண்டும். ***"...கர்த்தருக்குப் பிரியமானது இன்னதென்று நீங்கள் சோதித்துப் பாருங்கள்"*** (வச 10). நாம் செய்யப்போவது தேவனது மகிழ்ச்சியான அங்கீகாரத்தைப் பெறுமா என்பதை முதலில் பகுத்தறியவேண்டும். ***"தூங்குகிற*** *நீ விழித்து, மரித்தோரைவிட்டு* ***எழுந்திரு,*** *அப்பொழுது கிறிஸ்து உன்னைப்* ***பிரகாசிப்பிப்பார்"*** (வச 14). நாம் தூக்கத்தில் நடக்கிறவர்கள் போலவோ, சடலங்கள் போலவோ மற்றவர்கள் நம்மைத் தம் இஷ்டத்திற்கு ஆட்டிப்படைக்க இடமளிக்காமல் கிறிஸ்து அளிக்கும் வெளிச்சத்தைத் தேடவேண்டும். *"நீங்கள்* ***ஞானமற்றவர்களைப்போல*** *நடவாமல்* ***ஞானமுள்ளவர்களைப்போல கவனமாய்*** *நடந்துகொள்ளுங்கள்"* (வச 15). 'கவனம்' என்பது சூழ்நிலைகளையும் விளைவுகளையும் கணித்து விவேகமாய் நடந்துகொள்வது. ***"தெய்வ பயத்தோடே*** *ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள்"* (வச 21). கீழ்ப்படிதல் என்னும்போது கணவனுக்குப் பயப்படும் பயமல்ல, தேவ பயமே மேலோங்கியிருக்கவேண்டும். *"மனைவிகளே, கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறது போல உங்கள் சொந்தப்*

புருஷருக்குக் கீழ்ப்படியுங்கள்" (வச 22). "ஆண்டவர் இந்தக் காரியத்தைச் செய்யும்படி என்னைக் கேட்பாரா?" என்ற கேள்வியைக் கேட்டுப்பாருங்கள். *"சபையானது கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறது போல மனைவிகளும் தங்கள் சொந்தப் புருஷர்களுக்கு எந்தக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்க வேண்டும்"* (வச 24). ஒத்துப்போக முடியாமலோ, கீழ்ப்படிய முடியாமலோ இருக்கும் பட்சத்தில் அகங்காரமாயல்ல, பணிவோடு செய்யுங்கள்.

விவேகம், புத்தி, ஞானம், அறிவு குறித்து இவ்வளவு போதித்துவிட்டு, நிச்சயமாகப் பவுல் மரப்பாச்சி கீழ்ப்படிதலை ஊக்குவிக்கவில்லை. மனைவியர் நூற்றுக்கு நூறு கீழ்ப்படிந்ததால் பல விபரீதங்கள் நேர்ந்திருக் கின்றன. சப்பீராளை யோசித்துப்பாருங்கள். பெண்கள் யோசித்து செயல் படுவதை தேவன் விரும்பாவிட்டால் பெண்களுக்குத் "தெளிந்த புத்தியைக்" குறித்து வேதம் இவ்வளவு எழுதவேண்டிய தேவையென்ன? சமயோசித புத்தியைப் பயன்படுத்துங்கள். அசம்பாவிதத்தை, ஆபத்தை உணருவீர் களானால் கீழ்ப்படிதலைத் தவிர்த்துவிடுங்கள். "பாலியப் பெண்கள்... **தெளிந்த புத்தியுள்ள**வர்களும்... தங்கள் புருஷருக்குக் கீழ்ப்படி கிறவர்களும்..." (தீத்து 2:4,5).

எங்களது குடும்ப முகாம் ஒன்றில் கணவரும் மனைவியரும் நிரப்பித் தர படிவங்கள் விநியோகிக்கப்பட்டன. ஒருவர், "என் மனைவி எனக்குக் கீழ்ப்படிவதில்லை," என்று எழுதியிருந்தார். பரிதாபப்பட்டேன். ஆனால் அவரது மனைவியின் படிவம் வந்தபோது, "என் கணவர் குடிகாரர்," என்று எழுதியிருக்கக் கண்டேன். அழுவதா, இல்லைச் சிரிப்பதா? மது, மாது விவரங்களில் மனைவிக்குக் கீழ்ப்படியாத கணவன், மனைவியின் கீழ்ப்படிதலுக்குத் தகுதியற்றவன். இதனால் அவரை அலட்சியம் செய்ய வேண்டுமென்பதல்ல, எப்போது கீழ்ப்படியக்கூடாது என்று விழிப்பாயிருக்க வேண்டும். 1 பேதுரு 3:1–4ஐக் கைக்கொள்ளும்போது 'நடக்கை' என்பது விவேகமான கீழ்ப்படிதலையும் உள்ளடக்கும் என்பதை நினைவிற்கொண்டு, கீழ்ப்படியாதிருக்கவேண்டிய சூழ்நிலையில் சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியோடிருக்கவேண்டும்.

"மனைவிகளே, கர்த்தருக்கேற்கும்படி உங்கள் புருஷருக்குக் கீழ்ப் படியுங்கள்," என்கிறது கொலோசெயர் 3:18. உங்கள் கீழ்ப்படிதலை அங்கீகரித்து தேவன் ஆனந்தமாய் தலையசைப்பாரா? பின்வரும்

கேள்விகளைக் கேட்டுப்பாருங்கள்: எனது கீழ்ப்படிதல் தேவனுக்கு மகிமையைக் கொண்டுவருமா? என் குடும்பத்தைக் காயப்படுத்துமா? யாருக்கேனும் பங்கம் விளைவிக்குமா? நல்ல சாட்சியாக இருக்குமா? என் மனச்சாட்சியை களங்கப்படுத்துமா? சந்தோஷமாய் மற்றவர்களுடன் அதைப் பகிர்ந்துகொள்ள முடியுமா? என் கீழ்ப்படிதலினால் தேவனைப் பின்பற்றுகிறவளாயிருப்பேனா? அன்பிலே நடந்துகொள்கிறவளாயிருப்பேனா?

ஞானத்திற்கும் கணவனுக்குக் கீழ்ப்படிதலுக்குமிடையிலுள்ள கத்திக் கூர்மை விளிம்பில் ஒரு பெண் நடக்கவேண்டும். கயிற்றின் மேல் நடக்கும் இந்த வித்தையைக் கற்பிக்க அனுபவமே அவளுக்கு ஆசிரியை. எஸ்தர் அதைச் செய்தாள். உங்களது கீழ்ப்படியாமை உங்கள் கணவரை கௌரவிக்குமானால் அதை ஞானம் எனலாம்.

3. எனக்கு ஞானமில்லை.

யார் சொன்னது? பெண்கள் பலர் தங்களுக்கு ஞானமில்லையென்று அங்கலாய்க்கிறார்கள். சமுதாயம் 'பெண் புத்தி பின் புத்தி' என்று மொழிந்தால் அதை நம்பி ஏற்றுக்கொள்கிறார்கள். புத்தியீனமாய் நடந்து கொண்டால் தங்களையே நொந்துகொள்கின்றனர். நீங்கள் ஞானத்தில் வளரவேண்டுமே யொழிய வேறொன்றுமில்லை. ஞானத்திற்கான இறைவாக்கு ஆண்களுக்கு மட்டுமல்ல, பெண்களுக்கும்தான் (யாக் 1:5). நீங்கள் செய்யவேண்டியதெல்லாம் கேட்க வேண்டியதொன்றே. பெரிய காரியங் களுக்கு மட்டுமல்ல, அன்றாடத் தீர்மானங்களுக்கும்தான். திடீர் ஜெபம் மட்டுமல்ல, அனுதின ஆழமான விடாப்பிடி அங்கலாய்ப்பு. கேட்டால் ஏராளமாய் தாராளமாய்க் கிடைக்கும்.

நானும் ஞானத்திற்காய் இறைவனடியைப் பற்றிக்கொண்டு மன்றாடினேன் மாற்றத்தைக் கண்டேன். அதன்பின் எவ்வளவோ தூரம் கடந்து வந்திருக் கிறேன். 'கேட்டல்' என்ற எளிமையான காரியத்தை எத்தனை பேர் செய்கிறோம்? சந்தேகமின்றி நம்பிக்கையோடு கேளுங்கள். தலையே பெண்ணுக்குத் தலைசிறந்த ஆயுதம்.

ஞானம் என்பது ஞானத்திற்காய் ஜெபிப்பது மட்டுமல்ல. ஞானமான காரியங்களைச் செய்வதுமே. இயேசு கிறிஸ்து மத்தேயு 7:24இல் வரைந் கோட்டில் வழுவாமல் நடக்கவேண்டும்: "நான் சொல்லிய இந்

வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின்படிச் செய்கிறவன் எவனோ, அவனை...புத்தியுள்ள மனிதனுக்கு ஒப்பிடுவேன்.'' நீதிமொழிகள் மூன்றாம் அத்தியாயம் ஞானத்தின் புகழைப் பாடுகிறது. ஆனால் அதைச் சொந்தம் கொண்டாடுபவர் யார்? *'நீ உன்னை ஞானியென்று எண்ணாதே; கர்த்தருக்குப் பயந்து தீமையை விட்டு விலகு*'' (நீதி 3:7). வார்த்தைகள் இதைவிடத் தெளிவாய் இருக்கமுடியுமா? கடவுளுக்கு நடுங்கி தீமையைக் கண்டால் ஆர ஓடுவதே புத்திசாலித்தனம். சந்தேகமான காரியமாயிருந்தால் சாதுரியமாகக் கைகழுவிவிடுங்கள். ஐயமிருப்பின் இறைநூலை ஆராயுங்கள்.

தேவன் நமக்குத் **தெளிந்த புத்தியுள்ள** ஆவியைக் கொடுத்திருக்கிறார் (2 தீமோ 1:7).

4. நசுக்கப்படுவதினால் நலிந்துபோய்விட்டேன்.

ஊஹூம், நீங்கள் நலிந்துபோய்விடவில்லை. எந்தவொரு வெளிப்புறச் சக்தியும் உங்களை நசுக்கிவிட முடியாது. நீங்கள் பலவீனராயிருந்தால் பலவானாவீர்கள் என்பதுபோன்ற வேடிக்கையான தத்துவங்களை வேதத்தில் காணலாம். தோற்றத்தில் நோஞ்சானாயிருந்த பவுல் மலைக்கவைக்கும் அப்போஸ்தலனானார்; அநாதை எஸ்தர் சரித்திரத்தின் ஏடுகளைத் திருப்பினாள்; நசுக்கப்பட்ட எபிரெயர் நட்சத்திரக்கூட்டமாயினர்; அடிபணிந்தால் அலாக்காகத் தூக்கப்படுவீர்கள். நாம் நம்புவதற்கு முரணானவை இவை. கணவனோ, மாமனார் மாமியாரோ, பெற்றோரோ, உடன்பிறப்புகளோ, தலைவரோ, மற்றெவரோ நம்மைத் தலையில் குட்டிக்கொண்டே இருக்கலாம். ஆக்ரோஷமடைவதோ ஆசீர்வதிப்பதோ நமது தெரிந்தெடுப்பு.

இறையரசின் எதிர்மறைகளை மலைப்பிரசங்கம் கோடுபோட்டுக் காட்டுகிறது. நீங்கள் ஆவியில் எளிமையுள்ளவர்களானால் இறையரசின் சொந்தக்காரராவீர்கள்— யுத்தம் செய்து கைப்பற்றுவதினாலல்ல. அழுகிறீர்களானால் ஆறுதல்படுத்தப்படுவீர்கள்— துக்கத்தின் காரணத்தைத் துடைத்தெறிவதினாலல்ல. சாந்தகுணமுள்ளவர்கள் பூமியைச் சுதந்தரித்துக் கொள்வார்கள்— பிறர் தலையில் மிளகாய் அரைப்பவர்களல்ல (மத்5:3–5). என்னுடைய யுத்தங்களை நானே நடத்தாவிடில் கடவுளே எனக்காக யுத்தம் செய்வாரென்பது எனது அனுபவத்தில் நான் கண்ட உண்மை.

நீங்கள் கீழே தள்ளிவிடப்படலாம், அலட்சியப்படுத்தப்படலாம், தூசியென துடைத்தெறியப்படலாம், கலங்காதீர்கள். லேயாள் காயப்படுத்தப்பட்டு, அவமானப்படுத்தப்பட்டதைக் கண்ட கர்த்தர் அவளை தாய்மையடையச் செய்து, இயேசுவின் முன்மாதாவாக்கி அவளைத் தூக்கி நிறுத்தினார். அவர் அழுகையை மாத்திரமல்ல, பெருமூச்சையும் கேட்கிற தேவன் (ஆதி 21:17; யாத் 2:24). கராத்தேயை நிறுத்தி, கரங்களை உயர்த்தி, உங்களைக் கடிப்பவரை ஆசீர்வதியுங்கள். அசத்தும் விளைவுகளைக் காண்பீர்கள். விரோதமும் குரோதமும் உங்களுக்குள் கொதித்துக்கொண்டிருக்க இடமளிப்பீர்களானால் உங்கள் குடல்கள் வெந்துபோகும். *"தேவரீர் சகலத்தையும் செய்ய வல்லவர்; நீர் செய்ய நினைத்தது தடைபடாது"* (யோபு 42:2). தேவன் உங்களுக்காய் தீட்டியுள்ள திட்டத்தைத் தீண்ட யாராலும் முடியாது. தேவனோடு பேசுங்கள், உங்களோடு பேசுங்கள், வசனங்களோடு பேசுங்கள். சாத்தானும் கொஞ்சம் பேசிப்பார்க்க வருவான், விரட்டியடியுங்கள்.

ஊழியத் துவக்க நாட்களில் தலைவர்கள் சிலருக்கு காலைச் சிற்றுண்டி செய்ய ஒரு குழு ஆயத்தமானது. பொறுப்பாயிருந்த சகோதரி என் மேல் பொறாமையினால் என்னை ஒதுக்கிவிடுவார்கள். எனக்கு ஏதாவது வேலை கொடுக்கும்படி நான் கெஞ்சியபோது, "சரி போ, இட்லிக்கு மாவாட்டு," என்றார்கள். அது முந்தின நாள் வேலை என்பது யாரும் அறிந்ததே. அந்நாட்களில் மின் இயந்திரம் இல்லாததால் கல்லில் ஆட்டினேன். மறுநாள் தலைவர்கள் வந்தபோது அந்தச் சகோதரி நற்சான்று வாங்குவதற்காக அங்குமிங்கும் ஓடிக்கொண்டிருந்தபோது நான் சிலையென நின்று எனக்காகப் பரிதாபப்பட்டுக்கொண்டிருந்தேன். எல்லோரும் சாப்பிட்டுக் கொண்டிருந்த போது ஒருவர், "இட்லி எப்படி இவ்வளவு பஞ்சுபஞ் சென்றிருக்கிறது?" என்றார். மற்றொருவர், "இரகசியமே ஆட்டுவதில்தான் இருக்கிறது. யார் மாவாட்டியது?" என வினவினார். என் கணவர் பெருமையாக, "என் மனைவிதான்," என்றார். தலைவர்கள் யாவரும் என் பக்கமாய்த் திரும்பி நான் பீட்ரூட்டாய் சிவக்கும்வரை மெச்சினர். யாவரும் சென்றபின் நடந்த கலாட்டாவைச் சொல்லவும் வேண்டுமா? தேவன் அநீதியுள்ளவரல்ல. இது ஓர் அற்ப எடுத்துக்காட்டு. பிறர் என்னைத் துச்சமாய் நடத்திய போதெல்லாம் தேவன் என் கரங்களைப் பிடித்து வெறுப்பை வெறுப்பால் தாக்குவது மடமை எனக் கற்பித்திருக்கிறார்.

இருப்பினும், நீங்கள் சுயபரிதாபத்தில் மூழ்கிக் கொண்டிருக்கிறீர்களா, எழுந்துப் பிரகாசிக்க முழுமுயற்சி எடுத்தீர்களா, சுயஉரிமையை நிலை நாட்டாமல் விட்டுவிட்டீர்களா என்று எந்தச் சூழ்நிலையையும் சீர்தூக்கிப் பார்க்கவேண்டும். இழிவானவர்கள் உடலளவிலோ, மனதளவிலோ தொல்லை கொடுக்க யாரும் இடமளிக்கக்கூடாது. யாரும் உங்களைத் தங்கள் விருப்பப்படி பந்தாடக்கூடாது. சுய கௌரவமென்பது ஒவ்வொருவரது உரிமை. எப்போது சுய உரிமைக்காய் வாதாடவேண்டும், எப்போது அமைதி காக்க வேண்டும் என்பதை நெடுநாள் அனுபவங்கள் வீசும் வெளிச்சத்தில் கண்டறியலாம்.

5. நான் தேவனைச் சேவிக்க முடியாது.

ஏன் முடியாது? கணவன், பிள்ளைகள், பெற்றோர், மாமியார், மாமனாரைக் கவனித்து வீட்டைப் பேணுவதும் தேவ சேவை என்பதை முதலாவது புரிந்துகொள்ள வேண்டும். கூட்டுவதும் கழுவுவதும் அதற்குக் குறைவல்ல. நற்செயல்கள், பிள்ளைகளைப் பேணுதல், அந்நியரை உபசரித்தல், ஊழியருக்கு உதவிசெய்தல், துன்பப்பட்டோரின் துயர்துடைத்தல், வீட்டை நடத்துதல் யாவும் பெண்கள் ஊழியங்களாகும் (1 தீமோ 5:10,14).

எப்பக்கத்திலிருந்தும் (பலமுறை கணவர் உட்பட) சோர்பு, குற்றச்சாட்டு, கிண்டல் போன்றவற்றை ஒரு பெண் தொடர்ந்து சந்திப்பதால் அவள் ஊழியம் செய்வது கடினம். இதற்கெல்லாம் மேல் அவள் எழும்புகிற அளவு ஆன்மீக வலிமை இன்றேல் அவள் அதிகம் சாதிக்கமுடியாது.

தெபொராளைப் பாருங்கள். "நான் பெண், யுத்தத்திற்கு எப்படிச் செல்வேன்?" என்று தயங்கியிருந்தால் என்னவாகியிருக்கும்? பாராக் செய்தது அதுதான். அவனுக்கு தேவன் மேலோ தன் மேலோ நம்பிக்கை கிடையாது. ஆகவே தேவன் வேறொருவரைத் தேடி பெண்ணாகிய தெபொராளைக் கண்டுபிடித்தார். அவள் தன் குடும்பத்தைப் பராமரித்ததோடு இஸ்ரவேலுக்கு நியாயாதிபதியுமாயிருந்தாள். தேவன் அவளைப்போருக்கு அழைத்தார். "ஓ.கே." என்றாள். அவளால் முடியுமா? அவளாலல்ல, அவளை அழைத்த தேவனின் பெலத்தினால் முடிந்தது. போரில் நடந்ததென்ன? நடந்த அற்புதங்களைப் பாருங்கள்—

மக்கள் மனப்பூர்வமாய்த் தங்களை ஒப்புக்கொடுத்து அவளுக்கு உதவினர் (நியா 5:2). பூமி அதிர்ந்தது (வச 4). வானம் சொரிந்தது (வச 4). பர்வதங்கள் கரைந்தன (வச 5). நட்சத்திரங்கள் தங்கள் அயனங்களிலிருந்து சிசெராவோடே யுத்தம்பண்ணின (வச 20). ஆற்றுவெள்ளம் எதிரிகளை அடித்துக்கொண்டுப் போயிற்று (வச 21). எதிரி குதிரைகளின் குளம்புகள் பிளந்துபோயின (வச 22). வேறொரு பெண் யாகேல் சிசெராவைக் கொன்றுபோட்டாள் (வச 27). தெபொராள் செய்தது ஓ.கே. ஒன்றுதான்.

ஒரிசாவில் பட்டினியால் வாடுவோர், வீடற்றோர் மற்றும் நோயாளிகளுக்கு உதவிசெய்ய தேவன் என்னை அழைத்தபோது மலையைப் பார்த்து மலைத்து நின்ற எலியைப் போல் தடுமாறினேன். தெபொராளுக்கு நடந்ததே எனக்கும் நடந்தது. எண்ணற்றோர் வந்துதவினர். இன்று நமது மிஷனரிகள் அங்கு அற்புதமாய் சேவை செய்கின்றனர். ஆயிரக்கணக்கானோர் பயனடைகின்றனர்.

தேவனுக்கு 'ஓ.கே.' என்று தலையசைப்பீர்களானால் உங்கள் வாழ்வில் பூங்காற்று வீசும். 'ஓ.நோ' ஆண்டவரே, என்று சொல்லிக்கொண்டிருக் கிறீர்களா ? பலர் தேவனது அழைப்பை அல்லத்தட்டி நிற்கிறீர்கள். தலை வணங்கி, 'இதோ வருகிறேன்,' என்று சொல்வீர்களா ?

6. இந்த இடியில் நான் பிழைக்கமாட்டேன்.

நிச்சயமாய்ப் பிழைப்பீர்கள். நோய், பேரிழப்பு, துயரம், ஏமாற்றம், பிரிவு, நஷ்டம், விபத்து, உதிரும் திருமணம் இவை நம்மை இடியாய்த் தாக்கும்போது, வாழ்க்கைப் படகு கவிழ்ந்து துணிவை அவித்துப்போடலாம். நானும் இருந்தென்ன, வாழ்க்கை வாழ்ந்தென்ன என்று நானுமே நினைத்த நாட்களுண்டு. பல செக்குகளை இழுத்துவந்திருக்கிறேன். ஆனால் இன்றோ தலையில் விழுந்த ஒவ்வொரு இடியும் கற்பித்தப் பாடங்களினால் ஆன்மீகத்தில் செல்வச்சீருடன் அகமகிழ்கிறேன்.

வாழ்க்கை ஒரு ரோலர் கோஸ்டர். அடுத்தத் திருப்பம் என்னவென்று சொல்லவியலாது. வாழ்க்கை அள்ளி அளிப்பதைக் கொண்டு சிறப்பாய் செயல்படப் பழகவேண்டும். சிலர் இடிதாங்கிகளாய் துயரங்களை ஏற்று நிற்க உறுதியுள்ளவர்கள். சிலர் துவண்டுவிடுவர். மனநிலைப் பாதிப்புகள் மன நோய்க்கோ தற்கொலைக்கோ வழிநடத்தலாம். ஆகவே முதலாவது நீங்கள் செய்யவேண்டியது துயருர நேரமெடுத்தலாகும். 'அழாதே

கண்ணைத் துடைத்துக்கொள், அழுது என்ன பயன், எழுந்திரு, வெளியே வா,' என்று சிலர் நல்லெண்ணத்தோடு உங்களை அவசரப்படுத்தலாம். துயரம் என்பது வாழ்வின் ஓர் உண்மை. நேரமெடுத்துக்கொள்ளுங்கள். அழுவது, பிறரை சந்திக்க மறுப்பது, முடங்கிக்கிடப்பது, இவையெல்லாம் இயல்புதான், பரவாயில்லை.

துயரத்தில் மூழ்குவோர் ஓராண்டில் பழைய நிலைக்குத் திரும்ப எதிர்பார்க்கப்படுகிறார்கள். என்றாவது ஒரு நாள் நீங்கள் உண்மையை ஏற்றுக்கொண்டு, எதிர் சக்திகளை முறியடித்து, சவாலை எதிர்கொண்டு, உயிர்மீட்சியடையத்தான் வேண்டும். வளையிலிருந்து வெளிவந்து மக்களைச் சந்திக்கத் துவங்குங்கள். உங்களைப் போன்ற மக்களுடன் கரங்கோர்த்து, அதே நிலையில் தத்தளித்துக்கொண்டிருப்போரை தாங்கிப்பிடிக்க ஒரு சுமைதாங்கிக் குழுவை உருவாக்குங்கள். புதுக் கலைகளைக் கற்கலாம். கணணியோ, ஓவியக் கலையோ உங்கள் ஆர்வத்தைத் தூண்டிவிடும் எதிலாகிலும் தேர்ச்சியடையலாம். நடப்பது போன்ற உடற்பயிற்சி உங்கள் மனதுக்கும் உடலுக்கும் இதமளிக்கும். வாழ்க்கையை அனுபவிக்கப் பழகுங்கள். முன்னோக்கிப் பாருங்கள், பின்னிட்டுப் பார்க்காதேயுங்கள். கடந்தகாலத்தின் கைதியாகிவிடாதபடிக்கு விழிப்பாயிருங்கள்.

கடினமான சிக்கல்களுக்குத் தீர்வுகாண தேவன் உறுதியானவர்களைப் பொறுக்கியெடுக்கிறார். மற்றப் பெண்களுக்கு கற்பிப்பதற்காக இந்தக் காரியம் உங்களுக்கு நடக்க நீங்கள் தெரிந்துகொள்ளப்பட்டவர்களோ என்னவோ. உங்களுக்கு நேரிட்ட ஒரு பயங்கரத்தை அப்படியே திருப்பி பிறருக்கு வழிகாட்டியாக்கலாம்.

ஓடத்திலே செல்கிறோம், ஏலேலோ ஐலேசா!
இயேசுவே நம் மாலுமி, ஏலேலோ ஐலேசா!
பாதை தெரிந்தவர் நம் நேசர் அல்லவோ ?
அலைமோதும் கடலில் நம்பிநாம் செல்லலாம்,
ஏலேலோ ஐலேசா, ஏலேலோ ஐலேசா!

என்று பாடும்பொழுது இப்போது புதிய வெளிச்சத்தோடு பாடுகிறேன். உங்கள் நிலையை நினைத்து நொந்து நொந்து வாழ்வை வீணடிக்கக்கூடாது. முன்னேறுங்கள்! ஒரு பெண், மனைவி, தாய், எருமை மாட்டைப் போலிருக்க வேண்டும். எழுந்து நில்லுங்கள், தைரியம் கொள்ளுங்கள், வீறுநடை போடுங்கள்.

7. நான் முற்றிலும் தோற்றவள்.

இல்லை, இல்லவேயில்லை. மறுபடி உங்கள் வாயால் அப்படிச் சொல்லாதீர்கள். வாழ்க்கையில் தோல்வியுற்றவர் என்று நம்மை நாம் கணிப்பதற்குக் காரணம் நாம் தோல்வியுற்றவர் என்பதினாலல்ல, நம்முடைய அன்றாட வெற்றிகளை நாம் கணக்கெடுக்காததினால். நீங்கள் வாழ்க்கை ஓட்டத்தில் தோற்றுப்போனவர்கள் என்று பிசாசு சொல்லும் பொய்யை நம்பாதீர்கள். வாழ்க்கையை வானவில்லாய்ப் பாருங்கள். தான் வாழ்க்கையில் முற்றிலும் தோல்வியுற்றவள் என்று என்னிடம் சொல்லி அழுவதற்கென்றே ஒரு பெண்மணி தூரப் பட்டணம் ஒன்றிலிருந்து வந்தார்கள். அவர்கள் கதையைக் கூறும்போது அவர்கள் செய்த பல அசத்தலான காரியங்களைக் கவனித்தேன். தன் கதையை முடித்து, கண்ணைத் துடைத்து, மூக்கை உறிஞ்சியபோது அவர்களது வெற்றிகளை ஒவ்வொன்றாகச் சுட்டிக்காட்டினேன். கண்ணீர் காய்ந்தது; முகம் ஜொலித்தது. "அப்படின்னா நான் தோல்வி யடைந்தவள் என்று நீங்கள் நினைக்கவில்லையா?" என்று உதடுகள் துடிக்கக் கேட்டார்கள். "சே, இல்லவே இல்லை," என்றேன். புதுப் பெண்மணியாகத் திரும்பிச்சென்றார்கள்.

சிலுவையில் மரித்ததினால் இயேசு தோற்றுப்போனவரோ? உலக மனைத்திற்கும் இரட்சகரானாரே. மண்ணைக் கவ்வியதால் ஏவாள் தோற்றுப் போனவளோ? ஜீவனுள்ளோர் அனைவருக்கும் தாயானாளே. பாவத்தில் விழுந்ததினாலே தாவீது தோற்றுப்போனவரோ? அவர் அழுது அழுது பாடின பாட்டு அனைவரையும் அணைத்துக் கொள்ளுகிறதே. அற்புத சுகமளிக்கும் ஊழியன் எலிசா நோய்வாய்ப்பட்டு மரித்ததினால் தோல்வியடைந்தவரோ? (2 இரா 13:14). அவரது எலும்புகளைத் தொட்ட மாத்திரத்தில் மரித்தவன் உயிர் பெற்றானே (வச 21). மிரியாம் தன்னுடைய பார்வையிலே தோல்வி யுற்றவளாக விண்ணுலகம் சென்றிருக்கலாம். ஆனால் பல நூற்றாண்டு களுக்குப் பிறகு தீர்க்கன் மீகா அவளை ஒரு தலைவியாகவேக் காண்கிறார் (6:4).

பெரும் வெற்றிவாகை சூடியவர் அருகில் நிற்கும்போது, உங்களைத் தோற்றவராகக் காணத் தோன்றும். உங்களை ஒருபோதும் யாரோடும் ஒப்பிடாதீர்கள். தேவனுக்கு நீங்கள் தனித்தன்மை வாய்ந்தவர். தேவன்,

உங்கள் மூலம் சாதிக்கவேண்டுமென்பதை நீங்கள் சாதித்தால் போதும். நீங்கள் நீங்களாகவே இருங்கள், வேறொருவரைப்போலாக முயலாதீர்கள்.

பொறாமை, கோழைத்தனம், தன்னம்பிக்கையின்மை, இப்படி ஏதாவது உங்களில் ஒளிந்துகொண்டு பயனற்றவராக உங்களை உணரச் செய்கிறதா எனக் கண்டுபிடித்து அதை மேற்கொள்ளுங்கள். உறுதியும் ஊக்கமுமே உங்கள் தேவை.

"எந்தச் சூழ்நிலையிலும் சாதகமானவை உண்டு. கண்டுபிடிக்கக் கடினமாயிருந்தாலும், அது அங்குதான் இருக்கிறது. இழப்பு ஒரு முனையமாகலாம்; வளர ஒரு வாய்ப்பு. கற்றுக்கொள்வதற்கு சந்தர்ப்பங்களை எதிர்நோக்கியிருக்கும் மேன்மையான நபராயிருக்கவும், மேன்மையான வீராங்கனையாயிருக்கவும் தோல்வி என்னைத் தூண்டிவிட்டிருக்கிறது. டென்னிசைப் போலவே வாழ்க்கையிலும் அப்படித்தான் முன்செல்ல வேண்டும்," என்றார் ஒருமுறை தோல்வியைத் தழுவினபின் டென்னிஸ் வீராங்கனை செரினா வில்லியம்ஸ். தோல்வி உலகின் முடிவல்ல.

நமது குறைகளை தியானித்துக்கொண்டிருப்பதே நமது தோல்வி. அதை விட்டு நமது பலங்களில் கவனம் செலுத்தி, நாம் சிறந்திலங்கும் காரியங்களை மேம்படுத்துவதில் கரிசனை காட்டவேண்டும். நம்மை நாமே இழிவுபடுத்திக்கொள்வதே நம்மை நாசமாக்கிக்கொள்ள வழி. "ஒரு காரியம் உங்களுக்கு நடக்கவில்லையா? நடக்கச் செய்யுங்கள். வாழ்க்கை நடக்கும் என்று காத்திருக்கக்கூடாது — நீங்களே வாழ்க்கையை நோக்கி திறந்தக் கரங்களுடன் ஓடவேண்டும்," என்றார் ஒருவர். உங்கள் எதிர்காலத்தின் பைலட் நீங்களே. ஆகவே எழுந்திருங்கள், உங்கள் வாழ்வை வெற்றியாய் மாற்றுங்கள்!

பிசாசின் பொய்களை நம்பவேண்டாம். இறைவனது உண்மையை நம்பி வாழுங்கள்!

11

பெண் புத்தி பின்புத்தியா?

"பெண் புத்தி பின்புத்தி," என்ற வழக்கச் சொற்றொடரின் கருத்தை மாற்றி, பெண்கள் பின்னால் வருவதை யோசித்துச் செயல்படும் புத்திசாலிகள் என்று விளங்கச் செய்வது பெண்களின் கடமை. பெண்களை சௌந்தரவதிகளாக்குவது ஞானமே. பெண்கள் அழகு நிலையங்களில் பொறுமையாக அமர்ந்திருந்து அதற்குக் காசும் கொடுக்கின்றனர். வேதமோ வேறொன்றைச் சுட்டிக் காட்டுகிறது. நமது அழகு சிங்காரிப்பதிலும் முடியை சுருட்டிவிட்டுக் கொள்வதிலும் இல்லை. பவுல் பெண்களுக்கு வலியுறுத்துவது **தெளிந்த புத்தியே** (1 தீமோ 2:9–15). இந்தச் சிறு பகுதியில் தெளிந்த புத்தி இருமுறை எழுதப்பட்டுள்ளது.

ஞானம், அறிவு, நிதானம், விவேகம், தெளிந்த புத்தி, முன்யோசனை, சமயோசித புத்தி, மதி, பகுத்தறிவு, தன்னடக்கம் போன்றச் சொற்கள் ஞானத்தின் பல கோணங்களை வெளிப்படுத்துகின்றன. அழகும் அறிவீனமும் நல்ல ஜோடியல்ல. மதிகேடான சுந்தரி பன்றியின் மூக்கிலுள்ள பொன் மூக்குத்திதான் (நீதி 11:22). கவர்ச்சியற்ற ஞானவதி அதிலும் மேன்மை. அவளது புத்தி அவளை கவர்ச்சிகரமாக்குகிறது. ஞானவதியாகவேண்டுமென்றால் ஞானம் என்னவென்று அறிவது அவசியம். எளிமையாக விளக்க முயற்சிக்கிறேன். அது—

1. குறிப்பிட்ட சூழ்நிலையில் நன்மை தீமையைப் பகுத்தறிவது

எபிரெயர் 5:14இல் பின்வருமாறு வாசிக்கிறோம்: "பலமான ஆகாரமானது நன்மை தீமை இன்னதென்று பயிற்சியினால் பகுத்தறியத்தக்கதாக முயற்சி செய்யும் ஞானேந்திரியங்களையுடையவர்களாகிய பூரண வயதுள்ளவர்களுக்கே தகும்." பகுத்தறியும் சக்தி அனுபவத்தினால் (பயிற்சி) மட்டுமே வரும். இயேசு ஞானத்தில் "விருத்தியடைந்தார்" (வளர்ந்தார்) (லூக் 2:52).

வெள்ளை எது கருப்பு எது என்று நிதானிப்பது சுலபம் (இது ஏவாள் பழத்தைச் சாப்பிட்டவுடன் பெற்றுக்கொண்டது); சிக்கலானது சாம்பல் நிறம்தான். மகன்களுக்குச் சிலவேளை பெற்றோரின் கட்டளை சரியா தப்பா எனத் தீர்மானிப்பது கடினமாகிறது. அப்படியே மனைவியர் சிலசமயம் தம் கணவருக்குக் கீழ்ப்படிவது சரிதானா என்ற கேள்வி எழுகிறது. இங்குதான் நமக்கு ஞானம் தேவை. எல்லா சூழ்நிலைகளிலும் வேதம் வழிகாட்டுவதில்லை. வேதம் அமைதியாயிருக்கும்போது, தேவன் மௌனமாயிருக்கும்போது, நமது புத்தியைப் பயன்படுத்துவது அவசியம். ஆகவேதான் வேதம் பல இடங்களில் தெளிந்த புத்தியையும் பகுத்தறிவையும் குறித்துப் பேசுகிறது (இது அனுபவம் தருவது).

2. நலமானதை எதிர்பார்த்தாலும் தீதானதற்கு ஆயத்தமாயிருப்பது

பத்துக் கன்னிகைகள் நல்ல எடுத்துக்காட்டு. புத்தியில்லாதவர்கள் எல்லாம் திட்டமிட்டபடியே நடைபெறும் என்று எதிர்பார்த்தனர். திட்டத்தில் திடீர் திருப்பத்திற்கு ஆயத்தமாயில்லை. திரும்பத் திரும்ப ஒரு பலவீனம் உங்களைத் தாக்குமானால், வெளியேச் செல்லும்போது அதற்கான மாத்திரைகளை எடுத்துச் செல்வது ஞானம், அவிசுவாசமல்ல. நோய் வாய்ப்படுவோம் என்று நீங்கள் எதிர்பார்க்கவில்லை, ஆனால் அதற்கு ஆயத்தமாயிருக்கிறீர்கள். பயணத்தின்போது உங்கள் பணத்தைப் பிரித்து இரண்டு இடங்களில் வைப்பது ஞானம். திருட்டுப் போகும் என்று நீங்கள் எதிர்பார்க்கவில்லை, ஆனால் ஒருவேளை ஒன்று திருட்டுப் போனாலும் ஒன்று இருக்குமே.

ஞானத்தைப் பெறுவது எப்படி ?

ஞானம் எட்டாத கொப்பில் இருக்கிறது என்று சிலவேளை எண்ணிவிடுகிறோம். இல்லை. சில எளிமையான சட்டங்களுக்குப் பணிவோமானால் ஞானம் நமதாகும்.

அ) கிறிஸ்துவை உங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்ளுங்கள்.

"கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்" (நீதி 1:7). இயேசுவையன்றி வேறே ஞானம் இல்லை. "ராகாப் என்ற வேசி" என்றால்தான் எரிகோவில் அவளை அடையாளம் கண்டுகொள்வர் (யோசு 2:1). ஆனால் தேவன் அவளுக்குப் புதிய துவக்கத்தைக் கொடுத்தார். எரிகோவின் பிரம் மாண்டமான மதில்கள் நொறுங்கி விழுந்தன— ஒரு இடம் தவிர— அதுதான் ராகாபின் வீடு. யார் ஞானி, ராகாபா அல்லது எரிகோவின் ஞானிகளா? "அவிசுவாசியான விஞ்ஞானியும் அறிவற்ற விசுவாசியும் குறித்தென்ன?" என்று நீங்கள் கேட்கலாம். யார் ஞானி என்பது அவர்களது மரணப்படுக்கையில் உங்களுக்குத் தெளிவாகும். கிறிஸ்துவே நமக்கு ஞானமானார் (1 கொரி 1: 31).

ஆ) வாஞ்சித்து ஜெபியுங்கள்.

இரத்தினங்களுக்கும் மேலாக சாலொமோன் ஞானத்தை விரும்பின படியால், கன நித்திரையில் எழுப்பி என்ன வேண்டும் என்று கேட்டால், தூக்கக் கலக்கத்திலும், "ஞானத்தைத் தாரும்" என்பார். ஞானம், ஞானம் என்ற தவிப்பு வேண்டும். அதுமட்டும் போதாது. எதைக்காட்டிலும் அதிகமாக நாம் தேவனிடம் ஞானமென்னும் ஆசிக்காய் மன்றாடி ஜெபித்துக்கொண்டே இருக்கவேண்டும் (யாக் 1:5).

இ) ஆலோசனைக்குத் திறந்த மனதுள்ளவர்களாயிருங்கள்.

எந்த வயதிலும், இவ்வுலகில் நம்மைக் காட்டிலும் கூடுதல் வாழ்ந்து அனுபவத்தினால் ஞானமடைந்தவர்கள் நம்மோடு இருக்கத்தான் செய்வார்கள். அவர்கள் வாழ்க்கையிலிருந்து அதிகமாய்க் கற்றவர்கள். பொதுவாக ஆலோசனை என்றாலே செவியைத் திருப்பிக்கொள்ளும் நாம், பெற்றோர், பெரியோர், மற்றோர் புத்திசொல்லும்போது அமைதியாகக் கவனிப்பது நல்லது. *"என் மகனே, என்* **ஞானத்தைக்** *கவனித்து, என்* **புத்திக்கு** *உன் செவியைச் சாய். அப்பொழுது நீ விவேகத்தைப் பேணிக் கொள்வாய், உன் உதடுகள் அறிவைக் காத்துக்கொள்ளும்."* இல்லாவிட்டால் உன் வாழ்க்கையின் இறுதியில் நீ துக்கத்தோடு: கண்டிப்பை வெறுத்தேனே! என் இருதயம் திருத்தத்தை மறுத்ததே! என்னை வழிநடத்தினவர்களைக் கேளாமலும் என் ஆசிரியர் சொல்லை அசட்டை செய்தும் கெட்டுப்போனேனே. என் வாழ்க்கையே சீரழிந்து போனதே எனப் புலம்புவாய் (நீதி 5:1, 2, 11–14).

ஆம், உனக்கு மட்டுமல்ல, உன் குடும்பத்திற்கும் சபையாருக்கும் வெட்கம் உண்டாக்குவாய்.

ஈ) பொது அறிவைப் பெருக்கிக்கொள்ளுங்கள்.

பெண்கள் கிணற்றுத் தவளைகளாக இருக்கக்கூடாது. வாசித்தலும் பயணித்தலும் உங்கள் அறிவைப் பெருக்கும். மத சம்பந்தமான புத்தகங்களையேப் படித்துக்கொண்டிருக்கக்கூடாது. செய்தித்தாளும் பொதுவான நல்ல சில பத்திரிகைகளும் படித்து அறிவை வளர்த்துக் கொள்வதவசியம்.

உ) தேவனுடைய வார்த்தையை வாசித்து அப்பியாசியுங்கள்.

தேவன் தமது கற்பனைகளைக் குறித்து இஸ்ரவேலருக்குச் சொன்ன தைக் கேளுங்கள்: *"அவைகளைக் கைக்கொண்டு நடவுங்கள்; மக்களின் கண்களுக்கு முன்பாகவும் இதுவே உங்களுக்கு **ஞானமும் விவேகமுமாய்** இருக்கும்; அவர்கள் இந்தக் கட்டளைகளையெல்லாம் கேட்டு; இந்தப் பெரிய இனமே **ஞானமும் விவேகமுமுள்ள** மக்கள் என்பார்கள்"* (உபா 4:6). ஆகவே அங்கேதானே துவங்குங்கள். *"நீர் உம்முடைய கற்பனைகளைக்கொண்டு என்னை என் **சத்துருக்களிலும்** அதிக ஞானமுள்ளவனாக்குகிறீர்; அவைகள் என்றைக்கும் என்னுடனே இருக்கிறது. உம்முடைய சாட்சிகள் என் தியானமாயிருக்கிறபடியால், எனக்குப் **போதிக்கிறவர்களெல்லாரிலும்** அறிவுள்ளவனாயிருக்கிறேன். உம்முடைய கட்டளைகளை நான் கைக்கொண்டிருக்கிறபடியால், **முதியோர்களைப் பார்க்கிலும்** ஞானமுள்ளவனாயிருக் கிறேன்"* (சங் 119:98–100). புத்தகங்கள் அறிவைப் பெருக்கலாம்; வேதமோ ஞானத்தைத் தரும். *"எப்போதும் கற்றாலும் ஒருபோதும் சத்தியத்தை அறிந்து உணராதவர்களாயிருக்கிற பெண் பிள்ளைகள்,"* என்று நாம் பெயரெடுத்து விடக்கூடாது (2 தீமோ 3:6, 7).

ஊ) பொது அறிவைப் பயன்படுத்துங்கள்.

பாதுகாவலுக்காய் ஜெபியுங்கள்; ஆனால் காட்டு வழியாய்ப் போகும்போது பாதரட்சைகளை அணிந்துகொள்ளுங்கள். கர்த்தரை நம்புங்கள்; ஆனால் சீட் பெல்டைப் போட்டுக்கொள்ளுங்கள். தெய்வீக சுகத்திற்காய் மன்றாடுங்கள்; ஆனால் உங்கள் மருந்துகளைச் சாப்பிடுங்கள். பாட்டிலில் இருப்பதைப்

பயன்படுத்துமுன்பாக ஒட்டப்பட்டுள்ள சீட்டை வாசியுங்கள். பழைய பாட்டில்களைப் பயன்படுத்தினால் தெளிவாகச் சீட்டு ஒட்டுங்கள். தங்களுக்குத் தாங்களே உதவி செய்துகொள்ளாதவர்களுக்கு கடவுள் உதவி செய்யமாட்டார்.

எ) **தவறுகளிலிருந்து கற்றுக்கொள்ளுங்கள்.**

இப்படித்தான் அனுபவம் பெறுகிறோம். "முட்டாள்கள் தங்கள் தவறுகளிலிருந்து கற்றுக்கொள்ளுகிறார்கள்; ஞானவான்களோ பிறர் தவறுகளிலிருந்து கற்றுக்கொள்ளுகிறார்கள்," என்றார் ஒருவர்.

ஞானமாய் நடந்துகொள்வது எப்படி ?

ஞானத்தைப் பெற்றுக்கொள்வது வேறு, ஞானமாய் நடந்துகொள்வது வேறு. சாலொமோனுக்கு அதிகமான ஞானம் இருந்தாலும் பின் நாட்களில் அதைச் செயல்படுத்தத் தவறிவிட்டார்.

நடைமுறை ஞானத்திற்கு இதோ சில குறிப்புகள்—

அ) **கிறிஸ்துவின் இரண்டாம் வருகையிலே நினைவாயிருங்கள்.**

"இரவிலே திருடன் வருகிறவிதமாய்க் கர்த்தருடைய நாள் வருமென்று நீங்களே நன்றாய் அறிந்திருக்கிறீர்கள்... ஆகையால், மற்றவர்கள் தூங்குகிறதுபோல நாம் தூங்காமல், விழித்துக் கொண்டு ***தெளிந்தவர்களாயிருக்கக்கடவோம்.*** *தூங்குகிறவர்கள் இராத்திரியிலே தூங்குவார்கள்; வெறி கொள்ளுகிறவர்கள் இராத்திரியிலே வெறி கொள்ளுவார்கள். பகலுக்குரியவர்களாகிய நாமோ* ***தெளிந்தவர்களாயிருந்து,*** *விசுவாசம் அன்பு என்னும் மார்க்கவசத்தையும் இரட்சிப்பின் நம்பிக்கையென்னும் தலைச்சீராவையும் தரித்துக்கொண்டிருக்கக்கடவோம்"* (1 தெச 5:1–8).

இரண்டு குழு கன்னியரும்—புத்தியுள்ளவர்களும் புத்தியில்லாதவர்களும்— திருமண வைபவங்களில் எவ்வித குளறுபடியும் எதிர்பார்க்கவில்லை. ஆனால் ஒரு குழு எப்போதும் ஆயத்தமாயிருந்தது. இரண்டு பெண்கள் மாவரைத்துக் கொண்டிருந்ததைக் குறித்து வேதத்தில் வாசிக்கிறோம். ஒருத்தி எடுத்துக்கொள்ளப்பட்டாள், மற்றொருத்தி விடப்பட்டுப் போனாள். அடுத்த நாள் தோசை சுட முந்தின நாள்தான் மாவாட்டுவோம். அதனால் கிறிஸ்துவின் துரித வருகையை நாம் எதிர்பார்க்கவில்லை

என்பதில்லை. அன்றாடக் கடமைகளில் நாம் துல்லியமாயிருந்து, கடைசி நிமிடங்களில் வாழ்கிறோம் என்ற விழிப்புடன் வாழவேண்டும். "இப்போது இயேசு வந்தால் நான் ஆயத்தமாயிருப்பேனா ?" என்ற கேள்வியை உங்களிடமே கேட்டுக்கொள்ளுங்கள்.

ஆ) வாழ்க்கையின் தற்காலிகத்தை உணர்ந்து உங்கள் விசுவாசத்தை இறுகப் பற்றிக்கொள்ளுங்கள்.

வாழ்க்கையில் நல்லவையும் உண்டு கெட்டவையும் உண்டு. ஆனால் பரலோகத்தில் நல்லவைகள் மட்டுமே உண்டு; அதோடு கெட்டவை அறவே கிடையாது. வாழ்க்கையின் கெட்ட காரியங்கள் உங்களை பயமுறுத்த வேண்டாம். தைரியமாக, பொன்னிலும் மேலான உங்கள் விசுவாசத்தை விடாமல் பற்றிக்கொள்ளுங்கள். இவ்வாழ்க்கை கவலைப்படுவதற்கு மிகவும் சுருக்கமானது.

வாழ்க்கையில் எதிர்பார்க்கக்கூடிய எல்லாவற்றையும் அடைந்திருந்தாள் ஒரு பெண். ஆனால் தீய நாட்கள் வந்தபோது தன் விசுவாசத்தை விட்டுவிட்டு **அறிவிலி**யானாள். யூகியுங்கள். திருமதி யோபுதான்! (2:10). உங்கள் வியாபாரம் முடங்கிப்போனாலும் உங்கள் மகளுக்கு மருத்துவ அல்லது பொறியியல் கல்லூரியில் இடம் கிடைக்காமல் போனாலும், மரணத்துக் கேதுவான நோய் உங்களைப் பற்றியிருந்தாலும் உங்கள் விசுவாசத்தில் உறுதியாய் நிலைத்திருங்கள் (ஆப 3:17).

இ) மனப்பதட்டத்தில் எதையும் செய்யாதீர்கள்.

பெண்கள் சுலபமாக மனநிலைப் பாதிப்படைபவர்கள். நொறுங்கி அழுவார்கள், கோபப்பட்டுக் கத்துவார்கள், கண்சிமிட்டும் நேரத்தில் இதயத்தைப் பறிகொடுத்துவிடுவார்கள். எச்சூழ்நிலையிலும் உங்கள் மனப்பாங்கைக் கட்டுப்படுத்தி அதன்பின் சிந்தித்துச் செயல்படக் கற்றுக் கொள்ளுங்கள். 'தெளிவு' என்ற பதம் 'தன்னடக்கம்' என்று நவீன மொழி பெயர்ப்புகளில் மொழியாக்கம் செய்யப்பட்டிருக்கிறது. தன்னடக்கமே ஞானம். கட்டுக்கடங்காத உங்கள் மனநிலை உங்களை மூடராக்கலாம். மனநிலை தவறுகளைத் தவிர்க்க ஒரு வழி நமது தீர்மானங்கள் அல்லது பிரதிபலிப்புகளை ஒத்திப் போடுவது. வஸ்தி உடனடியாக அரசருக்கு உத்தரவு அனுப்பினாள். எஸ்தரோ உபவாசித்து, ஜெபித்து, தன் அடுத்த

நடவடிக்கையைத் திட்டமிட்டு அதன் பின்னரே செயல்பட்டாள். நமது மன நிலையைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்போமானால் பின்னால் வருத்தப்பட வேண்டியிருக்காது. "*முற்கோபி* ***மதிகேட்டைச்*** *செய்வான்*" (நீதி 14:17). தன்னடக்கம் கற்றுக்கொடுப்பதினால் பெற்றோர் பிள்ளைகளுக்குப் பேருதவி செய்கின்றனர். உங்கள் மனக்கொதிப்பை வெளியே ஊற்றாததின் மூலம் பரிசுத்தத்தைக் காத்துக்கொள்ளுங்கள். "*உன் மனதில் சீக்கிரமாய்க் கோபங்கொள்ளாதே;* ***மூடரின்*** *நெஞ்சிலே கோபம் குடிகொள்ளும்*" (பிர 7:9).

ஈ) இல்லத்தைக் கட்டுகிறவர்களாயிருங்கள்.

"***புத்தியுள்ள*** *பெண் தன்வீட்டைக் கட்டுகிறாள்;* ***புத்தியில்லாத*** *பெண்ணோ தன் கைகளினால் அதை இடித்துப் போடுகிறாள்*" (நீதி 14:1)

ஆண்களாகப் பெண்கள் உருவாக்கப்படவில்லை. ஆகவே பெண்களாயி ருங்கள்; இல்லாவிடில் தேவனது நோக்கத்தை முறியடிக்கிறவர்களாயிருப் பீர்கள். சமையல் கலையையும் வீட்டுக் கலைகளையும் கற்றுக்கொள்ளுங்கள். பிள்ளைகள் வளர்ந்துவிடுவதில்லை; அவர்கள் வளர்க்கப்படவேண்டும், இல்லாவிட்டால் அவர்கள் பயிர்களாக அல்ல களைகளாவார்கள். வீட்டைச் செங்கற்களால் கட்டலாம்; இல்லத்தை ஞானத்தாலேதான் கட்டமுடியும். "*வீடு* ***ஞானத்தினாலே*** *கட்டப்பட்டு,* ***விவேகத்தினாலே*** *நிலைநிறுத்தப்படும்.* ***அறிவினாலே*** *அறைகளில் அருமையும் இனிமையுமான சகலவிதப் பொருள்களும் நிறைந்திருக்கும்*" (நீதி 24:3,4). ஒருவர் வீடுகளையும் சம்பத்தையும் வரதட்சணையாகப் பெறலாம்; கர்த்தர் மட்டுமே **புத்தியுள்ள** மனைவியைக் கொடுத்து அவரை ஆசீர்வதிக்க முடியும் (நீதி 19:14). வீட்டில் நீங்கள் பேசும் ஒவ்வொரு வார்த்தையும் குடும்பத்தை கட்டவோ உடைக்கவோ செய்யும். "*தன் வாயை* ***ஞானம்*** *விளங்கத் திறக்கிறாள்*" (நீதி 31:26). வீட்டின்மேல் வீடு கட்டும் திட்டத்தைக் கைவிட்டு உங்கள் இல்லத்தைக் கட்டுவதில் கவனத்தைச் செலுத்துங்கள்.

உ) ஆத்துமாக்களை ஆதாயம் செய்யுங்கள்.

ஆத்துமாக்களை ஆதாயப்படுத்திக்கொள்ளுகிறவள் **ஞானமுள்ளவள்** (நீதி 11:30). தன்னை நியாயம் விசாரிக்கும் அதிபதி பெஸ்துவுக்கும் அரசன் அகிரிப்பாவுக்கும் நற்செய்தி அறிவிக்கும் சந்தர்ப்பத்தைப் பவுல் பயன்படுத்திக்கொண்டார். அதைக் கேட்ட பெஸ்து, "*பவுலே, நீ* ***பிதற்றுகிறாய்,***

அதிகக் கல்வி உனக்குப் ***பயித்தியமுண்டாக்குகிறது,"*** *என்றான். அதற்கு அவர்: "கனம் பொருந்திய பெஸ்துவே, நான்* ***பயித்தியக்காரனல்ல,*** *சத்தியமும்* ***சொஸ்தபுத்தியுமுள்ள*** *வார்த்தைகளைப் பேசுகிறேன்," என்றார் (அப் 26:24,25).* ஆம், உலகத்திற்கு ஆத்துமாதாயம் பயித்தியம்தான்; ஆனால் தேவனுடைய பார்வையிலோ அது ஞானம். பயித்தியமாய் ஆத்துமாக்களைத் தேடுவதே ஞானம். வீணலுவல்களில் நேரத்தைப் போக்குவதைத் தவிர்த்து மருத்துவமனைகளைச் சந்திப்பதிலும் அல்லது உங்கள் அயலகத்தில் வீட்டுக்கொரு புதிய ஏற்பாடு கொடுப்பது போன்ற செயல்களிலும் ஈடுபடுங்கள். பயத்தை மேற்கொள்ளுங்கள். தீமோத்தேயுவைப் பின்வரும் வார்த்தைகளினால் உற்சாகப்படுத்தினார் பவுல், *"தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், (நற்செய்தியைப் பகிர) பலமும் (மக்கள் மேல்) அன்பும்* ***தெளிந்த புத்தியுள்ள*** *ஆவியையே கொடுத்திருக்கிறார். ஆகையால் நம்முடைய கர்த்தரைப்பற்றிய சாட்சியைக்குறித்து... நீ வெட்கப்படாமல்"...* (2 தீமோ 1:7,8). *"****ஞானவான்கள்*** *ஆகாய மண்டலத்தின் ஒளியைப்போலவும், அநேகரை நீதிக்குட்படுத்துகிறவர்கள் நட்சத்திரங்களைப் போலவும் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் பிரகாசிப்பார்கள்"* (தானி 12:3). **ஞானமுள்ளப்** பெண்ணொருத்தி ஒரு பட்டணத்தையே இரட்சித்தாள் (2 சாமு 20:16).

நீங்கள் அதிகாரிகளுக்கு முன்பாக இழுத்துச் செல்லப்படும்போது அது சாட்சியாவதற்கு ஏதுவாகும். கவலைப்படாதீர்கள்; உங்களை விரோதிக்கிறவர்கள் ஒருவரும் எதிர்பேசவும் எதிர்நிற்கவும் கூடாத வார்த்தைகளையும் **ஞானத்தையும்** தேவனே உங்களுக்கு அருளுவார் (லூக் 21:13 –15).

நவீன சாதனங்கள் நமக்குண்டே. வேலையைத் துரிதமாய் முடித்துவிட்டு கிறிஸ்தவரல்லாத அயலகத்தினரைச் சந்திக்கவோ தெரு பிள்ளைகளைக் கூட்டிப் போதிக்கவோ புறப்பட்டுச் செல்லுங்கள்.

ஊ) ஞானமாய்ப் பேசுங்கள்.

நாவிற்குக் காவல் வையுங்கள். பெண்களின் கட்டுக்கடங்காத நாவிற்கு அதிகப் பயிற்சி தேவை. அதனால்தான் நாவைக் குறித்து தீர்க்கமாய்ப் பேசிவிட்டு உடனே ஞானத்தைக் குறித்துப் பேசுகிறார் யாக்கோபு. "பரத்திலிருந்து வருகிற **ஞானமோ** முதலாவது சுத்தமுள்ளதாயும், பின்பு சமாதானமும் சாந்தமும் இணக்கமுள்ளதாயும், இரக்கத்தாலும்

நற்கனிகளாலும் நிறைந்ததாயும், பட்சபாதமில்லாததாயும், மாயமற்றதாயு யிருக்கிறது" (3:17). மரியாள் காரியங்களைத் தன் இதயத்தில் வைத்து சிந்தனைபண்ணக் கற்றுக்கொண்டிருந்தாள் (லூக் 2:19, 51). அபிகாயில் எப்போது பேச வேண்டும் எப்போது வாயை மூடிக்கொண்டிருக்க வேண்டும் என்றறிந்திருந்தாள். அவள் மகா **புத்திசாலி** எனப் பெயர் பெற்றவள் (1 சாமு 25:3,36,37). "***மதியற்றப்*** *பெண் வாயாடியும், ஒன்றுமறியாத* ***நிர்மூடமுமாயிருக்கிறாள்***" (நீதி 9:13). நாவடக்கம் நெடுநாள் பயிற்சியினால் மட்டுமே வருமாதலால் சீக்கிரமாய்த் துவங்குங்கள். சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியே பெண்களுக்கு அழகு முலாம். பெருவாரியான வீட்டுச் சண்டைகள் ஞானமற்ற வார்த்தைப் பரிமாற்றத்தினாலேயே வருகிறது. ஆகவே எப்போது பேசவேண்டும் எப்போது அமைதி காக்கவேண்டும் என்றுப் பகுத்தறியுங்கள்.

எ) நேரத்தைப் பயன்படுத்துங்கள்.

காலம் பொன்போன்றது. ஒவ்வொரு விநாடியும் ஞானமாய்த் திட்டமிடப்பட்டுப் புத்தியாய்ப் பயன்படுத்தப்படவேண்டும். "*நீங்கள்* ***ஞானமற்றவர்களைப்போல*** *நடவாமல்,* ***ஞானமுள்ளவர்களைப்போலக்*** *கவனமாய் நடந்துகொள்ளப் பார்த்து, நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளுங்கள்*" (எபே 5:15,16). முதன்மையானவைகளுக்கு முதலிடம் கொடுக்காவிட்டால் நேரம் வீண் காரியங்களில் சிதறடிக்கப்படும். எஞ்சிய வாழ்க்கையில் என்ன சாதிக்கப்போகிறீர்கள் என்றத் தெளிவு அவசியம். தினத்தைத் திட்டமிட்டால் நேரக் கசிவைத் தவிர்க்கலாம்.

செய்யவேண்டியவற்றைக் குறித்துவைக்க சிறிய நோட்டு பயன்படுத்துங்கள். காலையிலேயே தலையைச் சொறிந்துகொண்டு உட்கார்ந்திராதபடி காலை, மதியம் மற்றும் இரவு என்ன சமையல் என்பதைத் தூங்கப் போகுமுன்பே தீர்மானியுங்கள். தேவனுக்கும் குடும்பத்திற்கும் இளைப்பாறுதலுக்கும் வேலைக்கும் உங்களுக்கும் நேரத்தை ஒதுக்குங்கள்.

வேகமாகவும் சுறுசுறுப்பாகவும் இருங்கள். "**சீக்கிரமாய்**" குடத்தை காலிசெய்துவிட்டு ரெபெக்காள் தண்ணீர் மொள்ள "**ஓடினாள்.**" அவளது துரிதத்தை ஆபிரகாமின் ஊழியர் கவனித்தார் (வச 46). மரியாளும்

அவளோடிருந்தவர்களும் உயிர்த்தெழுதலின் நற்செய்தியை அறிவிக்க **"சீக்கிரமாய்ப்"** புறப்பட்டு **"ஓடினார்கள்"** (ஆதி 24:20; மத் 28:8). யூதப் பெண்கள் தங்கள் நீண்ட அங்கிகளுடன் ஓடுவதைக் கற்பனை செய்து பாருங்கள்! வீட்டு வேலையில் குடும்பம் ஈடுபடச் செய்யுங்கள். கணவருக்கும் பிள்ளைகளுக்கும் வேலைகளைப் பிரித்துக் கொடுப்பதினால் களைப்பைத் தவிர்க்கலாம். அது பிள்ளைகளுக்கும் நல்ல பயிற்சி.

ஏ) பணத்தை ஞானமாய்ச் செலவழியுங்கள்.

நீங்கள் சம்பாதிக்கலாம் அல்லது கணவரிடமிருந்து வீட்டுச் செலவிற்காக ஒரு தொகையைப் பெறலாம். எதுவானாலும் அதை ஞானமாய்க் கையாளுங்கள். வீணடிக்காதீர்கள். உங்கள் வருமானத்தில் திருப்தியாயிருந்து செலவைத் திட்டமிடுங்கள். இறையரசுப் பணிகளுக்குத் தாராளமாய்க் கொடுங்கள். தனது விளைச்சலை சேமித்து வைத்து வாழ்க்கையை அனுபவிக்கத் திட்டமிட்ட ஒருவனைக் குறித்து இயேசு பேசினார்: ஆண்டவர் அவனிடம், "***மதிகேடனே,*** *உன் ஆத்துமா உன்னிடத்திலிருந்து இந்த இராத்திரியிலே எடுத்துக்கொள்ளப்படும், அப்பொழுது நீ சேகரித்தவைகள் யாருடைய தாகும்*" என்றார் (லூக் 12:20). துணிமணிகளிலும் கட்டிடங்களிலும் குறைவாய்ச் செலவழித்து, மிச்சம்பிடித்து தேவனுக்குக் கொடுங்கள். "**புத்தியாய்ச்**" செய்த உக்கிராணக்காரனைக் குறித்த உவமையை இயேசு சொல்லி, "*நீங்கள் மாளும்போது உங்களை நித்தியமான வீடுகளிலே ஏற்றுக்கொள் வாருண்டாகும்படி, அநீதியான உலகப் பொருளால் உங்களுக்குச் சிநேகிதரைச் சம்பாதியுங்கள்*" என்றார் (லூக் 16:8,9). "எந்தப் பெண்களுடைய இருதயம் **ஞான எழுப்புதல்** அடைந்ததோ, அவர்கள் எல்லாரும் வெள்ளாட்டு *மயிரைத் திரித்தார்கள்*" (யாத் 35:25,26). இது மிஷனரி எழுப்புதலின் நாட்கள். தேவனுக்காய் செலவழிக்க உங்களது இதயத்தில் ஒரு ஞான எழுப்புதலை உணருகிறீர்களோ? அதைக் குளிர்ந்த நீரூற்றி அணைத்துப் போடாதீர்கள்; தேவன் ஏவுகிறபடி துணிந்து செய்யுங்கள்.

ஐ) ஞானத்தின் ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

"**ஞானத்தையும்** *உணர்வையும் அருளும் ஆவியானவரை,*" தேவனிடம் கேட்டுப் பெற்றுக்கொள்ளுங்கள் (ஏசா 11:2). தேவன் கருமியல்ல. உங்கள்மேல் தமது ஆவியை அளவில்லாமல் ஊற்றிக்கொடுப்பார். கடவுள் உங்களை ஞானத்தினால் ஆசீர்வதிப்பாராக!

12

துணுக்குகள்

1. ஒன்றின்மேல் ஒன்றாகப் பொருட்களை அடுக்கும்போது கனமானதும் அகலமானதுமானவைகளை அடியில் வையுங்கள்.

2. விலையான பொருட்களை ஜன்னலோரத்தில் வைக்காதீர்கள்.

3. மேஜையின் ஓரத்தில் பொருட்களை வைக்காதீர்கள்.

4. ஒருசில நிமிடங்களில் எடுத்துவிடலாம் என்று நினைத்தால் கூட ஊசி அல்லது ஊக்கு போன்றவைகளை கட்டிலிலோ உட்காருமிடத்திலோ வைக்காதீர்கள்.

5. மூக்குக் கண்ணாடியைக் கழற்றும்போது உட்காருமிடங்களில் வைக்காதீர்கள்.

6. பார்த்து உட்காருங்கள், அல்லது கவலையீனமானவர் விட்டுச் சென்ற ஆபத்தான அல்லது உடையக்கூடிய பொருட்களின் மேல் உட்கார வாய்ப்புண்டு.

7. யாரையும் உடனே நம்பிவிடாதீர்கள்.

8. பெட்டிகள், பார்சல்களைத் தலைகீழ்ப்பக்கம் திறக்காதீர்கள்.

9. மருந்துகள் அல்லது சாதனங்களைப் பயன்படுத்துமுன்னர் சீசா மேலுள்ள சீட்டு அல்லது உபகரணத்திற்கான கையேட்டைப் படியுங்கள். உங்களுக்குத் தெரிந்த அல்லது நீங்கள் நினைப்பது அல்லது பிறர் சொல்வதுபோல செய்யாதீர்கள்.

10. அயலகத்தினர், நண்பர்கள் மற்றும் உறவினர், பணத்தைவிட விலையயேறப்பெற்றவர்கள். அவர்களிடம் கருமித்தனமாய் நடந்து கொள்ளாதீர்கள்.

11. சைக்கிளின் பின்புறம் உட்கார்ந்துச் சென்றால் சைக்கிளின் இடதுபுறமாக காலைத் தொங்கவிடுங்கள் அல்லது நெருக்கமாய்ச் செல்லும் வாகனங்கள் உங்கள் முழங்காலை உரசலாம். நீங்கள் இறங்கும்போது வாகனங்கள் மோதலாம். சைக்கிள் ஓட்டுனர் இறங்கும்போது அவரது கால்கள் உங்களை இடிக்கலாம்.

12. சூட்கேசுகளை மூடி வையுங்கள். பைகள், பள்ளிப்பைகள், கைப்பைகளை ஜிப் போட்டு வையுங்கள். அப்படியானால் பூச்சிகள் உள்ளே போய் இருப்பதைத் தவிர்க்கலாம். அதே காரணத்திற்காக காலணிகளைக் கவிழ்த்துத் தட்டி அணியுங்கள்.

13. மேல்பாகத்தைவிட கீழ்பாகம் குறுகலாயிருக்கும் டம்பளர்கள் சுலபமாகக் கவிழ்ந்துவிடுமாகையால் அவற்றை வாங்காதீர்கள்.

14. முக்கிய உணவைத் தட்டின் இடப்பக்கத்திலும் கூட்டை வலப்பக் கத்திலும் வைத்தால் கூட்டை எடுக்கும் போதெல்லாம் தட்டை கை கடக்கவேண்டியதில்லை.

15. புடவை போன்றவைகளை வாங்கும்போது கடையிலேயே முழு மையாகத் திறந்துப் பார்த்து வாங்குங்கள். கூடுமானபோதெல்லாம் சாதனங்கள் வேலை செய்கின்றனவா எனச் சரிபார்த்து வாங்குங்கள். காரண்டி கார்டுகளையும் வில்லைகளையும் பத்திரமாக வையுங்கள்.

16. வாடகை வாகனத்திலிருந்து இறங்கும்போது அதன் எண்ணை கவனித்துப் பழகுங்கள்.

17. பயணத்தின்போது உங்கள் மூட்டை முடிச்சுகளை எண்ணுங்கள். இறங்கும்போது எண்ணி இறக்குங்கள்.

18. சூட்கேசை அடுக்கும்போது கனமான பொருட்களை பெட்டியின் முதுகுப்புறமாக வையுங்கள். புத்தகங்களை பாலிதீன் பை அல்லது பேப்பரில் சுற்றி அதன் முதுகைப் பெட்டியின் முதுகுப்புறமாக வைத்தால் பக்கங்கள் சேத மடையாமல் இருக்கும். புத்தகங்கள் அல்லது வேதாகமத்தின் முதுகு அடிப் பகுதியிலிருக்குமாறு கைப்பையில் வைத்தால் பக்கங்கள் சேதமடையா.

19. பயணத்திற்காகச் செருப்பை வைக்கும்போது பாதத்தோடு பாதம் சேர்த்து செருப்புப் பைக்குள் வைத்தால் பாதப்பகுதியைத் தொடாமலே வைக்கலாம், எடுக்கலாம்.

20. ஹோட்டலில் தங்க நேர்ந்தால் கதவு, ஜன்னல்களில் ஓட்டை இருக்கிறதா எனப் பார்த்து அடைக்கவும். விஷமிகளின் வேலையிது. ஹோட்டலில் நீராடியபின் பக்கெட்டில் தண்ணீர் நிரப்பி வையுங்கள். நீர்த்தொட்டி எப்போது காலியாகும் என்று சொல்லமுடியாது.

21. பயணச்சீட்டு வாங்கினவுடனே தேதியைச் சரிபாருங்கள். தவறுகள் ஏற்பட வாய்ப்புண்டு. விடியற்கால நேரமானால் தேதியில் குழப்பம் ஏற்படலாம்.

22. வருமானத்தை இரண்டு பெட்டிகளில் இரண்டு இடத்தில் வைப்பது நல்லது. பயணத்தில் பாதிப் பணத்தைத் துணைவரிடம் கொடுத்து வையுங்கள். ஓர் ஆடையைத் துணைவர் பெட்டியில் வையுங்கள். பயணிக்கும்போது பணத்தைப் பிரித்து இரண்டு இடத்தில் வையுங்கள். பணத்தை இரண்டு வங்கிகளில் அல்லது ஃபைனான்ஸ் கம்பெனிகளில் சேமியுங்கள். ஒன்று திவாலானாலும் ஒன்று இருக்குமே.

23. உடைமாற்றுமுன் பவுடர் போட்டால் துணிகளில் துகள்கள் தெரியாது.

24. குளித்தவுடன் கால்களில் எண்ணெய் பூசினால் நாள் முழுவதும் கால்கள் சுத்தமாக இருக்கும்.

25. பெறுநர் விலாசத்தை உறையின் நடுக்கோட்டிற்குக் கீழே எழுதினால் விலாசத்தின்மேல் அச்சு விழுவதைத் தவிர்க்கலாம்.

26. சிறு சிறு வீட்டு வேலையிலும்கூட கையிலெடுத்த வேலையைப் பாதியில் விட்டுச் செல்லாமல் அதை முடித்து அடுத்த வேலையை எடுப்பதினால் அதிக நேரத்தை மிச்சம் பிடிக்கலாம்.

27. ஊசி போன்ற கூர்மையான பொருட்களை அப்படியே குப்பைத் தொட்டியில் போடாமல் பெட்டி அல்லது பேப்பரில் பொதிந்து போட்டால் குப்பை எடுப்பவர்களுக்குக் காயம் ஏற்படாது.

28. சொந்தக்காரரது அனுமதியின்றி சிறுவர்களுக்குத் தின்பண்டங்கள் கொடுக்கக்கூடாது.

29. ஒவ்வொரு சாவியிலும் என்ன சாவியென்று சீட்டு கட்டினால் குழப்பம் வராது.

30. எடுத்த இடத்தில் பொருட்களை வைப்பதினால் நேரம் வீணாவதைத் தவிர்க்கலாம்.

ஆசிரியரது பிற நூல்கள்—

- அவன் தீர்மானங்கள்
- இயேசுவின் பின்னே...
- உலகில் உத்தமி
- கண்ணீர் துடைப்போர் யார்?
- குட்டி இதயங்கள் குட்டிக் கதைகள் – தொகுப்பு 1
- குட்டி இதயங்கள் குட்டிக் கதைகள் – தொகுப்பு 2
- குடும்பமே குடும்பம்!
- குதூகலக் கிறிஸ்தவம்
- சாத்தானுக்கு டாடா
- தெபொராளே, விழித்தெழு!
- தேவனே, நான் உமதண்டையில்...
- பசங்க...பொண்ணுங்க ...
- பயனுள்ள பாத்திரம்
- பறக்கும் பாவையர்
- பகலில் வந்த கனா!
- 12 பொன் மாதங்கள்
- மண்ணிலே வெண்ணிலா
- முன்னேறும் கிறிஸ்தவன்
- வயது பதினாறிருக்கும்!
- வாலிப உலகம்

விலைப் பட்டியலுக்கு எழுதுங்கள்.
இப்புத்தகங்கள் ஆங்கிலத்திலும் பிற மொழிகளிலும் உண்டு.

Blessing Literature Centre
21/11 West Coovam Road
Chintadripet
Chennai 600 002, India
Tel: 00 91 4428450411
<blc@bymonline.org>

கிறிஸ்தவ வாழ்வில் மறுமலர்ச்சி பெற
இன்றே வாசியுங்கள்...

Blessing

எழுப்புதலுக்கும் நற்செய்திப் பணிக்கும்
அர்ப்பணிக்கப்பட்ட பத்திரிகை!

உங்களை ஆசீர்வதித்து,
உங்களை உங்கள் குடும்பத்திற்கும், சபைக்கும்,
நண்பருக்கும் ஆசீர்வாதமாக்கும் பத்திரிகை!

அசாமி, ஆங்கிலம், இந்தி, ஒரியா, கன்னடம், குஜராத்தி,
தமிழ், தெலுங்கு, பெங்காலி, மராத்தி, மலையாளம்
ஆகிய மொழிகளில் வெளிவருகிறது.

ஆண்டுச் சந்தா ரூ.100/–
ஆயுள் சந்தா ரூ. 1000/–

நீங்கள் ஆயுள் சந்தாதாரரானால், பணம் பெற்றுக்கொண்ட நாள் முதல் நாங்கள் வெளியிடும் பத்திரிகையையும், புத்தகங்கள் யாவற்றையும் பதினைந்து ஆண்டுகட்கு இலவசமாக அனுப்பிவைப்போம்.

சந்தா அனுப்பவேண்டிய முகவரி:

Blessing Youth Mission
Church Colony
Vellore 632 006, India

ஆசீர்வாத இளைஞர் இயக்கம்

எழுப்புதலுக்கும் நற்செய்தி அறிவிப்பிற்கும் அர்ப்பணிக்கப்பட்டு
1971 முதல் இயங்கிவரும், சபைப்பிரிவு பாகுபாடில்லாத,
ஒரு திருப்பணி

❄

எழுப்புதல் முகாம்கள், திருமறைப் பாடங்கள்,
பயிற்சித் திட்டங்கள் நடத்துதல்.

❄

பள்ளிகள், கல்லூரிகளில் மாணவ மாணவியருக்கு
ஜெபக்குழுக்கள் உருவாக்குதல்.

❄

முழுநேர ஊழியரல்லாத சகோதர சகோதரிகளின்
குழுக்கள் மூலம் கிராமங்கள், குடிசைப் பகுதிகள்,
மருத்துவமனைகள் முதலியவற்றைச் சந்தித்தல்.

❄

300க்கும் மேற்பட்ட முழுநேர மிஷனரிகள் மூலம் அசாம்,
ஆந்திரப் பிரதேசம், இராஜஸ்தான், உத்திரப் பிரதேசம், ஒடிஷா,
கர்நாடகம், குஜராத், கேரளம், சத்தீஸ்கார், மகாராஷ்டிரம், மத்தியப் பிரதேசம்,
மேற்கு வங்கம், தமிழகம் மற்றும் ஜார்கண்ட்
ஆகிய மாநிலங்களிலுள்ள கவனிப்பாரற்ற கிராமங்களிலும்
ஆதிவாசிப் பகுதிகளிலும் சபைகள் நிறுவுதல்.

❄

அசாமி, ஆங்கிலம், இந்தி, ஒரியா, கன்னடம்,
குஜராத்தி, தமிழ், தெலுங்கு, பெங்காலி, மராத்தி, மலையாளம் ஆகிய
மொழிகளில் "ஆசீர்வாதம்" எனும் பத்திரிகை, புத்தகங்கள் மற்றும்
ஒலி–ஒளித்தட்டுகள் வெளியிடுதல்.

❄

மருத்துவப்பணி, நிவாரணப்பணி மற்றும்
எழுத்தறிவு கற்பித்தல் மூலம் எளியோர், ஒதுக்கப்பட்டோருக்கு உதவுதல்.

ஜெபியுங்கள்! பங்குபெறுங்கள்! ஆதரியுங்கள்!

ஆசீர்வாத இளைஞர் இயக்கம்
சர்ச் காலனி, வேலூர் 632 006
தொலைபேசி: 00 91 416 2242943, 2248943
<hq@bymonline.org>
www.bymonline.org

நான் ஞானி என்பதனால் இந்த ஆழமான கருப்பொருளில் எழுத முற்படவில்லை; ஆனால் நான் அஞ்ஞானியாயிருந்ததாலும் என் மதியீனத்தை எண்ணித் தனிமையில் கண்ணீர் வடித்ததாலுமே எழுதத் துணிந்தேன். ஒவ்வொரு குகைப்பாதையின் கடையிலும் நான் கண்டுபிடித்த ஞானக்கதிர்கள் ஒன்றோடொன்று இணைந்து புதிய ஒளிக்கதிராயின. நித்தியத்தில்தான் இக்குகைப் பாதைகள் முடிவடையும் என்று நம்புகிறேன். அதுவரை ஞானத்தைத் தேடும் பயணத்தை நாம் தொடரவேண்டியதுதான்.

இப்புத்தகத்தின் ஆசிரியர் குழந்தை நல மருத்துவராயிருந்து
மருத்துவ மிஷனரியாக ஆசீர்வாத இளைஞர் இயக்கத்தில் பணியாற்றியவர்.
இவரது கணவர் R. ஸ்டான்லி, கட்டிடப் பொறியியலராயிருந்து
திருமறைப் போதகராய் மாறியவர்;
இவர் ஆசீர்வாத இளைஞர் இயக்கத்தின் (BYM) நிறுவனர்.
2003இல் இயக்கத்திலிருந்து ஓய்வுபெற்றபின் திருச்சபையின்
நலனுக்காய் உழைத்து வருகின்றனர்.
வில்லியனின் கட்டுரைகள் ஆசீர்வாதம் (Blessing) பத்திரிகையில்
அவ்வப்போது வெளிவருகின்றன.

Blessing Youth Mission
Church Colony
Vellore 632 006, India.
Tel: 00 91 416 2242943, 2248943
<hq@bymonline.org>
www.bymonline.org